Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

Regd. No. 2 975.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன் 197-198

P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 5 ஜீவியச் சந்தா ரூ. 100.

25

பேரருளாளன் பெருந்தேவித் தாயார்
திருவடிகளே சரணம்.



ஆழ்வார்களுட்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி*—எழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி*
செய்பமறை தன்னுடனே சேர்ந்த.

விசுவாவசுவ ஸ வைகாசி, ஆனிமீ 1965வ மே, ஜூன்மீ

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீராமாநுஜன் 197, 198.



சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை

ஆசிரியர் ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 17	1965ஆவது மே & ஜூன்மீ விசுவாவஸுவது வைகாசி, ஆனிமீ	ஸஞ்சிகை 5, 6

திருவாய்மொழி நூற்றந்தாதி — 82.

பண்டை யுறவான பரனைப் புளிங்குடிக்கே
கண்டு* எனக்கெல்லாவுறவின் காரியமும்*—தண்டறநீ
செய்தரு ளென்றேயிரந்த சீர்மாறன் தாளிணையே*
உய்துணையென் றுள்ளமே யோர்.

பண்டை உறவு ஆன பரனை	அநாதி ஸித்தமான ஸம்பந்தத்தையுடையனான பரம புருஷனை
புளிங்குடிக்கே கண்டு	திருப்புளிங்குடியிலே ஸேவித்து
எனக்கு	— அடியேனுக்கு
எல்லா உறவின் காரியமும்	ஸகலவிதமான உறவினுடையவும் காரியங்களை
தண்டு அற நீ செய்தருள் என்றே	தட்டில்லாமல் நீ செய்தருள வேணும் என்று
இரந்த	— பிரார்த்தித்த
சீர் மாறன்	— ஆழ்வாருடைய
தாள் இணையே	— உபய பாதங்களே
உய் துணை என்று	நமக்கு உஜ்ஜீவநோபாயமென்று
உள்ளமே ஓர்	— நெஞ்சே! நினை.

* * * நிருபாதிக பந்துவான ஸர்வேச்வரனைத் திருப்புளிங்குடியிலே ஸேவித்து எனக்கு ஸகலவித பந்துக்ருத்யமும் நீ செய்தருள வேணும் என்று ஆழ்வார் பிரார்த்தித்த படியைக் கூறுவதாம் *பண்டை நாளாலே பதிகம். *சோதி வாய் திறந்துன் தாமரைக் கண்களால் நோக்காய்* நின் பாத பங்கயமே தலைக்கணியாய்* என்றிப்படி பாசுரந் தோறும் ஒவ்வொரு வகையான பிரார்த்தனை யிருப்பது காண்க. தண்டு அற — தடையின்றிக்கே; அல்லது காலதாமதமின்றி.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸர்வேச்வரனைத் தவிர்ந்தவர்களனைவரும் ஆபாஸ பந்துக்களென்றும் ஸர்வேச்வரனொருவனே நிருபாதிக பந்துவென்று மருளிச் செய்தார் *கொண்ட பெண்டிரென்கிற கீழ்த் திருவாய்மொழியில். இவரருளிச் செய்தவளவே யன்றே; உண்மையில் அவன்தான் பரம பந்துவாயிற்றே. *மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:* என்று சுருதி சொன்னது உண்மையல்லதில்லையே. அப்படி பரம பந்துவானவன் பந்துக்கள் செய்ய வேண்டிய செயலைச் செய்யாதிருக்க மாட்டானே. அது செய்கைக்குறுப்பாகத் திருப்புளிங்குடியிலே திருக்கண் வளர்ந்தருளா நின்றான்; நாமும் அங்கே சென்று கிட்டினால் நமக்கு பந்துக்ருத்ய மெல்லாம் பண்ணுவன் என்று அநுஸந்தித்து ஆழ்வார் அங்கே சென்று கிட்டினார். இப்படி பரம பந்துவானவன் ஸன்னிதி பண்ணியருளுகிற திருப்புளிங்குடியிலே எல்லாவகையான பரிமாற்றங்களையுமாசைப் பட்டுச் சென்று கிட்டினவிடத்தும், இவரை என்னென்று வினவுதல் குளிர நோக்குதல் ஒருவார்த்தை சொல்லுதல் ஒன்றுஞ் செய்திலன். ஆனாலும், *இன்றுபோ நாளையேயாக இனிச் சிறிது நின்றுபோ நின்னருள் என் பாலதே* என்று திண்ணிய அத்யவஸாயம் கொண்டிருக்குமவர்களிலே ஒருவரான ஆழ்வார் 'அவனுளனாயிருக்கும் போது பந்துக்ருத்யம் செய்யத் தவறமாட்டான்; சிறிது தாமதித்தால் என்ன குறை?' என்று ஒருவாறு தேறுதலடைந்து, வேறொன்றுக்காக மிகவும் ஆர்த்தியடைந்தார்; அதாவதென்னென்னில்; 'இங்கே என்றைக்குத் திருக்கண்வளர்ந்தருளப் புகுந்தானோ அன்று முதல் இன்றளவாக ஏகரீதியாய் ஆடாதே அசையாதே சயனித்திருக்கின்றனே! இது என்ன சிரமமோ?' என்று இவ்வாற்றுமை திருவுள்ளத்திலே குடிபுகுந்தது. கீழ் எட்டாம்பத்தில் *கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும் மடியாதின்னே நீ துயில்மேவி மகிழ்ந்தது தான், அடியாரல்லல் தவிர்த்த வசவோ அன்றேலிப்படிதான் நீண்டு தாவிய வசவோ பணியாயே* என்ற பாசுரத்திலுண்டான வயிறுபிடியே மீண்டும் தலையெடுத்தது. அப்பெரியவாற்றுமையோடே 'தேவரீரும் பிராட்டிமாருங்கூட எழுந்தருளியிருக்குமிருப்பை எனக்குக் காட்டியருளவேணும்; என்னைக்கண்ட காட்சியிலே விகாரமடைந்து என்முன்னே நாலடியுலாவியருளவேணும்; புன்முறுவல் காட்டியருளவேணும்; ஒருவார்த்தையருளிச் செய்யவேணும்' என்றிங்ஙனே தாமுமவனுமே யறிந்ததாகத் திருவாசலைத் திருக்காப்பிட்டுக் கொண்டு ஏகாந்தத்திலே - தம்முடைய மநோரதங்களை யெல்லாம் விண்ணப்பஞ் செய்கிறார் *பண்டை நாளாலே யென்னுமித் திருவாய்மொழியில் அதன் ஸாரம் இந்த வெண்பாவிலமைந்தது. இந்த வெண்பாவுக்கு மூலமான பதிகத்தின் பொருட்சுவை ஒருபுறமிருக்க, சொற்சுவை கல்நெஞ்சையும் கரையப்பண்ணும். ஸம்ஸாரத்தில் ஆர்த்தி விசேஷங்களுண்டாகி நெஞ்சு தடுமாறிக் கிடக்கும்போது இப்பதிகத்திற் பாசுரங்களை வாய் வெருவினால் நெஞ்சு குளிரும். ஐம்பதாண்டுகளுக்குக் கீழே திருவரங்கம் பெரிய கோயிலில் பெரிய திருவத்யயனத்திருநாளில் இத்திருவாய்மொழியை அரையர் இசை பாடா நிற்க, அஸ்மதாசார்யரான அழகிய மணவாளச் சீயர் கண்ணுங் கண்ணீருமாயிருந்த விருப்பு *நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா நெஞ்சுள்ளும் நீங்காவே. ...

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ ராமாநுஜன் சந்தா செலுத்தியவர்கள்:

MADRAS MEMBERS:

82. Sri M.K. Rangaramanujam, No.15
83. ,, K. P. Subramanyam, No. 24
84. ,, C Krishnaswami, No. 34
85. ,, R. Natarajan, No. 1
86. ,, M. Rangasami Hoe & Co.,
87. ,, G. Parthasarathi, No. 21
88 ,, C. Radhakrishna Mudaliar, No. 1
89. ,, M.V.K. Purushothaman, No. 7
90. ,, K. S. Balaraman, No. 1
91. Smt. Saroja Ramanujam, No 1
92. Sri Amudachar, Advocate No. 5
93. ,, V. G. Ramanujam, No. 1
94. ,, M. Kannapiran Mudaliar, No. 15
95. ,, P. B. Singarachar, Advocate, No. 1
96. ,, C. Thiruvengada Mudaliar, No 10
97. ,, P.R. Rajagopalayyangar. No.14
98. ,, A. K. Rudrakoti, No. 12
99. ,, S. Kulasekaran, No. 2
100. ,, B. R. Purushothama Naidu, Reader No. 2
101. ,, K. Ramaswami Reddiar, No. 5
102. ,, S. A. Singaram Pillai, No. 1
... ...
103. Smt. Sarojini, Bangalore.
104 ஸ்ரீ B A. நரஸிம்ஹாசார், வண்டலூர்
105. Sri T. Sudarsanam Swami Alvar, Thirunagari
106. ஸ்ரீ மாறம்பட்டி முகுந்தராமாநுஜன்
107. Sri Rajakot. A K. Rajagopalan
108. ஸ்ரீ நாலாட்டின்புத்தூர் K. N. S. ஸ்ரீ
109 Sri Nannilam Rajam Iyengar
110. ,, M. N Perarulalan. Tinnavelly
111. ஸ்ரீ நெப்பத்தூர் சௌரிராஜன்
112. ,, திருக்கண்ணங்குடி அம்மங்கி தாமோதராசாரியார்
113 ,, பந்தல்குடி கிருஷ்ணராமாநுஜம்
114 Sri T. S. Krishnaswami Iyengar, Sirkali
115. ஸ்ரீ M அய்யாசாமிப் பிள்ளை, நட்ராஜன்சாவடி.
116. Sri R. Ramaratnam Iyengar, Jameshedpur
117 ஸ்ரீ வி. நாகப்ப பாகவதர், கரந்தை
118 Sri K. S. Vijayaraghavachar, Poonamalli
119. காட்டுமன்னர்கோவில் ஸ்ரீ V. ராமுலு
120. கோவை ஸ்ரீ ரங்கநாதய்யங்கார்
121. ,, ,, ரிக்வேதி. B. வரதாசாரியர்
122. ஸ்ரீமதி செங்கற்பட்டு லக்ஷ்மிதேவி
123. ஸ்ரீ உ. வே. ஆசால் சேஷாசாரியர்
124. ,, தென்னூர் R. L. ஐயங்கார்
125. ,, ஈரோடு கோட்டைப் பெருமாள் கோயில் நாராயணய்யங்கார் ஜீவியச்சந்தா
126. ,, வானமாமலை அலமேலம்மா
127. சித்தூர் குலசேகரஸபை
128. ,, ஸ்ரீபெரும்பூதூர் எம்பார் ஜீயர் ஸ்வாமி
129. ,, தாம்பரம் S. நரஸிம்ஹன்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

— ஸமாசாரஸங்க்ரஹங்கள் —

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. திருக்குறுங்குடி பெரிய ஜீயர் ஸ்வாமியின் சரமகைங்கர்ய விசேஷங்கள்.

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யோபய வேதாந்த ப்ரவர்த்தக. ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராய், திருக்குறுங்குடி திரு ஜீயர் மடம் மடாதிபதிகளுள் நாற்பத்தாருவது பட்டாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீஸ்ரீ சடகோபராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் நேற்று பங்குனித் திங்கள் 14-ஆம் தேதி க்ருஷ்ணதசமி திதியில் சனிக்கிழமை காலை திருநாடலங்கரித்தருளினர். திருநாராயணபலியும் திருவத்யயன மஹோத்ஸவாதிகளும் க்ரமேண யதாகாலம் நடந்தேறின திருவத்யயன மஹோத்ஸவத்தன்று பல நூற்றுக்கணக்கான ஸ்ரீ வைஷ்ணவஸ்வாமிகள் கோஷ்டியையலங்கரித்த அதிசயத்தை ஆச்சரியமாகச் செவியுற்று மகிழ்ந்தோம். "வேதநூற் பிராயம்நூறு" என்று தொண்டரடிப்பொடியாழ்வார் திருவாய்மலர்ந்தருளினபடி நமது தென்னாட்டில் நூறு பிராயம் வாழ்ந்தருளின பெரியார் இந்த மஹாஸ்வாமி. உண்மையில் நூறு திருநக்ஷத்திரங்கள் நிரம்புவதற்குச் சில மாதங்களே குறைவாயிருக்கலாம். ஒரு ஸம்வத்ஸரத்திற்குமேலில்லையென்பது திண்ணம். ஏறக்குறைய ஐம்பது ஸம்வத்ஸரகாலமாக ஸ்ரீ ஸ்வாமியின் திருவருளைப் பெற்றவனடியேன். அப்போதே தளர்ந்த திருமேனியோடு ஸேவை ஸாதிக்கும்படியிருந்தது. தொண்ணூற்றைந்து திருநக்ஷத்ரமளவும் மிக அசக்தியோடுங்கூட தினப்படி நம்பி மங்களாசாஸனம் தவறுதிருந்தமையறிவேன். பிறகு தான் நடமாட்டம் குறைந்து சீரிய சிங்காசனத்திலேயேயெழுந்தருளியிருக்க நேர்ந்தது. அந்த நிலையிலும் ச்ரோத்ரநேத்ர பாடவங்களுக்குக் குறையின்றிக்கேயிருந்த அதிசயம் அற்புதமானதே "வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்கிற ஆழ்வார் மங்களாசாஸனம் பலிக்கப்பெற்றதானது. இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குக் கீழாக இந்த மஹாஸ்வாமி பக்கலிலேதான் என்று உறுதியாகச் சொல்லலாம். முக்கியமாக வொருவார்த்தை;—"க்ஷாந்திசமதமாத்யனந்த கல்யாணகுண பரிபூர்ணராய்" என்று பல மஹநீயர்களுக்கு எழுதுகிறேமெனினும் அது அங்யத்ர ஔபசாரிகமாய் இந்த மஹாஸ்வாமி திறத்திலேதான் நிரூபாதிகமாக விளங்கிற்று. இந்த மஹாஸ்வாமி ஆஸ்தானத்தையலங்கரித்த பிறகு நடத்தியருளின கைங்கரிய விசேஷங்கள் நிரவதிகங்கள். *கொடைப் பெரும் புகழாளராக விளங்கினர்.

ஸகலப்ரகாரங்களாலும் ஸ்தானத்திற்கு ஏற்ற பரம விலக்ஷண உத்தமாதிகாரியை இரண்டு ஸம்வத்ஸரங்களுக்கு முன்னமே ஆச்ரமஸ்வீகாரம் செய்வித்தருளி ஆஸ்தானத்தை ஸநாதமாக்கி வைத்தருளினதை மிகச் சிறந்த ஔதார்யமாக உலகமெல்லாம் போற்றுகின்றது வர்த்தமான ஸ்ரீ ஸ்வாமியின் ஜ்ஞாநாநுஷ்டான விசேஷங்கள் அடுத்த விதழில் விவரிக்கப்படும்.

... ...

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ திருக்குருங்குடி ஸ்ரீ ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி மடம்

மடாதிபதி 47-வது பட்டம்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ பட்டர்பிரான் ஜீயர் ஸ்வாமி

(வர்த்தமான ஸ்வாமி)

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருக்குருங்குடி ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் மடம்
மடாதிபதி 46-வது பட்டம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகளின்
தீர்த்தத்தன்று வர்த்தமான 47-வது பட்டம்

ஸ்ரீ ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள்

ஸ்ரீ நம்பி ஸந்நிதியில் மரியாதை பெற்று எழுந்தருளும் கூட்டம்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தேவப்பெருமாள் கஜேந்திரமோக்ஷம்.

ஸ்ரீஹஸ்தி சைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதரான தேவப் பெருமாளுக்கு இருபத்தைந்து ஸம்வத்ஸரங்களுக்கு மேலாக நித்ய கைங்கரியம் செய்து வந்த கஜேந்திராழ்வான் நேற்று பங்குனித் திருவோணத்தன்று ஸன்னிதியிலேயே அனந்த ஸரஸ் தீரத்தில் பஞ்ச பூதவுடலை நீத்துப் பேரின்ப வெள்ளத்திலாழ்ந்தனன். சுமார் நாற்பது நாள்களுக்கு முந்தி அஸாரோக்யம் தோன்றியது. செங்கற்பட்டிலிருந்து ம்ருகசிகித்ஸா குசலரான மருத்துவர் வந்து இஞ்சக்ஷன் செய்து போனதில் சிறிது ஆரோக்யமேற்பட்டது எனினும் நோய் உள்ளே பதிந்திருந்ததறியாமல் யானைப் பாகன் வெளியாத்திரைகள் செய்வித்துக் கொண்டிருந்தான். சிலமாதங்கள் லிச்ராந்தி கொடுத்திருந்தால் இன்னும் பத்தெட்டு ஸம்வத்ஸர காலம் தேவப்பெருமாளுக்குக் கைங்கரியம் செய்து போர வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் நோய்கண்ட சில நாள்களுக்குள்ளாகவே பாகன் பரிச்ரமப் படுத்தத் தொடங்கி விட்டதனால் அந்தப் பரிச்ரமம் பொறுக்கமாட்டாமலே உயிர் நீத்ததாக வதந்தி.

பங்குனியுத்தரத் திருநாளில் பெரியகாஞ்சீபுரத்தில் நடைபெறும் விசேஷத்தில் இந்த கஜேந்திராழ்வானைக் கொண்டுபோய்ப் பாகன் பொருளீட்டுகிற வழக்கத்தை இவ்வருஷத்திலும் விடஇல்லாமல் கொண்டுபோய் அதிக பரிச்ரமம் விளைத்ததன் பயனாக அன்றிரவே வெகு கிலேசத்துடன் ஸன்னிதிக்குள் வந்து சேர்ந்து சயனங்கொண்டது பரமபத யாத்ராப்ரஸ்தானமாகவாயிற்று. பத்து நாள் சயனமாகவே கிடந்தபடி. பங்குனித் திங்களில் தேவப்பெருமாளுக்கு ஏழுநாள் பல்லவோத்ஸவம் நிகழ்வது வழக்கம். அது திருவோணத்தன்று ஸமாப்தி பெறுவது. அன்று காலைதான் நம் கஜேந்திராழ்வானுக்கு மோக்ஷப்ராப்தியாயிற்று. அதனால் அன்று பேரருளாளன் நூற்றுக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளாமலும் இரவு திருவீதிப் புறப்பாடு கண்டருளாமலும் உள்ளே திருவபிஷேக மண்டபத்திலேயே ஸகலத்தையும் ஸம்க்ஷேபமாக முடித்துக் கொண்டு கஜேந்திராழ்வானுக்குச் சிறப்புகள் பிரஸாதித்தருளித் திருமலைக்கு எழுந்தருளியாயிற்று. ஸன்னிதிக்குள்ளே கஜேந்திராழ்வானுக்கு நித்ய வாஸஸ்தானமொன்றுண்டே, அது தன்னிலேயே திருப்பள்ளிபடுத்தாயிற்று.

ஒன்றுன கஜேந்திராழ்வான் பொய்கைக் கரையிலே பெருமானருள் பெற்றதாகப் புராண வரலாறு காண்கிறோம். அவ்வருள் இக்கஜேந்திரனுக்கும் பொய்கைக் கரையிலேயே கிடைத்தது விசேஷம். ... ...

அன்பர்களுக்கு அறிவிப்பு

ஸ்ரீராமானுஜன் 200 ரூ. ஸஞ்சிகை ஸமீபத்தில் வெளிவரவிருக்கிறது. அவ்விருநூறு முடிவுக்கு நினைவுமலராக இருநூறு உபந்யாஸரத்னங்களை வெளியிட நிச்சயித்திருக்கிறோம். ஆகவே 199, 200, 201 இம்மூன்று ஸஞ்சிகைகளும் - அவ்விருநூறு உபந்யாஸங்களைத் தாங்கி விரைவில் வெளிவரும். அவ்வுபந்யாஸங்கள் வேதம், உபநிஷத்து, பாஞ்சராத்ரம், இதிஹாச புராணங்கள் திவ்யப்பிரபந்தம், ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயங்கள், ரஹஸ்யங்கள் ஆகிய இவற்றின் ஸம்பந்தமாக அமையும். P.B A.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருவெள்ளக்குளம் அண்ணன் கோவிலில் மஹா ஸம்ப்ரோக்ஷண வைபவம். (P.B.A.)

சோழவள நாட்டில் திருநாங்கூரைச் சேர்ந்த பதினெரு திருப்பதிகள் திருமங்கை யாழ்வாருடைய மங்களா சாஸனம் பெற்றுப் பிரஸித்தமானவை. இவற்றுள், திருவெள்ளக்குளம் — அண்ணன் கோவில் என்பது ஸுப்ரஸித்தமான திவ்யதேசம். வடதிருவேங்கடமான திருமலை போலே இதுவும் ப்ரார்த்தநா க்ஷேத்ரமாகப் புகழ் பெற்றது. ஸ்ரீநிவாஸப்பெருமாளும் அலர்மேல் மங்கை நாச்சியாருமாகவே இங்கும் ஸேவை ஸாதிக்கிறபடி. இத்தலத்தில், பெருமாள் தாயார் ஸன்னிதி விமானங்கள் ராஜ கோபுரம் சுற்றுப்பிராகாரங்கள், கல்யாணமண்டபம் முதலானவை ஜீர்ணோத்தாரணம் பண்ணவேண்டிய நிலையில் இருந்தன. பரிகணிதர்களான பதினன்கு மஹான்கள் திருப் பணிக் கமிட்டியாளர்களாக விருந்து பலவாயிரம் ரூபா சேகரித்து இரண்டு மூன்று ஸம்வத்ஸரகாலம் வெகு சிறப்பாகத் திருப்பணியை நடத்திவைத்தார்கள். தேவஸ்தான ஸந்நிவேசமே நூதநப்ரதிஷ்டிதம் போல் விளங்காநின்றது திருப்பணிகள் பெரும்பாலும் நிச்சேஷமாக முடிவுபெற்றதனால் நேற்று பங்குனித் திங்கள் 27உ (9-4-65) வெள்ளிக் கிழமை புனர்வஸு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மஹாஸம்புரோக்ஷணம் நடை பெற்று முடிந்தது. 5-4-65. திங்கட்கிழமை முதலாக ஐந்துநாள் ஹோமங்களும் சதுர் வேத பாராயணங்களும் திவ்யப்ரபந்த ஸேவையும், இதிஹாஸ புராண ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயாதி படனங்களும் ஏறக்குறைய நூறு ஸ்வாமிகளைக் கொண்டு வெகு விமரிசையாக நடத்திவைக்கப் பட்ட அதிசயம் அநுபவைக வேத்யமென்னத் தக்கது தொண்டை நாடு நடுநாடு சோழநாடு பாண்டிநாடு என்னப்பட்ட நான்கு நாடுகளிலிருந்தும் பரம விலக்ஷணர்களான வைதிக வித்வத் ஸ்வாமிகள் குழாங்கூடியிருந்து அநுபவிக்க ப்ராப்த மாயிற்று. "சோழவளநாடு சோறுடைத்து" என்று பண்டைக்காலத்திலிருந்தே ப்ரஸித்திபெற்ற சோழநாட்டில் ததீயாராதனச் சிறப்பைப் பற்றித் தனிப்பட வெழுத வேண்டுமோ? ஐந்தாறுநாளும் ஆச்சரியமான ததீயாராதனை நடைபெற்றது.

திருநாங்கூர்த் திருப்பதிகளில் இரண்டு மூன்று தவிர மற்றவை யெல்லாம் ப்ரதிவாதிபயங்கராசார்யர்களின் ஆதீனத்தைச் சேர்ந்தவை. இத்தலத்து ஆசார்ய புருஷர்களில் வர்த்தமாநர் ஸ்ரீ உ. வே. பிரதிவாதி பயங்கரம் திருவேங்கடாசாரிய ஸ்வாமி யென்பவர் இவர் இந்த ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்தில் வெறும் தீர்த்த மரியாதைகளை மட்டு மநுபவிப்பவராயிருக்கையன்றிக்கே கைங்கரியத்திலும் முக்கியமான பாகங்களில் பங்கெடுத்துக் கொண்டு மிகுந்த சிரத்தையுடன் ஒத்துழைக்கவேதான் இந்த மஹோத்ஸ வம் மிகமிகப் பரிமளித்தது. ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனைகள் ஸமர்ப்பிப்பது, கதாகத வ்யயங்கள் அளிப்பது முதலானவற்றை இந்த ஸ்வாமி தம்பொறுப்பிலே வைத்துக் கொண்டு வெகு பரிஷ்காரமாக நடத்தி வைத்த வைபவத்தில் அகங்குழைந்த ஸ்வாமி களனைவரும் கோஷ்டியாக விருந்து இவர்க்குப்

என்று விருதளிக்கவிரும்பி அதை அடியேனைக்கொண்டு நிறைவேற்றி வைத்தனர். அதை அனைவரும் கரகோஷத்தினால் ஆமோதித்தனர். இது நிகழ்ந்தது 9-4-65 மாலை 5 மணிக்கு.

" தழை நல்லவின்பந்தலைப்பெய்து எங்குந்தழைக்கவே. "

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.



திருநாங்கூர் திருவெள்ளக்குளம்

அண்ணன் பெருமாளும் தாயாரும்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.



CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கள்ளக்குரிச்சி ஸ்ரீ கோவிந்தராஜப்பெருமாள் பிரம்மோற்சவம்

[ஸ்ரீமான் உ. வே. T. ஆராவமுதாதாசாரியர், அட்வொகேட் எழுதுகிறார்.]

கள்ளக்குரிச்சி கோவிந்தராஜப்பெருமாள் ஸன்னிதிக்கு 1952 நந்தன வருஷத்தில் திருக்கோவலூர் உலகளந்த பெருமாள் எழுந்தருளியிருந்து மஹா ஸம்ப்ரோக்ஷணை நடந்தேறிற்று. திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயரும், காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியும், கோஷ்டிகளும் எழுந்தருளியிருந்து மஹா ஸம்ப்ரோக்ஷணையை நடத்திவைத்தார்கள் பின்னர் வாகனங்களும் திருத்தேரும் 1960-ம் வருஷத்திற்குள் சார்ப்பிக்கப்பட்டன 1960-ம் வருஷத்தில் முதல் பிரம்மோற்சவம் வெகு விமரிசையாய் ஜீயரும், பிரதிவாதி பயங்கரம் சுவாமியும் கோஷ்டிகளும் எழுந்தருளியிருந்து நடைபெற்றது ஸ்ரீ அண்ணஸ்வாமி கள்ளக்குரிச்சிக்கு எழுந்தருள சாத்திய மில்லாமல் சித்திரை மாதத்தில் மற்ற ஸன்னிதி உற்சவங்களுக்கு எழுந்தருளவேண்டியிருந்ததினால் 1961, 1962, 1963, 1964 உற்சவங்கள் ஆனி மாதத்தில் நடைபெற்றன. இவ்வாண்டு (1965) சித்திரை மாதமே 6—4—1965 முதல் பத்து நாட்கள் உற்சவம் வெகு அழகாக சிறப்புடன் நடந்தது திருக்கோவலூர் பெருமாளும், கோவிந்தராஜப் பெருமாளும், தொண்டைநாட்டு அத்யாபகர்களைத் திருவுள்ளம் பற்றுவதால் பிரதி வருஷமும் அவர்களே எழுந்தருளியிருந்தும் இவ்வருஷம் பதின்மர்களுக்குமேல் எழுந்தருளியிருந்தும் திவ்யபிரபந்த கோஷ்டிகள் அத்யாச்சர்யமாய் நடந்தது ஸ்ரீ அண்ணஸ்வாமி திருவெள்ளக்குளம் ஸம்ப்ரோக்ஷணைக்கும் தாடாளன்ஸன்னிதி உபன்யாஸத்திற்கும் எழுந்தருளவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டிருந்ததால் அந்த ஸ்வாமி திருக்குமாரர் செல்லமணி என்ற உ வே ரங்கநாதாச்சார்ய ஸ்வாமி, திருக்கோவலூர் ஜீயருடன் கோஷ்டியில் அன்வயித்து காலத்தில் சேவைகளும் சாற்றுமறைகளும் புறப்பாடுகளும் செவ்வனே எம்பெருமான் கண்டருளினார். ஏழாம் உற்சவம் திருக்கல்யாணத்தன்று ஸன்னிதி தர்மகர்த்தரும், ஸன்னிதி திருப்பணி முதலியவற்றிற்கு ஏகதேசகாரணகர்த்தரும், ஸ்ரீ அண்ண ஸ்வாமியால் வைஷ்ணவரத்னம் என்று விருதிடப்பட்டவருமான ஸ்ரீ V. கேசவலு நாயுடுகாருக்கு, ஜீயரால் பொன்னாடை சம்பாவனை செய்யப்பட்டது. "நித்ய ஸ்ரீர்நித்ய மங்களம்." ஆக இந்த ஸன்னிதி ஸ்ரீ அண்ண ஸ்வாமியின் மங்களாசாஸனபலத்தினால் நாளுக்குநாள் விலக்ஷணமாயும், பெரிய திவ்யதேசத்திற்கு ஒப்பாகவும் ஓங்கிவருகிறது. வீதி உற்சவங்களில் நல்ல வித்வான்களைக்கொண்டு நாதசுர கச்சேரிகளும் கிளாரினெட் வாத்திய கச்சேரிகளும் நடைபெற்றன. இராத்திரி உற்சவங்களில் மின்சார விளக்குகள் தினவட்டிகளாகவும் வாணவேடிக்கைகளும் நடைபெற்றன. மக்கள் திரள்திரளாக சேவித்துவந்தார்கள் ஸ்ரீ P. B அண்ண ஸ்வாமி உபன்யாசங்களாலும் நூற்கள் வெளியீட்டினாலும் தம்முடைய ஒப்பற்ற அநுஷ்டானங்களாலும் ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்தைச் சீர்படுத்துவதோடு எம்பெருமானார் தர்சனத்தையும் வளரச்செய்து திவ்யாக்ஞையையும் நிர்வஹித்தருளி எல்லா திவ்யதேசங்களிலும் அபிமான ஸ்தலங்களிலும் தமக்கு சௌகர்யப்பட்ட காலங்களில் பிரம்மோத்ஸவங்களில் எழுந்தருளி கோஷ்டிகளை நிர்வஹிப்பதும் மஹா ஸம்ப்ரோக்ஷணைகளை விலக்ஷணமாக நடத்திவைப்பதும் மிக பிரஸித்தம். ஹஸ்திகிரி எம்பெருமான் திருவடி வாரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிக்கு ஹஸ்த வைபவம் (கைராசி) இருப்பதில் என்ன ஆச்சர்யம். ஸ்வாமி பல்லாண்டுகள் எழுந்தருளி இருக்கவேண்டும் என்று பிரார்த்தனையை பேரருளாளன் தலைக்கட்டியருளவேண்டும்.

... ...

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீமத் P. B. A. ஸ்வாமியின் எழுபத்துநான்காவது

திருநக்ஷத்ரபூர்த்தி மஹோத்ஸவத்தில் திருவீதி கோஷ்டியின் காட்சி.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பராங்குசமுனியும் — பரகால கவியும் (P.B.A.)

குரோதிவரு பங்குனிமாத மூடிவில் (திருநாங்கூர்) திருவெள்ளக்குளம் அண்ணன் கோவிலில் நடந்த ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்தில் 8—4—65-ல் அடியேன் விஜ்ஞாபித்த உபந்யாஸத்தின் ஒரு பகுதி.

பராங்குச முனியென்பது நம்மாழ்வாரை; பரகால கவியென்பது திருமங்கை யாழ்வாரை. ஆழ்வார்களுள் இவ்விருவர்க்கும் பல வகைகளில் பொருத்தம் காண்பதனால் இவ்விருவரையும் சேர்த்து அநுபவிக்கிறோமிங்கு. "பராங்குச பரகால யதிவராதிகள்" என்றருளிச்செய்த முன்னோர்களின் திருவுள்ளத்திலும் இப் பொருத்தம் உறைந்திருப்பதே யாம். திருவரங்கம் பெரிய கோயிலில் திருவத்யயனோத்ஸவத்தில் மற்றையாழ்வார்களிற் காட்டிலும் இவ்விருவர்க்குமுண்டான சேர்த்திச் சிறப்பைக் கட்கூடாகவுங் காண்கிறோம். நம்மாழ்வாரருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழியென்னும் நான்கு திவ்வியப் பிரபந்தங்களானவை அங்கிகளான நான்கு வேதங்க ளென்றும், திருமங்கையாழ்வாரருளிச்செய்த பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் திருநெடுந்தாண்டகம் என்னும் ஆறு திவ்வியப் பிரபந்தங்களானவை ஆறு அங்கங்களென்றும் கொள்ளப் படுவது ஸம்ப்ரதாயம். அதாவது, வடமொழியில் அங்கிகளான வேதங்கள் ருக், யஜுஸ், ஸாம அதர்வணமென்று நான்காயும், அவற்றுக்கு அங்கங்கள் சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்று ஆறுயுமிருப்பதுபோல் தென்மொழியிலும் இங்ஙனே கொள்ளப்படுவதாக வுணரத்தக்கது.

மணவாள மாமுனிகள் உபதேசரத்தின மாலையில் திருமங்கையாழ்வார்க்கு இட்டருளின இரண்டு பாசுரங்களில் இரண்டாவது பாசுரம் "மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன், ஆறங்கங்கூறவதரித்த—வீறுடைய கார்த்திகையில் கார்த்திகைநாள் இன்றென்று காதலிப்பார் வாய்த்த மலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து" என்பதாம். மாறன்—நம்மாழ்வார்; அவர் பணித்த தமிழ்மறை—திருவிருத்தம் முதலான நான்கு திவ்வியப் பிரபந்தங்கள். மங்கையர்கோன் கூறின ஆறங்கம்—பெரிய திருமொழி முதலான ஆறு திவ்வியப் பிரபந்தங்கள்.

மணவாள மாமுனிகள் இங்ஙனேயருளிச் செய்தது "வேதசதுஷ்டய—அங்கோ பாங்கங்கள் பதினெலும் போலே இந்நாலுக்கும் இருந்தமிழ்நூற் புலவர் பனுவலாறும் மற்றையெண்மர் நன்மாலைகளும்" (43) என்கிற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையை அடியொற்றியேயாம். இங்கே ஒரு சங்கை தோன்றும்; நம்மாழ்வாருடைய பிரபந்தங்கள் நான்காயும், திருமங்கையாழ்வாருடைய பிரபந்தங்கள் ஆறுயும் அவதரித்திருப்பது கொண்டே இப்படி அங்காங்கி பாவம் சொல்லிவிடலாமோ? வடமொழியில் வேதாங்கங் களாகச் சொல்லப்பட்டுள்ள சிக்ஷை, வியாகரணம், சந்தஸ்ஸு, நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்பவையாறும் வேதங்களின் பொருளை நிர்ணயிப்பதற்கு இன்றியமையாதனவா

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யிருப்பதால் அவற்றை அங்கங்களென்னப் பொருத்தமுண்டு இங்கு அப்படியில்லையே பெரிய திருமொழி முதலான திருமங்கையாழ்வார் பிரபந்தங்களைக்கொண்டு திருவிருத்தம் முதலான நம்மாழ்வார் பிரபந்தங்களின் பொருளை நிர்ணயிப்பதென்பது கூடுமதன்றே. ஆதலால், நான்கு, ஆறு என்கிற லக்கத்தைமட்டுங்கொண்டு 'அவை அங்கி, இவை அங்கம்' என்று சொல்லிவிடலாமோ?—என்று சங்கிக்க நேரும்.

இதற்குச் சுருக்கமாக வுணர்த்துகின்றோம். வடமொழியிலுள்ள வேதாங்கங்கள் வேதத்திற்கு உபகாரகங்கள் என்று கொள்ளப்படுவதாகத்தானே தேறி நிற்கும். அப்படியே திருமங்கையாழ்வாருடைய பிரபந்தங்கள் நம்மாழ்வாருடைய பிரபந்தங்களுக்கு உபகாரகங்கள் என்று கொள்ளக் குறையில்லை. ஆயிரத்திற்குமேற்பட்ட பாசுரங்களையருளிச் செய்தவரென்கிற பெருமை நம்மாழ்வார்க்கும் திருமங்கையாழ்வார்க்கு மொக்கும். எம்பெருமானை நம்மாழ்வாரநுபவிக்கிற வகைகளும். திருமங்கையாழ்வாரநுபவிக்கிற வகைகளும் பெரும்பாலுமொத்திருக்கின்றன. 1. ப்ரக்ருதி ஸம்பந்தத்தினுடைய ஹேயத்தன்மையைப் பேசிக்கொண்டே பிரபந்தம் தொடங்குகை; 2. எம்பெருமான் பக்கலில் அளவுகடந்த ப்ராவண்யத்தைப் பாசுரந்தோறும் வெளியிடுகை; 3. அதில் அர்ச்சாவதாரத்தில் மிக்க அபிநிவேசத்தைக் காட்டுகை; 4. எம்பெருமானோடு கலவியும் பிரிவும் மாறிமாறி வருகை; 5. தம் வாக்காலே பேசுமளவோடு நில்லாமல் பெண்மையெய்தியும் பேசுகை; 6. தூது விடுதல்; 7. இரவில் படும் துயரம் பொறுக்கமுடியாமைகூறல்; 8 எம்பெருமானுகத் தம்மையனுகரித்துப் பேசுதல்; 9. மடலெடுக்கை; 10 இந்திரியங்களுக்கு ஆற்றவொண்ணுதகதறுகை; 11. எம்பெருமானுடைய சுதந்திரத்தை நினைத்து அஞ்சுகை; 12. அடிக்கடி ப்ரபத்தி செய்கை; 13. ஆர்த்தியினுடைய கரை புரட்சி; 14 பிறர் துன்பம் பொறுமல் பலகாலும் ஹிதம் சொல்லுகை ..... முதலான பலவும் இவ்வாழ்வார்களிருவர்க்கும் ஒத்திருக்கும். இவற்றையெல்லாம் விரிவாக விளக்கி மகிழ்ந்து மகிழ்விக்க வேண்டியே இஃதெழுதப் புகுந்தபடி.

நம்மாழ்வார் விரிவாக அருளிச்செய்தவற்றைத் திருமங்கையாழ்வார் சுருக்கிப் பேசுவர்; அவர் சுருக்கியருளிச்செய்தவற்றை இவர் விரித்துப் பேசுவர். விபவாவதாரத்திலோ அர்ச்சாவதாரத்திலோ நம்மாழ்வார்கொண்ட அபிநிவேசத்தை இவ்வாழ்வார் மிக்கவுகப்புடனெடுத்துக் காட்டுவரென்னுமிவ்விரண்டு விஷயங்கள் முந்துறமுன்னம் ரஸித்து அநுபவிக்கத் தக்கவை. முன்னம் இதையநுபவிப்போமாக.

நம்மாழ்வார் விஸ்தரித்ததை இவ்வாழ்வார் சுருக்கியது.

திருவாய்மொழியில் (ஐந்தாவது பத்து, ஆருவது பதிகம்) *கடல் ஞாலஞ் செய்தேனும் யானே யென்னும்* என்று தொடங்குவது தாய்ப்பாசுரமாக அமைந்தது; மகள் ஸர்வேச்வரனுகத் தன்னையனுகரித்துப் பேசுகிறபடியை வெகு விரிவாகச் சொன்னது. இதைத் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (8-2-6) ஒரே பாசுரத்தினுல் சுருக்கினர். *வடவரை நின்றும் வந்து, இன்று கணபுரமிடவகை கொள்வது யாமென்று பேசினுள்* என்கிற பாசுரங் காண்க. அவ்வாழ்வாருடைய அநுகாரம் தாய்ப்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பேச்சில் அமைந்தது போலவே இவ்வாழ்வாருடைய அநுகாரமும் தாய்ப்பேச்சில் தான் அமைந்தது. அடுத்தபடி எம்பெருமானுக்குத் தூது விடுவதென்பதை யெடுத்துக் கொள்வோம். இது திருவாய்மொழியில் *அஞ்சிறைய மட நாராய்* வைகல் பூங்கழிவாய்* *பொன்னுலகாளீரோ* எங்கானலகங் கழிவாய்* என்னும் நான்கு பதிகங்களில் நாற்பது பாசுரங்களினால் விரிவாக நிகழ்ந்திருக்கின்றது. இதனைத் திருமங்கையாழ்வார் மிகச் சுருக்க மாகப் பேசினர். பெரிய திருமொழியில் (3-6) *தூவிரிய மலருழக்கியென்னும் பதிகம் தூது விடுவதாகத் தொடங்கப்பட்டு நான்கு பாசுரத்தோடு தூதுவிடுதல் நிறுத்தப்பட்டு விட்டது. மேலேயும் (9-4)*காவார் மடற்பெண்ணை* என்னும் பதிகத்தில் இரண்டு பாசுரங்களில் மட்டுமே தூதுவிடுதல் நிகழ்ந்தது. இனி மற்றொன்று கேண்மின்; சோறு கூறைக்காக நரஸ்துதி பண்ணி ஸ்வரூப நாசமடையும் ஸம்ஸாரிகளை நோக்கி நம்மாழ்வார் (3-9) *சொன்னால் விரோதமிது* என்னும் பதிகத்தில் வெகு விரிவாக ஹிதங் கூறினர். இவர் (1-1-7) *கண்டவா தொண்டரைப் பாடும் சொற்பொருளாளீர்! சொல்லுகேன் வம்மின் சூழ்புனற் குடந்தையேதொழுமின். நற்பொருள்காண்மின், பாடிநீருய்மின் நாராயணவென்னும் நாமம்* என்று அதனைச் சுருக்கிப் பேசினர். மேலும் ஆபாஸ பந்துக்களின் ஹேயத் தன்மையைத் திருவாய் மொழியில் (9-1) *கொண்ட பெண்டிர் மக்களுற்றார்* என்னுமொரு பதிகத்தில் மிக விரிவாகவுரைத்தார் நம்மாழ்வார்; அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (8-9-7) *பெற்றாரும் சுற்றமுமென்றிவை பேணேன் நான், மற்றாரும் பற்றிலேன்* என்று சுருக்கியுரைத்தனர். இன்னமும்; ஸ்ரீமந் நாராயண னுடைய பரத்துவத்தை நம்மாழ்வார் *உயர்வறவுயர் நலம்* திண்ணன் வீடு *அணைவ தரவணை மேல் *ஒன்றுந்தேவும் என்னும் நான்கு பதிகங்களில் மிக விரிவாகவருளிச் செய்தார்; அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (11-6) *மைந் நின்ற கருங்கடல் வாயுலகின்றி* என்கிற ஒரே பதிகத்தினால் சுருக்கியுரைத்தனர். அவர் விஸ்தரித்ததை இவர் சுருக்குவதென்னுமிதனை மற்றுஞ்சில விஷயங்களிலுங் கண்டு கொள்க.

நம்மாழ்வார் சுருக்கியதை இவ்வாழ்வார் விஸ்தரித்தது.

அவர் விஸ்தரித்ததை இவர் ஸங்க்ரஹித்தமை மேலே காட்டினோம். அவர் ஸங்க்ர ஹித்ததை இவர் விஸ்தரித்தமை இங்கே காட்டுவோம். நம்மாழ்வார் திருவாய்மொழியில் (5-3) *மாசறு சோதிப் பதிகத்தில் *குதிரியாய், மடலூர்துமே* என்றும் *யாம் மடலூர்ந்தும் எம்மாழியங்கைப் பிரானுடைத் தூமடல் தண்ணந்துழாய் மலர் கொண்டு சூடுவோம்* என்றும் இரண்டு துண்டுகளால் மடலூர்தலை ப்ரஸ்தாவித்தார்; மடலூர்தலைப் பற்றி நம்மாழ்வார்திருவாக்கில் வேறு பேச்சு சிறிதும் கிடையாது. இங்ஙனே சுருக்கமாக உள்ளதை இவ்வாழ்வார் சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னுமிரண்டு திவ்ய ப்ரபந்தங்களினால் மிக விவரித்துரைத்தார். அவருடைய இரு சிறுவார்த்தைகளுக்கு இவர் இரண்டு பிரபந்தங்கள் இட்டருளினராயிற்று. அன்றியும், நாராயண மந்திரத்தின் சிறப்பை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (1-2-10) *எண் பெருக் கந்நலத் தொண் பொருளீறில, வண்புகழ் நாரணன்* என்றும் (10-5-1) *கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்! எண்ணுந் திருநாமம் திண்ணம் நாரணமே* என்றும் இரண்டு சிறு பாசுரங்களினா லருளிச்செய்தனர். அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (1-1)

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

*வாடினேன் வாடியென்றும் (6-10) *கிடந்த நம்பி குடந்தை மேவி* யென்றுமிரண்டு பதிகங்களில் "நான் கண்டு கொண்டேன் நாராயணவென்னும் நாமம்" "நாமஞ் சொல்லில் நமோ நாராயணமே" என்றும் ஒரு காற் சொன்னுப் போலே ஒன்பதின்காற் சொல்லி வைத்தனர் இன்னமும், எம்பெருமான் ஸம்ஸாரி சேதந ஸம்ரக்ஷணார்த்தமாகப் பல திருவவதாரங்கள் செய்தருளும்படியை நம்மாழ்வார் திருவிருத்தத்தின் தொடக்கத்தில் *உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தா யிமையோர்தலைவா* என்றும், திருவாய்மொழியில் (5-1-10) *மீனையாமையுமாய் நரசிங்கமுமாய்க்குறளாய், கானரேனமு மாய்க் கற்கியாமின்னங்கார் வண்ணனே* என்றும் சுருக்கமாகப் பேசிவைத்தார். அதனை இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் (8-8) *வானேரளவும் முது முந்நீர்* (11-4) *நிலையிடமெங்குமின்றி* என்கிற இரண்டு பெரிய பதிகங்களினுல் மிக விரித்துரைத்தார். நம்மாழ்வார் சுருக்கியதை இவ்வாழ்வார் விஸ்தரித்தாரென்னுமிதனை மற்றுஞ் சில விஷயங் களிலுங் கண்டுகொள்க.

விபவ அர்ச்சைகளில் அபிநிவேச விசேஷங்களை யெடுத்துக்காட்டுதல்.

மத்ஸ்ய கூர்ம வராஹ ராம க்ருஷ்ணதியவதாரங்களுக்கு விபவாவதாரமென்று பெயர். இவற்றுள் எந்த அவதாரத்தில் நம்மாழ்வார்க்கு அபிநிவேசாதிசயமென்று ஆராய்ந்து, முதற் பிரபந்தமான திருவிருத்தத்தின் முடிவில் "ஏனத்துருவாயிடந்த ஞானப் பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே" என்றும், திருவாய்மொழியின் முடிவில் "கோலவராகமொன்றுய் நிலங்கோட்டிடைக்கொண்ட வெந்தாய்" என்றுமருளிச் செய்திருப்பதை ஊன்றி நோக்கின திருமங்கையாழ்வார் வராஹாவதாரமே இவர் மிகவு மீடுபட்டதென்று துணிந்து தமது பெரிய திருமொழியின் தொடக்கத்தில் *பன்றியாயன்று பாரகங்கீண்ட பாழியானுழியானருளே* என்று அவ்வவதாரந்தன்னையே போற்றினர். இனி அர்ச்சையிற் செல்வோம். கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திவ்ய தேச மூர்த்திகளுக்கு அர்ச்சாவதாரமென்று பெயர். இவற்றுள் நம்மாழ்வாருடைய ஈடுபாடு எந்த திவ்யதேசத்தில் மிக்கதென்று ஆராய்ந்த திருமங்கையாழ்வார் திருக் குடந்தையிலென்று கண்டார். (எங்ஙனேயென்னில்,) திருவாய்மொழியின் முடிவில் *சூழ் விசும்பணி முகிற்பதிகம் திருநாட்டிலநுபவத்தைப் பரக்கப் பேசுவது; அங்கு லீலா விபூதியின் நினைவு வருவதற்கு ப்ரஸக்தி கிடையாது. அப்படியிருந்தும் *குடந்தையன் கோவலன் குடியடியார்க்கு—தொடர்ந்தெங்கும் தோத்திரஞ் சொல்லினர்* என்கிற பாசுரம் மிகவற்புதமாக அவதரித்துள்ளது. அங்குள்ள ஸ-ரிகள் இவர்களையுபசரிக்கும் போது 'இவர்கள் திருக்குடந்தையெம்பெருமான் திருக்குணங்களிலே ஸந்தானமாக ஈடுபட்டவர்கள்' என்று சொல்லித் தொடர்ந்து தோத்திரஞ் செய்ததாகச் சொல்லிற்று. திருவரங்கம் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலான திருப்பதிகள் கிடக்க, அவற்றையெல்லாம் விட்டுத் திருக்குடந்தையிலீடுபாட்டை யெடுத்துரைத்துத் தோத்திரஞ் செய்ததாகவருளிச் செய்ததன் காரணம் ஆராயுமளவில், திவ்யப் பிரபந்தங்க ளெல்லாம் லோபித்திருந்த காலத்தில் திருக்குடந்தை விஷயமான *ஆராவமுதே யென்கிற பதிகமொன்றுமட்டும் ஸ்ரீமந் நாதமுனிகள் திருச்செவியிலேபட அதிலிருந்தே நாலாயிரமும் புநரவதாரம்செய்ய ப்ராப்தமாயிற்றென்று ஐதிஹ்யமாகையினுலே

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆழ்வார்க்கும் அங்குள்ள ஸுரிகட்கும் பவிஷ்யத் ஜ்ஞானமிருந்தே இப்படி பாசுரம் தோன்ற நேர்ந்ததென்பது ரஹஸ்யமருமம். இவ்வாறுக நம்மாழ்வார்க்குத் திருக்குடந்தை யிலே அபிநிவேசமிருக்கும்படியை யுணர்ந்தே திருமங்கையாழ்வார் ஸ்வப்ரபந்தாரம் பத்திலேயே (1-1-2) *சூழ்புனற் குடந்தையே தொழுது* என்றும் (1-1-7) *சூழ்புனற் குடந்தையே தொழுமின்* என்றும் அருளிச்செய்ததன்றியும், சரமப்பிரபந்தமான திருநெடுந்தாண்டகத்தை முடித்தருளும்போதும் *தண்குடந்தைக் கிடந்தமாலே நெடி யானே யடி நாயேன் நினைந்திட்டேனே* என்று நம்மாழ்வாரைப் போலவே திருக் குடந்தை நினைவாகவே முடித்தருளினர்.

அதற்கடுத்த பாசுரத்திலும் ஒரு விசேஷத்தை அற்புதமாகக் காட்டி நின்றார்; (அதாவது) *அன்னமாய் முனிவரோடு அமரரேத்த அருமறையை வெளிப்படுத்த வம்மான் தன்னை* என்று நம்மாழ்வார்க்குத் திருநாட்டில் திருக்குடந்தை நினைவு வருவ தற்குறுப்பான ஹிதோபதேசத்தை முத்ராலங்கார ரீதியில் காட்டி வைத்தார். ஆசார்ய ஹிருதயத்தில் (151) "நாதயாமுனர் போல்வாரை அன்னமென்னும்" என்றருளிச் செய்த படி அன்னமாயும், நாதமுனிகளென்னும் படி முனிவராயுமுள்ள ஸ்ரீமந் நாதமுனி களோடே கூட (அமரர் ஏத்த) திருக்குருகூரிலுள்ள நிலத் தேவர்கள் துதிக்க (அருமறையை வெளிப்படுத்த வம்மான்) 'நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே" என்கிறபடியே அருந்தமிழ் மறையை நம்மாழ்வார் வெளியிட்டருளின படி காட்டிற்று யிற்று பலபல திருப்பதிகட்கு 1, 2, 3, 4, 5, 10 பதிகங்கள் பாடிவருகின்ற திருமங்கை யாழ்வார் திருக்குடந்தைக்குத் துணுக்கைப் பாசுரங்கள் தவிர ஒரு பதிகமும் பாடா தொழிந்தது எதனாலேயென்று பலர் விமர்சிப்பதுண்டு. நம்மாழ்வார் பணித்தருளின *ஆராவமுதே பதிகத்தை ஆழ்ந்து அநுபவித்தவிவர் 'இதுபோலவோ இதனில் மேம்படவோ நம்மால் பாட இயலாது; ஆகவே இத்தலத்திற்குப் பதிகம் பாடுதலில் நாம் இறங்கத் தகாது' என்று கொண்டே பதிகம் பாடாதொழிந்தனரென்பது தத்துவம்.

தாமான தன்மையிற் பேசுவதோடு நில்லாமல் பெண்மையெய்தியும் பேசுவதில் ஒற்றுமை.

நம்மாழ்வார் குருகூர்ச்சடகோபனை நிலைமையில் நின்று மட்டும் பேசாமல் தலைமகளாக நின்றும் தாயாக நின்றும் தோழியாக நின்றும் பேசுவதைத் திருவிருத்தத்திலும் திருவாய்மொழியிலும் காணு நின்றோம். திருவிருத்தம் நிற்க. திருவாய்மொழியில் தலைமகளாக நின்று பேசின பதிகங்கள் பதினேழு. தாயாக நின்று பேசின பதிகங்கள் ஏழு. தோழியாக நின்று பேசின பதிகங்கள் மூன்று. ஆக இருபத்தேழு பதிகங்கள் வேற்று வாயாலே பேசினவை. மற்ற எழுபத்துமூன்று பதிகங்கள் தாமான தன்மையில் நின்று பேசினவை.

திருவாய்மொழியில் தலைமகள் பாசுரமான பதிகங்களாவன:

1. அஞ்சிறைய மடநாராய்.
2. வாயுந்திரையுகளும்
3. ஏறுளுமிறையோனும்.
4. மாசறுசோதி.
5. ஊரெல்லாந்துஞ்சி
6. எங்ஙனேயோவன்னீர்.
7. மானேய் நோக்குநல்லீர்.
8. வைகல் பூங்கழிவாய்
9. மின்னிடை மடவார்கள்.
10. பொன்னுலகாளீரோ.
11. வெள்ளைச்சுரிசங்கொடு.
12. ஏழையராவியுண்ணும்.
13. நங்கள் வரிவளை யாயங்காளோ.
14. இன்னுயிர்ச்சேவலும் நீரும்.
15. எங்கானலகங்கழிவாய்.
16. மல்லிகைகமழ் தென்றல்.
17. வேய்மருதோளிணை.

ஆக 17.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தாய் பாசுரமான பதிகங்களாவன:

1. ஆடியாடி. 2. பாலனாய் 3. மண்ணியிருந்துதுழாவி.
4. கடல் ஞாலம். 5. மாலுக்கு. 6. உண்ணுஞ்சோறு.
7. கங்குலும் பகலும். ஆக 7.

தோழி பாசுரமான பதிகங்களாவன:

1. தீர்ப்பாரையாமினி 2. துவளில்மாமணிமாடம்.
3. கருமாணிக்கமலை. ஆக 3.

இவ்வகையில் திருமங்கையாழ்வாரனுபவங்களை இனி யெடுத்துக்காட்டுவோம். பெண்மை யெய்திப் பேசும் பாசுரங்களில் இவ்வாழ்வார்களிருவர்க்கும் பெரும்பாலும் கருத்தொற்றுமை விளங்குமாற்றை உபபாதிக்கக் கேண்மின். மகள் பாசுரமும் தாய் பாசுரமும் தோழிபாசுரமுமானவை திருவாய்மொழியில் இருபத்தேழு பதிகங்களென்று காட்டினேம்: திருமங்கையாழ்வார் பாசுரங்களில் தலைவி பாசுரமும் தாயார் பாசுரமுந் தவிரத் தோழி பாசுரமாக ஒரு பதிகமும் அவதரிக்கவில்லை. தலைவி தோழியோடு ஸம்பாஷிப்பதான பாசுரங்களுண்டு: திருவாய்மொழியில் தோழிபாசுரமாகவே மூன்று பதிகங்கள் அவதரித்திருப்பது போல இங்கில்லை யென்பது விவக்ஷிதம். பெரிய திருமொழியிற் பதிநேராம்பத்தில் (ஐந்தாவதான) *மானமருமென்னோக்கிப்பதிகம் தோழிமார் பாசுரமன்றே? என்ன வேண்டா; தோழியிருவர் தாங்கள் பரஸ்பரம் ஸம்பாஷிக்கும் முகத்தினால் எம்பெருமானுடைய பரத்வ ஸௌலப்யங்களை வெளியிடும் பதிகம் அது. பரகாலநாயகியின் பிரகிருதியைப்பற்றின பேச்சு விடையாதாதலால் தோழி பாசுரமன்றென்க. ஆகவே திருமங்கையாழ்வாரருளிச் செயல்களில் (பெண்மையில்) தலைவி பாசுரமும் தாய் பாசுரமுமே உள்ளதென்றதாயிற்று. எனினும், நம்மாழ்வாரருளிச் செயலிற்போல இங்கும் அந்யாபதேசப் பதிகங்கள் இருபத்தேழு தேறியுள்ளன. அவற்றின் விவரணம் வருமாறு;—

பெரியதிருமொழியில் தாய் பாசுரமும் தலைவி பாசுரமுமான பதிகங்கள்

1. திவளும்வெண்மதிபோல்.
2. கள்வன்கொல்யானறியேன்.
3. கவளயானை கொம்பொசித்த
4. வெருவாதாள்வாய் வெருவி.
5. சிலையிலங்குபொன்னுழி.
6. தெள்ளியீர் தேவர்க்குந்தேவர்.
7. மூவரில் முன்முதல்வன்.
8. புள்ளுருவாகி நள்ளிருள்வந்த (திருநெடுந்தாண்டகத்தில்)
9. பட்டுடுக்கும்பதிகம் —தலைவிபாசுரமான பதிகங்கள்.
10. திரிபுரமூன்றெரித்தானும்
11. தூவிரியமலருழக்கி.
12. தந்தைகாலில் பெருவிலங்கு.
13. கரையெடுத்தசுரிசங்கம்.
14. விண்ணவர்தங்கள்பெருமான்.
15. தந்தைகாலில் விலங்கற.
16. பொன்னிவர்மேனிமரதகத்தின்.
17. தன்னை நைவிக்கிலென்.
18. காவார்மடற்பெண்ணை.
19. தவளவிளம்பிறைதுள்ளு.
20. காதில் கடிப்பிட்டு.
21. திருத்தாய் செம்போத்தே.
22. குன்றமொன்றெடுத்தேந்தி.
23. குன்றமெடுத்துமழைதடுத்து.
24. மன்னிலங்குபாரதத்து.
25. சிறிய திருமடல்
26. பெரிய திருமடல். (திருநெடுந்தாண்டகத்தில்)
27. மைவண்ண நறுங்குஞ்சிப்பதிகம்.

ஆக 27.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அந்யாபதேசப்பதிகங்கள் நம்மாழ்வாருடையனவும் 27; திருமங்கையாழ்வாருடையனவும் 27 என்று தேறிற்று. இனி இவற்றிலுள்ள ஸாதர்மிய வைதர்மியங்களாகிற வைலக்ஷண்யத்தை யநுபவிப்போம்.

திவளும் வெண்மதிபோல். திருவாய்மொழியில் *கங்குலும் பகலும் போலேயாம் இப்பதிகம் அவருடைய தாய்ப்பேச்சில் அது முடிவுபதிகம், இவருடைய தாய்ப் பேச்சில் இது முதற்பதிகம் என்பது வாசி. பிரமேயம் இரண்டிலுமொன்றே. "இவள் திறத்து என்செய்கின்றியே" என்று வினவுதல் அங்கு. "நின்தாள் நயந்திருந்த விவளை உன்மனத்தால் என்னினைந்திருந்தாய்?" என்று வினவுதல் இங்கு. இந்த வினு பாட்டுத் தோறு மொக்கும்.

கள்வன் கொல்யானறியேன். திருவாய்மொழியில் *உண்ணுஞ்சோறு பருகுநீர் போலேயாம் இப்பதிகம். தாயை விட்டு மகள் பிரிந்து போதல் இரண்டிலுமொக்கும். திருக்கோளூரை வினவிக்கொண்டு தனியே போனுள் பராங்குச நாயகி; வயலாலி மணவாளன் கொண்டு போகப் போனுள் பரகாலநாயகி.

கவளயானை கொம்பொசித்த. திருவாய்மொழியில் *ஆடியாடியகங்கரைந்து போலேயாம் இப்பதிகம். இசை பாடிப்பாடியுருகுதல் ஒக்கும். *எனவள்ளலே கண்ணனே யென்னுமென்றுள் பராங்குச ஜனனி; *கவளயானை கொம்பொசித்த கண்ண னென்னுமென்கிறுள் பரகாலஜனனி.

வெருவாதாள்வாய் வெருவி திருவாய்மொழியில் *பாலனுயேழுலகு போலே யாம் இப்பதிகம் அதில் "என்செய்கே னென்னுடைப் பேதையென் கோமளம், என் சொல்லு மென்வசமுமல்லள் நங்கைமீர்" என்றுள் பராங்குசஜனனி; இதில் "தாய் வாயில் சொற்கேளாள் தன்னுய்த் தோடணையாள்" இத்யாதியுரைக்கின்றுள் பரகாலஜனனி.

சிலையிலங்கு, தெள்ளியீர்தேவர்க்கும். திருவாய்மொழியில் *கடல் ஞாலம் செய் தேனும் யானேயென்னு மென்கிற வொரு பதிகம் போன்றது இவ்விரண்டு பதிகமும். அதில் பாட்டுத்தோறும் "ஈசன்வந்தேறக்கொலோ" என்று திருத்தாயார் சொன்னுப் போலே *சிலையிலங்கு பொன்னுழியில் பாட்டுத் தோறும் "கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ!" என்கிறுள் திருத்தாயார். அதில் 'யானே, யானே' என்று எம்பெருமானுடைய தாதாத்ம்யாநுஸந்தானம் பண்ணின படியைத் திருத்தாயார் சொன்னுப் போலவே *தெள்ளியீரில் "வடவரை நின்றும் வந்து இன்று கணபுரமிடவகை கொள்வது யாம் என்று பேசினுள்" என்று தத் தாதாத்ம்யாநுஸந்தானம் பண்ணுகிற படியை இத்திருத்தாயார் சொல்லுகிறுள்.

மூவரில் முன்முதல்வன். திருவாய்மொழியில் *மண்ணியிருந்து துழாவி போன்றதாமிப்பதிகம். அதில் "பிரான்கிடக்கும் கடலென்னும்" = இதில் "முழங்கார் கடலுள் கிடந்து." அதில் "எல்லாவுலகு கண்ணன் படைப்பென்னும்" = இதில் "பூவலருந்தி தன்னுள் புவனம் படைத்து." "மூவுலகும் படைத்த முதல் மூர்த்தி தன்னை" இங்ஙனே கண்டு கொள்க. இனி *புள்ளூருவாகி நள்ளிருள் பதிகத்திலும், (திரு நெடுந்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தாண்டகத்தில்) *பட்டுடுக்கும் பதிகத்திலும் பராங்குச ஜனனியின் பேச்சுக்களின் ப்ரபஞ்சன்ப்ரஞ்ஞைகள் உய்த்துணரத் தக்கது திருவிருத்தத்தில்* அருளார் திருச்சக்கரத் தாலென்னும் தாய்பாசுரத்தில் "ஈங்கோர் பெண்பால் பொருளோ வெனுமிகழ்வோ?" என்ற வார்த்தையே *புள்ளுருவாகியில் ஒன்பது பழமொழிகளால் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. அங்கு அடியேனுடைய் திவ்யார்த்த தீபிகையுரையில் விளக்கம் காண்க.

பட்டுடுக்கும் பதிகத்திலிருந்து கண்டதோர் விசேஷார்த்தம்— திருநெடுந்தாண்ட கத்தில் *பட்டுடுக்கும் அயர்த்திரங்கும் பாவைபேணுள்* என்கிற பதினேராம் பாட்டு முதலாக "தேராளும் வாளரக்கன் செல்வம் மாள" என்கிற இருபதாம் பாட்டு வரையில் தாய்பாசுரமான பதிகம். இதில் *பட்டுடுக்கும் பாசுரத்தில் "மட்டுவிக்கி மணிவண்டு மூரலுங்கூந்தல்" என்று பரகால நாயகி குறிக்கப் படுகிறாள். இதிலிருந்து நாமைகதேச க்ரஹணந்யாயத்தாலே பரகால நாயகிக்கு மணிவண்டு என்றொரு திருநாமம் ப்ரஸித்த மாகிறது இதை நெஞ்சில் திடமாக வைத்துக்கொண்டு மேல் விஷயம் குறிக்கொள்க. பெரிய திருமொழியில் (6-6) *அம்பரமும் பெருநிலனுமென்று தொடங்கும் திருநறையூர்ப் பதிக மொன்றில் "வம்பவிழுஞ் செண்பகத்தின் வாசமுண்டு மணிவண்டு வகுளத்தின் மலர் மேல் வைகு" என்றுள்ளது. மணிவண்டானது முந்துற முன்னம் செண்பகப்பூவை அநுபவித்து விட்டுப் பிறகு மகிழ மலரிலேயே படுகாடு கிடப்பதாக இங்குச் சொல்லப் படுகிறது. "யஸ்ய ஸாரஸ்வதம் ஸ்ரோத: வகுலாமோத வாஸிதம்" [யதிராஜஸப்ததி.] என்றதற்குச் சேர திருவாய்மொழியநுபவத்தில் ஊன்றியிருப்பதுதான் வகுளத்தின் மலர் மேல் வைகுதலாகச் சொல்லிற்றிங்கு. ஆழ்வார்கள் திரளில் திருமங்கையாழ்வார் கடைக் குட்டியாகையாலே மற்றுள்ளவாழ்வார்களனைவருடையவும் திவ்வியப் பிரபந்தங் களை இவர்தாம் அநுபவித்தவர். அதனைச் *செண்பகத்தின் வாச முண்டென்பதனால் காட்டி, அவை யெல்லாவற்றினுள்ளும் நம்மாழ்வாரருளிச்செயலிலேயே தாம் ஊன்றி யிருந்தபடியை *வகுளத்தின் மலர்மேல்வைகு* என்பதனால் விளக்கினபடி. இங்குத் திருமங்கையாழ்வாராகிய தம்மையே மணிவண்டென்பதனால் குறித்தனரென்பது உறுதி. இதை முன்னடியே நம்மாழ்வார் தெரிந்து கொண்டவராதலால் திருவிருத்தத்தில் "வண்டுகளோ! வம்மின், நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ உண்டு களித்துழல்வீர்க்கு ஒன்றுரைக்கியம், ஏனமொன்றுய் மண்துகளாடி வைகுந்த மன்னுள் குழல்வாய் விரை போல் விண்டு கன்வாரும் மலருளவோ நும்வியலிடத்தே." என்றருளிச் செய்தார். இங்கு "வண்டுகளோ! வம்மின்" என்றது திருமங்கையாழ்வாரையே விளித்தபடி. விளித்து என்ன வினவுகிறார்? நீர் எவ்வளவோ ஸ்ரீஸூக்திகளையுண்டு களித்துத் திருப்பதிகள் தோறும் உழல்கின்றீரே, திருவாய்மொழி போன்று பரம போக்யமானதொரு பிரபந்தம் கடல் சூழ்ந்த மண்ணுலகில் எங்கேனுங் கண்டதுண்டோ? என வினவுகிறபடி. அந்த வினவுக்கே இவர் விடையிறுக்கிறார்— 'ஸ்வாமிந்! கண்டதில்லை; ஆனது பற்றியே வகுளத்தின் மலர்மேல் தானே வைகிக்கிடக்கிறே' னென்று..... ஆக இதுவரைபில் தாய் பாசுரமான பதிகங்களின் ரஸாநுபவம் பண்ணினேம்; இனி தலைவி பாசுரமான பதிகங்களின் ரஸாநுபவம் பண்ண ப்ராப்தமாகிறது இது மிக விரிவாகச் செய்ய வேண்டும்; தற்காலம் ஸம்க்ஷேப ருசியால் "ரஸிகர்களுகக்கும் விசேஷப் பொருத்தங்கள்" என மகுடமிட்டு அம்மகுடத்திற்கு இணங்கிய இருபது விஷயங்களை நிரூபிப்பதனால் க்ருதக்ருத்யனாகிறேன். பதிகங்களின் மீது விரித்துரைப்பது மற்றொரு காலாகும்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ரஸிகர்கள் உகக்கும் விசேஷப் பொருத்தங்கள் :—(1) வேதத்தில் (தைத்திரீய யஜுர்ப்ராஹ்மணத்தில்) "க்ருத்திகா: ப்ரதமம். விசாகே உத்தமம்" என்று ஓதப் பட்டுள்ளது. திருமங்கையாழ்வாருடைய நக்ஷத்ரமான க்ருத்திகையும், நம்மாழ்வாருடைய நக்ஷத்ரமான விசாகமும் விசேஷித்தோதப்பட்டன. (2) எதிரிகளின் செருக்கையடக்குந்திறத்தில் பராங்குசனென்கிற திருநாமமும் பரகாலனென்கிற திருநாமமும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. (3) அடியார்களோயுகப்பிக்கும் விஷயத்தில் ஒருவர் இன்பமாரியென்றும், மற்றொருவர் அருள்மாரியென்றும் பேர்பெற்றனர். திருவாய்மொழியில் (4-5-10) *வண்டமிழ்நூற்க லோற்றேன் அடியார்க்கு இன்பமாரியே* என்று நம்மாழ்வார் தம்மை இன்பமாரியாகத் தெரிவித்தார்; பெரிய திருமொழியில் (2-4-10) *அங்கமலத்தடவயல் சூழாலிநாடன் அருள்மாரியரட்டமுக்கி அடையார்சீயம்* என்று திருமங்கையாழ்வார் தம்மை அருள்மாரியாகத் தெரிவித்தார். மூறையே ஆனந்த வர்ஷுகர், கருணைவர்ஷுகர் என்று பொருள். (4) திருவிண்ணகர்த் திருப்பதி யெம் பெருமானை உப்பிலியப்பனென்று வழங்குவதைத் தவிர்க்க நம்மாழ்வார் (6-3-9) *தன்னெப்பாரில்லப்பன்* என்றார். திருமங்கையாழ்வார் (8-1-2) *ஒருவரையும் நின்னெப்பாரொப்பிலாவென்னப்பா* என்று அதற்குச் சேமக்காப்பு சாற்றினர். (5) நம்மாழ்வார் திருவாய்மொழியில் (4-4.8) *திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்* என்று பகவத் பக்தர்களான அரசர்களை மதித்துப் பேசினர்; அதை யடியொற்றியே திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் "தென்னன் தொண்டையர்கோன்—மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீண் முடிமாலை வயிர மேகன்—பல்லவன் வில்லவனென்றுலகில் பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழற் பல்லவன்—துளங்கு நீண் முடியரசர் தங்குரிசில் தொண்டைமன்னவன் திண்டிற லொருவன்—செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்த கோயில்—இருக்கிலங்கு திருமொழி வாயெண்டோளீசற்கு எழில் மாடமெழுபது செய்துலகமாண்ட திருக்குலத்து வளச் சோழன்" என்றிப்படி பகவத் பக்தர்களான சில சக்ரவர்த்திகளைச் சிறப்பித்துக் கூறினர்.

(6) கண்ணபிரான் திருவாய்ப் பாடியில் *படலடைத்த சிறு குரம்பை நுழைந்து புக்குப் பசுவெண்ணெய் களவு காணப்புகுமிடத்தில் தன்னிறத்தினிருட்சியாலும் அவ்விடத்தினிருட்சியாலும் வெண்ணெயிருக்குமிடம் தெரியாமல் தடவா நிற்கையில் யாத்ருச்சிகமாகக் கையிலே வெண்ணெய்த்தாழி தட்டின உவப்பினால் பல்லைத் திறந்து சிரிக்க நேரும்; பூரண சந்திரனுடைய கிரணம்போலே திருமுத்துக்களின் ஒளி புறப் பட்டவே அந்த வொளியையே கைவிளக்காகக் கொண்டு வெண்ணெயை வாரி விழுங்கு வனும் கண்ணன். இதை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (3-8-3) "நாளிளந்திங்களைக் கோள்விடுத்து வேயகம் பால் வெண்ணெய் தொடுவுண்ட ஆயர்தாய்வனே!" என்ற பாசுரத்தினால் அநுஸந்தித்தார். இதைத் திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் (2-10-6) "உறியார்ந்த நறுவெண்ணெயொளியால் சென்று அங்குண்டானை" என்றநுஸந் தித்தார். இங்கு 'ஒளியால்' என்றது திருமுத்துக்களினொளியால் என்றபடி. இரண்டிடத் திலும் அடியேனுடைய திவ்யார்த்த தீபிகை நோக்கத் தக்கது. (7) திருவாய்மொழியில் (4-6) *தீர்ப்பாரையாமினியில் கட்டுவிச்சி வருகிறாள்; அவள் தேவதாந்தரக் கட்டுவிச்சியா கையாலே இகழப்பட்டாள்; சிறிய திருமடலிலும் திருநெடுந்தாண்டகத்திலும் வருகிற கட்டுவிச்சி பகவத் ப்ரவணையாகையாலே புகழப்பட்டாள். (8) நம்மாழ்வார் திருவிருத்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தத்தில் "மூலையோ முழுமுற்றும் போந்தில, மொய்பூங்குழல் குறிய, கலையோ வரை யில்லை நாவோகுழறும்" என்று பருவத்துக்கு ஏலாத தன்மையைச் சொன்னார். இவரும் "மூன்னெயிறேய்ந்தில கூழை முடிகொடா, தெள்ளிய னென்பதோர் தேசிலனென்செய் கேன்" என்றார். (9) நம்மாழ்வார் *பயிலும் சுடரொளியிலும் *நெடுமாற்கடிமையிலும் பாகவத சேஷத்வத்தைப்பேசினார். இவரும் *நண்ணுத வாள்வுணரிலும்* கண்சோர வெங்குருதியிலும் அதனைப்பேசினார். (10) நம்மாழ்வார் *ஊரெல்லாந்துஞ்சியிலே இராப்பொழுதில் தனிமைக்கு வருந்தினார். இவர் *தந்தை காலில் விலங்கற வென்னும் திருக்கண்ணபுரப் பதிகத்தில் அதனிலும் மிக வருந்தினார்.

(11) நம்மாழ்வார் *ஒரு நாயகத்தில் ஐச்வரியத்தின் அல்பாஸ்திரத்வங்களை விரிவாகப் பேசினார். இவர் (6-2-5)* பாண்டேன் வண்டறையுங்குழலார்கள் பல்லாண் டிசைப்ப, ஆண்டார் வையமெல்லாம் அரசாகி முன்னுண்டவரே மாண்டாரென்று வந்தார் அந்தோ !* என்று அதைச் சுருக்கமாகப்பேசினார். (12) நம்மாழ்வார் *குரவை யாச்சியரோடு கோத்தது மென்றபதிகத்தில் க்ருஷ்ணவதாரசரிதைகளை விரிவாகப் பேசினார். இவரும் அதை *மானமுடைத்துங்களாயர் குலமென்னும் பதிகத்தில் மிக விரித் துரைத்தார். (13) நம்மாழ்வார் *இன்னுயிர்ச் சேவலும்பதிகத்தில் "என்னுயிர்க் கண்ணபிரானை நீர்வரக்கூவகிலீர்" என்று இன்னுப்போடே பேசினார்; இவர் *திருத்தாய் செம்போத்திலே வெறுப்பின்றிக்கே அநுநயமாகப் பேசினார். (14) நம்மாழ்வார் *மின்னிடைமடவாரில் ஊடல் ரஸமநுபவித்தார். இவர் *காதில் கடிப்பிட்டிலே அதே ரஸத்தையநுபவித்தார். (15) நம்மாழ்வார் *உண்ணிலாவிய வைவரால் பதிகத்திலே இந்திரியங்களுக்கு ஆற்ற வொண்ணுமல் ஓலமிட்டார். இவர் *திருவுக்குந் திருவாகிய பதிகத்திலே அங்ஙனே ஓலமிட்டார். (16) நம்மாழ்வார்* ஆழியெழப்பதிகத்தில் பல அபதானங்களைப் பேசினார். இவர் *ஏழையேதலனில் அப்படியே (17) நம்மாழ்வார் "கடியன் கொடியன் நெடியமால்.....ஆகிலுங்கொடிய வென்னெஞ்சமவனென்றே கிடக்குமெல்லே" என்று குணக்ருத தாஸ்யமன்றிக்கே ஸ்வரூபப்ரயுக்தமான அடிமையை யநுஸந்தித்தார். இவரும் "வேம்பின்புழு வேம்பன்றியுண்ணுது, அடியேன் நான்பின்னு முன் சேவடியன்றி நயவேன்" என்று அதனை விவரித்தார். (18) நம்மாழ்வார் திருவிருத் தத்தில் *சூட்டு நன்மாலைகள் பாசுரத்தில் கண்ணன் வெண்ணெய் தொடுவுண்பதற்காகவே திருவாய்ப்பாடிக்குப் போந்ததாக அருளிச்செய்தார். இவரும் "காலையன்கடிமனையில் தயிருண்டு நெய்பருக நந்தன் பெற்றவாயன்" என்றார். (19) நம்மாழ்வார் "எத்திற முரலினுமடிணந் திருந்தேங்கிய வெளிவே" என்று ஒருகால் சொல்லித் தரைப்பட்டார். இவர் "அவன் காண்மினின்றுய்ச்சியரால் அனைவெண்ணெயுண்டாப் புண்டிருந்தவனே" என்று ஒருகால் சொன்னப்போலே ஒன்பதின்கால் சொல்லித் தரைப்பட்டார். இங்ஙனே யெடுத்துக்காட்டியநுபவிக்க வேண்டியவை அபரிமிதம்.

(20) திருவாய்மொழிக்கும் பெரிய திருமொழிக்குமே மிகச்சிறந்த தனியன் அமைந்தது. "பக்தாம்ருதம் விச்வஜநாநு மோதனம்" "நெஞ்சுக்கிருள்கடி தீபம்" இவ்விரண்டு தனியன்களிலும் ஆச்சரியமான ஐந்து விசேஷணங்கள் தேனிலுமினியவை. "சிரார்சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெறவும், *பொங்குபுகழ் மங்கையர் கோனீந்த மறையாயிரமனைத்தும் தங்குமனம் பெறவும் இராமாநுசமுனியை வணங்கி வேண்டுதல் இவ்விருவர் அருளிச்செயல்களுக்கே ஒக்கும்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீரஸ்து.

ஆழ்வார் பெண்மையின் தத்துவம் (P.B.A.)

திருவிடவெந்தை பிரம்மோத்ஸவத்தில் 18—4—65 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஹிண்டு ரிலிஜியஸ் எண்டோமெண்டுபோர்டு கமிஷனர் உயர்திரு. M.S. சார்ங்கபாணி முதலியார், B.A., B.L., அவர்கள் முன்னிலையில் நிகழ்த்தின உபன்யாஸத்தின் ஸாரம். ஆழ்வார் பெண்மையெய்திப் பேசுவதன் தத்துவம்.

ஒரு பரமபக்தர் கூறினார் "சதுர்முகஸமாக்ஷாபி சடகோபமுகௌ ஸ்திதா, ஸ்வவாசா மாத்ருதுஹித்ருஸகீவாசா ச வர்ணயத்." என்று பேசி வைத்தார். இதன் கருத்து யாதெனில்; "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்று வேதமோதின படிக்கும், "தன்னுபிவலயத்துப் பேரொளி சேர், மன்னிய தாமரை மாமலர் பூத்து, அம்மலர்மேல் முன்னம் திசைமுகனைத் தான் படைக்க, மற்றவனும் முன்னம் படைத்தனன் நான்மறைகள்" என்று பெரிய திருமடலில் திருமங்கையாழ்வார் அருளிச் செய்தபடிக்கும் பரமபுருஷனான எம்பெருமான் தனது கொப்பூழ்ச் செந்தாமரைமேல் நான்முகனைத் தோற்றுவித்து அவனுக்கு நான்கு வேதங்களையும் உபதேசித்தருளினன். அந்த பிரமன் நான்கு முகங்களோடு கூடியிருந்தான். எதற்காக அவனுக்கு நான்கு முகங்களுண்டாயின வென்னில்; வெவ்வேறு வகைப்பட்ட ஸ்வர ஸந்நிவேசங்களையுடைய நான்கு வேதங்களையும் ஸ்வர வேறுபாடு உண்டாகாமல் அவிகலமாக உச்சரிப்பதற்கேயாம். இங்ஙனே நம்மாழ்வாரும் சதுர்முகராயினர் என்பது ஒரு ரஸோக்தி. வடமொழி வேத ப்ரவர்த்தகனான நான்முகனுக்குப் போலே தென்மொழி வேத ப்ரவர்த்தகரான நம்மாழ்வார்க்கும் நான்கு முகங்களுடைமை இன்றியமையாததாயிற்று. ஆழ்வார் தம்முடைய திருவாக்கினாலே பேசுவது (அதாவது ஆண்மை குலையாமல் குருகூர்ச்சடகோபனாகவேயிருந்து பேசுவது), தலைமகள் பேச்சாலே பேசுவது, தாய்பேச்சாலே பேசுவது, தோழிபேச்சாலே பேசுவது என்று நான்கு ப்ரகாரங்களை நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளில் காண்கிறோம். ஆகவே இவர்க்கும் சதுர்முகஸமாக்ஷை மிகப்பொருந்தும்.

நாறுபதிகங்கள்கொண்ட திருவாய்மொழியாயிரத்தில் 73 பதிகங்கள் தம்முடைய திருவாக்காலே பேசினவை மிகுந்த 27 பதிகங்களில் பதினேழு பதிகங்கள் தலைமகள் பேச்சாலே பேசினவை; ஏழுபதிகங்கள் தாய் பேச்சாலே பேசினவை. மூன்று பதிகங்கள் தோழி பேச்சாலே பேசினவையென்று "பராங்குசமுனியும் பரகால கவியும்" என்னும் கட்டுரையில் விரித்துரைத்தேன். தலைமகளென்பது யாரை? தாயாரென்பது யாரை? தோழியென்பது யாரை? என்று தெரிந்துகொள்ளவேண்டும் இதை மிக விளக்கமாக ஈண்டு நிரூபிக்கிறேன்.

நம்மாழ்வார் தம் வாயாலும் வேற்று வாயாலும் பேசுகிறாரென்பதை முன்னம் குறிக்கொள்ள வேணும். தம் திருவாக்காலே பேசுவதென்பதில் விவரணம் வேண்டிய தில்லை அஃது இயற்கையான பேச்சென்பது யாவருமறிந்தது. வேற்று வாயாலே சொல்லுவதாவது பெண்மை யெய்திப் பேசுவதாம். ஆழ்வார் ஆடவர்களில் தலைவராக

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அவதரித்திருக்கச் செய்தேயும் "பாஞ்சால்யா: பத்மபத்ராக்ஷ்யா: ஸ்நாயந்த்யா: ஜகனம் கனம், யாஸ் ஸ்த்ரியோ த்ருஷ்டவத்யஸ்தா: பும்பாவம் மஸா யயு:" என்று மஹாபாரதத்தில் சொன்ன கட்டளையிலே (அதாவது, விராட நகரத்தில் பாண்டவர்கள் அஜ்ஞாதவாஸம் பண்ணினபோது, நீராடாநின்ற த்ரௌபதியின் ஒப்புயர்வற்ற ஸௌந்தர்ய லாவண்யாதி அதிசயங்களைக்கண்ட பெண்டிர் 'ஐயோ! நாம் ஆண்களாகப் பிறவாமற் போனோமே' என்று நினைத்து மாநஸிகமாகப் புருஷபாவனையை யெய்தினராம். நம் பூருவாசாரியர்கள் மிகப் பொருத்தமாக இவ்விஷயத்தில் ஒரு காரிகை இட்டருளியுள்ளார்கள் அது திருநெடுந்தாண்டக வியாக்கியானத்தில் கையாளப்பட்டுள்ளது. (அதாவது) "ஸ்வாமித்வ - ஆத்மத்வ சேஷித்வ பும்ஸ்த்வாத்யா: ஸ்வாமிநோ குண:, ஸ்வேப்யோ தாஸத்வ தேஹத்வ சேஷத்வ ஸ்த்ரீத்வ தாயிந:" என்பதாம். இதன் பொருளாவது எம்பெருமான் ஸர்வஸ்வாமியென்றும், ஸர்வபூதாந்தராத்மாவென்றும் ஸர்வசேஷியென்றும் புருஷோத்தமனென்றும் சொல்லப்படுகிறான். அவன் ஸ்வாமியாயிருப்பதற்குச் சேர நாம் தாஸர்களாகிறோம். அவன் ஆத்மாவாயிருப்பதற்குச்சேர நாம் சரீரபூதர்களாகிறோம். அவன் சேஷியாயிருப்பதற்குச் சேர நாம் சேஷ பூதர்களாகிறோம். அவன் புருஷோத்தமனாயிருக்கும் தன்மை நமக்குப் பெண்மையை விளக்கின்றது என்கை. அவனும் ஸ்வாமியாய் நாமும் ஸ்வாமியாயிருக்க முடியுமோ? அவனும் அந்தராத்மாவாய் நாமும் அந்தராத்மாவாயிருக்க முடியுமோ? அவனும் சேஷியாய் நாமும் சேஷியாயிருக்க முடியுமோ? சேஷித்வமாவது கைங்கரியம்கொள்ளுகை; சேஷத்வமாவது தொண்டுசெய்கை. அவனும் புருஷனாய் நாமும் புருஷராயிருக்க முடியுமோ? எங்ஙனே முடியும்? ஆகவே தாஸத்வ தேஹத்வ சேஷத்வங்கள் போலே ஸ்த்ரீத்வமும் இயற்கையானதேயென்று தேறிற்று. புமானைப் புமான்களே யனுபவிப்பதென்பதில் ரஸமில்லையே. ஆண்களாய்ப் பிறந்தவர்களுக்கு சரீர தர்மமாகப் பெண்மை ஸம்பவிப்பதன்றுகிலும் பாவநாவிசேஷ அபரபர்யாயமான ஸ்த்ரீத்வம் ஸம்பவிக்கக் குறையில்லை. அத்யந்த பாரதந்த்ரியமன்றே ஸ்த்ரீதர்மம். அப்படிப்பட்ட பாரதந்த்ரியத்தை ப்ரகாசப் படுத்துவதுதான் பெண்மையெய்துகை.

எம்பெருமானுக்கும் நமக்கும் நவவித ஸம்பந்தம் திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்தில் தேறுவதாக ஆசாரியர்கள் நிரூபிக்கிறார்கள். அவற்றுள் பதிபத்நீபாவ ஸம்பந்தமென்பது நான்காவதாகும் திருமந்த்ரத்தில் இது எந்த சொல்லால் தேறுகிறதென்னில், பிரணவத்தில் இடைச் சொல்லான உகாரத்தினால் தேறுகிறது. உகாரம் அவதாரணார்த்தமாய் சேதனன் எம்பெருமானொருவனுக்கே சேஷப்பட்டவனென்றுகாட்டி [அநந்யார்ஹத்வத்தைக்காட்டி] "கண்டாரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானே யல்லாலறியாக் குலமகள் போல்" என்ற குலசேகராழ்வார் ஸ்ரீஸூக்தியின்படி பதிபத்நீபாவ ஸம்பந்தத்தை (அல்லது, பர்த்ரு பார்யா பாவரூப ஸம்பந்தத்தை)க் காட்டி நிற்கும். ஆகவே ஜீவாத்மாவின் ஸ்த்ரீத்வம் ஸகல சாஸ்த்ர ஸாரமான திருமந்திரத்தில் ஸித்தமென்றதாயிற்று. எம்பெருமானுடைய அந்தரங்க மஹிஷிகளான ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிகளின் ஸாதர்மியத்தையே ஆழ்வார் அடைகின்றார். ஆனதுபற்றியே திருவாய்மொழியில் (6-5-10) *பின்னைகொல் நிலமாமகள் கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள்* என்று தோழி பாசுரம். பெரிய திருமொழியில் *காவியங்கண்ணி யெண்ணில் கடிமாமலர்ப் பாவை யொப்பாள்* என்று தாய் பாசுரம்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தலைமகளென்பதும் நாயகி யென்பதும் பரியாயம். தாயாருடைய த்ருஷ்டியாலே மகளாகிறாள்; நாயகனுடைய த்ருஷ்டியாலே நாயகியாகிறாள். மகளுக்குத் தாயாரொருத்தி யிருப்பதும், நாளடைவில் தோழிமார் ஏற்படுவதும் ஸஹஜம். ஆகவே ஸ்த்ரீ பாவனையில் ஒருபோது தாய் பேச்சும் ஒருபோது மகள் பேச்சும் ஒருபோது தோழி பேச்சும் நிகழ் கின்றன. பக்திதானே ச்ருங்கார வ்ருத்தியில் பரிணமிப்பதனால் இத்தகைய பேச்சுகள் பக்திநூல்களுக்கு அவத்யமாகாது. மணவாளமாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதி யில் (4) *அஞ்சிறைய மட நாராய்ப் பதிகத்திற்கு ஸாரமருளிச்செய்பவர் *அஞ்சிறைய புட்கள்தமை ஆழியானுக்கு நீர், என்செயலீச் சொல்லுமென விரந்து—விஞ்ச நலங்கி யதும் மாறனிங்கே நாயகனேத்தேடி, மலங்கியதும் பத்திவளம்" என்று அருளிச் செய்ததுகாண்க. இதில் பத்திவளமென்றது உயிரான பேச்சு.

இங்ஙனே தாய்பேச்சாகவும் தலைவி பேச்சாகவும் தோழி பேச்சாகவும் வெளி வருவதற்கு என்ன கருத்தென்பதை இனி விவரிக்கிறேன். பிள்ளை லோகாசாரியர் முமுக்ஷுப்படியில் த்வய ப்ரகரணத்தின் தொடக்கத்தில் ஸ்ரீவைஷ்ணவாதிகாரிக்கு அவச் யாபேக்ஷிதங்களை யருளிச் செய்யுமிடத்து "பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும் பேற்றுக்கு த்வரிக்கையும்" என்று இரண்டு அருளிச் செய்கிறார். பேறு தப்பாதென்று துணிந்திருக்கையாவது, தம்மிடத்தில் உபாயாநுஷ்டான மொன்றுமில்லாமையையும் தாம் செய்த குற்றங்களின் மிகுதியையுங்கண்டு பேறு கிடைக்குமோ கிடைக்காதோ வென்று தளும்பியிருக்கையன்றிக்கே பேறு தப்பாமல் ஸித்திக்குமென்று திடமான அத்ய வஸாயத்தோடிருக்கை. பேற்றுக்கு த்வரிக்கையாவது இந்த அத்யவஸாயங்கொண்டு 'பேறு ஸித்தித்தபோது ஸித்திக்கட்டும்' என்றிருக்கையன்றிக்கே க்ரமப்ராப்தி பற்றுமல் பதறுகை. ஆக இவ்விரண்டும் ஏகாச்ரயத்தில் இருக்கப் பொருத்தமில்லை; திடமான அத்ய வஸாயங் கொண்டிருந்தால் பதறுகை அப்ராப்தம் பதறுவதனால் அத்யவஸாயத்திற்கு அர்த்தமில்லையாகும் பதறுமலிருப்பதற்கு உறுப்பன்றே அத்யவஸாயம். இரண்டும் அவர்ஜநீயமாயிருக்கையாலே தாய் பேச்சாலே அத்யவஸாயத்தை வெளியிடுவதும், மகள் பேச்சாலே பதற்றத்தை [பேற்றுக்குத்வரிக்கையை] வெளியிடுவதுமாய்ச் செல்லுகிறது. தாய் அத்யவஸாய நிஷ்டை, மகள் த்வரா நிஷ்டை என்றதாயிற்று. திருவாய்மொழியில் (5-5.) *எங்ஙனே யோவன்னீமீர்காள்!* என்கிற பதிகத்தைக் கொள்வோம்; இதில் பாசுரந்தோறும் "அன்னையரும் முனிதிர்" "அன்னைகாணகொடாள்" என்கிற சொல் தொடர்கள் வருவதைக் காண்கிறோம். [முனிதலாவது சீறுதல். காணகொடா ளென்றது வெறுப்புக்கொள்ளுகிறாளென்றபடி.] இது மகள் பாசுரமான பதிகம். தாய்க்கு மகள்மேல் சீற்றமும் வெறுப்பும் மிகமிகவுண்டாகியிருப்பதாக இதனால் தெரியவருகிறது. இவையுண்டாகைக்குக் காரணமென்னவென்று பார்க்கவேணும் அது மகள் வாயினாலேயே ஸ்பஷ்டமாக வெளிவந்துள்ளது. எங்ஙனேயென்னில், "மேலும் வன்பழி நங்குடிக்கிவளென்று அன்னை காணகொடாள்" "நிறைந்தவன்பழி நங்குடிக்கிவளென்று அன்னை காணகொடாள்" "கழியமிக்கதோர் காதலளிவளென்று அன்னை காணகொடாள்" என்றன்றே வசனவ்யக்தியுள்ளது. இம்மகளால் ப்ரபந்நஸந்தானத்திற்குப் பெரும்பழி விளையுமென்றும், திடமான அத்யவஸாயங்கொண்டிருக்கையன்றிக்கே மேல்விழுந்து பதறுவதற்குறுப்பான எல்லைகடந்த அன்பையுடையவளாயிருக்கிறாளிவளென்றும்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வாய்விட்டுச் சொல்லியேயன்றே தாயானவள் மகளை க்ஷேபிக்கின்றாள். மகள் பதறுவது ப்ரபந்நஸந்தானத்திற்குப் பெரும்பழியென்று தாயார் முடிவுகட்டினதாக இங்கு ஸ்பஷ்டமாகிறது. ஆனால் மேலே (6-7.) *உண்ணுஞ்சோறு பருகுநீர்ப்பதிகத்திலே (4.) "கொல்லியென்பர் கொலோ! குணம் மிக்கனளென்பர் கொலோ!" என்கிற பாசுரத்தை நோக்குமிடத்து இது நிர்த்தாரணம் பண்ணவொண்ணுத விஷயமென்று தாயார் கருதியிருப்பதாகத் தெரியவருகின்றது. இப்பாசுரத்தின் கருத்தாவது. என் மகளுடைய நடவடிக்கையைக் கண்டு உலகத்தார் வெறுப்பர்களோ? அன்றி உகப்பர்களோ? பேறு தப்பாதென்று துணிந்திருப்பதே கடமையென்று திண்ணிய அத்யவஸாயமுடையார் 'இவள் இங்ஙனே பதறுகையாவதென்?' என்று வெறுக்கக்கூடும். 'பெறும்பேற்றின் கனமறிந்தால் அதற்குப் பதறுமலிருக்கமுடியுமோ' வென்றிருக்குமவர்கள் உகக்கக்கூடும். உலகத்தாருடைய நினைவை ஒருபடி நிர்ணயிக்கமுடியாதாகையாலே. அவத்யம் சொல்லும்படியாகுமோ? அன்றி சிலாகிக்கும்படியாகுமோ தெரியவில்லையேயென்று தாயார் தளும்பி நிற்கும்படி இப்பாசுரத்தில் தெரியவருவதால் தாயின் கருத்தாலும் மகளுடைய பதற்றம் பரிபூர்ணமாகப் பழிக்கப்படுவதில்லையென்பது விளங்கும்.

மேலேயெடுத்த *எங்ஙனேயோபதிகத்தில் தாய்மார் சீறுவதைமட்டும் சொல்லி நில்லாமல் அவர்களோடு தோழிமார்களையுஞ்சேர்த்து அவர்களும் சீறுவதாகச் சொல்லியிருக்கிறது. (9.) *முன்னின்றுயென்று தோழிமார்களும் அன்னையரும் முனிதிர்* என்றன்றே பாசுரமுள்ளது. அன்றியும், மேலே *மானேய் நோக்குப்பதிகத்தில் (2.) "என்றுகொல் தோழிமீர்காள்! எம்மைநீர் நலிந்தென் செய்தீரோ?" என்று தோழி தாய்மாரோடு சேர்ந்து நலியுமளவேயன்றிக்கே தனிப்படவும் நலிவதாகக் காட்டப்படுகிறதே; இது பொருந்துமோ? தலைவிக்கு அந்தரங்கமாயிருப்பவளன்றே தோழி. அவளும் நலிவதாகச் சொல்லத் தகுமோவென்கிற சங்கை வலிதாகத் தோன்றும். இதற்குக் கேண்மின். தோழியானவள் தலைவியிடத்தில்மட்டும். அன்புகொண்டு தாயாரோடு உடன்பட்டிருந்திலளாகில் அவள் தலைவியோடு கூடிவாழவே முடியாது. "பூணைக்கும் தோழன், பாலுக்குங் காவல்" என்கிற விநோதோக்திரீதியிலே தாய்ப்பக்ஷத்திலிருப்பதாகவும் காட்டிக்கொள்ளவேண்டும் தோழி. தோழி தாய் மகளாகிய மூவருடையவும் பாசுரங்களை ஆங்காங்கு உற்று நோக்கினால் இன்சுவைமிக்க சில விசேஷங்கள் புலப்படும். சிறிது விவரிக்கிறேன். "என்பெண்மகளையெள்ளித் தோழிமார்பலர் கொண்டுபோய்ச் செய்த சூழ்ச்சியை யார்க்குரைக்கேன்" என்கிற தாய்பாசுரத்தை நோக்குமிடத்து தாயார் தோழிமார்மேல் பழியிடுவதாக விளங்கும். என் மகளுக்கு பகவத் விஷயத்திலேயுண்டான அவகாஹனமாகிற அனர்த்தம் தோழிமார் பலராலே வந்ததையோ! என்றன்றே இப்பாசுரத்தில் சொல்லிற்று. தோழிபாசுரமோ இதற்கு எதிராகவுள்ளது. தோழி சொல்லுவதாவது, "குமுறுமோசை விழவொலித் தொலைவில்லிமங்கலம் கொண்டுபுக்கு, அமுதமென்மொழியாளை நீர் உமக்காசையின்றியகற்றினீர்" என்றும் "கரைகொள் பைம்பொழில்தண்பணைத் துலைவில்லிமங்கலம் கொண்டுபுக்கு, உரைகொளின் மொழியாளை நீர் உமக்காசையின்றி யகற்றினீர்" என்றும் இங்ஙனேயுள்ளது. உத்ஸவாதி காலங்களில் கோவிலுக்குச் செல்லுகிற தாய்மார்கள் தாங்கள் தனியே போகாமல் இப்பெண்பிள்ளையை இடுப்பிலே கொண்டுபோய் 'கண்ணழகைப்பார், மூக்கழகைப்பார், ஆடையாபரணங்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

களின் அழகைப்பார்' என்று காட்டினபடியாலன்றே இவ்வனர்த்தம் விளைந்தது! என்று தோழி தாய்மார்மீது பழியிடுவதைக் காண நின்றோம். இப்படி தாய்மாரும் தோழிமாரும் பரஸ்பரம் பழியிடுவதேயல்லாமல் இப்பழி இருவர்க்குமுள்ளதேயென்று தலைவி ஸ்தாபிப்ப தையும் காண்கிறோம். எங்ஙனேயென்னில்; தலைவி பாசுரத்தில் "இணக்கியெம்மை யெந்தோழிமார் விளையாடப் போதுமினென்னப் போந்தோமை" என்றுள்ளது. கண்ணு! நான் உன்வலியில் அகப்பட்டிருக்கவேமாட்டேன்; தோழிமாரன்றே இணங்க வைத்தார்கள்! என்று இதில் சொன்னபடியால் தோழியர்மேல் பழி ஸ்தாபிக்கப்பட்டது. தலைவி பாசுரத்திலேயே "எங்ஙனேயோவன்னிமீர்காள்! என்னை முனிவது நீர்!" என்றதையுற்று நோக்குமளவில், தோழி தாய்மீது இட்டபழி தலைவியால் ஸ்தாபிக்கப் பட்டமை தெரியும். அன்னிமீர்காள்! நீர் என்னை முனிவது எங்ஙனே?—நீங்களே ஆதியில் என்னை பகவத் விஷயத்திலீடுபடுத்திவிட்டு இப்போது சீறுவது நியாயமா? என்பது இவ்வடிக்கு ஆழ்ந்த கருத்து. ஆக, தலைவி தோழிமீதும் தாய்மீதும் பழியை ஸ்தாபித்தபடி விளக்கப்பட்டதாயிற்று.

தோழியானவள் தாய்மாரோடே கூடிநின்று தலைவியைக் கண்டிப்பதாகக் காட்டு வதும், தாய்மார்க்கு நன்மை சொல்லுவது போலவிருந்து தலைவிக்கு அந்தரங்கமாக நன்மை செய்வதும் பாசுரங்களில் காண்பதுண்டு. "எங்ஙனேயோ பதிகத்தில் "முன்னின்றுயென்று தோழிமார்களு மன்னையரும் முனிதிர்" என்கிற தலைவி பாசுரத்தினுல் தோழி தாயோடு கூடித் தலைவியைக் கண்டிப்பது கண்டோம். "துவளில் மாமணி மாடமோங்கு துலைவில்லி மங்கலம் தொழுமிவளை, நீரினி யன்னிமீர்! உமக்காசை யில்லைவிடுமினே" என்கிற தோழி பாசுரத்தை மேலெழ நோக்குமிடத்து 'தாய்மார்களே! அடங்காப் பிடாரியான இவளைவிட்டுத் தொலையுங்கள்; இவள் எக்கேடாவது கெடட்டும்; இவள் நம்வழிவாராள்; இவளோடு உறவையறுத்துக் கொள்வதே நமக்குநலம்' என்று தாய்மார்க்கு நன்மை சொல்லுவது போல் காணப்படும். ஆழ்ந்து நோக்கின் தலைவிக்குத் துணை செய்வதே இதன் கருத்தாம். தாய்மார் சேஷபித்து மகளுடைய செய்கைகளைத் தடை செய்ய இடமில்லாதபடி பண்ணுவதன்றே இங்குப் பலிப்பது. இது தலைவிக்குச் செய்த நன்மையேயாகும்.

தலைவியானவள் தாய்மார் தோழிமாராகிற இரண்டு தலையையும் உதறிக் கைவிடுவதுமுண்டு எங்கே கண்டதென்னில் "ஏலமலர்க்குழலன்னிமீர்காள்! என்னுடைத் தோழியர்காள்! - உங்களோடெங்களிடையில்லையே" என்கிற தலைவி பாசுரத்தில் இது காணலாம். தலைவியினிடத்தில் தோழியர்க்கும் தாய்மார்க்கும் மஹத்தான கௌரவ ப்ரதி பத்தியுண்டென்பதையும் இருவர் பாசுரங்களிலும் நன்கு காண்கிறோம். "இவளை நீரினி யன்னிமீர் உமக்காசையில்லைவிடுமினே" என்று சொன்ன தோழிதானே "பின்னைகொல் நிலமாமகள் கொல் திருமகள் கொல் பிறந்திட்டாள்!" என்று கொண்டாடினமை காண் கிறோம். "என்னெஞ்சினுல் நோக்கிக் காணீர் என்னை முனியாதே" என்று மகள் சொல்லும்படியாகச் சீற்றமும் வெறுப்புங் கொண்டிருந்த தாய்தானே "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணனென்றே யிருப்பளென்மகளென்றும், "ஊரும்நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய பேரும் கார்களுமே பிதற்றும்படி உலகத்தையெல்லாம் திருத்துமவளென்மகளென்றும் மற்றும் பலபடியாகவும்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொண்டாடிக் கூறுகின்றமை காணுகின்றோம். ஆக, மகள் தோழி தாய்களுக்குப் பரஸ்பரம் ஐகமத்யக் குறைவுபோல் மேலெழக் காண்பதும், ஆற்ந்த நோக்கில் மூவர்க்கு முண்டான அந்தரங்கவுகப்பு காண்பதும் ப்ரமாணரூடமாக நிரூபிக்கப் பட்ட தாயிற்று.

பெண்மையெய்தின ஆழ்வார் ஸாக்ஷாத் திருமாமகளே யென்பது இனி நிரூபிக்கப் படுகிறது. *காவியங்கண்ணியென்னில் கடிமாமலர்ப்பாவை யொப்பாள்* என்கிற திருமங்கையாழ்வார் பாசுரமும் *திருமகள்கொல் பிறந்திட்டாள்* என்கிற நம்மாழ்வார் பாசுரமும் அர்த்தவத்தென்று மூதலிக்கப் படுகிறதென்கை.

ஜநககுல ஸுந்தரியான ஸீதாபிராட்டியாரும் நம்மாழ்வாருமொப்பர். பிராட்டியானவள் *விஷ்ணோ. ஸ்ரீரநபாயிநீ* என்கிறபடியே ஒருபோதும், எம்பெருமானை விட்டுப் பிரியாதவள். *ராகவத்வே அபவத் ஸீதா* என்கிறபடி ராமாவதாரத்தில் பெருமாளுக்குப் பத்தினியாக வாய்த்தவள் எம்பெருமான் *ந்ருகளேருவர்க்கல்லாத மாமேனிராயன்* என்கிறபடியே ஒருவர்க்கும் புத்திரனல்லாதவனுயிருக்கச் செய்தேயும் தசரதாதிகளுக்குப் புதல்வனுகப் பிறந்ததுபோல அவளும் ஒருவர்க்கும் புத்திரியல்லாதவளாயிருக்கச் செய்தேயும் ஜநகாதிகளுக்குப் புதல்வியாகப் பிறந்தாள். ஜநகச்க்ரவர்த்தி மற்றவர்களைப் போலன்றிக்கே மஹா வேதாந்தியாகையாலே "பகவத் திவ்ய மஹிஷியானவிவள் நம்முடைய புதல்வியல்லள்" என்று தெளிந்திருக்கச் செய்தேயும் *இயம் ஸீதா மம ஸுதா* என்று கலங்கிச் சொல்லித் தனது புத்திரியாகப்பாவித்து அவளைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்தார். அதுதான் ஸீதா விவாஹமென்பது. அதேபோல ப்ரக்ருதத்திலும் காணலாம். நம்மாழ்வாரை ஜனகசக்ரவர்த்தி ஸ்தானத்திலும், அவருடைய ஆத்மாவை ஸீதாபிராட்டி ஸ்தானத்திலும் கொள்க. இவ்வாத்மவஸ்து எம்பெருமானுடையதே யன்றித் தன்னுடையதன்று என்கிற தெளிவு ஆழ்வார்க்கு நன்முகவுண்டு; ஆகவேதான் *உதவிக் கைம்மாறு என்னுயிரென்னவுற்றெண்ணில், அதுவுமற்றுங்களன்தன்னது— அப்பனுக்கு ஏதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே* என்று ஸித்தாந்தமாகப் பேசி முடித்தார். இங்ஙனே தெளிவு இருக்கச்செய்தேயும், உபகாரஸ்மிருதியாலேவந்த ஹர்ஷத்தாலே கலங்கி "தோள்களோரைந்தும் தழுவி யென்னுயிரை அறவிலை செய்தனன்" என்று அவனுடையதான ஆத்மவஸ்துவை (தன்னதுபோல்) அவனுக்கு ஸமர்ப்பித்தார். ஆத்மவஸ்து அமூர்த்தமாயிருக்கச் செய்தேயும் தாளும் தோளுமாய்ப் பிணைத்துத் தோற்ற [கன்னிகையைத் தழுவி வரனுக்குக் கொடுக்குமாபோலே] ஆத்மவஸ்துவாகிற கன்னிகையைத் தழுவிக்கொண்டு எம்பெருமானுகிற வரனுக்கு அநந்யார்ஹமாக ஸமர்ப்பித்தாராழ்வார். ஆக ஸீதா விவாஹம்போலே ஆழ்வார் விவாஹமும் தேறிற்று.

இரண்டு விவாஹத்திலும் கண்ட ஸந்தோஷாதிசயம்: — ஜநகசக்ரவர்த்தி தன்னதல்லாததொன்றைத் தன்னதாக ப்ரமித்துக் கொடுத்தாப்போலே ஆழ்வாரும் தம்மதல்லாத தொன்றைத் தம்மதாக ப்ரமித்துக் கொடுத்தார். பெற்றுக்கொண்ட பெருமானும் தன்னதல்லாத தொன்றைப் புதிதாகப் பெற்றுப்போலே. ப்ரமித்து அபரிமிதமாக அகமகிழ்ந்தானென்பது இரண்டிடத்திலும் காணலாயிருக்கின்றது. எங்ஙனே யென்னில்; ஸீதாவிவாஹ ஸமநந்தரம் *தயா ஸ ராஜர்ஷிஸுதோபிராமயா ஸமேயிவாந் உத்தமராஜகந்யயா, அதிவ ராமச் சுசுபே* என்று வான்மீகி பேசும்படி, ஸந்தோஷாதிசயத்தாலே

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பெருமாள் மிக விளங்கினரென்று கண்டோம். இங்கு ஆழ்வார்விவாஹ ஸமனந்தரத் திலும் எம்பெருமான் அபரிமிதமாக மகிழ்ச்சிகொண்டதை ஆழ்வார் பாசுரத்தாலே நன்கு காண்கிறோம். "என்னுயிரை அறவிலே செய்தனன்" என்று சொல்லி ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணினவுடனே ஆழ்வார் கீழ்க்கண்ணாலே எம்பெருமானை நோக்கினார்: 'நாம் தவறுதலாக ஸமர்ப்பித்ததற்கு எம்பெருமான் திருவுள்ளம் புண்பட்டிருக்குமோ!' என்று அஞ்சி நோக்கினார்; அவனை இவர் ஸமர்ப்பித்த ஆத்மவஸ்துவைப்பெற்ற ஹர்ஷாதிசயத்தாலே பளபளவென்று விளங்குவதும், தன்னுடைய திவ்யாவயவங்கள் சதசாகமாகப் பணைப்பதுமாயிருந்தான்; அதனைக்கண்ட ஆழ்வார் "சோதீ! தோள்களா யிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்களாயிரத்தாய் தாள்களாயிரத்தாய்" என்று சொல்லி 'நான் தவறுதலாகச்செய்த செயலாலும் இப்படி ஹர்ஷங் கொள்வதே!' என்று வியந்தார். ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணின அடுத்த க்ஷணத்திலன்றே இது.

ஜன்மபூமியில் பாசமற்றமை பிராட்டிக்குமாழ்வார்க்குமொக்கும்படி:—பிராட்டி பெருமானைக் கைப்பிடித்தபின்பு பன்னிரண்டாண்டு திருவயோத்தியில் வாழச்செய்தேயும் ஒருநாளும் மிதிலைக்குச் சென்றறியாள் விச்லேஷபீதியாலே. இதனை அவள்தானே தன்வாக்காலே சொல்லிவைத்தாள். (ஆரண்ய. 47-4.) இராவணனோடு வார்த்தையாடும் போது "ஸமா: த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசனே, புஞ்ஜானா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸமருத்திநீ" என்றாள். மேல் ஸுந்தரகாண்டத்தில் (33-18.) திருவடியோடு வார்த்தையாடும்போதும் இதே வார்த்தையைச் சொல்லியிருக்கின்றாள். விவாஹத்திற்குப் பிறகு பன்னிரண்டாண்டு திருவயோத்தியில் அமாநுஷ போகங்களை யநுபவித்துக்கொண்டு பெருமானோடே கூடிவாழ்ந்தபடியைச் சொன்னாள் இதனால். இதில் ஸமா: என்றது த்விதீயாபஹுவசனம் வியாகரணத்தில் "காலாத்வநோரத்யந்த ஸம்யோகே த்விதீயா" என்பது ஸூத்ரமாகையாலே அவிச்சின்னமாகப் பன்னிரண்டாண்டு உடன்கூடி வாழ்ந்தபடியை இந்த த்விதீயாவிபக்தி தெரிவிக்கும். ஆக, பிராட்டி பெருமானைக் கைப்பிடித்தபின்பு மிதிலையை மிதித்தறியாளென்பது தேறிற்று. ஆழ்வாரும் *கடையறப் பாசங்கள் விட்டபின்னையன்றி அவனவை காண்கொடானே* என்றும், *பாதமடைவதன்பாசத்தாலே மற்ற வன்பாசங்கள் முற்றவிட்டுக் கோதில் புகழ்க் கண்ணன் தன்னடிமேல்* என்றுமுள்ள பாசுரங்களினால் அதே நிலைமையைத் தமக்குத் தெரிவித்துக்கொண்டார்.

மங்களாசாஸனபரதையில் பிராட்டிக்குமாழ்வார்க்குமொற்றுமை:—தசரத சக்ரவர்த்தியின் நியமனத்தாலே ஸுமந்த்ரர்வந்து பெருமானையழைக்க, உடனே பெருமாள் புறப்படுகையில் (அயோத் 16-21.) *பதிஸம்மாநிதா ஸீதா பர்த்தாரமநுதிஷ்ஹதி. ஆத்வாரமநுவவ்ராஜ மங்கலாநி அபிதத்யுஷீ* என்று திருவாசலளவும் மங்களாசாஸனம் செய்துகொண்டு சென்றதாகச் சொல்லிற்று. மங்களாசாஸனமென்பது அஸ்தாநே பயசங்கையினால் விலகுவதாதலால் அந்த பயசங்கைதான் மங்களாசாஸன பதார்த்தமென்று கொள்க. ஆழ்வாரும் (8-3.) *அங்குமிங்கும்* என்கிற பதிகத்திலே *ஆளுமாளார் ஆழியுஞ்சங்கும் சுமப்பார்தாம், வாளும்வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை* என்று பயசங்கைகொண்டு பரிந்துபேசினார். [ஆளும் ஆளார்.] எம்பெருமானுக்கு உபயவிபூதியும் ஆளாயிருக்கச் செய்தேயும் அப்பெருமான் ஒரு சேவகனைத் தன்னிடம்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பணிசெய்ய வைத்துக்கொள்ளவில்லையே யென்று வயிறுபிடிக்கிறாழ்வார். எதனாலிப்படி சொல்லுகிறீரென்ன, [ஆழியும் சங்கும் சுமப்பார்தாம்] ஆள் இருந்தால் திருவாழி திருச்சங்குகளைத் தாமே சுமப்பரோ? மடாதிபதிகள் தம்முடைய த்ரிதண்டத்தையும் ஒரு கைங்கர்யபரர்கையிலே கொடுத்துப் போகாநிற்கக் காண்கிறோம்; அவர்களுடைய திருமேனி அத்தனை ஸுகுமாரமானால் எம்பெருமானது திருமேனியின் ஸௌகுமார்யம் வாய்கொண்டு வருணிக்கமுடியுமோ? அன்றியும் திருவாழி திருச்சங்கில்லாமல் உலவினால் அசுர்ர்கள் தலைப்பெய்யில் என்னாகுமோ? வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வாரையும் காணுமே—என்று பரிவரில்லாமைக்கு வயிறுபிடிக்கின்ற ஆழ்வார் மங்களாசாஸன பரையான பிராட்டியோடொப்பர். இப்பாட்டின் ஈற்றடி "நாளும் நாளும் நாடுவன்டியேன் ஞாலத்தே" என்பது. இங்கு 'ஞாலத்தே' என்றவிடத்து நம்பிள்ளையீட்டு ஸ்ரீஸூக்தி பரம போக்யம்; (அதாவது) "பரமபதத்திலேயிருந்து அஸ்தானே பயசங்கை பண்ணுகிறேனே? ப்ரஹ்மாஸ்த்ரப்ரயோகம் பண்ணுவார், நாகபாசத்தை விட்டுக் கட்டுவார், அழைத்துவைத்து மல்லரையிட்டு வஞ்சிக்கத்தேடுவார், பொய்யாளனிடுவார் மலிந்த தேசத்திலே வர்த்தியாநின்றுள் நான் அஞ்சாதே செய்வதென்?" என்று.

விச்லேஷ ப்ரஸங்கத்திலும் ஆற்றுமையில் பிராட்டியுமாழ்வாருமொப்பர்:—கூனி சொற்கொண்டு கரியும் பரியுமிராச்சியமும் பரதற்கருளிப் பெருமாள் கானகஞ்செல்ல நேர்ந்தபோது இச்செய்தியைப் பிராட்டியிடம் கூறி, தான் பிராட்டியைப் படைவீட்டிலே நிறுத்திக் காட்டுக்குப் போவதாக ப்ரஸங்கித்தவளவிலே பிராட்டி மிகவும் கிலேசித்து 'என்னைவிட்டுப் போனீராகில் இறந்துபடுவேனத்தனை' என்று சொல்லி தத்விச்லேஷாஸஹிஷ்ணுதையை நன்கு காட்டியது ப்ரஸித்தம். இத்தன்மை ஆழ்வார் பக்கலில் மிக அற்புதமாகக் காணத்தக்கதாம். திருவிருத்தத்தில் (11.) "அரியன யாமின்று காண்கின்றன, கண்ணன் விண்ணனையாய்! பெரியனகாதம் பொருட்கோ பிரிவென; ஞாலமெய்தற்குரியன வெண்முத்தும் பைம்பொன்னுமேந்தி யோரோ குடங்கைப் பெரியன கெண்டைக்குலம், இவையோவந்து பேர்கின்றவே" என்கிற பாசுரம் வெகு அற்புதமாக அமைந்தது. நாயகன் நம்மைப் பிரிந்துபோகப் போகிறானென்றுணர்ந்த பராங்குசநாயகி அப்பிரிவுக்கு ஆற்றாது வேறுபாடு அடைய அதனைக்கண்ட நாயகன் உரைத்த பாசுரமிது. இதன் கருத்தைச் சிறிது விவரிக்கிறேன். "ஸம்யோகா விப்ரயோகாந்தா:" என்றபடி கலவிக்கு அனந்தரம் பிரிவு நேரவேண்டியதாதலாலும் காரியவசத்தாலும் பிரிந்துபோக நினைத்த நாயகன் அவளோடு சொல்லாமல் பிரியமாட்டாற்றிலன்; பிரியப்போகிறேனென்று சடக்கெனப் பிரிவை ப்ரஸங்கித்தாலோ அனர்த்தமாகுமென நினைத்து அதுவுஞ் செய்யமாட்டாற்றிலன். பின்னே என்செய்வதென்று பார்த்து ஒருபாயம் செய்தான்; லோகாபிராமமாகப் பேசுமடைவிலே, உலகத்தில் அவரவர்கள் பொருள் படைப்பதற்காகத் தம்தம் காதலியை விட்டுப்பிரிந்து தேசாந்தரம் போவதுண்டு என்று பொதுவான செய்தியை மெதுவாக உணர்த்தவேண்டி, 'காதலீ! பிரியேன், பிரியில் தரியேன் என்றிருக்குமவர்களுங்கூட சிற்சிலஸமயம் பிரிந்து வெளிநாடு செல்லுகின்றார்களே, அது பொருள்படைப்பதற்காகவோ?' என்று வினவலுற்றான் நாயகன். இதைக் கேட்ட பராங்குசநாயகி 'இப்போது இவர் இங்ஙனே வினவுவது வெறுமனல்ல; இது லோகாபிராமவார்த்தைகளிற் சேர்ந்ததல்ல; நம்மைப் பிரிந்து போவதற்காகவே இது

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அவதாரிகையாகக் கூறின கூற்றுயிருக்கவேண்டும்' என்றறுதியிட்டுப் பிரிவு உண்டாய் விட்டதாகவே கருதி வருந்திப் பிரிவாற்றுமையாலுண்டாகும் பசப்பென்கிற நிற வேறுபாட்டையடைந்து கண்ணுங் கண்ணீருமாயிருக்க. அதைக்கண்ட ஸர்வேச்வரன் 'நாம் பிரிந்துபோகவில்லை. பிரிந்துபோவதாகச் சொல்லவுமில்லை; அப்படியிருந்தும் வெறும் வார்த்தையிலேயே நமது உட்கருத்தைத் தெரிந்துகொண்ட இவளது நிலைமை இங்ஙனே யாயிற்றே!' என்று ஆச்சரியப்பட்டுத் தோழியை நோக்கியோ தனது நெஞ்சை நோக்கியோ கூறிய பாசுரமிது. பாட்டுத் தொடங்கும்போதே "அரியன யாமின்று காண்கின்றன" என்று (எம்பெருமான்) சொன்னது மிகவற்புதம்; இதுகாறும் நான் உலகத்தில் எத்தனையோ ஆச்சரியங்கள் கண்டிருக்கிறேன்; ஆனால் இன்று இப்பராங்குச நாயகிபக்கலிற் காணுமாச்சரியம் என்றும் எங்குங் காணமுடியாதது என்று அடங்கா வியப்புத் தோற்ற நின்றது. ஸாமான்யமாக உலகநிகழ்ச்சியை நான் ப்ரஸ்தாவித்த மாத்திரத் திலும் இவள், தன்னைப் பிரிவதற்காகவே நான் இவ்வார்த்தை சொல்லுகிறதாகவும், அதற்குமேல் பிரிவும் சேர்ந்து விட்டதாகவும் நினைத்து விலக்ஷணமான விகாரத்தை யடைந் திட்டாளே! இதனின் மிக்க ஆச்சரிய முண்டோவென்று வியக்கிறபடி இவ்விஷயத்தில் பராங்குச நாயகி ஸீதாபிராட்டியை மிகமிக வென்றுளென்றுணர்க.

ஸம்ச்லேஷத்தில் இருவர்க்குமுண்டான ஸாம்யம்— பெருமாள் பிராட்டியை விட்டுத் தனியே காட்டுக்குப்போக நினைத்த நினைவை நீக்கிப் பிராட்டியையும் கூட்டிக் கொண்டு சென்றரென்பது வரலாறு. கூட்டிக்கொண்டு போனவளவேயன்றிக்கே "ஸஸ்வீ தத்கதஸ் தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:" என்று வான்மீகி பேசும்படி ஜாதி குணங்கள் த்ரவ்யத்தை விட்டுப் பிரிக்கவொண்ணுமல் பொருந்தியிருக்குமாபோலே ஒரு நீராகக் கலந்தார் பெருமாள். அப்படியே யிங்குங் காணலாம். *மராமரமெய்த மாயவன், என்னுளிரானெனில் பின்னையான் ஒட்டுவேனே?* என்று பிரிவில் தரிக்கமாட்டாமை யைத் திடமாகப்பேசின ஆழ்வார்திறத்தில் எம்பெருமான் என் செய்தான்? *எந்தாய்!... இலங்கை செற்றாய்! .....உன்னையென்னுள்ளே குழைத்த வெம்மைந்தா!* என்கிறபடியே ஏகதத்வமென்னலாம்படி ஸம்ச்லேஷித்தானுழ்வாரோடே.

கல்லும் முள்ளுமான காட்டிலே பெருமாளுடன் சென்றமை இருவர்க்கு மொக்கும்:— பிராட்டி பெருமாளோடுகூட வனவாஸஞ் சென்றபோது வழியின் கொடு மையைப் பலர் கூறியுள்ளார்கள்; *பொருந்தார் கைவேல் நுதிபோல் பரல் பாய மெல்லடிக் கள் குருதிசோர, விரும்பாத கான்விரும்பி வெயிலுறைப்ப வெம்பசி நோய் கூர* என்று தயரதன் புலம்பினதாகக் குலசேகராழ்வார். *மன்னும் வளநாடு கைவிட்டு, மாதிரங்கள் மின்னுருவில் வெண்டேர் திரிந்து வெளிப்பட்டுக் கன்னிரைந்து தீய்ந்து கழையுடைந்து கால்சுழன்று, பின்னுந்திரைவயிற்றுப் பேயே திரிந்துலவாக், கொன்னவிலும் வெங்கானத் தூடு, கொடுங்கதிரோன் துன்னுவெயில் வருத்த வெம்பரல் மேல் பஞ்சடியால், மன்னனி ராமன்பின் வைதேவியென்றுரைக்கும், அன்னநடைய வணங்கு நடந்திலளே* என்று பெரிய திருமடலில் திருமங்கையாழ்வார். *க்லிஷ்டம் க்ராவஸ்ய மாலதீம்ருது பதம்* என்று ஸ்ரீ குணரத்ன கோசத்தில் பட்டர். இங்ஙனே வயிறு பிடிக்கத்தக்க கொடிய வழிப் போக்கு நம்மாழ்வார்க்கும் நேர்ந்ததுண்டு. திருவிருத்தத்தில்—"அருவினையேன் நெடுங் காலமும் கண்ணன் நீண்மலர்ப்பாதம் பரவிப் பெற்ற தொடுங்காலொசியுமிடை இளமான் சென்ற சூழ்கடம்-கொடுங்கால் சிலையர் நிரைகோளுழவர் கொலையில் வெய்ய கடுங் காலினைஞர் துடிபடுங் கவ்வைத்து" என்கிற பாசுரத்தில் பராங்குசநாயகி தன் நாயகனோடு மிகக்கொடிய பாலைவனத்தில் செல்லநேர்ந்ததை வருத்தத்தோடு திருத்தாயார் சொல்லு கிறாள். ஸீதாபிராட்டி காட்டுக்குச் செல்ல நேர்ந்த காரணம் உலகமறியும். பராங்குச

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நாயகி எதற்காகப் பாலிவனம் செல்ல நேர்ந்ததென்னில்; கேண்மின். இவள் *பொங் கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற வெம்பெரு மானுகிய உபய விபூதி நாயகனைக் கைப்பிடித்தவளாகையாலே அப்பெருமான் தன்னுடைய விபூதிப் பரப்பையெல்லாம் இவளுக்குக் காட்டவேண்டி இவளைத் தேரி லேற்றிக் கொண்டோ ஆகாயவிமானத்திற் கொண்டோ நானிலமெங்கும் ஸஞ்சரிக்குங் கால் இடையிடையில் பாலிவனமும் குறுக்கிடும். அங்குப்போதல் பயங்கரமாகவு மிருக்கும். ஆனலும் நாயகனோடு கூடிச் செல்வதனுல் அவ்விடங்களின் காட்சி ரமணீய மாகவுமிருக்கும். அப்போக்கின் கொடுமை திருத்தாய் பாசுரத்திலே வெளியிடப் பெற்றதாயிற்று.

பிராட்டி வனவாஸஞ் சென்றவிடத்திலே "தனிச்சிறையில் வீளப்புற்ற கிளி மொழியாள்" என்னும்படி அவளுக்குச் சிறையிருப்பு நேர்ந்ததுபோல ஆழ்வார்க்கும் "வன்சிறையிலவன் வைக்கில் வைப்புண்டாலென்செய்யுமோ?" என்னும்படி பிறவியஞ் சிறையில் இருப்பு நேர்ந்தது. சிறையிருப்பில் பிராட்டி பேசினதெல்லாம் ஆழ்வார் பேசுகிறரென்பதை நாம் தனிநூலில் விவரித்துரைப்போம்; இங்கு ஸப்ஸேபிக்கிறபடி.

ஸ்ரீ ராமாயணம்	திருவாய்மொழி
1. விமுகனன ராவணனுக்கும் பிராட்டியின் உபதேசம் *விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞ:* *மித்ர மௌபயிகம் கர்த்தும்* இத்யாதி.	1 விமுகரான ஸம்ஸாரிகளுக்கும் ஆழ்வாருடைய வுபதேசம் *விகுமின் முற்றவும்* சொன்னல் விரோதம்* ஒன்றுந்தேவுமுலகுமுயிருமித்யாதி களாலுபதேசித்தாராழ்வார்
2. "நஹி மே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர் நச பூஷணை:"—ராக்ஷஸிகள் நடுவேயிருக்கிற வெனக்கு பிராணன் முதலியவற்றுலென்ன பிரயோஜனமென்று வெறுத்தாள் பிராட்டி.	2. *ஏருளுமிறையோனும் பதிகத்தில் "பரம்பு ருடன் கவராத மடநெஞ்சால் குறைவிலமே-மணிமாமை குறைவிலமே-உடம்பினுல் குறை விலமே-உயிரினுல் குறைவிலமே" என்று எம்பெருமான் விரும்பாத ஆத்மாத்மீயங்களை வெறுத்தாராழ்வார்
3. "விஷஸ்ய தாதா நஹி மேஸ்தி கச்சித் சஸ்த்ரஸ்ய வா வேச்மநி ராக்ஷஸஸ்ய" = என்னை முடிக்க விஷம் தருவாரில்லையோ? சஸ்த்ரம் தருவாரில்லையோ? என்றுள் பிராட்டி.	3. *காயுங்கடுஞ்சினையெங் காதலன் வாராஞல், மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண் பிறந்தே* என்று முடியும்வகை தேடினு ராழ்வாரும்.
4. "ஹாராம ஹாலக்ஷ்மண ஹாஸுமித்ரே ஹா ராமமாதஸ் ஸஹ மே ஜஹ்யா" என்று ஹாஹாஹாஹா என்று கதறிக்கிடந்தாள் பிராட்டி.	4 *புணராநின்ற மரமேழுன்றெய்த வொரு வில்வலவாஓ!...முதல்வாவோ! பற்பநாபாஓ! பற்பபாதாஓ! தாமரைக் கண்ணுஓ! தாமரைக் கையாஓ!...என்று ஓவோவென்று கதறினு ராழ்வார்
5. "க்யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞஸ்ச லோகே ரோசச்ச ராக்ஷஸ:, ஸத்வருத்தோ நிரநுக்ரோசச் சங்கே மத்பாக்ய ஸம்க்ஷயாத்." என்று பெருமாள் பக்கலில் குணஹானி சங்கித்தாள் பிராட்டி.	5. *இரக்கமெநிரிதற்கென்செய்கேன் அரக்கனி லங்கை செற்றீருக்கே* இலங்கைக்குலா நெடுமாடமிடித்தபிரானுர் கொடுமைகளே* அறிவொன்றும் சங்கிப்பன்னினையேன்* என்றுராழ்வார்.
6. "ஜீவந்தீம் மாம் யதா ராமஸ் ஸம்பாவயதி கீர்த்திமாந், தத் த்வயா ஹநுமந் வாச்யோ வாசா தர்மமவாப்நுஹி." என்னத்தை போல தற்குமுன்னே என்னை நோக்கிக்கொள்ளச் சொல்லவேணுமென்றுள் பிராட்டி.	6. *மாறில் போரரக்கன் மதிள்நிறெழச்செற்று கந்த ஏறு சேவகனுர்க்கு என்னையுமுளளென் மின்களே* என்று அவ்விதமான ஸந்தேசமே விடுத்தாராழ்வாரும்.
7. "அநுயா ராகவேணுஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" = ஆதித்யனோடு ப்ரப்போலே நான் பெருமாளோடு அநுயையாயிருப்பேன் என்றுள் பிராட்டி.	7. *அரக்கியர் மூக்கீர்ந்தாயை-சுடரை-அடியே னடைந்தேன் முதல்முன்னமே* என்று அவ்வர்த்தத்தையே அநுஸந்தித்தார்.
8. "அகலகில்லேனிறையும்" எறே சொல்லிக் கொண்டிருந்தாள் பிராட்டி.	8 *அந்தோவடியேனுளபாதம் அகலகில்லே னிறையுமே* என்றிருந்தாராழ்வார்.

ஆழ்வாரெம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளேசரணம்.

ஆழ்வாரெம்பெருமானர்ஜீயர் திருவடிகளேசரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் தொகுத்தருளின

பூர்வாசார்யப் பிரபாவம்.

— மூன்றும் பதிப்பு —

ஸ்ரீராமாநுஜன் வெளியீடு — 198

இதிலடங்கியுள்ள வைபவங்களாவன:

1. ஸ்ரீமந்நாத முனிகள் வைபவம்.
2. உய்யக்கொண்டார் வைபவம்.
3. மணக்கால்நம்பி வைபவம்.
4. ஆளவந்தார் வைபவம்.
5. ஸ்ரீராமாநுஜர் வைபவம்.
6. கூரத்தாழ்வான் வைபவம்.
7. பட்டர் வைபவம்.
8. நஞ்சீயர் வைபவம்.
9. நம்பிள்ளை வைபவம்.
10. வடக்குத்திருவீதிப்பிள்ளை வைபவம்.
11. பெரியவாச்சான்பிள்ளை வைபவம்.
12. பிள்ளைலோகாசாரியர் வைபவம்.

வேதாந்த தேசிகர் வைபவமும் மணவாளமாமுனிகள் வைபவமும் தனிப்புத்தகங்கள்.

சென்னை 213, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
V. N. தேவநாதனவர்களால்

— ரத்தினம் (இன்ன) அச்சகத்தில் அச்சிடுவிக்கப்பட்டது. —

கிடைக்குமிடம்:
P. B. ANNANGARACHARYA, L. KANCHEEPURAM.

விசுவாவஸு சித்திரையில் ரேவதி.] 1965 [விலை 1-60

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆழ்வாரெம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்

பூர்வாசார்ய வைபவம்.

(ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதியது)

ஸ்ரீ நாதயாமுநயதீச்வரகூரநாத பட்டார்யமுக்யகுருவர்ய சரித்ரஸாரம்,
பூர்வார்யஸூக்திமவலம்ப்ய லகாமி நாவத் ஸம்க்ஷேபதஸ் ஸுலலிதம் விதுஷாம் நியோகாத்.

பூர்வாசார்ய கோஷ்டியில் முதல்வர் ஸ்ரீமந் நாதமுனிகள். ஆழ்வார்களின் காலத்திற்குப் பிறகு நெடுநாள் வரையில் தர்சந நிர்வாஹகர்களான ஆசார்யர்கள் ஒருவருமில்லாமல் இவ்வுலகம் இருள் மூடியே யிருந்ததனால் பேரருட்கடலான எம் பெருமான் இவ்விருளை நீக்கி ஞான வொளியை வளர்க்கத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீமந் நாதமுனிகள் முதலான ஸதாசார்யர்களைத் திருவவதரிப்பித்தருளி அவர்களின் உப தேசங்களாலும் ஸ்ரீ ஸூக்திகளான திவ்யக்ரந்தங்களாலும் அநுஷ்டானங்களாலும் அநுஷ்டாபனங்களாலும் ஜகத்தை வாழ்வித்தருளினன். அவர்களுடைய ப்ரபாவம் நமக்கு நித்யாநுஸந்தேயமாகக்கடவது. ... ... (*)

ஸ்ரீமந் நாதமுனிகள் வைபவம்

* அருள்பெற்ற நாதமுனி முதலாம் நற்சேஷிகரையல்லால் பேதை மனமே புண்டோ பேசு * என்று மணவாள மாமுனிகளருளிச் செய்தபடியே நம்முடைய தர்சநம் ஸ்ரீமந் நாதமுனிகளையே தலைவராகக் கொண்டது. இவர் வீரநாராயணபுர மென்கிற காட்டுமன்னர் ஸன்னிதியில் ஆனிமாதம் அநுராதா நக்ஷத்ரத்தில் ஈச்வர முனிகளுக்குத் திருக்குமாரராய்த் திருவவதரித்து காலங்களில் சௌளம் உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களைப் பெற்று வேத வேதாங்கங்களையும் ஸாமான்ய சாஸ்த்ர அத்யாத்ம சாஸ்த்ரங்களையும் அதிகரித்து மஹாவித்வானாக எழுந்தருளி யிருந்தார். இவருடைய திருக்குமார் திருநாமம் ஈச்வரபட்டாழ்வான். அவருடைய திருக்குமாரரே யமுனைத்துறைவர் - யாமுநாசார்யர் என்கிற ஆளவந்தார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் தம் இருப்பிடந்தன்னில் மன்னனுரென்கிற எம்பெருமா னுக்கு ஸகல விதமான கைங்கரியங்களையும் செய்துகொண்டு வாழ்ந்தருளுங்காலத்தில் வடநாட்டுத் திருப்பதிகளை யெல்லாம் ஸேவிக்க ஆவல்கொண்டு மன்னனுர் திருவடி களிலே நியமனம் பெற்று ஸபரிவாரராய்ப் புறப்பட்டு வடக்கே ஸஞ்சரித்துக்கொண் டிருக்கையில் தம் இருப்பிடத்திற்கே மீண்டெழுந்தருளும்படி எம்பெருமான் நியமித் தருளினபடியாலே திரும்பி யெழுந்தருளி தென்திசைத் திருப்பதிகளையும் மங்களா சாஸநம் செய்தருளி மன்னனுர் ஸந்நிதியிலே வந்து சேர்ந்து பகவத் பாகவத கைங்கர்ய நிர்வாஹத்தோடு அத்யாத்மசாஸ்த்ர ப்ரவசனங்களும் செய்து போந்தார்.

இப்படி யிருக்கையில் அவ்விடத்திற்குத் திருநாராயணபுர ப்ராந்தத்தில் நின்றும் சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்து மன்னனுர் ஸன்னிதியில் தங்களுக்குத் தெரிந்த ஸ்தோத்ரங்களை யெல்லாம் அநுஸந்தித்துக்கொண்டிருக்கையில் நம்மாழ்வா ரருளிச்செய்த திருவாய்மொழியில் * ஆராவமுதே அடியேனுடலம் * என்கிற பதிகத் தையும் செவிக்கினிய இசையுடனே அநுஸந்தித்தார்கள். அதில் முடிவு பாசுரத்தில் * குழலில் மலியச்சொன்ன ஓராயிரத்துளிப் பத்தும் * என்று அவர்கள் அநுஸந்திக் கதைக் கேட்ட நாதமுனிகள், இப்படி ஆயிரம் பாசுரங்கள் அவதரித்திருப்பதாகத் தெரிந்ததனால் அந்த ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி "ஸ்வாமிகாள்! உங்களுக்கு ஆயிரம் பாசுரமும் முகபர்டமாக வருமோ?" என்று கேட்டார். அவர்கள் "இப் பத்துப் பாசுரந்தவிர வேறொரு பாசுரமும் அறியோம்" என்றார்கள்.

அதற்குமேல் "உங்கள் நாட்டில் இந்த ஸ்ரீ கோசமாவது உண்டோ? ஆயிர மும் ஒதியிருப்பார் அவ்விடத்தில் ஆரேனுமுண்டோ?" என்று நாதமுனிகள் கேட்க, அப்படியொன்று மில்லை யென்று அவர்கள் விடை கூறிவிட்டு எம்பெருமானுடைய தீர்த்த ப்ரஸாதங்களை ஸ்வீகரித்துக்கொண்டு வழியடைவே சென்றார்கள்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அது முதலாக நாதமுனிகளுக்கு இரவும் பகலும் இதுவே சிந்தையாயிற்று. "குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆயிரம்' என்று செவிப்பட்டபடியாலே அந்த சடகோபர் [நம்மாழ்வார்] திருவவதரித்த குருகூரிலே சென்று விசாரித்தோமாகில் அங்கே கிடைக்கக் கூடுமென்று கருதி எம்பெருமானிடம் விடை பெற்று ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளி பொலிந்து நின்ற பிரானையும் நம்மாழ்வாரையும் ஸேவித்து நிற்கையில், ஸ்ரீ மதுரகவிகளின் சிஷ்ய பரம்பரையிலே ஒருவரான ஸ்ரீ பராங்குச தாஸரன்பவர் சேர்பட, அவரைத் தெண்டனிட்டுத் தாம் எழுந்தருளின காரியத்தை விண்ணப்பஞ்செய்து "இவ்விடத்தில் ஆயிரமும் தெரிந்தவர்களுண்டோ? ஸ்ரீ கோசமாவது உண்டோ?" என்று கேட்க, அதற்கு அவர் சொன்னதாவது;—"திருவாய் மொழியும் மற்றுமுண்டான திவ்யப்ரபந்தங்களும் பிரசாரம் மறைந்து நெடுகாளாய் விட்டது; ஆனாலும் எங்கள் குலக்கொழுந்தான ஸ்ரீ மதுரகவிகள் அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் பிரபந்தமுண்டு; அதனை ஆழ்வார் திருமுன்பே ஆழ்வார் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு நியமத்துடனே பன்னீராயிரம் விசை ஜபித்தால் ஆழ்வார் அருள்புரியக்கூடுமென்று கேட்டிருந்ததுண்டு" என்றார்.

அது கேட்ட நாதமுனிகள் திருவுள்ளம்தேறி ஆனந்தக்கடலில் மூழ்கின மனத்தராய் அவரைத் திருவடி தொழுது "ஸ்வாமிந்! அந்தக் கண்ணிநுண் சிறுத்தாம்பு பிரபந்தத்தை அடியேனுக்கு அநுக்ரஹித்தருள வேணும்" என்று விநயமுடன் வேண்ட, அவரும் திருவுள்ளமுவந்து இவர்க்கு அந்தப்பிரபந்தத்தைப் பாடம் செய்வித்தார். இவரும் அநுசரித்துத் திருப்புளியாழ்வாரடியிலே நியமமுடன் பன்னீராயிரம் முறை அந்தப் பிரபந்தத்தை யநுஸந்தித்துத் தலைக்கட்டினவாறே இவரது ஆர்த்திக்கு இரங்கின நம்மாழ்வார் பெரிய பிராட்டியாருடைய கட்டளையினாலும் பரோக்ஷமாக ஸந்நிதிபண்ணி அசரீரிவாணி சொல்லுவது போல "உமது அபிமதம் இன்னதென்று தெரிவிக்கவேணும்" என்று சொல்ல, நாத முனிகள் ஆனந்தக் கண்ணீர் பெருக நின்று கூப்பிய கையராய் "ஸ்வாமிந். திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களை அடியேனுக்குப்ரஸாதித்தருளவேணும்" என்று விண்ணப்பஞ் செய்ய, ஆழ்வாரும் பரமப்ரீதராய் அவர்க்கு நிர்மலமான ஞானக்கண்ணைக் கொடுத்து ரஹஸ்யத்ரயத்தையும் நாலாயிர திவ்யப் பிரபந்தங்களையும் தர்சனத்தின் ஆழ் பொருள்களையும் அஷ்டாங்க யோக ரஹஸ்யத்தையும் யோக தசையிலே ப்ரஸாதித் தருளி அந்தர்த்தானமாயினர்.

ஸ்ரீ வேதாந்த வாசிரியர் பணித்த ஸம்ப்ரதாய பரிசுத்தி யென்னும் ரஹஸ்யத் திலே—"வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்மஸந்த்யாதி களுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகராஞர்" என்றும், "இப்பரம்பரையாலும் ப்ராதர்ப்பாவ விசேஷத்தாலும் நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் ஆசார்யராஞர்" என்றும், மேலே குருபரம்பரா ஸாரத்திலே—"இவ்வாசார்யர்களில்.....நாதமுனி களுக்கு ஸ்ரீ மதுரகவிகள் முதலாக வண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும் திருவாய் மொழி முகத்தாலும் யோக தசையிலே ஸாக்ஷாத் க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்ய ராஞர்" என்றும் அருளிச் செய்துள்ளவை காண்க.

"வ்யோமம்நः பரஸ்தாத் ஸவிதம் ஸமேத்ய லக்ஷ்ம்யா நியோகாத் குருகாதிராஜः
ஸமந்த்ராஜத்வயமாஹ யஸ்மை நாதாய தஸ்மை முநயே நமோஸ்து."

என்கிற தனியனும் இங்கே அநுஸந்தேயம். இப்படி நம்மாழ்வார் பக்கலிலே ஸர்வ ஸ்வமும் லபிக்கப்பெற்ற நாதமுனிகள் சிலகாலம் திருநகரியிலேயே வஸித்திருந்து அங்குள்ளார்க்கு அருளிச்செயல்களை ப்ரவசனம் செய்தருளி, பிறகு ஸ்வதேசத்திற்கு மீண்டெழுந்தருள நியமனம் பெற்று வழியடைவிலுள்ள திருப்பதிகளையெல்லாம் மங்களாசாஸனம் செய்து கொண்டும் ஆங்காங்கு அருளிச்செயலமுதப் பெருக்கை வர்ஷித்துக்கொண்டும் மன்னனூர் ஸந்நிதியிலே வந்து சேர்ந்து அந்த திவ்யப்ரபந்தங்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

களைப் பலமுகமாகப் பரவச்செய்ய பகவந்நியமனம்பெற்று, தம்முடைய மருமக்களான கீழையகத் தாழ்வாரையும் மேலையகத் தாழ்வாரையும் அழைத்து "ஆழ்வார் நம்மை விசேஷ கடாக்ஷம் பண்ணியருளி ப்ரஸாதித்த இந்த திவ்யப்ரபந்தங்களை இயலு மிசையுமாக்கவேணும்; திவ்யகானத்திலேயிட்டுப் பாடவேணும்" என்று நியமித்து அப்படியே பரிசயம் செய்வித்து இத்தை லோகப்ரஸித்தமாக்கி யருளினர்.

வடமொழி வேதத்திற்கு வேதவ்யாஸ பகவான்போலே தமிழ்மறைக்கு ஸ்ரீமந் நாதமுனிகள்—என்று ப்ரஸித்தமாயிற்று.

இவருடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர்கள் எண்மர்; அவர்களின் திரு நாமங்களாவன—1. உய்யக்கொண்டார், 2. குருகைகாவலப்பன், 3. நம்பிகருணாகரதாஸர், 4. ஏறுதிருவுடையார், 5. திருக்கண்ணமங்கையாண்டான், 6. வானமாமலை தேவியாண்டான், 7. உருப்புட்டூராச்சான் பிள்ளை, 8. சோகத்தூராழ்வான்.

இந்த சிஷ்யர்களுக்கு நாலாயிர திவ்யப்பிரபந்தங்களையும் ஓதுவித்து வேத சாஸ்த்ரங்களையும் அதிகரிப்பித்து வாழ்வித்தருளினர். ந்யாயதத்வம் என்கிற க்ரந்தம் இவரருளிச் செய்ததாகச் சொல்லுவர்கள், அது இப்போது லோபமடைந்துள்ளது. அந்தக்ரந்தத்தின் மங்களச்லோகமொன்று தெரிய வருகின்றது, * யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வதः, தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாய தத்வம் ப்ரசக்ஷ்மஹே * என்பதாம். வேதாந்தவாசிரியர் காலம் வரையில் இந்த க்ரந்தம் பிரசாரத்திலிருந்து வந்ததாக ந்யாய ஸித்தாஞ்ஜநம் முதலிய அவருடைய க்ரந்தங்களினால் உணரலாகும்.

* லோகேவதீர்ண பரமார்த்தலாபக்ர பக்தி யோகாய நாதமுநயே யமிநாம் வராய * என்று ஆளவந்தார் அருளிச்செய்தபடியே இவர்யோகத்திலே நெடுங்காலம் எழுந்தருளி யிருந்தார். குருகைகாவலப்பனென்கிற சிஷ்யர்க்கு யோகரஹஸ்யத்தை அப்யஸிக்கும்படி நியமனம் தந்து அஷ்டாங்க யோகக்ரமத்தை அவர்க்கு அருளிச் செய்தருளினர். தம்முடைய திருக்குமாரராகிய ஈச்வர பட்டாழ்வானைப் பார்த்து "உமக்கு ஒரு குமாரர் தோன்றுவர்; அவர்க்கு யமுனைத் துறைவர் என்று திருநாமம் சாத்தவேணும்" என்று நியமித்து, உய்யக்கொண்டாரை நோக்கி அந்தத் திருப் பேரனுர்க்கு தர்சநார்த்தங்களை யுபதேசிக்கும்படிக்கும் நியமித்தருளி மூன்போல் யோகத்தில் அமர்ந்தார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் சோழராஜன் ஸபரிவாரனுய் வேட்டையாட வந்து திரும்பிப் போகையில்; இவருடைய பெண்பிள்ளைகள் வந்து "ஐயா! நம் அகத்திலே ஒரு குரங்கும் இரண்டு வில்லிகளும் ஒரு பெண்பிள்ளையுமாக வந்து நாதமுனிகள் எங்கேயென்று தேடிப்போனர்கள்" என்றுசொல்ல, அதுகேட்ட நாதமுனிகள் * அக்ரதः ப்ரயயௌ ராமஸ் ஸீதா மத்யே ஸுமத்யமா, ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணிர்லக்ஷ்மணோ நுஜாகமஹ * என்றுசொல்லப்பட்ட பெருமாளும் பிராட்டியும் இளையபெருமாளும் சிறியதிருவடியுமாக இந்த நால்வர் வந்திருக்கக் கூடுமென்று எண்ணி அவர்களைப் பின்தொடர்ந்து செல்வதாகப் புறப்பட்டு வழியில் எதிர்ப்பட்ட வர்களை யெல்லாம் 'இங்ஙனே போகிறவர்களைக் கண்டீர்களோ?' என்று கேட்க, அவர்களும் 'போகிறார்கள், போகிறார்கள்' என்று சொல்ல, விரைந்து வெகுதூரமெழுந்தருளிக் கங்கைகொண்ட சோழபுரத்தில் கீழ்வாசல் வரையில் எழுந்தருளி அங்குள்ளவர்களை நோக்கி விசாரிக்கையில், அவர்கள் 'நாங்கள் பார்க்கவில்லையே' என்று சொல்ல, போகிற வில்லிகளும் காணக்காண மறைந்தவாறே இவரும் ஏங்கி விழுந்து மோஹித்து அதுவே ஹேதுவாக அவ்விடத்திலேயே திருநாட்டுக்கெழுந் தருளினர். இந்தச்செய்தியை சிஷ்யவர்க்கங்கள் கேட்டு வியாகுலப்பட்டு அங்கே சென்று அந்த விமல சரம விக்ரஹத்தை ஸேவித்துச், சோகித்து, க்ரமத்திலே தரிப்புப்பெற்று சாமகைங்கரியங்களைக் குறையற நிறைவேற்றினர்கள்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

குருகைகாவலப்பன் என்கிற சிஷ்யரொருவர் ஸ்ரீமந்நாதமுனிகள் எப்போதும் யோகத்திலெழுந்தருளி யிருக்குமிடத்துக்கு ஸமீபத்திலே யோக நிஷ்ணதராய் எழுந்தருளியிருந்தார். .... (*)

ஸ்ரீமந்நாதமுனிகள் வைபவம் முற்றிற்று

உய்யக்கொண்டார் மணக்கால்நம்பிகளின் வைபவம்

ஸ்ரீமந் நாதமுனிகளின் திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகளுள் தலைவரான உய்யக்கொண்டார் சித்திரையில் கார்த்திகை நன்னாளில் திருவவதரித்தார். நாத முனிகள் ஸ்ரீ பாதத்திலே ஸகலார்த்தங்களையும் பெற்று க்ருதார்த்தராய் அருளிச் செயல்களை ப்ரவசனஞ் செய்துகொண்டு தர்சநப்ரவர்த்தகரா யெழுந்தருளியிருந்தார்.

இவருடைய சிஷ்யர்களில் மணக்கால் நம்பிகள் தலைவராயிருந்தார். அவர் உய்யக்கொண்டார் திருவடிகளிலே பன்னிரண்டு ஸம்வத்ஸரகாலம் இடைவீடின்றி அத்தாணிச்சேவகராய் வழுவிலா வடிமைகள் பலவுஞ்செய்து கொண்டிருந்தாரென்று ப்ரஸித்தி. உய்யக்கொண்டாருடைய தேவிகளான ஆண்டாள் ஆசார்யன் திருவடிச் சார்ந்தவளவிலே திருமாளிகைக் கைங்கர்ய நிர்வாஹங்களை யெல்லாம் இவர் தாமே தம்மதாக்கிக் கொண்டு நடத்தி வருகையில், உய்யக்கொண்டாருடைய பெண் பிள்ளைகளிருவரையும் கூட்டி யழைத்துக்கொண்டு வருகிற வழியிலே வாய்க்கால் சேறுயிருக்க, அதில் நடந்து வரமாட்டாமல் தளர்ந்து நின்ற அப்பெண்பிள்ளைகளை நம்பி தாம் படியாகக் கிடந்து தம் முதுகிலே அடியிட்டுச் செல்லும்படி செய்துவர, இச் செய்தியை உய்யக்கொண்டார் கேட்டு மிகவுகந்து அந்தவுகப்பின் மிகுதியாலே தம் திருவடிகளை அவருடைய சென்னிக்கு மலர்ந்த பூவாக்கி அவரை மகிழ்வித்தருளினர்.

நாளடைவிலே உய்யக்கொண்டார் திருநாட்டுக் கெழுந்தருள விருக்கையில் மணக்கால் நம்பியை அருகேயழைத்து 'வாரீர்! இங்குள்ள முதலிகளைக் கூட்டிக் கொண்டு நீர் தர்சநம் நிர்வஹிக்கக்கடவீர்; நம் நாதமுனிகளுக்கு ஒரு திருப்பேரனார் அவதரிப்பர்; அவர்க்கு யமுனைத்துறைவரென்று திருநாமம் சாத்தும்படிக்கும் ஸகல தர்சனார்த்தங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் உபதேசிக்கும்படிக்கும் நாதமுனிகள் தமது சரமதசையிலே நமக்கு நியமனம் தந்தருளினர்; அக்கட்டளையை நிறைவேற்றும் பாக்கியம் நான் பெற்றிலேன். இப்பாக்கியம் உமக்காகக்கடவது; நீர் அவரை அநுவர்த்தித்தாகிலும் ரஹஸ்யார்த்தங்களை உபதேசிக்க வேணும்' என்று நியமித்தருளி ஸ்ரீமந் நாதமுனிகளின் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே திருநாட்டுக் கெழுந்தருளினர்.

இத்தயரம் பொறுக்கமாட்டாத நம்பி முதலான திருவடிகள் மிகவும் சோகித்துத் தேறி நின்று சரமகைங்கர்யங்களைக் குறையற நடத்திப் போந்தார்கள். மணக்கால்நம்பியும் ஸ்வாசார்ய நியமனத்தை நிறைவேற்றுவதற்காக நாதமுனிகளின் திருப்பேரனாரது திருவவதாரத்தை ப்ரதீக்ஷித்துக் கொண்டிரா நின்றார். .... (*)

யமுனைத்துறைவர் (ஆளவந்தார்) வைபவம்

மணக்கால்நம்பி தர்சந ப்ரவர்த்தகரா யெழுந்தருளியிருந்த காலத்தில், ஸ்ரீமந் நாதமுனிகளின் திருக்குமாரரான ஈச்வர பட்டாழ்வார்க்கு ஆடிமாதத்து உத்தராடத்திலே ஒரு திருக்குமாரர் தோன்ற அதுகேட்டு உள்ளம்பூரித்த நம்பிகள் அங்கேற வெழுந்தருளி அக்குழந்தைக்கு ஜாதகர்மத்தைச் செய்வித்து, பத்துநாளுங் கடந்த விரண்டா நாளில் நாதமுனிகளின் நியமனப்படியே யமுனைத் துறைவரென்று நாம கரணமுஞ் செய்வித்தார்.

பிறகு அத்தெய்வக் குழவி சுக்லபக்ஷ சந்த்ரனைப்போன்று நாடோறும் மிக விளங்கி வளர்ந்து வருகையில் அந்தப்ராசநம் சௌளம் உபநயநம் முதலியவை

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உரிய காலங்களிலே நடைபெற்று அதி மேதாவியாய் வேதமோதுகையிலேபிழிந்து இரண்டாஞ் சந்தை சொல்ல வேண்டாதே ஒருருவிலேயே அதிகரிக்கலாயிற்று.

இங்ஙனே அங்கோபாங்கங்களையும் அதிகரித்துக் கொண்டிருக்கையில் திருத்தகப்பனார் திருநாட்டுக் கெழுந்தருள, அவருடைய சரம கைங்கரியங்களையும் குறையற நிறைவேற்றி, ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களை அதிகரிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வந்தார் யமுனைத்துறைவர். அக்காலத்தில் மஹாபாஷ்ய பட்டர் என்னுமாசிரியர் சாஸ்த்ரப்ரவசந ப்ரவீணராயிருக்கையாலே அவரிடத்தில் இவர் சாஸ்த்ரங்கள் வாசித்து வந்தார். சோழராஜனது ஆஸ்தானத்தில் மஹா வித்வானாயிருக்கும் ஆக்கியாழ்வானென்னும் பண்டிதன் அந்நாட்டிலுள்ள வித்வான்களை வென்று அவர்களெல்லாரும் தனக்குக் கப்பமிறுக்கும்படி செய்து கொண்டிருந்ததனால், ஒரு நாள் யமுனைத்துறைவருடைய ஆசிரியரான மஹாபாஷ்யபட்டரிடத்திலே கப்பம் வாங்குவதற்குச் சேவகன் வந்து நிற்க, அவ்வாசிரியரும் கையில் காசில்லாமையாலே ஒன்றும் தோன்றாது மனம் நொந்திருக்க, யமுனைத்துறைவர் விஷயமறிந்துகொண்டு அந்தச் சேவகன் கொணர்ந்த பத்திரிகையைக் கிழித்தெறிந்துவிட, அவன் ஆக்கியாழ்வானிடஞ் சென்று செய்தியறிவிக்க, அவன் "அந்த வித்தியார்த்தி வெறுங் கவியா? சாஸ்த்ரம் வல்லவனு? இதை நன்று தெரிந்துகொண்டுவா" என்று சொல்லி அந்தச் சேவகனைத் திருப்பியனுப்ப, அவன் திரும்பிவந்து விசாரிக்கையில், யமுனைத்துறைவர் *நவயம் கவயஸ்து கேவலம் நவயம் கேவலதர்க்கபாரகாः, அபி து ப்ரதிவாதிவாரணப்ரகடாடோபவிபாடகக்ஷமாः" என்கிற இந்த ச்லோகத்தை ஓர் ஏட்டிலே யெழுதிப் போகவிட்டார். [இதன் பொருள்: நாம் வெறும் கவியுமல்லோம், வெறும் சாஸ்த்ரஜ்ஞரு மல்லோம்; பிரதிபக்ஷிகளாகிற மதயானைகளின் செருக்கையடக்க வல்ல சிங்கமென்று கொள்க என்றபடி.]

இதை வாசித்துப்பார்த்த ஆக்கியாழ்வான் இப்படியும் ஒரு வித்வானுளனே என்று வியப்புக்கொண்டு இவ்விஷயத்தை அரசனுக்கு அறிவிக்க, அரசனும் அந்த யமுனைத்துறைவர் விரைவாகத் தம்மிடம் வருகவென்று கட்டளை தெரிவித்து, எழுந்தருள்வதற்காகப் பல்லக்கும் அனுப்ப ஸ்வாமி அதிலேயெழுந்தருளி ராஜத்வாரத்திலே வந்து சேர்ந்து,

ஆசைலாத் அத்யிகந்யாசரணகிஸலயந்யாஸதந்யோபகண்டாத்
ஆரப்ஷோந்தஸீதாமுக கமலஸமுல்லாஸஹேதோச்ச ஸேதோः!
ஆ ச ப்ராச்யப்ரதீச்யக்ஷிதிதரயுகளாத் சந்த்ர ஸூர்யாவதம்ஸாத்
மீமாம்ஸாசாஸ்த்ரயுக்மச்சத்ர விமலமநாः மிருக்யதாம் மாத்ருசோந்யः !!

[இதன் கருத்து—இமவந்தந் தொடங்கி யிருங்கடலளவான வடக்குத் தெற்குத் திசைகளிலும் கிழக்கு மேற்குத் திசைகளிலும், உபய மீமாம்ஸைகளிலும் பரிச்ரமப் பட்டுத் தேர்ச்சிபெற்ற என்னைப்போன்ற வேறொரு வித்வானைத் தேடிப்பிடியுங்கள், பார்ப்போம் என்றபடி.] இங்ஙனே இந்தச்லோகத்தை யெழுதி யனுப்ப, இதை ஆக்கியாழ்வான் கண்டு மிகவும் கோபாவேசம் கொண்டு வீண் டம்பமாக இப்படி யெழுதியனுப்புகிற பண்டிதரை நான் வாதப்போரில் வென்று செருக்கடக்கியே கிற்பேன்' என்று அரசனிடம் கூற, அரசனும் யமுனைத்துறைவரை அருகில் வரவழைத்து 'ஆஸ்தான வித்வானே நீர் தர்க்கம் செய்யவேண்டும்; உடன்படுகிறீரா?' என்று கேட்க; 'அதற்காகவே நான் வந்திருக்கிறேன்; என்ன தடை? எம்மிருவர்க்கும் வாதப்போர் நிகழவேண்டியது அவச்யமே; ஆனால் எங்களுடைய வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பதற்கு மத்யஸ்த பண்டிதர்கள் வேணுமே; இல்லையேல் இந்த வாதத்திற்கு முடிவு ஏது? ஆகவே மத்யஸ்த வித்வான்களைத் திரட்டிக்காணீர்' என்று ஸ்வாமி அரசனிடம் அறைந்தார்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அரசனும் அப்படியே மத்யஸ்தவித்வான்களை யழைப்பித்து வித்யாஸ்தான மண்டபத்திலே அனைவரையும் வீற்றிருக்கச்செய்து தானும் தன் மஹிஷியுமாய் அங்குச்சென்று சீரிய சிங்காசனத்தில் அமர்ந்து இனி வாதப்போர் தொடங்கலா மென்று சாற்றினன். அப்போது ராஜாவுக்கும் ராஜமஹிஷிக்கும் பரஸ்பரம் ஒரு ஸமயபந்தம் நடந்தது. *ரூபமேவாஸ்ய ஏதன்மஹிமாநம் வ்யாசஷ்டே* என்னும்படி யான முகவொளியை யமுனைத்துறைவரிடத்திலே கண்ட ராஜ மஹிஷியானவள் 'இவர் தோல்வியடையார்' என்றனள். தன்னுடைய ஆஸ்தான வித்வானிடத்தில் பக்ஷபாதங்கொண்ட அரசன் 'நமது வித்வான் ஒருநாளும் தோலார்' என்றனன். முடிவாக, வெற்றிபெறும் வித்வானுக்குப் பாதி ராஜ்யம் தருவேனென்றுங் கூறினன்.

இவ்வளவிலே, ஆக்கியாழ்வான் யமுனைத்துறைவரை நோக்கி, நாம் சாஸ்த் ரார்த்தங்களிலே வாதாடுவதற்கு முன்னே லௌகிகத்திலும் சிறிது வாதாடக்கட வோம். நீர் அன்றென்பதை நான் ஆமென்னக்கடவேன். நீர் ஆமென்பதை நான் அன்றென்னக் கடவேன், வென்றவன் தோற்றவன் தலையிலே தாடனம் பண்ணு வது' என்றொரு சிறுவார்த்தை கூற, அதுகேட்ட ஸ்வாமி, உடனே 1. த்வம்மாதா ஸவத்யா 2. ராஜா ஸார்வபௌம: 3. ராஜபத்நீ பதிவ்ரதா என்று லௌகிக வார்த்தைகள் மூன்று அருளிச்செய்தார். உன்னுடைய தாயார்மலடியல்லள் என்பது முதல் வாக்கியம். இதை அவன் மறுக்கவேணுமானால் 'என் தாய் மலடியே' என்ன வேணும். இவ்வரசன் பூமண்டலம் முழுவதையும் ஆள்பவன் என்பது இரண்டாம் வாக்கியம். இதை மறுத்தால் அரசனுடைய சீற்றத்திற்கு இலக்காகவேணும். இவ்வரசி கற்புடையவள் என்பது மூன்றாவது வாக்கியம். இதை மறுத்தால் அவளு டைய நிக்ரஹத்திற்குப் பாத்ர மாகவேண்டிவரும். ஆகவே ஒன்றுக்கும் மறுவாய் நிறக்கமாட்டாமல் தலைகுனிந்து நின்றான் ஆக்கியாழ்வான்.

பிறகு சாஸ்த்ரார்த்தங்களிலும் வாதப்போர் நடக்க, அதிலும் அவன் விரை வாகவே தோற்றனனாக, அப்போது ஸ்வாமி "அடா அல்பஜ்ஞனே! வென்றவன் தோற்றவன் தலையிலே தாடனம் பண்ணக்கடவனென்று ஸமயபந்தம் செய்தாய், நீ ராஜபுரோஹிதனும் வயதில் மூத்தவனுமிருத்தலால் நான் அது செய்யவல்லே னல்லேன்" என்றருளிச்செய்ய, இதைக் கேட்ட வித்வான்களனைவரும் உகந்து இவரை ப்ரஹ்ம ரதத்திலேற்றி உத்ஸவம் நடப்பிக்க அப்போது ராஜமஹிஷி "என்னை ஆளவந்தீரோ?" என்று ஸ்வாமியை எடுத்தணைத்துக்கொண்டு தன் கொழுநனுடன் மணிமாடமாளிகைக்குள்ளே புகுந்தாள். அன்று தொடங்கி இவர் ஆளவந்தார் என்ற சிறப்புத் திருநாமம் பெற்றார். அரசனும் ஏற்கெனவே வாக் களித்திருந்தபடி இவர்க்குப் பாதிராஜ்யம் கொடுத்து ஆதரிக்க, ஆளவந்தார் ஸஹ தர்மசாரிஸமன்விதராய் ராஜபோகத்திலே ஸுகமாக எழுந்தருளியிருந்தார்.

இவ்விசயங்களை யெல்லாங் கேட்டுணர்ந்த மணக்கால்நம்பி பரமானந்தப் பட்டு ஆளவந்தாரைக் காணவேணுமென்று ஆசைகொண்டு அங்கேற வெழுந்தருள அங்கு ஸாம்ராஜ்யத்துக்குத் தக்கபடி கட்டுங் காவலுமாயிருந்ததனால் உள்ளே புகப் பெறாமல் ஆளவந்தாரைக் காணமுடியாமல் சிலநாள் வருந்தியிருந்து உபாயசிந்தை பண்ணுகையில், திரு மடைப்பள்ளியில் ஸ்வாமிக்குத் திருப்போனகம் சமைக்கிற ஸ்ரீ வைஷ்ணவர் மூலமாக 'ஆளவந்தார் விரும்பியமுது செய்யும் கறியமுது தாதுளை' என்றறிந்து, நம்பியும் அன்று முதல் ஆறுமாஸகாலம் தாதுளைக்கீரை யிட்டு வந்தார். இப்படி நடத்தினவிடத்திலும் ஒரு விசாரமும் காணுமையாலே திருவுள்ளம் வருந்திச் சிலநாள் தவிர்த்திருந்து பார்ப்போமென்று தாதுளை யிடாமல் வாளாவிருந்தார். அப்போது ஆளவந்தார் அமுது செய்கையில் 'தாதுளை யில்லாமற் போனதேன்?' என்று தளிகை செய்பவரைக் கேட்க, 'ஒரு கிழவர் ஆறுமாதமாக நாடோறும் கொணர்ந்து கொடுத்துவந்தவர் இப்போது தவிர்ந்தார்' என்று தளிகைக்காரர் கூற, ஆளவந்தார் அதுகேட்டு விஸ்மயப்பட்டு 'அப்படியா? இனியொருகால் அவர் வந்தா ராகில் நமக்குத் தெரிவிப்பது' என்றருளிச் செய்து வைத்தார்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மணக்கால்நம்பி மறுபடியும் ஆசைகொண்டு 'இன்னமுஞ் சிலநாள் பச்சை மிட்டுப் பார்ப்போம்' என்று தூதுளைகொண்டு ஸமர்ப்பிக்க வெழுந்தருள, தளிகைக் காரர் ஆளவந்தார்க்குச் செய்தியறிவித்தவாறே அவரை உள்ளேபுக விடவேணும் என்று நியமனமாக, நம்பியும் உள்ளே சென்று நின்றார். ஆளவந்தார் நம்பியின் விலக்ஷண தேஜஸ்ஸைக் கண்டவாறே பரவசராய்த் தெண்டனிட்டு ஆஸனமளித்து 'தேவரீர் இத்தனைநாளாக நமக்குப் பச்சைபிடிக்கிறது என்ன அபேக்ஷைகொண்டு? அபேக்ஷிதமானதை யறிவித்தால் யதாசக்தி ஸமர்ப்பித்துக்கொள்வேன்' என்றருளிச்செய்ய, நம்பியும் 'நமக்கு ஒன்றும்வேண்டா; நாம் உமக்குக் கொடுக்க வந்தோமேயன்றி உம்மிடத்துக் கொள்ளவந்தோமல்லோம்; உமது பூருவர்கள் தேடிவைத்த அர்த்தமிருக்கின்றது; அந்த நிதி கிடக்கிறவிடமும் நானறிவேன்; அதனை நீர் கைக்கொண்டருளுமளவும் நித்யமாக நான் இங்கே தடையொன்றுமின்றி வந்துபோம்படி அப்பணியிடவேணும்' என்ன; ஆளவந்தாரும் அப்படியே வாசல்தகையாதபடி கட்டளையிட, நம்பியும் அன்றுமுதல் கீதையின் செம்மைப்பொருள் தெரியும்படி பதினேட்டு அத்யாயமும் எடுத்துரைக்க, ஆளவந்தாரும் ஆரணஸாரமான கீதையின் உட்பொருள் கேட்டருளி நிதே நிதே ஆர்த்தி அதிகரிக்கப்பெற்று 'அப்பரம்பொருளை ஸாக்ஷாத்கரிக்குமுபாயமில்லையோ?' என்று நம்பியைக்கேட்க, நம்பியும் ஸாக்ஷாத்கரிக்கலாமுபாயமுண்டு என்று ஏகாந்தத்திலே சில ரஹஸ்யார்த்த விசேஷங்களை ப்ரஸாதித்தருள, அதுகேட்ட ஆளவந்தாருக்கு, நெல்லுக்குப் பால் கட்டக்கட்டத் தலைவணங்குமாபோலே சரணாகதியின் சுவை நெஞ்சிலே படப்பட பரமாத்மனி அநுராகமும் இக்கொடிய ஸம்ஸாரத்தில் விராகமும் பிறந்ததாக, அந்தப்பரிபக்குவ நிலைமைக்குத் திருமுள்ளமுவந்த நம்பி இதுவே ஸமயமென்றுகொண்டு அவரைத் திருவரங்கம் பெரியகோயிலேற அழைத்துக் கொண்டு சென்று பெரிய பெருமாளை ஸேவிக்கப்பண்ணி, 'உமது பூருவர்கள் தேடிவைத்த மஹாநிதி இது காணும்' என்று காட்ட, ஆளவந்தாரும் ஸேவித்து உள்ளம்பூரித்து, பழுதே பல பகலும் போயினவே! என்று இழந்த நாளைக்கு அநுதபித்துக் கண்ணுங்கண்ணீருமாய் அரங்கத்தம்மானை யநுபவித்து *யதஹ்ருதேவ விரஜேத் ததஹ்ருதேவ ப்ரவ்ரஜேத்* என்றதை யடியொற்றி ஸம்ந்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்தருளி "அண்டர்கோனணி யரங்கனென்னமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுவே" யென்று கொண்டு தென் திருவரங்கமே பதியாக வாழ்ந்து போந்தார். அப்போது, பெரிய நம்பி, திருக்கோட்டியூர்நம்பி, பெரிய திருமலைநம்பி, திருமாலையாண்டான், திருக்கச்சி நம்பி, வானமாமலையாண்டான், தெய்வவாரியாண்டான் முதலான இருபது முதலிகள் ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்து வாழ்ந்தார்கள்.

இவர்களெல்லாரும் வித்வான்களுமாய் தர்சனதுரந்தரர்களுமாயிருக்கிற காலத்திலே மணக்கால்நம்பி ஆளவந்தாரை நோக்கி 'வாரீர்! இன்னமொரு ரஹஸ்ய விசேஷம் குருகை காவலப்பனிடத்திலே யுண்டு; அங்கே போய்க்கேளும்' என்றருளிச்செய்ய, அதற்கு ஆளவந்தார் 'அந்த ரஹஸ்யவிசேஷம் தேவரீருக்கு இல்லாதேபோவானேன்?' என்ன, நம்பியும் 'உமது பிதாமஹரான ஸ்ரீமந்நாத முனிகள் அந்த விசேஷத்தை அப்பன் பக்கலிலேயே வைத்துப்போனார்' என்ன; ஆகில் அங்கே கேட்போமென்று ஸமய ப்ரதீக்ஷராயிருந்து கோயிலிலேயே தர்சனம் நிர்வஹித்து வந்தாராளவந்தார்.

மணக்கால்நம்பி திருவடிகளிலே ஆச்ரயித்த முதலிகள்—ஆளவந்தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், வங்கிப்புரத்தாச்சி முதலானோர். நம்பி இவர்களுக்கு அருளிச்செயல்களையும் மற்றுமுள்ள விசேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளி *நலமந்தமில்லதோர் நாடுபுகும்நாள் அணித்தான வாறே* ஆளவந்தாரை நோக்கிப் பல ஹிதங்களுரைத்து 'உம்மைப்போலே ஒரு தர்சனப்பிரவர்த்தகரை உண்டாக்கிக் கோயில விடாதேயிரும்' என்று நியமித்து

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உய்யக்கொண்டார் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே திருநாட்டுக்கெழுந்தருளினார் இவருடைய திருநக்ஷத்திரம் மாசியில் மகம். இவரது தனியன். *அயத்நதோ யாமுநமாத்மதாஸம் அலர்க்கபத்ராரர்ப்பண நிஷ்க்ரயேண, ய: க்ரீதவாந் ஆஸ்தித யௌவராஜ்யம் நமாமி தம் ராமமேயஸத்வம்* என்பது.

'குருகைகாவலப்பனிடத்திலே யோகரஹஸ்யம்பெறக்கடவீர்' என்று மணக்கால் நம்பி முன்பு நியமித்திருந்ததை நினைத்த ஆளவந்தார், அப்பன் யோகத்திலே யெழுந்தருளி யிருக்குமிடமான கங்கைகொண்ட சோழபுரத்தேறச்செல்ல, அப்பனும் அங்கே ஒரு குட்டிச் சுவரிலே யோக நிரதராய் எழுந்தருளியிருக்க, அப்போது அவருக்கு ஸமாதிபங்கம் பண்ணவொண்ணுதென்றெண்ணிய ஆளவந்தார் அந்தச் சுவர்க்கு இப்பால் நிற்க, யோகநிஷ்டரான அப்பனும் திரும்பிப் பார்த்து 'இங்குச் சொட்டைக்குலத்தார் ஆரேனும் வந்தாருண்டோ?' என்று கேட்க, 'உடனே ஆளவந்தார், அடியேன்! என்று எதிரே சென்று தெண்டன் ஸமர்ப்பித்து 'அடியேன் இங்கு விடைகொண்டது தேவரீருக்குத் தெரியாதபடி பின்னே நிற்க, தேவரீர் அறிந்தது எங்ஙனே?' என்று கேட்க, அதற்குக் குருகைகாவலப்பனருளிச் செய்த வார்த்தை;—எம்பெருமானும் நானுமாக அநுபவித்துக்கொண்டிருந்தால் பெரிய பிராட்டியார் திருமுலைத் தடத்தாலே நெருக்கியணைத்தாலும் அவளது முகத்தையும் பாராத ஸர்வேச்வரன் என் கழுத்தையமுக்கி நாலு மூன்றுதரம் கீரிருந்த பக்கமாக எட்டிப்பார்த்தான். அப்படி அவன் பார்க்கும்போது சொட்டைக் குலத்தார் ஆரேனும் வந்திருக்கவேணும் என்றிருந்தேன் காணும் என்றார். [ஸ்ரீமந் நாதமுனிகளின் குலம் சொட்டைக்குலமெனப்படும். ஆழ்வார் பக்கலில் எம்பெருமான் பண்ணியிருந்த விசேஷ கடாக்ஷம் அவர்க்குப்பிறகு ஸ்ரீமந் நாதமுனிகள் திருவம்சத்தில் பெருகத் தொடங்கிற்றென்பது இங்கு அறியத்தக்கது.]

அதுகேட்டு ஆளவந்தார் மிகவுகந்து 'அடியேனுக்கு இந்த யோகரஹஸ்யத்தை யருளிச் செய்யவேணும்' என்று அப்பன் ஸ்ரீ பாதத்திலே விழுந்து கிடக்க, அவரும் அப்படியே செய்கிறேமென்று முடிபிடித்தெடுத்து "நம்முடைய சரீராவஸாநத்திலே சொல்லுகிறோம், வருகிற தைப் பூசத்தினன்று அபிஜிந்முஹூர்த்தத்திலே நமக்கு சரீராவஸாநமாம், அதற்கு முன்னாக எழுந்தருளவேணும்' என்று திருமுகமெழுதிக் கொடுத்தருள, ஆளவந்தாரும் அதனைப் பெற்றுக்கொண்டு கோயிலேறவெழுந்தருளினார். அங்கு நம்பெருமாள் திருவத்யயனத் திருநாளிலே அரையர் ஸேவையில் *கெடுமிடராயவெல்லாம்* என்கிற திருவாய்மொழியை அரையர் ஸேவித்துக்கொண்டிருக்கையில் அந்த கோஷ்டியில் ஆளவந்தாரு மெழுந்தருளியிருக்க, *கடுவினை களையலாகும்* என்கிற பாட்டளவிலே 'எழிலணியனந்தபுரம் படமுடையரவிற் பள்ளிபயின்றவன் பாதங்காண நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக்கறியச் சொன்னோம்" என்பதை அரையர் ஆளவந்தார் திருமுக மண்டலத்தைப் பார்த்துப் பலகாலும் ஊன்றியுறுத்திப் பாட, ஆளவந்தாரும் இதைக் கேட்டருளி 'ஆழ்வாருடைய நமர்களிலே நாம் அன்வயிக்க வேண்டில் திருவனந்தபுரஞ்சென்று ஸேவித்து வர ப்ராப்தம்' என்று சொல்லிக்கொண்டே அப்போதே கோஷ்டியில் நின்று மெழுந்து பெரிய பெருமாள் பக்கலிலே விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுப் பயணகதியிலே திருவனந்தபுரத்திற் கெழுந்தருளி அனந்தபத்மநாபனை மங்களாசாஸனஞ்செய்து அங்கே வாழ்ந்து போருகையில், முன்பு குருகைகாவலப்பன் யோக ரஹஸ்யோபதேசத்திற்காக நாளிட்டுக்கொடுத்திருந்த சிறுமுறியைப் பார்க்கவேர்ந்து எடுத்துப் பார்த்த வளவில், அதுவே நாளாக இருந்தபடியாலே துணுக்கென்று அலமந்து 'ஒரு புஷ்பக விமானம் பெற்றிலோமே' என்று சோகித் தெழுந்தருளியிருந்தார். பிறகு சில நாள் கழித்துத் திருவரங்கப் பெருநகரிலே சென்று சேர்ந்து, இனிமேல் நம்முடைய தர்சநத்திற்கு ப்ரவர்த்தகராவார் ஆர்கொல்? என்று சிந்தை குடிகொண்ட சிந்தையரா யெழுந்தருளியிருந்தார். [வைபவ சேஷம் மேலே வரும்.]

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜர் வைபவம்.

ஆதிசேஷன் ஸ்ரீராமாநுஜராக அவதரித்தல்.

ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகளில் பெரிய திருமலைநம்பி யென்னுமாசிரியர் திருமலை திருப்பதியிலே திருவேங்கடமுடையானடிக்கீழ்க் கைங் கரியஞ் செய்து கொண்டு வாழ்ந்து வருகின்றார். அவருடன் பிறந்த பெண்பிள்ளைகள் இருவர். அவர்களுள் ஸ்ரீ பூமிப்பிராட்டியாரென்கிற மூத்தவள் ஸ்ரீபெரும்பூதூரில் ஆஸ்ரிரி கேசவப்பெருமாளுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். பெரிய பிராட்டியா ரென்கிற இளையவள் மழலை மங்கலத்தில் கமலநயந பட்டரைத் திருமணம் புணர்ந் தாள். இவ்விருவரும் தம்தம் புக்ககங்களிலே வாழுங்காலையில் ஆதிசேஷன் இவ் விருள்தருமா ஞாலத்தைத் தெருள் தருமா ஞாலமாக்குவதற்காக இம்மிலவுலகத்திலே அவதரிக்கவேண்டி ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்ரீபூமிப் பிராட்டியாருடைய திருமருவு கருவிலே புகுந்து * கலியுங்கெடுங் கண்டு கொண்மின் என்ற ஆழ்வார் பாசுரத்தை ஸார்த்தக மாக்குவான் சித்திரையில் செய்ய திருவாதிரை நன்னாளில் திருவவதரித் தனன். * அறுசமயச் செடியதனை யடியறுக்கவும், அடர்ந்துவரும் குழிட்டிகளை அறத்துறக்கவும், செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்து விடவும், தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைக்கவும், மறையதனில் பொருளனைத்தும் வாய் மொழிய வும், மாறனுரைசெய்த தமிழ் மறை வளர்க்கவும் அழகாரு மனந்தாழ்வான் அறமிகுநற் பெரும்பூதூரில் இங்ஙனே ஏழ்பாருமுய்ய வுதித்தருளின நன்னாளானது * ஆழ்வார் கள் தாங்களவதரித்த நாட்களிலும் வாழ்வானநாள் நமக்கென்று நாற்றிசையும் கொண்டாட நின்றது. இத்திரு நன்னாளின் சிறப்பை மணவாள மாமுனிகள் ஒரு சிரிய செய்யுளிலல் வெளியிட்டருளியுள்ளார்; அதாவது :—

"சங்கர பாக்கரயாதவபாட்டப்பிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுறவாகியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வெங்கலிமிங்கினி வீறு நமக்கிலை யென்று மிகத் தளர்நாள்
மேதினி நஞ்சுமையாறு மெனத்துயர் விட்டு விளங்கிய நாள்
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு மூலத்திடு நாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடு நாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுஞ்சிறந்த பெரும்பூதூர்ச்
சீமானிளை யாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே." என்பதாம்.

அவதாரரஹஸ்ய சிந்தனம்

இங்ஙனம் தோன்றிய பேராசிரியர் ஆதிசேஷனுடைய அபராவதாரமென்றும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவமென்றும் விஷ்வக்ஸேநருடைய தோற்ற மென்றும் இப்படி பலவாறுகப் பெரியோர் பணிப்பர். நூற்றந்தாதியில் * அடையார் கமலத்தலர் மகள் கேள்வன் கையாழி யென்னும் படையோடு நாந்தகமும் படர் தண்டும் ஒண் சார்ங்க வில்லும் புடையார் புரிசங்கமுமிந்தப் பூதலங் காப்பதற்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கென்றிடையே யிராமானுச முனியாயினவிங்கிலத்தே * என்னும் பாசுரத்திலும், * ப்ரதயந் விமதேஷு..... வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரேः * என்ற யதிராஜ ஸப்ததி ஸ்லோக்கியிலும் ஸ்வாமி பஞ்சாயுதாழ்வார்களின் திருவவதார மென்னும் விஷயம் காட்டப்பட்டுள்ளது. * விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் * என்கிற யதிராஜ ஸப்ததி ஸ்லோக்கியொன்றில் விஷ்வக்ஸேநாவதாரமென்னும் விஷயம் கூறப்பட்டுள்ளது. திருவனந்தாழ்வானுடைய திருவவதார மென்னும் விஷயத்தைப் பற்பல ஆசிரியர்கள் பேசியுள்ளார்கள். ஸ்வாமியின் அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவரான திருமலை அனந்தாழ்வான் தாமருளிய 'வேங்கடாசல இதிஹாஸமாலா' என்னும் திவ்யக்ரந்தத்தில் திருவனந்தாழ்வானே ஸ்ரீராமானுஜராகத் திருவவதரித்தானென் பதை மிக விரிவாக அருளியுளளார். * ஸ்ரீமத்யாம் பூதபுர்யாம் அதிதரணிதலம் சேஷ ஆவிர்பபூவ * இத்யாதிகள் காண்க. எம்பெருமான் தனது அத்தாணிச் சேவகனும் படுக்கையுமான திருவனந்தாழ்வானே நோக்கி நீ நிலவுலகத்திற்சென்று பிறந்து எவ்வுயிரையும் ஸம்ரக்ஷிக்கக் கடவை என்று நியமித்தருள, அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்ட ஆதிசேஷன் சித்திரைமாதத் திருவாதிரையன்று ஸ்ரீகேசவ ஸோமயாஜிகளுக்குப் புதல்வராகப் பிறந்தானென்பது அவ்விடத்து ஸ்ரீஸ்லோக்கி களின் பொருள். இப்படியே மற்றொரு சிஷ்யரான வடுக நம்பியருளிச்செய்த ச்லோகரூபமான யதிராஜவைபவ க்ரந்தத்தில் * சேஷாம்சக: கேசவ யஜ்வதேவ்யாம் * என்றுள்ளது. வேதாந்த தத்துவப்பொருள்களை நிலைநாட்டுதற்காகவும் தூர்மதங் களைத் தொலைப்பதற்காகவும் திருவனந்தாழ்வானுடைய அம்சபூதராய்த் தேஜோ நிதியான ஒரு மஹான் கேசவ ஸோமயாஜிகளின் தேவியாரிடத்தில் அவதரித்தார் என்பது இந்த ச்லோகத்தின்பொருள். இவ்வடுக நம்பிகள் தாமே அருளிச்செய்த ஸ்ரீராமானுஜ அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரத்தில் * பௌத்தத்வாந்த ஸஹஸ்ராம்சுः சேஷருபப்ரதர்சகः * என்பது இருபத்துமூன்றும் ச்லோகம். எம்பெருமானுரு டைய பூர்ணகடாக்ஷ பாத்ர பூதராய் அவர் திறத்துத் தேவுமற்றறியாதே பீடுபட் டிருந்த மஹாப்ராஜ்ஞரான கருடவாஹந பண்டிதர் பணித்த தீவ்யஸூரிசரித மென்னும் மஹா காவ்யத்தில் பதினேழாவது ஸர்க்கத்தில் ஸ்ரீராமானுஜவைபவம் சொல்லுமிடத்து * பௌஜங்கம் வபுரபஹாய சேஷபோகீ யத்ரூபம் த்ரிபுவநவந்திதம் ஜகாம * [திருவனந்தாழ்வான் தனது உரகவுடலை விட்டொழிந்து இராமானுச முனியாந் திருவுருவத்தை யடைந்தான்] என்றும். மேலே யாதவப்ரகாசனை நோக்கி ப்ரஹ்மரக்ஷஸ்ஸை கூறினதைக் கூறுமிடத்து "உமது பக்கத்திலிருப்பவரும் லோக ஸம்ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ்வானுடைய அம்சமாக வந்து திருவவதரித்தவரு மான [ராமானுஜ னென்கிற] இந்த மஹானிடத்தில் நான் அஞ்சுகின்றேன்' என்றும் சொல்லப்பட்டது. தேசிகருடைய திருவடியான ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமிபணித்த திவ்யஸூரி ஸ்தோத்ரத்தில் * சைத்ரார்த்ரா ஸம்பவம் விஷ்ணோः தர்சநஸ்தாப நோத்ஸுகம், தண்டீரமண்டலே சேஷமூர்த்திம் ராமானுஜம் பஜே * [எம்பெருமா னுடைய தர்சனத்தை ஸ்தாபித்தருளச் சித்திரை மாதந் திருவாதிரையில் தொண்டை நாட்டில் அவதரித்த ஆதிசேஷமூர்த்தியாகிய ஸ்ரீராமானுஜரைத் தொழுகின்றேன்] என்று சொல்லிற்று. இராமானுச நூற்றந்தாதியில் * கல்லார் பரவுமிராமானுசன் * என்ற எண்பதாம் பாசுரத்தின் வியாக்கியானத்தில் * அகந்தः ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்ய து தத்பரம், பலபத்ரஸ்ய துரியஸ்து கலௌ ராமானுஜः ஸ்மருதः * என்கிற ஆர்ஷவசனம் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பல ஆசிரியர்கள் ஸ்வாமியை ஆதிசேஷாவதாரமாக அருளிச்செய் திருக்க, நம்முதாதியிலும் யதிராஜஸப்ததியிலும் பஞ்சாயுதாவதாரம் விஷ்வக் ஸேநாவதாரம் என்றிப்படி அருளிச்செய்தது ஏன்? என்று சங்கை தோன்றும். இதற்குப் பெரியார் பலரும் ஸமாதானமாவது—சரித்ரநூல் என்பது வேறு, ஸ்தோத்ரநூல் என்பது வேறு. சரித்ர நூல்களில் அவதாரரஹஸ்யம் உள்ளது

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உள்ளபடி உரைக்கப்படும். ஸ்தோத்ர நூல்களிலோ வென்னில் கவிகளின் புத்தி சமத்காரத்திற்குத் தக்கபடியும் ஆசிரியரின் ப்ரபாவ விசேஷங்களுக்கு ஏற்றபடியும் பலவகையான வர்ணனைகள் இருக்கக்கூடும். சரித்திர நூல்களால் அறுதியிடப்படுகிற அவதார ரஹஸ்யதத்துவங்களை ஸ்தோத்ர நூல்களிலுள்ள உக்திகள் உபமர்த்திக்க மாட்டாவென்று. இது பற்றின விரிவை நமது சேஷாவதாரச் சிறப்பில் காண்க.

நாமகரணமும் சாஸ்த்ராப்யாஸமும் க்ருஹஸ்தாச்ரமப்ரவேசமும்

ஆஸ்ரீ கேசவப்பெருமாள் இங்ஙனே தமக்குத் தோன்றிய திருக்குமாரர்க்கு யதாவிதி ஜாதகர்மம் செய்தருளினர். இச்செய்தியைப் பெரியதிருமலைநம்பி கேட்டருளிப் பரமஸந்தோஷத்துடனே திருமலையில் நின்றும் ஸ்ரீ பெரும்பூதூரேற வெழுந்தருளி ஸர்வ லக்ஷணஸம்பந்நமான திவ்யசிசுவின் முகவொளியைக் கண்டு வியந்து உள்ளம் பூரித்துப் பன்னிரண்டாம்நாளில் 'ஸ்ரீ ராமாநுஜன்—இளையாழ்வான்' என்று நாமகரணம் செய்தருளினர். மற்றும் அந்நப்ராசன சௌளோபநயநாதி ஸம்ஸ்காரங்களுமெல்லாம் கால காலங்களிலே நடைபெற்று "சொல்லார் தமிழோரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா வறநெறியாவுந்தெரிந்தவன்" என்று அழகனார் நூற்றந்தாதியிலருளிச் செய்கிறபடியே ஸாங்கோபாங்க ஸகல வித்யா பாரங்கதராய் ப்ராப்த காலத்திலே க்ருஹஸ்தாச்ரமத்தையும் ஸ்வீகரித்து, பெரும்பூள் கோயிலுக்கருகான திருப்புட்குழியிலே யாதவப்ரகாச னென்பானொரு ஏகதண்டி ஸந்ந்யாஸி பூர்வபக்ஷ வேதாந்த க்ரந்த ப்ரவசனம் செய்துபோருகிறனென்று கேட்டு இளையாழ்வார் தாமும் அங்கே யெழுந்தருளி அவன்பக்கல் சிஷ்யராவாய் அத்யயித்திருந்தார்.

கோவிந்தபட்டருடைய வரலாறு

இப்படி யாதவப்ரகாசரிடத்தில் ஸ்வாமி வேதாந்தச்ரவணம் செய்துகொண்டிருக்கையில் மழலைமங்கலத்திலிருந்து ஸ்ரீகோவிந்த பட்டரென்கிற ஆசிரியரும் ஸஹாத்யாயியாக ஸ்வாமியோடே வந்து சேர்ந்தார். இவரே எம்பார் என்று ப்ரஸித்தி பெற்றவர். ஸ்வாமியின் மாதுலரான திருமலைநம்பிக்கு இரண்டு ஸஹோதரிகளென்றும் ஒரு ஸஹோதரி மதுர மங்கலமென்னும் அக்ரஹாரத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தாளென்றும் மேலேசொன்னோம். தை மாதத்துப் புனர்வஸு நக்ஷத்ரத்தில் இப்பிராட்டியின்ற புதல்வரே எம்பாரென்கிற கோவிந்தபட்டர். இவர் ப்ராப்தகாலவ்களிலே உபநயநாதி ஸம்ஸ்காரங்கள் பெற்று வேத வேதாந்தங்களை யதிகரித்து மஹாவித்வானாயிருந்தார். ஸ்வாமிக்குச் சிறியதாயார் திருக்குமாரரானவிவர், திருப்புட்குழியில் தமையனார் யாதவப்ரகாசரிடத்தில் வேதாந்தமதிகரிக்கிறாரென்று கேட்டுத் தாமுங்கூட அதிகரிக்க விரும்பி அவ்விடம் வந்து சேர்ந்தாராயிற்று.

யாதவப்ரகாசர் அபார்த்தங்கள் கூறுதல்

யாதவப்ரகாசர் மாயாவாதிமதஸ்தராகையாலே வேதாந்த வாக்கியங்களுக்குப் பலவிடங்களில் பொருந்தாத பொருள்களை ப்ரவசனம் செய்துகொண்டிருந்தார். அவற்றைக் கேட்கும்போது ஸ்வாமிக்குப் பரிதாபம் பொறுக்க முடியாததாயிருக்கும். 'பொருந்தும் பொருள் இதுவன்றே' என்று தாம் எடுத்துரைப்பதுண்டு. அப்போது ஹுங்காரம் பண்ணிநிற்பர் யாதவர். இப்படியிருக்கையில் ஒருநாள் *கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ* என்கிற ச்ருதிவாக்யத்திற்குப் பொருள்கூறுகின்ற யாதவர் "குரங்கின் ப்ருஷ்டம்போல் சிவந்த கண்கள்" என்று இகழ்வான பொருளைச் சொல்ல, அது கேட்டுச் சிறிதும் பொறுக்கமுடியாத ஸ்வாமி மிக வுஷ்ணமான கண்ணீர் பெருகின்று '*கப்யாஸ மென்பதற்கு இப்படியோ பொருள் கூறுவது? கம்பீராம்பஸ்ஸமுத்பூத-ஸுரக்ஷ்டநாள-ரவிகர விகஸித மானதோர் செந்தாமரைப்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பூப் போன்ற திருக்கண்கள் படைத்தவன் என்றன்றே பொருள்' என்று வ்யுத்பத்தி களை விசதமாகக்கூறி உபபாதிக்க, அதுகேட்ட யாதவர் மிகச்சினந்து 'நாம் சொன்னபடியே கேட்டுக்கொண்டிருக்க முடியுமானால் வாசித்திரும்; இல்லையாகில் விட்டுப்போம்' என்ன, ஸ்வாமி சிந்தை கலங்கி விலகியிருந்தார்.

ஸ்வாமியை மாய்க்கும் விரகுபார்த்தல்

இப்படியிருக்கையில் அந்த யாதவப்ரகாசருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அதாவது—இந்த ராமாநுஜன் விலக்ஷணமான மேதையும் அன்யாத்ருசமான ப்ரதி பையும் பொலிய நின்றான்; இவனால் அத்வைத தர்சநம் குன்றும்போலும்; ஆகவே இவன் முடியும் விரகு செய்வது நன்று—என்று. இதைப்பற்றிப் பலவாறு ஆலோசிக்கையில், இவ்விளையாழ்வானைக் கங்கையில் மணிகர்ணிகையிலே தள்ளி ம்ருத்யுவசமாக்குவதே பாதகமற்ற பணியென்று அறுதியிட்டு, ஒருநாள் ராமாநுஜரை வரவழைத்து 'நீர் இல்லாமல் எங்களுக்கு ஆற்றவொண்ணாதாயிருந்தது; முன்போல வந்திருந்து மனமொத்து வாசித்து க்ரந்தத்தை அவிச்சிந்நமாக நடத்திப்போரும்' என்று ஸதுபாயமாகச் சொல்லி ஸ்வகோஷ்டியிலே சேரவிட்டுக் கொண்டு பாட ப்ரவசநம் நடத்தி வந்தார் யாதவர். ஏற்கெனவே தாம் எண்ணியிருந்தபடி நிறை வேற்றிக் கொள்ளுவதற்காக ஒருநாள் கோஷ்டியிலே கங்காயாத்ரைப் புறப் பாட்டை ப்ரஸ்தாவித்து ஸ்வாமியுட்பட எல்லாருமிசைந்தவாறே ஸபரிவாரராய்ப் புறப்பட்டார் யாதவர். இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் கூடவே செல்லாநின்றார் கள். கடுகவே யாத்திரை நடவாநிற்கையில் விந்த்ய ப்ரதேசத்திலே போம்போது சில இங்கிதங்களாலே இந்த யாத்திரையின் நிமித்த மின்னதென்றுணர்ந்த கோவிந்த பட்டர் ஒரிடத்திலே இளையாழ்வாரும் தாமுமாய்ப் பின்தங்கி நின்று செய்தியை ரஹஸ்யமாக ஸ்வாமிக்குத் தெரிவித்து அகன்று போம்படி ஸூசிப்பிக்க, ஸ்வாமியும் அங்கு நின்றும் அப்போதே தனியே மீண்டெழுந்தருளினார். [யாதவப்ரகாசர் செய்தி யைப் பிறகு சொல்வோம்.]

ஸ்வாமி ஓரிரவிலே கச்சிப்பதி சேர்தல்

நிர்ஜனமும் நிர்ஜலமுமான நீள் காட்டிலே பிரிந்துதிரும்பின ஸ்வாமி அவ் வழியை விட்டுக் குறுக்கே நெடுந்தூரஞ்சென்று ஒரு மரத்தடியிலே நின்றுபார்க்க, கண்ணுக் கெட்டினவளவு *அங்கோர் நிழலில்லை நீருமில்லை* என்னும்படியான நிலைமையாய் ஒருவரும் துணையின்றிக்கே* ஆவாரார் துணையென்று அலைகீர்க்கடலு ளழுந்தும் நாவாய்போல் தளங்கி நின்று வழி திகைத்து நிற்கையிலே, எம்பெருமான் இப்படிப்பட்ட பரமஸாத்விகர்களை விட்டுக் கொடுக்க மாட்டாதானொருவனுகையாலே இவர்க்குத் துணைசெய்ய விரும்பி ஒரு வில்லியின் வேடம் பூண்டு வாளும் வில்லுங் கொண்டு மனைவியுடனே முன்னே வந்து தோன்ற, ஸ்வாமியும் அந்த தம்பதிகளைக் கண்டு கலக்கந் தீர்ந்து உள்ளம் தேறி நின்று 'நீங்கள் எங்கு நின்றும் வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் விடை கூறினதாவது— நாங்கள் உத்தரதேசத்து ஸித்தாச்ரமத்தில் நின்றும் வருகிறோம்: ஸத்யவ்ரத க்ஷேத் ரத்தை நோக்கிச் செல்கின்றோம்—என்று. அது கேட்டு மகிழ்ந்த ஸ்வாமி 'ஆகில் நானும் உங்களுடனே அவ்விடத்திற்கு வர நினைக்கிறேன்; எனக்குத் துணையா யிருக்க முடியுமோ?' என்று கேட்க, 'நல்லது அப்படியே யாகலாம்' என்று அவர்கள் சொல்லி முன்னடியிட ஸ்வாமியும் அவர்களைப் பின் செல்ல விந்த்யாடவி நீங்கி மாலைப்பொழுதாயிற்று. அப்போது ஓரிடத்திலே தங்கி அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு நெடுந்தூரம் நடந்து சென்று பின்பு நள்ளிருளாயிருந்ததனால் மேலே வழி நடந்து செல்ல மாட்டாமல் அங்கே அவர்களோடு கூடவே உபவாஸமாகத் தங்கி யிருந்தார் ஓர் மரத்தடியின் கீழ்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அப்போது வில்லியின் மனைவி தாஹம் மேலிட்டுத் தண்ணீர் தண்ணீரென்று கணவனிடம் கூற, அவனும் "இப்போது தண்ணீர் கிடைக்கவில்லையே; சிறிது போது ஆறியிரு: விடிந்தவாறே நல்ல மதுரமான தீர்த்தம் கிடைக்கும்" என்று சொல்லித் தேற்றினன். அப்போது ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் வருத்தமுற்றது. ஐயோ! நமக்கு மஹோபகாரிகளான விவர்களுக்கு நாம் விடாய் தீர்க்கும்படியான தேசமாக இல்லையே! என்கிற நிர்வேதத்தோடேயே சிறிதுபோது திருக்கண் வளர்ந் திருந்தார். பின்பு கனவிருளகன்று கீழ்வானம் வெள்ளென்று காலையம்பொழுதான வாறே மூவருமெழுந்து வழி நடக்கத்தொடங்க, அத்தத் தம்பதிகளிருவரும் அருகே ஒரு கிணற்றங்கரையிலே அழைத்துக்கொண்டு போய்விட்டு இவரைப் பார்த்து 'அருள்முகிலே! மிகவும் விடாய்த்திருக்கின்றோம்: இக்கிணற்றிலே யிறங்கி ஒருகை அள்ளித் தீர்த்தம் தருவீராக என்ன, அவரும் உடனே கிணற்றிலிறங்கி இரண்டு திருக்கையாலும் தீர்த்தம் வாரியெடுத்து மூன்றுதரம் கொடுக்க, அவர்களும் வாங்கி விடாய்தீரப் பருகி உருக்காட்டாதே யொளிக்க, இவரும் கரையேறி வந்து பார்த்த வாறே எங்குந்தேடியும் அவர்களைக் காணமல் சுற்றிலுங் கூப்பிட்டுத் திசைகளை யுற்றுப் பார்க்கையில் மாடமாளிகைகளும் கோபுரங்களும் விசேஷமான ஸஞ்சாரங் களும் காணப்பட, முன்னே தோற்றின சிலரை நோக்கி இவ்விட மெவ்வூரென்று கேட்பதென் கேட்க, 'புண்யகோடி விமானம் முன்னே தோற்றுகிற்க எவ்வூரென்று கேட்பதென் கொல்? இது சாலைக்கிணறன்றே, கச்சிப்பதியன்றே' என்று அவர்கள் சொல்ல, ஸ்வாமி மிகவுமாச்சரியப்பட்டு வழித்துணையான வில்லிகளைப் பெருமாளும் பிராட்டியு மாக ப்ரதிபத்திபண்ணி என்கொலம்மான் திருவருள்கள்! என்று தலை சீய்த்து *உருக்காட்டாதே யொளிப்பாயோ? என்று பலவாறு கூறிப் புலம்பி ஒருவாறு உள்ளந்தேறி யெழுந்து சென்று தென்னத்திரூர் கழலிணைக்கீழ் ஸேவித்து அப் பெருமானது திருவுள்ளத்திற்குப் பாங்காக நித்தியமும் சாலைக்கிணற்றில் நின்றும் திருவாராதனத்திற்குத் தீர்த்தங்கொணர்ந்து ஸமர்ப்பித்து வாரா நின்றார்.

யாதவப்ரகாசரது மேற் செய்தி

இளையாழ்வார்செய்தி இங்ஙனேயிருக்கஇனி யாதவப்ரகாசனுடையசெய்தி கேண் மின்; நடுவழியிற் பிரிந்துபோன இளையாழ்வாரும் கோவிந்த பட்டரும் வரக்காணோமே யென்று யாதவர் திரளுடனே ஓரிடத்திலே தங்கி யெதிர் பார்த்திருக்க, சிறிதுபோது கழித்து கோவிந்த பட்டர் வந்துசேர, 'வந்தீரோ? இளையாழ்வார் எங்கே?' என்று அவரைக்கேட்க 'அவரை நான் காணவில்லையே' என்று கூற, யாதவர் சிலசிஷ்யர் களை இங்கு மங்கும் போகவிட்டுத் தேடிப் பார்க்கச்சொல்ல, அவர்களும் தேடிப் பார்த்துக் காணமல், ஐயோ! காட்டிலே என்ன தீங்கு வந்ததோவென்று அனைவரும் வியாகுலராய், பகவத் ஸங்கல்பப்படி யாகிறதென்று சொல்லிக் கொண்டே மேலே நடந்து சென்று வழியடைவே கங்கைக்கரை சேர்ந்தார்கள்.

கோவிந்தபட்டர் லிங்கங்கொணர்தல்

ஒருநாள் கோவிந்த பட்டர் கங்கையில் நீராடுகையில், அவரது கையிலே ஒரு லிங்கம் வந்து சேர, வியப்படைந்து இஃது என்னவென்று யாதவர்க்குக் காட்ட, அவர் பரம ஸந்தோஷத்துடனே 'நீர் தைவஜ்ஞராகையாலே கங்காஸ்நாநபலன் கைசேர்ந்தாற்போலே கங்காதரக் கடவுளே கைபுகுந்தபடி காணும்' என்று சொல்லி இவரிடத்திலே விசேஷ ப்ரதிபத்தியுடனிருந்தார். அன்றுமுதல் எல்லாரும் கோவிந்தபட்டரை உள்ளங்கை கொண்ட நாயனார் என்று பேரிட்டழைக்கத் தொடங்கினர்கள். [உள்ளங்கை குவிந்த நாயனார் என்பாருமுளர்.]

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யாதவரும் கங்காஸ்நாநம் பண்ணி யாத்திரையை முடித்து மீண்டு ஸ்ரீ ஜகந்நாதம் அஹோபிலம்வழியாக வர, கோவிந்தர் இந்த லிங்கத்தை ஒரு உசித ஸ்தலத்திலே பிரதிஷ்டை செய்வித்து வருகிறேன் என்ன, அவரும் அப்படியே செய்யுமென்று விடை கொடுத்தனுப்பிவிட்டுத் தாம் பரிவாரங்களுடனே பெருமாள் கோயிலேற வந்து சேர்ந்தார். கோவிந்தரும் தம்முடைய ஜன்மபூமியான மழலைமங்கலஞ் சென்று சேர்ந்து அந்த லிங்கத்தை அங்கே பிரதிஷ்டிப்பித்து, பிறகு காளஹஸ்தியென்கிற சிவஸ்தலத்திலே சென்று அவ்விடத்திலே சிவபிரானுடையவும் சைவர்களுடையவும் பஹுமானங்களைப் பெற்று அங்கே ஆலய வழிபாடு செய்பவர்களுள் தலைவராய் நின்றார்.

யாதவப்ரகாசரும் ராமாநுஜரும்

ஸ்ரீ காஞ்சீபுரியிலே யாதவர் இளையாழ்வாரைக்கண்டு வியந்து மகிழ்ந்து 'வாரீர்! விந்த்யாடவியிலே உம்மைக் காணுமையாலே பலவாறு அதிசங்கித்துக் கனக்க க்லேசித்திருந்தோம்; எப்படியோ சுகமாக வந்து சேர்ந்தீரே! இவ்வளவு காணப்பெற்றோமே!' என்று குரல் தழுத்துக்கூற, இவரும் வந்து சேர்ந்த வரலாற்றை [வில்லிகளின் செய்தியை] உள்ளபடியே யுரைக்க, யாதவரும்கேட்டு இவருடையபடி லோக விலக்ஷணமாயிருந்ததென்று உகந்து அவ்விராமாநுசனை மீண்டும் ஸ்வகோஷ்டியிலே கூட்டிக்கொண்டு க்ரந்த ப்ரவசநம் நடத்திவாரா நின்றார்.

ஆளவந்தார் கச்சிக் கெழுந்தருளி மீளுதல்

யாத்திரை யடைவாகக் காஞ்சீபுரியில் நின்றும் நம்பெருமாள் ஸன்னிதிக்கு இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் சென்று பெருமாளைத் தொழுது ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவித்து நிற்க, அவரும் வார்த்தா ப்ரஸங்கத்திலே பெருமாள் கோயிலில் விசேஷங்கள் என்னென்று கேட்க, அவர்களும் இளையாழ்வாருடைய ஞானப் பெருமை முதலிய வைபவங்களையும், *கப்யாஸக்ருத்* முதலானவற்றிலே யாதவப்ரகாசரை மேலிட்டுப் பொருள் பணித்த வகைகளையும் எடுத்துரைக்க, ஆளவந்தார் உள்ளம்பூரித்து, இந்தளத்திலே தாமரை பூத்தாற்போலே இவ்விருள் தருமாஞாலத்திலும் இப்படி யொருமஹாநுபாவர் தோன்றப் பெறுவதே! என்று வியந்து அப்பொழுதே அவரைக் காணவேணுமென்னும் ஆவலுடனே திவ்ய தேசங்களை மங்களாசாஸனஞ் செய்துகொண்டே கச்சிப் பேரருளாளன் ஸன்னிதிக்கெழுந்தருளித் திருமலையிலே மங்களாசாஸனஞ் செய்து கீழே திருப்புற்றினருகே திருவனந்தாழ்வானையும் கரியமாணிக்கப் பெருமாளையும் ஸேவியா நிற்க, அங்கே யாதவப்ரகாசர் தம் திரளுடனே பெருமாளை ஸேவித்து அவ்விடத்தே ப்ரதக்ஷிணமாக வாராநிற்க, ஆளவந்தார் தம் அருகேயிருந்த தருக்கச்சி நம்பியை நோக்கி 'இத்திரளிலே இளையாழ்வார் யாவர்?' என்று கேட்க, அவரும் 'அதோ சிவந்து நெடுகி ஆஜாநுபாஹுவாய் வருகிறவர் என்று காட்ட, ஆளவந்தாரும் திருவுள்ளம் பூரிப்பக் குளிர நோக்கியருளி *ஆம் முதல்வனிவன்* என்று விசேஷ கடாக்ஷம் செய்தருளி, பேரருளாளப் பெருமாளை நோக்கி *யஸ்ய ப்ரஸாதகலயா* என்றொரு ச்லோகத்தால் இளையாழ்வார் நம்தர்சநஸ்தாபகராம்படி அருள் புரிகைக்காகச் சரணாகதிசெய்து அப்போது இளையாழ்வார்க்கு ஒரு நல்வார்த்தை சொல்ல அவஸரம் காணுமையாலே மீண்டும் முதலிகளும் தாமுமாகக் கோயிலேற வெழுந்தருளினர்.

ப்ரஹ்மரக்ஷஸ்ஸை காட்டின ராமாநுஜர் பெருமை.

அக்காலத்தில் கச்சி நகர்மன்னனுடைய பெண்பிள்ளையை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடிக்க அதற்கு ஒருபடியாலும் பரிஹாரம் காணுமல் யாதவப்ரகாசர் சிறந்த மந்த்ர

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வாதி யென்று கேட்டு ராஜபுருஷர்கள் இவரிடம் வந்து செய்திகூற, இவரும் அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸை நான் போகச் சொன்னதாகச் சொல்லுங்கோளென்று நியமிக்க அவர்களுஞ் சென்று அப்படியே சொல்ல, நான்தான் அவனைப் போகச்சொன்ன தாகச் சொல்லுங்கோளென்று ப்ரஹ்மரக்ஷஸ்ஸு திரஸ்காரமாகச் சொல்லிவிட அஃதுணர்ந்த யாதவர் சீற்றங்கொண்டு தம்திரளுடனே அரசன் மனையிலே வந்து மஹாமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு ப்ரஹ்மரக்ஷஸ்ஸருகில் நின்று மூஷ்டிபிடிக்க, ப்ரஹ்மரக்ஷஸ்ஸும் மூடக்கினகாலே கீட்டி, "அடா யாதவா! நீ ஜபிக்கிற மந்த்ரம் நானறியேனே?' என்று அந்த மந்த்ரத்தையுஞ் சொல்லி 'அப்பா உன் பிறப்பு வரலாறு நான் சொல்லுகிறேன் கேளாய்; நீ மதுராந்தகத்து ஏரிக்கரையிலே யிருப்ப தொரு புற்றிலே ஓர் உடும்பாயிருந்தாய்; கோயில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமூலக் கெழுந்தருளும்போது அங்கே நீராடி யமுதுசெய்கிறவிடத்திலே சிந்தின ப்ரஸாதத் தையும் தீர்த்தத்தையும் நீ உட்கொள்ளப் பெற்றாய்; அதனால் வித்வானன ஜன்மம் பெற்றனை. நானே முற்பிறப்பில் அந்தணனாயிருந்து அரியபெரிய வேள்வி நிகழ்த்தின வன்; உன் மந்த்ரத்திற்கா நான் போவேன்? உன் பக்கலில் வீற்றிருக்கின்ற ஆதி சேஷாம்சமான இளையாழ்வார் போகச்சொன்னால் போவேனத்தனை' என்று சொல்லிற்று. அதுகேட்ட யாதவர் முகத்தில் தேசுகுன்றி இளையாழ்வாரை நோக்கி நீர்தாம் போகச்சொல்லும் என்றுகூற, அப்படியே ஸ்வாமி நியமிக்க, 'உமது திரு வடித் தாமரைகளை என் தலைமீது வைத்தாலொழியப் போவேனல்லேன்' என்று சொல்லி அப்படியே ஸ்வாமி திருவடிகளைச் சிரமேற்கொண்டு மகிழ்ச்சியெய்தி தெண்டனிட்டு இதோ போகிறேனென்று சொல்லிக்கொண்டே, போனமைக்கு ஓரடையாளங்காட்டிப் போயற்றது. யாதவரும் இளையாழ்வாரை மிகவும் புகழ்ந்து கொண்டாடிக்கொண்டே மடம் சென்று சேர்ந்தார்.

ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தாருடைய சிந்தனை

நம்பெருமாள் ஸந்நிதியில் ஆளவந்தார் திருவாய்மொழி காலக்ஷேபம் நிர்வஹித் தருளா நிற்கையில் * ஒன்றுந்தேவிலே * இலிங்கத்திட்ட புராணத்திருமென்கிற பாசுரம் நடவா நிற்க, 'நமக்குப் பின்பு இத்தர்சனம் நிர்வஹிப்பாரொருவரையும் காணப்பெற்றிலோமே!' என்கிற விசாரம் அப்போது அதிகமாகி இளையாழ்வாரிடத் திலே திருவுள்ளஞ்சென்று 'இவரை யாதவ ப்ரகாசனேடே உறவறுத்து நம்மோடே சேர்க்கும் உபாயமொன்றில்லையே!' என்று கோஷ்டியிலே நிர்வேதத்தோடே யருளிச்செய்து பின்னையும் பேரருளாளனைக் குறித்து திக்கு நோக்கி அஞ்ஜலிசெய்து 'எற்கெனவே அடியேன் பண்ணின ப்ரபத்தியை ஸபலமாக்கியருளவேணும்" என்று மிகவும் வேண்டினர்.

ராமாநுஜர் யாதவரை விட்டு விலகித் திருக்கச்சிநம்பிக்கு அணுக்கராயிருத்தல்

ஆளவந்தாருடைய அந்தரங்க ப்ரபத்தி விரைவில் பலிக்க வேண்டிய காலம் வந்து விட்டபடியால் ஒருநாள் யாதவப்ரகாசருக்கும் இளையாழ்வார்க்கும் உபநிஷ தர்த்த விசாரத்தில் போராட்டம் வலுத்தது. அன்று விசிஷ்டாத்வைத வித்தாந்தக் கோட்பாட்டை ஸ்வாமி வெகு அற்புதமாக எடுத்து உபன்யஸிக்க வாய்த்தது. அப் போது யாதவர் ப்ரத்யாக்ஷ்யான மொன்றும் பண்ணமுடியாத தன்மையினால் அளவிறந்த சீற்றங்கொண்டு 'இன்று தொடங்கி நீர் என்னிடம் வாசிக்கவேண்டா; உம்முடைய புத்திக்குத் தகுதியான விடத்தே சென்று வாசித்துக் கொள்ளும்' என்று மறுத்துவிடவே, இதையே சுப நிமித்தமாகத் திருவுள்ளம் பற்றி உவந்த வுள்ளத்தரான இளையாழ்வார் தமது திருத்தாயார் பக்கலிலே இச் செய்தியைத் தெரி விக்க, அவளும் மெஞ்சு கனிந்து 'பிள்ளாய்! இதுகாறும் வாசித்தது போதும்; திருக் கச்சி நம்பிகள் பேரருளாளப்பெருமாளுக்கு அணுக்கராயிரா நின்றார்; அவரை

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யநுவர்த்தித்துக்கொண்டு அவர் சொல் வழுவாது ஒழுகுவது பாங்கு' என்று நியமிக்க, ஸ்வாமியும் அப்படியே நம்பிகளை யடிபணிந்து அவருடைய நியமனத்தினால் பண்டு போல சாலக்கிணற்றில் நின்றும் நாடோறும் ஒரு குடம் திருமஞ்சனம் கொணர்ந்து தேவப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து வருபவராயிருந்தார்.

ராமாநுஜரை ஸ்ரீரங்கத்திற்கழைத்துச்செல்லப் பெரியநம்பி வருதல்.

கோயிலில் ஆளவந்தார் திருமேனி நோவு சாத்தி "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனியுனது வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே' என்ன வேண்டும்படியான நிலைமை யெய்தியிருந்தார். அப்போது ஸ்ரீகாஞ்சீபுரியில் நின்றும் பாத்திரை யடைவே அவ்விடத்திற்கு வந்த இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி இளையாழ்வாருடைய செய்தி என்னவென்று விசாரிக்க, ஸ்ரீராமாநுஜர் சிலநாளாக யாதவப்ரகாசரை வெறுத்து விட்டிட்டுத் திருக்கச்சி நம்பி பக்கலிலே ப்ரவணராய்த் தேவப்பெருமாளுடைய கைங்கர்யத்திலே ஊன்றி யிருக்கிறாரென்று அவர்கள் சொல்லக்கேட்டு ஆளவந்தார் மிகவும் திருவுள்ளமுகந்து தம்முடைய அந்தரங்கப்ரபத்தியைப் பேரருளாளன் விரைவிலேயே ஸபலமாக்கியருளின படிக்கு உவந்த தமது அந்தரங்க சிஷ்யரான பெரிய நம்பியையழைத்து இச்செய்தியைச் சொல்லி 'நீர் சடக்கெனத் தென்னத்தியூர் கழலிணைக் கீழே சென்று எப்படியாவது இளையாழ்வாரையிங்கே யழைத்து வரவேணும்' என்று நியமித்து, ஸ்தோத்ர ரத்நத்தின் அநுஸந்தானத்தைத் தூண்டுகொள்ளும்படிக்கும் ஸூசிப்பித்துப் பெருமாள் கோயிலுக்குப் போகவிட்டார். பெரிய நம்பியும் ஸ்வாசார்ய நியமனத்தை சிரஸாவஹித்து உடனே புறப்பட்டுக் காஞ்சீபுரி வந்து சேர்ந்தார்.

பெரியநம்பியும் ராமாநுஜரும்

தமக்கு ஸப்ரஹ்மசாரியான திருக்கச்சிநம்பி அவ்விடத்திலெழுந்தருளியிருக்கின்றமை யறிந்த பெரிய நம்பி அவரிடத்தே சென்று சேர்ந்து தாம் வந்த காரணத்தைத் தெரிவித்து அவரை முன்னிட்டுக்கொண்டு பேரருளாளன் ஸந்நிதிக்குச் சென்று மங்களாசாஸனம் செய்து, அப்போது இளையாழ்வார் சாலக்கிணற்றுக்குச் சென்றிருப்பதாகவும் தீர்த்த கும்பத்துடனே திரும்பி வருகிறஸமயமணிந்தென்றும் தெரிந்து கொண்டு அபிமுக்மாக வெழுந்தருளி அவர் வரும் வழியிலே ஓரிடத்திலிருந்துகொண்டு செவிக்கினிய கம்பீர மதுர ஸ்வரத்துடனே ஸ்தோத்ரரத்நத்தை அநுஸந்தித்துக் கொண்டிருக்கையில், இளையாழ்வாரும் திருமுடிமேல் திருநீர்க்குடத்துடன் வருபவராய் அப்போது பெரியநம்பியின் அநுஸந்தானத்திலிருந்த *ப்ரஹ்மா சிவச் சதமக: பரமஸ்வராடிதி ஏதேபி யஸ்ய மஹிமார்ணவ விப்ருஷஸ் தே* என்கிற ச்லோகத்தைத் திருச்செவிசாத்தி ' இது யாருடைய திவ்யஸூக்தி? ' என்று நம்பியை நோக்கிக் கேட்க, அவரும் 'இது ஆளவந்தாருடைய திவ்ய ஸூக்தி' யென்றுரைக்க, 'ஆகில் அவரை அடியேன் ஸேவிக்கவேணுமே' என்று இளையாழ்வார் கூற, 'ஆகலாம்; நம்மோடே வந்து ஸேவிக்கலாம், என்று பெரியநம்பி பணிக்க, இருவரும் தொல்லை நின்பத்திறுதி கண்டவர்களாய் வார்த்தை யாடிக்கொண்டே ஸன்னிதியிற் சென்று சேர்ந்தார்கள். இளையாழ்வார் திருமஞ்சனத்தைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துவிட்டு நியமனமும் பெற்றுக்கொண்டு திருக்கச்சிநம்பியின் அநுமதியையும் பெற்றுப் பெரிய நம்பியுடனே புறப்பட்டுத் திருவரங்கம் பெரிய கோயிலேறச் செல்லாகின்றார்.

ஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளுதல்.

பெரிய நம்பியைப் பெருமாள்கோயிலுக்குப் போகவிட்ட பிறகு சில நாளளவிலே ஆளவந்தார் திருமேனியிலே அநாரோக்ய மதிகரித்துத் திருநாட்டுக் கெழுந்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தருளும் ஸந்நிவேசமாயிற்று. மிக்க தளர்ச்சியோடே ஸன்னிதிக் கெழுந்தருளி அமலனதிபிரானனுஸந்தானத்துடனே பெரிய பெருமாளைத் திருவடிதொழுது வரிசைகளும் பெற்று நலமந்த மில்லதோர் காடுபுக நியமனமும் பெற்று மடமேற வெழுந்தருளி உபநிஷத்துக்களையும் அருளிச்செயல்களையும் முதலிகள் ஸேவிக்கத் திருச்செவி சாத்திக்கொண்டேயிருந்து * அந்தமில் பேரின்பத்தடியரோ டிருந்து களிக்கவேண்டி மணக்கால் நம்பிகளின் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே ப்ரஹ்ம ரந்த்ரத்தாலே திருநாட்டுக் கெழுந்தருளினார். திருவரங்கப் பெருமாளரையர் முதலான எல்லாரும் வேரற்ற மரம்போலே விழுந்து துடிக்க, அங்குள்ளார் இவர்களைத் தேற்றி ஆளவந்தார் குமாரராம பிள்ளைக்கரசுநம்பியை நோக்கி மேல் நடைபெறவேண்டிய கைங்கரியங்களுக்கு உத்யோகிப்பிக்க. ஆளவந்தார்படி யென்று இன்றைக்கும் வழங்கி வருகிற விலக்ஷண ப்ரக்ரியையிலே சடங்குகளை யெல்லாம் நடத்தி, திருக்கரம் பன் துறையிலே திருப்பள்ளி படுத்துவதாக திவ்ய மங்கள விக்ரஹத்தை ப்ரஹ்ம ரதத்திலே யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தாயிற்று. பெரியநம்பி இளையாழ் வாருடனே திருக்காவிரியின் ஸமீபமாக எழுந்தருளுகிற ஸமயம் அப்போது.

ராமாநுஜர் ஆளவந்தாருடைய சரமத் திருமேனியை ஸேவித்தல்.

பெரியநம்பி திருக்கரம்பன் துறையிலே பெரிய திரளைக் கண்டு எதிரே வருகிற வர்களை நோக்கி என்ன விசேஷமென்று கேட்க, அவர்களும் ஆளவந்தார் திருநாட் டுக் கெழுந்தருளினரென்ன, அதுகேட்ட இருவரும் மூர்ச்சித்து க்லேசித்து விமல சரம விக்ரஹத்தையாகிலும் ஸேவிக்கப் பெற்றோமேயென்று தேறியெழுந்து அருகே வந்து சேர்ந்து கண்பனி சோர நின்று ஸேவிக்கையில், இளையாழ்வார் அந்த சரமத் திருமேனியை ஆபாத சூடமாக ஸேவித்து வருபவர், திருக்கையில் மூன்று திருவிரல்கள் முடங்கியிருக்கக்கண்டு 'மூன்றும் இப்படியுண்டோ? இப்போதுதானோ?' என்று முதலிகளைக் கேட்க, அவர்களும் 'மூன்பில்லை: இப்போது கண்டதினை' என்ன; இளையாழ்வாரும் இவர் திருவுள்ளத்திலே ஏதேனும் குறைகளுண்டாயிருக்க வேணுமென்று கருதி. முதலிகளைப் பார்த்து முன் வியாக்யான ஸமயங்களிலே அபிமத ஸல்லாபங்களைக் கேட்டிருப்பீர்களே: திருவுள்ளத்திலோடியிருப்பன சில அறியப்பெற்றதுண்டோ?' என்று கேட்க: அவர்களும் மூன்று விஷயங்களைத் தெரி வித்தார்கள்—1. ப்ரஹ்மஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைதமதாநுஸாரியான பாஷ்யம் அவதரிக்கவேணுமென்கிற விருப்பமும். 2. நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக் கொரு வியாக்யான மவதரிக்க வேணுமென்கிற விருப்பமும். 3. வ்யாஸபராசரர்க ளிடத்திலே க்ருதஜ்ஞதாநுஸந்தானம் தெடுகச் செல்லும்படியான காரியமொன்று நடைபெற வேணுமென்கிற விருப்பமும் ஆக இம்மூன்று வாஞ்சைகளே திருவுள்ளத் தில் குடிகொண்டிருந்தனவாக அறிவோம்; வேறொன்றுமறியோம் என்றார்கள்.

ராமாநுஜர் காஞ்சீபுரம் சேர்ந்து வாழ்தல்.

ஸ்வாமி இதைக் கேட்டதும் தெண்டனிட்டுக் கைகூப்பி நின்று 'இவ்வுடல் நிடமாய் ஆசார்யக்ருபையும் அடியேனிடத்தில் பரிபூரணமாயிருந்து ஸர்வேச்வரன் அடியேன் நினைத்தபடி கூட்டுவானாகில் இம் மூன்றையும் நிறைவேற்றக்கடவேன் என்ன: மூடங்கியிருந்த மூன்று திருவிரல்களும் உடனே நிமிர. இதனை அனைவரும் கண்டு ஆச்சரிப்பட்டு "இளையாழ்வீர்! இவ்வாசார்ய க்ருபையும் உம்மிடத்திலே கூடும்; நீரே இந்த தர்சனத்திற்கு நிர்வாஹகராவீர்" என்று மங்களாசாஸனம் செய்து கூறி னார்கள். ஸ்வாமியும் அந்த திவ்ய மங்கள விக்ரஹத்தைக் கண்ணிலும் நெஞ்சிலும் தேக்கிக்கொண்டு திருவடிகளை ஸேவிக்கப் பெற்றமையாலே ஸகலார்த்தங்களும் தமக்குச் சேமநிதியாக லபித்தனவாகக் கொண்டு ஆகிலும் இரண்டொரு நாளாவது

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கூடியிருந்து திவ்ய ஸூக்திகளைச் செவியாரப் பருகப் பெற்றிலோமேயென்கிற க்லேசம் மேலிட்டு "பணவாளரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள் மணவாளர் நம்மைவைத்த பரிசிது காண்மின்" என்று கூறிக்கொண்டே அவப்ருதஸ்நாநம் செய்தருளிப் பெரிய நம்பியிடம் விடைபெற்றுக்கொண்டு பெருமாளையும் திருவடி தொழாதே அவரை வெறுத்து மீண்டும் பெருமாள்கோயிலேற வெழுந்தருளினர். 'ஆளவந்தாரோடே நான் கூடியிருந்து குளிரப்பெற்றிருப்பேனகில் பரமபதத்திற்குப் படி கட்டியிருப்பேனே' என்று அப்போது பலகாலும் இளையாழ்வார் பணித்தபடி.

பிறகு ஆளவந்தாருடைய சரம கைங்கரியங்கள் குறையற நடந்தேறின. இளையாழ்வாரும் பெருமாள்கோயில் சேர்ந்து திருக்கச்சி நம்பிக்குச் செய்தியறிவிக்க, அவரும் க்லேசித்து ஸ்ரீ சூர்ண பரிபாலநாதிகள் நடத்தினர். ஸ்வாமி முன்பு போலவே பேரருளாளனுடைய திருமஞ்சன கைங்கரியத்தில் நிரதராயிராகின்றார்.

திருக்கச்சிநம்பியிடம் ராமாநுஜருடைய ப்ரதிபத்திவிசேஷம்.

திருக்கச்சி நம்பிகளிடத்திலே மிகவும் பக்திகொண்டு அவர் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேணுமென்று கருதி அக்கருத்தை அவரிடத்தே விஜ்ஞாபிக்க, இது வர்ணச்ரமத்துக்கடுத்த வைதிக மர்யாதைக்குப் போந்திராது' என்று அவர் மறுத்திட்டார். ஆச்ரயிக்கும் பாக்கியந்தான் இல்லையாகிலும் *போனகஞ்செய்த சேடமாவது பெற்றுப் புனிதராவோமென்றெண்ணி ஒருநாள் நம்பியிடம் சென்று, இன்று அடியேனது குடிசையிலே அமுதுசெய்ய எழுந்தருளவேணும்' என்று வேண்ட அவரும் இசைந்தருள, ஸ்வாமி மிக்க மகிழ்ச்சிகொண்டு தம் திருமாளிகைக் கெழுந்தருளி இச் செய்தியைத் தேவியாரிடம் தெரிவித்து அறுசுவையடிசிலும் அநுரூபமான பக்ஷ்யவர்க்கங்களும் செய்யும்படி நியமித்து, தமது நித்யகைங்கர்யமான திருமஞ்சனத் திருப்பணியையும் விரைவாகத் தலைக்கட்டித் திருமாளிகையிற் போந்து திருவாராதனமும் கண்டருளப்பண்ணி, அவ்வளவிலும் திருக்கச்சிநம்பி யெழுந்தருளக் காணுமையாலே அவரை யழைத்து வருவதற்குத் தெற்குத் திருவீதியாலே மேற்கே யெழுந்தருளினர். அத்தருணத்திலேயே நம்பிகள் வடக்குத் திருவீதியாலே ஸ்வாமி திருமாளிகைக்கெழுந்தருளி, திருவாலவட்டத்திருப்பணிக்காக விரைந்து செல்லவேண்டியிருப்பதை யறிவித்து நின்றவளவிலே ஸ்வாமி தேவிகள் இவரை ஒரு மூலையிலே உட்கார வைத்து அமுதுசெய்யப் பண்ணுவித்து அனுப்பிவிட்டு அமுதுசெய்த விடத்தைக் கோமயத்தாலே சுத்திபண்ணித் தெளித்துத் தாமும் தீர்த்தமாடி நிற்கிறவளவிலே நம்பியை யழைத்துவரச் சென்றிருந்த இளையாழ்வார் அவர் இங்கே போந்தமையறிந்து மீண்டுவந்து நம்பியைக் காணுமல், மனைவி தீராடியிருந்தபடியைக்கண்டு இதுவென்? என்று கேட்க; 'அந்த ஸ்ரீ வைஷ்ணவர் வந்து கைங்கர்யத்திற்கு விரைந்து செல்லவேண்டியிருப்பதைத் தெரிவித்தார்; உடனே அவரை அமுதுசெய்யப் பண்ணுவித்தனுப்பினேன்; அவர் நிஷீதவர்ணஸ்தராகையாலே இலையைக் கோலாலே தள்ளிக் கோமயத்தாலே மெழுகினேன். அதனால் சரீரம் அலம்பவேண்டிற்று' என்றாள். அதுகேட்டு ஸ்வாமி மிகவும் வெறுத்து வருந்தி எம்பெருமான் திருவுள்ளமிருந்தபடிக்கு நாமென் செய்வதென்று மனம் தளர்ந்திருந்தார்.

திருக்கச்சிநம்பி யாறுவார்த்தை.

மறுநாள் திருக்கச்சிநம்பி பக்கலிற் சென்று 'அடியேன் சில நினைவுகள் நினைத்திருந்தேன்; அவை விஷயமான நிர்ணயத்தை தேவரீர் பேரருளாளன்பாடே தெரிந்தகொண்டு அடியேனுக்கு நியமித்தருளவேணும்' என்று ஸ்வாமி ப்ரார்த்திக்க, நம்பியும் அப்படியேயாகுக வென்றிசைந்து அன்றிரவு பெருமாளிடத்திலே விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் பெற்று மறுநாள் இளையாழ்வார்க்கு அறிவித்த ஆறு

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வார்த்தைகள்:—1. பரதத்வம் நாமே. 2. சித்சிதீச்வரபேதமே தர்சனம். 3. ப்ரபத்தியே தஞ்சம். 4. அந்திம ஸ்ம்ருதி வேண்டா. 5. சரீராவஸானத்திலே மோக்ஷம். 6. பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது—என்பன. இங்ஙனே ஆறு வார்த்தைகளை அருளிச்செய்யக்கேட்ட இளையாழ்வார் இவ்விஷயமான நிர்ணயமே தாம் அறிய விரும்பியிருந்தமையால் இவற்றைத் தெளியவறியப்பெற்றதற்கு உவந்து பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயித்து உஜ்ஜீவிப்பதாக அறுதியிட்டுத் திருவரங்கம் பெரிய கோயிலுக்குப் புறப்பட்டருளினர். ஆறுவார்த்தைகளின் விவரணம் அடியேனுடைய வேறு சில நூல்களில் காண்க.]

ராமாநுஜர் மதுராந்தகத்தில் பெரியநம்பிகளை யாச்ரயித்தல்.

அக்காலத்தில் கோயிலில் தர்சந நிர்வாஹத்திற்காக இளையாழ்வாரை அங்கே வரவழைத்து நிலைநிறுத்த வேணுமென்று ஆவல்கொண்ட முதலிகள் பெரியநம்பியை நோக்கி இது உம்மாலாகக்கூடிய காரியமாதலால் நீரே காஞ்சீபுரிக்குச் சென்று காரியம் பார்க்கக்கடவீரென்று நியமிக்க, அவரும் அப்போதே ஸகுடும்பமாகப் புறப்பட்டு நம் பெருமாளிடம் விடை பெற்றுக்கொண்டு தேவப்பெருமாள் ஸன்னிதியை நோக்கி எழுந்தருளா நிற்கையில் இடையில் மதுராந்தக க்ஷேத்ரத்திலே ஏரிகாத்த ராமன் ஸன்னிதியிற் சேர்ந்து நின்றார். இளையாழ்வாரும் (திருக்கச்சிநம்பிகளின் திருவாக்குப்படியே பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பதாகப் புறப்பட்டுத்) திருவரங்கம் பெரிய கோயிலை நோக்கிச் செல்லாகின்று மதுராந்தகத்திலே சேர்ந்த வாறே அங்குப் பெரியநம்பிளைய யாத்ருச்சிகமாக ஸேவிக்க நேர்ந்து ஆச்சரியப்பட்டு 'எண்ணின பலன் எதிரே வந்து வாய்த்ததுபோல இப்படி நமது பாக்கியம் பரிபக்குவமாவதே' என்று உகந்து இனி காலவிளம்பம் பொறுக்கலாகாதென்று அப்போதே திருவிலச்சினை ஸாதித்துத் தம்மை உய்விக்குமாறு வேண்ட, அவரும் இவருடைய ஆர்த்தியின் கனத்தைக்கண்டு அப்போதே அவ்விடத்திலேயே பஞ்சஸம்ஸ்காரங்களை ப்ரஸாதித்தருளி ஆளவந்தார் திருவடிகளே தஞ்சமென்று கொண்டிருக்கும்படி நியமித்தருளினர். பிறகு ஆங்கு நின்றும் புறப்பட்டுப் பெருமாள் கோயிலிலே வந்து சேர்ந்தார்கள். இளையாழ்வார் தம்மூடைய திருமாளிகையிலேயே மேல்பாதியிலே பெரியநம்பி ஸகுடும்பமாக வஸிக்க இடமளித்துத் தளிகைக்கு வேண்டும் பதார்த்தங்களும் ஸமர்ப்பித்து ஆராதித்துக் கொண்டு அவர் ஸந்நிதியிலே அருளிச்செயல்களைக் கற்பதும் தர்சந ரஹஸ்யார்த்த விசேஷங்களைக் கேட்பதுமாயிருந்து வந்தார்.

பெரியநம்பி கோயிலுக்கெழுந்தருளல்.

இங்ஙனேயிருந்து வருகையில் பெரியநம்பி தேவிகளுக்கும் இளையாழ்வாருடைய தேவிகளுக்கும் மனப்பொருத்தமின்றிக்கே வைரஸ்யமுண்டாகத் தொடங்கிற்று. இருவர்க்கும் இணற்றின் கரையிலே தாம்பு விஷயமான விவாதமுண்டாகி வார்த்தைகளும் விஞ்சின; இதைப் பெரியநம்பி யுணர்ந்து தமது தேவிகளைக் கோபித்து, இனி நாம் இங்கு வாழ்வது தகுதியற்றதென்றெண்ணி உடனே கோயிலுக்குப் புறப்படத் திருவுள்ளமாய் இளையாழ்வார் பக்கலிலும் அறிவியாமல் அவர் அனுஷ்டானத்திற்குச் சென்றிருந்த ஸமயம்பார்த்து ஸகுடும்பமாக மீண்டு கோயிலுக்கெழுந்தருளினர்; ஸ்வாமி அனுஷ்டானம் பண்ணி யெழுந்தருளிப் பெரியநம்பியை ஸேவிக்கப்பெறாமல் செய்தியறிந்து திருவுள்ளம் மிகவும் உடைகுலைப்பட்டார்.

ஸ்வாமி ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளுதல்

நம்மாழ்வார் ஒரு திருவாய்மொழிக்குப் பலச்ருதியருளிச் செய்யாநின்றவர் *நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே* என்று க்ருஹஸ்தாச்ரம

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வாழ்ச்சியையும் பலனாக அருளிச்செய்தார். ஸர்வோபகாரக்ஷமமான இந்த ஆச்ரம வாழ்க்கை நன்றேயாயினும் * நல்ல பதத்தால் மனைவாழ்வர் * என்றபடிக்குப் பாங்காக இராவிடில் பரித்யாஜ்யமேயாதலால் ஸஹதர்மசாரிணியான தேவியாருடைய மனம் அநுகூலமாயிராதபோது இவ்வாச்ரம வாழ்க்கையில் ஜிஹாஸையுண்டாகப்ராப்தம். ஸ்வாமி தமது தேவியாரிடத்தில் மூன்று அபசாரங்கள் கண்டார். 1. திருக்கச்சிநம்பி பக்கலிலே தமது திருவுள்ளத்திற்கு மாறாக நடந்து கொண்டது. 2. ஒருநாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவருக்கு ப்ரஸாதமிடும்படி நியமிக்க உள்ளே ப்ரஸாதமிருந்தும் இல்லையென்று சொல்லி மறுத்தொழித்தது. 3. ஆசார்ய தேவிகளோடே ஸ்பர்த்தித்து அபசாரப்பட்டது. ஆக இம்மூன்று செய்கைகளும் அஸஹ்யாபசாரமாக ஸ்வாமிக்குத் தோன்றினபடியால் உடனே ஸம்ந்யாஸாச்ரமம் ஸ்வீகரிக்கத் திருவுள்ளமாய் அன்றே தேவிகளைப் பிறந்தகத்துக்குப் போக விட்டுப் பேரருளாளன் திருமுன்பே திருவனந்தஸரஸ்தீரத்தில் தண்ட காஷாயங்களைப் பரிக்ரஹித்து ராமானுஜமுனியென்றும் யதிராஜரென்றும் உலகமெல்லாம்போற்றநின்றுலகேத்துமாழியானத்திபூராணுடைய அந்தரங்க வுகப்புக்குக் கொள்கலமாய் மடத்தே வாழ்ந்து கொண்டு அத்தாணிச் சேவகம் புரிந்து வந்தார்.

ஆழ்வானும் ஆண்டானும் வந்து பணிதல்

ஸ்வாமி இங்ஙனே ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளி நின்றபடியை முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் கேள்விப்பட்டு ஸ்வாமி திருவடிகளிலே வந்து ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரங்களும் பெற்று மீமாம்ஸா சாஸ்த்ரயுக்மச்ரமஞ் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார்கள். இந்த கோஷ்டியிலே அன்வயித்து வாழவேண்டிய கோவிந்தபட்டர் காளஹஸ்தியிலே விபரீத வ்ருத்தராயிரா நின்றாரே யென்று திருவுள்ளம் கொந்து இக்குறையைத் திருமலை நம்பி பக்கலிலே தெரிவித்து அவனைத் திருத்திப் பணிகொள்ளவேண்டியது உம்முடைய பாரமென்று விஜ்ஞாபித்திருந்தார் ஸ்வாமி.

யாதவப்ரகாசன் ஸ்வாமியை யாச்ரயித்து வாழ்தல்

ஸ்வாமியினுடைய ப்ரபாவம் நாள்தோறும் வளர்ந்து செல்லாநின்றது. அதனைக் கண்டு யாதவப்ரகாசனது தாயார் 'நம்முடைய குமாரனும் இவரை யடி பணிந்து வாழலாமே' என்று நினைத்து இந்த மநோரதத்தை மகனிடம் பலகாலும் தெரிவித்துவந்தாள். அவன் ஏற்கெனவே ஸ்வாமியின் விலக்ஷண மேதாப்ரதிபாவிலாஸங்களைக் கண்டவனுதலாலும் ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் மூலமாக வைபவத்தை விசேஷித்து அறிந்தவனுதலாலும் தான் நிர்வஹித்துப்போருகிற தர்சனத்திலே மிகவும் அருசி தோன்ற நின்றதனாலும் பகவத்கடாக்ஷம் பலிக்க ப்ராப்தகாலமானதனாலும் தாயாருடைய நல்வார்த்தையில் அன்பு தோன்றி அப்படியே யென்றிசைந்து, இதுவரையில் சிகாயஜ்ஞோபவீத த்யாகம் பண்ணியிருந்த பாபத்திற்கு ப்ராய்ச்சித்தமாக பூர்ணதக்ஷிணம் பண்ணவேண்டியிருந்ததனால் வயது முதிர்ச்சி காரணமாக அது செய்ய மூடியாமைக்கு வருந்தியிருக்கையிலே தேவப்பெருமாள் கனவிலே காட்சி தந்து 'நம்மிராமானுசனை ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணுவது பூர்ணதக்ஷிணத்திலும் மேம்பட்டது. ஆகவே அது செய்து உள்ளம் தேறுவாயாக' என்று நியமிக்க, திருக்கச்சிநம்பி மூலமாகவும் இந்த நியமனத்தைத் திடமாக விச்வஸித்து ஸ்வாமி திருவடிகளிலே வந்து வேரற்றமரம் போலே விழுந்து கண்ணுங் கண்ணீருமாய் நின்று * பழுதே பல பகலும் போனமைக்கு அநுதபித்துப்பேசி இனியாகிலும் இவ்வாத்மா உஜ்ஜீவிக்கும் நல்விரகு பார்த்தருள வேணுமென்று கனக்க ப்ரார்த்தித்து ஸ்வாமியின் திருவருளுக்கிலக்காகி ஸ்ரீ வைஷ்ணவ யதிவேஷம் பூண்டு விளங்கி வாழ்ந்துபோனான். இவ்விஷயத்தை வேதாந்த தேசிகனும் யதிராஜ ஸப்ததியில் * ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாசः * என்றருளினார்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருவரங்கப்பெருமாளரையரும் தேவப்பெருமாளும்

ஸ்வாமி காஞ்சீபுரியிலே ஆழ்வான் ஆண்டான் முதலான சிஷ்யவர்க்கங்களுக்கு உபய வேதாந்த க்ரந்த ப்ரவசனம் செய்து போரா நிற்கையில், நம்பெருமாள் ஸன்னிதியில் தர்சந நிர்வாஹகர் ஒருவருமில்லாத குறைதீர இவரை அவ்விடத்திற் கெழுந்தருளச் செய்யவேணு மென்று பாரிப்புக்கொண்ட கோயில்முதலிகள் ஓர் ஸதுபாயம் கண்டனர்; பேரருளாளப் பெருமாள் ஆழ்வாரருளிச் செயல்களிலே போரவும் பித்தராயிருப்பராகையாலே நம் அரையரைக் கொண்டு பாட்டுக் கேட்பித்து உகப்பித்து வரப்ரஸாதமாக ஸ்ரீராமானுஜரைப் பெற்று இங்கே யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரலாமென்று.

அக்காலத்து, இசைபாடி விண்ணப்பஞ் செய்வதில் மிகவல்லவராயிருந்த ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரைப் பேரருளாளப் பெருமாள் ஸன்னிதிக்கு விடை கொண்டு இக்காரியத்தைச் செவ்வனே தலைக்கட்டிக் கொண்டு வரும்படி பெரிய பெருமாள் நியமித்தருள, அந்த நியமனத்தை சிரஸாவஹித்த அரையர் பேரருளாளன் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்து அங்குள்ள வரந்தரும் பெருமாளரையரையும் திருக்கச்சி நம்பியையும் முன்னிட்டுக் கொண்டு தேவப்பெருமாளைத் திருவடி தொழுது *அத்திபூரான் புள்ளூர்வான்* என்னெஞ்சமேயான்* *துணிவினியுனக்குச் சொல்லுவன்* உரந்தருமெல்லோப் பள்ளிகொண்டான் முதலான பாசுரங்களைத் தேவ கானத்திலேயிட்டுத் தேவப்பெருமாள் திருவுள்ளம் நீர்ப்பண்டமாயுருகும்படி செவிக்கினிதாகப் பாடிக்கொண்டிருக்கையில் தேவபிரானும் திருவுள்ளம் பூரித்து, வாரீர் அரையரே! உம்முடைய பாட்டுக்குப் போரவுகந்தோம்; நீர் எது கேட்டாலும் தரக்கடவோம்' என்று ஒருகாலுக்கிருகால் உறுத்தியருளிச் செய்ய, அரையரும் அருகேயிருந்த இளையாழ்வாரைக் காட்டி 'நம் இராமானுசனை நம்பெருமாளுக்குத் தந்தருளவேணும்' என்று பிரார்த்திக்க, அதுகேட்டுத் தேவப்பெருமாள், திடுக்கிட்டு ஒன்றுந் தோன்றுமே நிற்க, சொன்னசொல் தவறுதே தந்தருளவேணுமென்று அரையர் வேண்ட, "நம்மிராமானுசனைத் தவிர மற்றதைக் கேளுமென்று நாம் முதலிலேயே சொல்லத் தவறினேம்: சொற்படியே இராமானுசனைப் போகவிட வேண்டியதே" என்று தணிந்து, "அரையரே! நம்மை இவனே வஞ்சித்து ஸர்வஸ்வமும் கொள்ளைகொள்ள வந்தீர் போலும்; நாமும் உமது வஞ்சனையிலே அகப்பட்டோம்; இனி என் செய்வது? விரும்பினபடியே கொண்டுபோகக் கடவீர்" என்று தேவப்பெருமாள் விடை கொடுத்தருள அன்றே அப்போதே ஸ்வாமி ஆழ்வானண்டான் முதலான சிஷ்ய வர்க்கங்களுடனே புறப்பட்டு அரையரை முன்னிட்டுக் கொண்டு நம்பெருமாள் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்து *தெண்ணீர்ப் பொன்னியிலே தீர்த்தமாடி ஆஹ்னிகங்களை முடித்துக்கொண்டு அரவணை மேல் பள்ளிகொண்ட முகில்வண்ணனைக் கண்ணாரக்கண்டு 'அடியேன்மீது இப்படியும் அருள்வெள்ளம் பெருகுவதே!' என்று ஈடுபட்டு நிற்கையில், பெரியபெருமாள் தமது திருப்பொலிந்த சேவடியை இவரது சென்னிமேல் பொறித்து "இளையாழ்வீர்! *பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மென்கிற உபயவிபூதிச் செல்வத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம், இனி நம்முடைய கோயிலைத் திருத்திப் பணிகொள்ளக் கடவீர்" என்று நியமித்தருளியாயிற்று. அன்று முதலாக ஸ்வாமிக்கு உடையவர் என்கிற திருநாமம் வழங்கி வந்தது. [உடையவர்—உபய விபூதியையும் தம் கையிலேயுடையவர் என்றபடி.] இங்ஙனே பெரியபெருமாளுடைய பேரருளைப் பெற்றதும் அருகேயிருந்த பெரிய நம்பியை நோக்கி *பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறுத பயன்பெறுமாறு வரிவாள் வாயர வணைமேல் நம்பெருமாள் காட்டினரேயென்று பாசுரஞ் சொல்லி, தேவரீருடைய திருவடி ஸம்பந்தம் பெற்ற கோயின்மையாலே பெரியபெருமாள் அடியேனை யிப்படி விஷயீகரித் தருளினர்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

என்று ஆனந்தக்கண்ணீர் பெருகின்று விண்ணப்பஞ் செய்ய, பெரிய நம்பியும் "கலியுங் கெடுங் கண்டு கொண்மினென்று அன்று ஆழ்வாரருளிச் செய்த எதிர் காலச் செய்தி இன்று பலிக்கக் கண்டோம்; நல்லது; இனி பெருமாள் நியமனப் படியே இவ்விடத்துப் பணிகளெல்லாம் பாங்காகப் பார்த்தருளீர்" என்றருளிச் செய்ய, அன்று முதலாகவே "தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே" என்கிற வாழ்த்து அன்வர்த்தமாம்படி அனேகத்தும் ஆராய்ந்தருளி நித்யோத்ஸவ பரிஹாரோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்களெல்லாம் குறையற நடைபெறுமாறு சேமஞ்செய்தருளிவந்தார். அப்போது அகளங்க நாட்டாழ்வானும் ஸ்வாமிக்கு அணுக்கனான அடியவனுமிக் கைங்கரியங்களுக்குத் துணைபுரிந்துவந்தான்.

திருவரங்கமுதனாரைத் திருத்திப் பணிகொள்ளுதல்

திருவரங்கத் தமுதனாரென்பவர் கோயில் கொத்தியுள்ளவர்கட்குத் தலைவராயிருந்தவர். அவர் ஒரு நாள் உடையவரை வந்து பணிந்து 'பாவங்கள் கூடுபூரித்துக் கிடக்கிற அடியேனைத் திருத்தி ஸ்வாமிக்கு சேஷமாக்கும்படி தேவரீர் திருவடி வாரத்தியுள்ளாரில் ஒருவர்க்கு நியமித்தருளவேணும்' என்று விண்ணப்பம் செய்ய, உடனே ஸ்வாமி ஆழ்வானை யழைத்து அமுதனாரைக் காட்டி 'இவர் நம்முடைய வாழ்முதலான நம்பெருமாளுடைய ஸ்ரீ கார்யத்துக்குப் பரிவராயிருப்பவர்; இவரது தாழ்வுகளைப் பாராமல் இவரை அநுவர்த்தித்து அநுகூலராக்கி நம்பக்கலிலே கொண்டுவந்து சேரும்' என்று நியமித்தருள, ஆழ்வானும் ஆறுமாதம் அவரை அநுவர்த்தித்துப் பரிபக்குவராக்கி உடையவர் திருவடிகளிலே கொண்டுவந்து காட்டிக் கொடுக்க உடையவரும் அவ்வமுதனாரை ஆழ்வான் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தார்.

அமுதனார் க்ருஹத்திலே எகாஹமமுதுசெய்ய ஆழ்வானைப் போகவிடுதல்

இப்படி அமுதனார் ஆழ்வான் திருவடிகளில் அந்தரங்கராய்க் காலக்ஷேபஞ் செய்து வருகிற நாளிலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடி யடைந்தாள். தசாஹம் கடந்த பின்பு 'ஏகாஹத்துக்கு நிமந்த்ரண ஸ்வாமியாக ஒருவரை நியமித்தருளவேணும்' என்று உடையவர் பக்கலிலேவந்து விண்ணப்பஞ் செய்தாரமுதனார். அப்போது உடையவர் ஆழ்வானை நோக்கி 'நீர் போய்வாரும்' என்ன, ஆழ்வானும் சிறிதும் முகம் கன்றாமல் ஸ்வாமியின் அந்தரங்கக் கருத்தை க்ரஹித்துக்கொண்டு எழுந்தருளி ஏகாஹத்திலே ஸ்தானம் வஹித்து அமுது செய்தருளினார். முடிவில் 'ஸகலம் ஸம்பூர்ணம்' என்று சொல்லவேண்டிய தருணத்தில் அமுதனருடைய ஆதினத்திலிருந்த நம்பெருமாள் ஸன்னிதிக் திறவுகோலைப் பெற்றுக்கொண்டு பிறகு புக்தித்ருப்தி சொல்லி ச்ராத்த பூர்த்திசெய்து, அந்தத் திறவுகோலை ஸ்வாமி திருவடிகளிலே கொணர்ந்து ஸமர்ப்பித்தார். அன்றுமுதல் *ராமானுஜார்ய திவ்யாஜ்ஞாவர்த்ததாம் அபிவர்த்ததாம்* என்று கடல் சூழ்ந்த மண்ணுலக முற்றும் போற்றும்படி எம்பெருமானார் நம்பெருமாள் ஸன்னிதியின் கைங்கரியங்களைப் பரிஷ்கரித்தருளினார்.

எம்பார் திருந்தின செய்தி கேட்டு மகிழ்தல்

பண்டு யாதவப்ரகாசருடைய கங்கா யாத்ரையிலே கோவிந்தபட்டர் [எம்பார்] லிங்கங் கொணர்ந்து சிவபக்தராகி ஸ்ரீ வைஷ்ணவ ஸஹவாஸத்தை மிழந்து காள ஹஸ்திமலையிலே சிவபூஜாநிரதராயிருந்தாரென்று சொன்னோம். அவரைத் திருத்திப் பணிகொள்ளும்படி ஸ்வாமி தம் மாதுலரான திருமலை நம்பியை வேண்டிக் கொண்டிருந்தார் முன்னமே. அவரும் திருமலையில் நின்றும் காளஹஸ்திக் கெழுந்தருளி கோவிந்தரைத் திருத்தப் பார்த்தவளவிலே இரண்டு பர்யாயங்களில் ஸமீஹித ஸித்தியாகாமல் மூன்றாவது பர்யாயத்தில் மனோரதம் நிறைவேறி மகிழப் பெற்றபடியை

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் வந்து ஸ்வாமி திருவடிகளிலே விண்ணப்பம் செய்ய, அது கேட்டு ஸ்வாமி மிகவுகந்தருளினர். அந்தச் செய்தி வருமாறு :—

திருமலைநம்பி சில சிஷ்யர்களுடனே காளஹஸ்திக் கெழுந்தருளி, காடோறும் கோவிந்தபட்டர் சிவபிரானுக்குப் பூப்பறிக்க வருமிடத்திற்கு அருகேயிருந்து, திருவாய்மொழியிலே * திருமால் பரத்துவத்தை நன்குரைத்த * நிண்ணன்வீடு பரிகத்தைத் தொடங்கி வியாக்கியானித்தருளா நின்றார்; கோவிந்தர் அங்கு ஒரு பாதிரி மரத்தின் மீதேறிப் பூப்பறியா நின்றவர், மூன்று பாட்டளவும் பூப்பறிக்கை தவிர்த்து கேட்டுக்கொண்டிருந்து காலம் பாட்டிலே * தேவனெம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே * என்ற விடத்திற்கு கங்கா ப்ரவாஹ நிர்விசேஷமாகவருளிச் செய்த வியாக்கியானம் செவியிற் புகுந்தவாறே கோவிந்தர் அந்த மரத்தினின்றும் திடுக்கெனக் குதித்துக் கையிலிருந்த பூக்குடலையைச் சுழற்றி யெறிந்து, தரித்திருந்த ருத்ராக்ஷத்தையும் கழற்றியெறிந்து, * பூவும் பூசனையும் தகுமே * என்ற சந்தைக்குச் சேர 'தகாது தகாது தகாது' என்று சொல்லிக்கொண்டே வந்து நம்பி திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து,

'உபயவிபூதிநாதனிருக்க விரிதலையானை விரும்பிநின்றேனே!
புதுக்கணிப்புடைய புண்டரீகாக்ஷனிருக்கப் பொறிபறக்குங்கண்ணனைப் பூசித்தேனே!
கடல்மண்ணுண்ட கண்டனிருக்கக் கறைகொண்ட கண்டனைக் காமித்தேனே!
கல்லெடுத்துக் கன்மாரிகாத்த கற்பகமிருக்கக் கையார்கபாலியைக் காதலித்தேனே!
திருவிருந்த மார்பன் சிரீதரனிருக்கத் திருவில்லாத்தேவனைத் தொழுதுநின்றேனே!
பீதகவாடைப் பிரானிருக்கப் புலியுரியானைப் பின் தொடர்ந்தேனே!
சதிரானகங்கையடியா னிருக்கச் சுடுகாடுகாவலனைச் சுற்றி வலம் வந்தேனே!
பெருந்துழாய் வனமிருக்கப் பெருங்கையாற் பேய்ச் சுரைக்கு நீர் வார்த்தேனே!

என்றினைய பலவும் சொல்லிப் புலம்பி 'இனியாகிலும் இவ்வாத்மாவை உய்விக்க வேணும்; என்று தெண்டனிட்டு எழுந்திராமலிருக்க, நம்பியும் மூடிபிடித் தெடுத்து உடம்பைத் தடவிக் கொடுத்துக் குளிரப்பேசி யருளாநிற்கையில் இச்செய்தியை அங்குள்ள சிவபக்தர்கள் கேள்விப்பட்டு வந்து இப்படி நீர் செய்யத் தகுமாவென்று நம்பியோடே போராடிப் பிறகு ஸமாதானமடைந்து திரும்பிப்போக, கோவிந்த பட்டரும் தம் வசத்திலிருந்த கருவூலத் திறவுகோல் இலச்சினை மோதிரம் முதலானவற்றைப் பொகட்டு 'இனி உங்களுக்கும் நமக்கும் பணியில்லை' என்று ஒட்டறுத்துக் கொண்டு நம்பியோடே திருப்பதிக்கு வந்து சேர்ந்து ப்ராயச்சித்த புரஸ்ஸரமாக ஸம்ஸ்காரங்களைப் பெற்று திவ்யப்ரபந்தங்களையோதி அர்த்த பஞ்சக ஜ்ஞானத்தையும் பெற்றுத் தேவுமற்றறியாதே அவர் திருவடிகளே தஞ்சமென்றிருந்து போருகின்றார்—என்னுமிச் செய்தியை அந்த ஸ்ரீ வைஷ்ணவர் விண்ணப்பஞ் செய்யக் கேட்டுப் பேரின்ப வெள்ளத்தே மூழ்கி நின்றனருடையவர்.

உடையவருடைய பஞ்சாசார்ய பதாச்ரித்வம்

ஸ்வாமி, ஐந்து ஆசாரியர்களை யடிபணிந்து அர்த்த விசேஷங்களைக் கேட்டவராதலால் பஞ்சாசார்ய பதாச்ரித ரென்று ப்ரஸித்தராயிருப்பர். பெரியநம்பி திருக்கோட்டியூர்நம்பி திருமாலையாண்டான் திருமலைநம்பி ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர் ஆக இவ்வைவர் அவ்வாசிரியர்களாவர். பெரிய நம்பி பஞ்சஸம்ஸ்காரமிட்டருளினவராதலால் தலைமையாசிரியர். திருக்கோட்டியூர்நம்பி ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்துக் கொடுத்தவர். திருமாலையாண்டான் திருவாய்மொழிப் பொருள் உபதேசித்தவர். திருமலை நம்பி ஸ்ரீ ராமாயணார்த்தங்கள் ஸாதித்தவர். ஆழ்வார்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருவரங்கப் பெருமாளரையர் திவ்யப்ரபந்தங்கள் ஸ்தோத்ரங்கள் நல்வார்த்தைகள் அளித்தவர். தேசிகர் பணித்த குருபரம்பரா ஸாரத்தில்,

"எம்பெருமானுர் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீ பாதத்திலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தார்; திருமாலையாண்டான் ஸ்ரீ பாதத்திலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டருளினர். ஆளவந்தாராழ்வார் ஸ்ரீ பாதத்திலே திருவாய் மொழியுமோதி ஸ்தோத்ராதிகள் அருளிச்செய்யும் நல்வார்த்தைகளும் கேட்டருளினர். திருமலை நம்பி ஸ்ரீ பாதத்திலே ஸ்ரீமத்ராமாயணம் கேட்டருளினர்."

என்றுள்ளது இங்கே அறியத்தக்கது. ஆளவந்தாராழ்வார் என்பவரே ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர்.

ஸ்வாமியும் திருக்கோட்டியூர் நம்பியும்

பெரியநம்பி பரமப்ரீதியோடே உடையவர்க்கு ரஹஸ்யார்த்தங்களை யருளிச் செய்த போருகையில், "திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே சில அர்த்த விசேஷங்க ளுண்டு; ஆளவந்தாருடைய விசேஷாபிமானத்திற்கு அவர் இலக்காயிருந்தபடியாலே அவரிடத்திலே நிதிபோல நின்றிருக்குமர்த்த விசேஷங்களையும்கேட்டு உய்யக்கடவீர்" என்று அருளிச் செய்ய, ஸ்வாமி அதுகேட்க ஊற்றமுடையராய்த் திருக்கோட்டியூர்க் கெழுந்தருளி அங்குள்ளாரை நோக்கி 'நம்பி திருமாளிகை எங்கே?' என்ன; அவர் களும் 'அதோ காண்கிற கூரை' என்று காட்ட அவ்விடம் தொடங்கி நம்பி திரு மாளிகையளவும் தண்டன் ஸமர்ப்பித்துக் கொண்டே யெழுந்தருளி நம்பி திருமாளிகை சேர்ந்தார்; அவ்வூரி லுள்ளார்க்கு அப்போதுதான் நம்பியின் ப்ரபாவம் தெரியவந்தது. பிறகு ஸ்வாமி நம்பி திருவடிகளிலே தண்டனிட்டு தேவரீர் அடியே னுக்கு ரஹஸ்யார்த்த விசேஷங்களை ப்ரஸாதித்தருள வேணும்' என்று கூப்பிய கையராய்ப் பிரார்த்திக்க, அவரும் இவருடைய அத்யவஸாய விசேஷமறியாமல் உப தேசிக்கலாகா தென்றெண்ணி வாளாவிருக்க, ஸ்வாமி சில நாள் காத்திருந்தும் மநோரதம் நிறைவேறப் பெறாதே மீண்டு கோயிலுக்கெழுந்தருளினர். இவ்வனே பதினெட்டு பர்யாயம் கோயிலில் நின்றும் திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளியும் பிரார்த்தித்தும் பயன் படவில்லையாக, பிறகு ஸ்வாமியின் அளவு கடந்த ஆர்த்தியை யும் அபிநிவேசாதிசயத்தையும் தெரிந்துகொண்ட திருக்கோட்டியூர் நம்பிகள் எம்பெரு மானுடைய நியமனத்தையும் பெற்று இனி அவர்க்கு உபதேசிப்பதென்று தேறி ஒரு ஸ்ரீவைஷ்ணவரைக் கோயிலுக்குப் போகவிட்டார்; 'தண்டும் பவித்ரமுமாகத் தாம் ஒருவரே வந்து கேட்டுப் போகும்படி' சொல்லியனுப்பினர். அவரும் வந்து அப்படியே சொல்ல ஸ்வாமி மிகவுகந்து கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் கூட்டிக்கொண்டு மிக விரைந்து திருக்கோட்டியூரேறச் சென்று நம்பி திருவடிகளிலே தண்டனிட்டு நிற்க, 'தனித்தன்றே உம்மை நாம் வரச்சொன்னோம்; கூட இரு வரைக் கூட்டி வந்தது ஏன்?' என்று நம்பி கேட்க, 'தண்டும் பவித்ரமுமாகவன்றே தேவரீர் வரச்சொல்லி யருளிற்று; இவர்களைத் தண்டும் பவித்ரமுமென்றே கூட்டி வந்தேன்' என்று சொல்லி ஆண்டானைத் தண்டாகவும் ஆழ்வானைப் பவித்ரமாக வும் காட்டி நிற்க 'ஆனால் இவ்வர்த்தம் உங்கள் மூவரளவிலே நிற்கக் கடவது, மற்றொருவர்க்கும் சொல்லாதே கொள்ளும்' என்று நம்பிகள் நியமித்தருளி அவ்வனே சபதமும் பெற்று சரமச்லோகத்தின் பரமரஹஸ்யார்த்த விசேஷங்களைப் பேருள் கொண்டு உபதேசித்தருளினர். மணவாள மாமுனிகள் முமுக்ஷுப்படி வியாக்கி யானத்தில் சரமச்லோக ப்ரகரணத்தின் அவதாரிகையில்—"இதினர்த்தம் கேட்கைக் காகவிறே எம்பெருமானுர் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் எழுந் தருளிற்று. நம்பி தாமும் இதில்அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதி காரிகளில்லாமையையும் பார்த்திறே இவருடைய ஆஸ்திக்யாதர பரீக்ஷார்த்தமாகவும்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பலகால் நடந்து தவளப்பண்ணிச் சூளுறவு கொண்டு மாஸோபவாஸங்கொண்டு அருமைப்படுத்தி அருளிச் செய்தருளிற்று.....அதிகாரி துர்லபத்வத்தாலும் அர்த்த கௌரவத்தாலும் இத்தை வெளியிடாதே மறைத்துக்கொண்டு போந்தார்கள் எம்பெருமானார்க்கு முன்புள்ளார். ஸம்ஸாரிகளின் துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாத படி க்ருபைகரை புரண்டிருக்கையாலே அர்த்தத்தின் சீர்மை பாராதே அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினர் எம்பெருமானார்" என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் இங்கே காணத்தக்கன.

திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்த விசேஷங்கள் கேட்டருளி ஸ்வாமி க்ருதார்த்தராய் அப்போதே மறுநாளில் அவ்வூர்ப் பெருமாள் ஸன்னிதியில் சரத்தாளுக்களான பல ஸ்ரீவைஷ்ணவர்களை [ஏற்கெனவே தம்மை அநுவர்த்தித்துக் கொண்டிருந்தவர்களை] ஒலக்கமாக விருத்தி அப்பரம ரஹஸ்யார்த்தத்தை உபதேசித்தருளினர்.

ஸ்வாமி, எம்பெருமானார் என்கிற விருது பெறுதல்

திருக்கோட்டியூர் நம்பி, தம்மிடத்திலே சபதம் செய்ததைக் கடந்து ஸ்வாமி இங்ஙனே ஸன்னிதியில் அர்த்தங்களை வர்ஷித்து விட்டாரென்று உடனே கேள்விப்பட்டு அவரை யழைத்து 'இப்படியும் செய்யத் தகுமோ? எதற்காக இப்படி நியம நோல்லங்கனம் செய்தீர்? இதன் பலன் என்னாகுமென்று அறிவீரோ?' என்று கேட்க, உடையவரும் 'ஆசார்ய நியமனத்தை அதிலங்கனம் செய்த பாவியேனுக்கு நரகமேயாயிற்று பலன்; இதனையறிந்தும் அடியேன் அர்த்தங்களை வெளியிட்டது அடியேனொருவன் நரகம் புகுந்தாலும் இவ்வாத்ம கோடிகளெல்லாம் தேவரீர் திருவருளாலே உஜ்ஜீவித்துப் போவர்களென்கிற கருத்தினால்' என்று விண்ணப்பஞ் செய்ய, நம்பியும் இதைக்கேட்டு 'இப்படி பரஸம்ருத்தியே பேரான நிலை நமக்குக் கூடிற்றில்லையே! இவர்க்கு இது கூடினபடி என்னே! என்று மிக வியந்து உவந்து அவ்வுகப்பின் பரிவாஹரூபமாக எம்பெருமானார் என்று அவர்க்கு விருது சாத்தினர். எம்பெருமான் கருணைக் கடலென்று கேட்டிருந்தோ மத்தனை, அதனை இவர் பக்கலிலே இன்று ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றோமாதலால் இவர்க்கு இந்த விருது ஏற்கும் என்று திருவோலக்கத்திலே விவரணமும் செய்தருளினர்.

'எமக்கெல்லார்க்கும் தலைவர்' என்கிற பொருளையுடைய எம்பெருமானரென்கிற சொல் ஸ்வாமிக்கே ஏற்குமது. பரம கருணை பொருந்தியவரே தலைவராயிருக்கத் தகுமாதலாலும் அந்தப் பரம கருணை இராமாநுசர் திறத்திலேயே மிகலருமறிய ஸாக்ஷாத்க்ருத மாதலாலும்.

ஆழ்வானையும் ஆண்டானையும் பற்றின இதிஹாஸம்

[ஸ்வாமி திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளிலே சரம ச்லோகார்த்தம் கேட்ட போது ஆழ்வானுமாண்டானும் தண்டும் பவித்ரமுமாக உடனிருந்து கேட்டதாகவே கீழ் அறிவிக்கப்பட்டது. ஆனால் இவ்விடத்து வரலாறு குருபரம்பரா ப்ரபாவத்தோடு சிறிது மாறுபடுதலால் அதில் காண்கிறபடியாகவும் இங்கு எழுதப்படுகிறது. ஸ்வாமி தண்டும் பவித்ரமுமான இவ்விருவருடனேயிருந்து நம்பி பக்கலிலே கேட்டது திருமந்திரப்பொருள் என்று வைத்துக்கொள்வது. பிறகு அவர்க்கு சரமச்லோகார்த்தத்தையும் உபதேசித்தருளத் திருவுள்ளங்கொண்ட நம்பிகள் 'எம்பெருமானாரே! உமக்கு இன்னமுமொரு சரம ரஹஸ்யார்த்த விசேஷம் சொல்லுவதாக எண்ணியிருக்கிறோம்: இப்போது கோயிலுக்குச் சென்று பின்பு ஏகாந்தமாக நீர் ஒருவருமே வாரும்' என்றருளிச்செய்ய, அப்படியே ஸ்வாமி அப்போது கோயிலேறவெழுந்தருளி மீண்டுமொருகால் தனித்து நம்பிகளின் ஸ்ரீ பாதத்திலே சென்று தெண்டனிட்டு,

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நிற்க, நம்பி இவர் கையைப் பிடித்துக்கொண்டுபோய் ஏகாந்தமாக மேல் தளத்திலே யேறிப் படிக்கதவை மூடி யெழுந்தருளியிருந்து ஒருவர்க்குஞ் சொல்லாதபடி தம் திருவடிகளைத் தொடுவித்துச் குளுறவு கொண்டு நிர்ஹேதுக க்ருபையாலே பரம ரஹஸ்யமான சரமச்லோகப் பொருளை யருளிச் செய்து, இதை அதிகாரிகளுக்கு இடாதபடி பேணிக்கொண்டு போரும் என்று நியமித்தருள, எம்பெருமானர், அடியேன் அப்படிப்பட்டவர்களுக்குச் சொல்லேன்; கூரத்தாழ்வானெருவர்க்குச் சொல்லா திருக்க வொண்ணுதேயென்ன, 'ஆகில் ஒரு ஸம்வத்ஸரம் சுச்ரூஷை கொண்டு சொல்லும்' என்று நியமித்தருள, ஸ்வாமியும் விடைபெற்றுக் கோயிலேறை வெழுந்தருளினர். அப்போது ஆழ்வான் அவர் திருவடிகளிலே தெண்டனிட்டு நிற்க உடையவரும் வாராய் ஆழ்வான்! சரமச்லோக பரம ரஹஸ்யார்த்தத்தை நம்பிகள் எனக்கு உபதேசித்தருளி இவ்வர்த்த விசேஷத்தை ஒருவர்க்கும் செவிப் படாதபடி பேணிக் கொண்டிருக்குமாறு நியமித்தருளினபோது ஆழ்வொனெருவர்க்கு மாத்திரம் அடியேன் இதனை வெளியிடாதிருக்க முடியாதே யென்று நான் விண் ணப்பஞ் செய்ய, ஆழ்வானுக்கு இவ்வர்த்தம் கேட்க அதிகார மூண்டே யாகிலும் பல்வகையாலும் அவருடைய அத்யவஸாயத்தைப் பரீக்ஷித்தறிந்து ஒரு ஸம்வத்ஸரம் சுச்ரூஷை கொண்டு சொல்லும் என்று நியமித்தருளினர் என்று ஆழ்வானை நோக்கி யருளிச் செய்ய, அதுகேட்ட ஆழ்வானும் * மின்னின்னிலையிலமன்னுயிராக்கைகள் * என்ற பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி ஒரு ஸம்வத்ஸரம் இவ்வுடலுக்கு நிலை யுண்டோ இல்லையோவென்று வியாகுலப்பட்டு ஆலோசித்து இவ்வர்த்த விசேஷத் தைப் பெற்றாலல்லது தரித்திருக்க முடியாத தன்மையாலே ஆசார்யனது திரு மாளிகை வாசலிலே ஒரு மாஸம் பட்டினி கிடக்கை ஸம்வத்ஸர சுச்ரூஷையோ டொக்குமென்று சாஸ்த்ரமுண்டென்றறிந்து அங்ஙனமே மாஸோபவாஸம் கிடந்து அவ்வர்த்த விசேஷத்தைப் பெற்றார்.

பிறகு முதலியாண்டானும் வந்து தொழுது பிரார்த்திக்க, நான் ஆழ்வானெரு வர்க்கே சொல்ல நியமனம் பெற்று வந்தேன். நீர் நம்பிபக்கலில் சென்று கேளு மென்று விடை கொடுத்தருள, அவரும் திருக்கோட்டியூரேறச் சென்று ஆறு மாஸம் காத்திருந்தும் அருள் பெறாமலிருந்து ஒரு நாள் கனக்க ப்ரார்த்திக்கையில் 'மூக்குறும்பும் போலல் எம்பெருமானர் தாமே ப்ரஸாதிப்பர், போய்க்கேளும்' என்று விடை தந்தனுப்பிவிட, ஆண்டானும் கனத்த ஆர்த்தியோடே உடையவர் திருவடிகளிலே வந்து விழ, மிகவும் உகப்போடே ஆண்டானுக்கும் அதை யுபதேசித் தருளினர். [ஆறுபிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்திலுள்ளபடியிது.]

திருமாலையாண்டானிடத்துத் திருவாய்மொழி கேட்டல்

சில நாளைக்குப் பின்பு திருக்கோட்டியூர் நம்பி கோயிலுக்கெழுந்தருளித் தம்முடைய ஸப்ரஹ்மசாரியான திருமாலையாண்டானை எம்பெருமானுடரித்தே கொண்டு நிறுத்தி இவர் பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேளுமென்று ஸ்வாமிக்கு நியமித்துத் தாம் புறப்பட்டெழுந்தருளினர். அன்று தொடங்கித் திருவாய்மொழி காலக்ஷேபம் நடந்துவாரா நின்றது. ஆண்டான் ஆளவந்தார் திரு வடிகளிலே கேட்ட அர்த்தங்களை யருளிச்செய்து வருகையில் எம்பெருமானர் ஆங் காங்குச் சில அர்த்தவிசேஷங்களையும் யோஜநா விசேஷங்களையும் பணித்துவர, இவர் விச்வாமித்ர ஸ்ருஷ்டியாக ஸ்வச்சந்தமாய் ஏதோ சொல்லி வருகின்றரென்று திருவுள்ளம் புண்பட்ட ஆண்டான் இடையிலே காலக்ஷேபத்தை நிறுத்திவிட, இதை யறிந்த திருக்கோட்டியூர் நம்பி கோயிலேறை வந்து ஆண்டானை விசாரிக்கையில் உடையவர் சொன்ன சில மாறு பொருள்களை யெடுத்துரைத்து மஸ்தாபவேதனை விளக்க, அப்போது நம்பி அருளிச்செய்தபடி—'இவ்வர்த்தமும் ஆளவந்தாரருளிச் செய்ய நாம் கேட்டிருக்கிறோம்; ஸாந்தீபனி பக்கலிலே க்ருஷ்ணன் வேதமோதினுப்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

போலே காணும் உம்மிடத்திலே உடையவர் திருவாய்மொழி கேட்கிறதும்; ஆளவந்தார் திருவுள்ளத்திலுள்ள அர்த்தமொழிய இவர்க்கு வேறொன்றும் தோன்றுது காணும். இவர்க்கு நீர் அஜ்ஞாத ஜ்ஞாபகம் பண்ணுவதாக நினையாதேயிருக்க ப்ராப்தம்' என்று.

பிறகு நம்பி அவ்வாண்டானையும் பெரிய நம்பியையும் கூட்டிக்கொண்டு உடையவர் மடத்தேற வெழுந்தருள, ஸ்வாமியும் உள்ளம் பூரித்துத் தொழுது நிற்க, பெரிய நம்பியும் திருக்கோட்டியூர் நம்பியும் திருமாலையாண்டானை நோக்கி 'திருவாய்மொழி விட்ட விடம் தொடங்கி நீரே பலகால் அநுவர்த்தித்தாகிலும் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டும்' என்று நியமித்தருள, அன்று தொடங்கி அப்படியே நடந்து போந்தது. "ஆளவந்தார்க்கு நான் ஏகலவ்யன் காணும்" என்று இடையிடையே ஆண்டானை நோக்கி உடையவர் அருளிச்செய்யும் படியாயிருந்தது. *யத்பதாம் போருஹ வியாக்யானத்தில் வேதாந்த வாசிரியரும் பணித்ததிது. ஆளவந்தார் பக்கலிலே கேளாத அர்த்தங்களும் இங்கே கேட்கப் பெற்றோமென்று ஆண்டானும் போர உகக்கும்படியாயிற்று.

ஸ்வாமி மாதுகரத்தை நிறுத்திக் கிடாம்பியாச்சானைப் பணிகொள்ளுதல்

"தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே" என்கிற படியே ஸ்ரீ ரங்கநாத திவ்யாலய ஸாம்ராஜ்ய நிர்வாஹதுரந்தரராய் ஸ்வாமி வாழ்ந்தருளுங் காலத்திலே கோயில் கைங்கர்யபரர்கள் ஸதாசாரமில்லாமலிருக்கக் கண்டு அவர்களைத் திருத்திப் பணி கொள்ளத் திருவுள்ளம்பற்றி நெருக்கிக் கொண்டு போராநிற்கையில், அவர்களிலே சிலர் 'இவர் கோற்றீழே நம்மால் குடிவாழ முடியாது; இவரை மாய்ப்பதே நலம்' என்று கொண்டு ஸ்வாமி மாதுகரத்திற் கெழுந்தருளுமிடத்து விஷங்கலந்த ப்ரஸாதமிடும்படி ப்ரபல நிர்ப்பந்தத்தாலே செய்விக்க, அப்படியே ஒருநாள் கிடைத்த ப்ரஸாதத்தின் தீமையை யறிந்து அதைத் திருக்காவேரியிலே கரைத்திட்டு அன்று தொடங்கிச் சிலநாள் வரையில் உபவாஸமாகவே யெழுந்தருளியிருக்க, இதைத் திருக்கோட்டியூர் நம்பி கேட்டருளி அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளி, ஸ்வாமியினுடைய சிஷ்யவர்க்கங்களிலே கிடாம்பியாச்சானொருவரே திருமேனிக்கு மிகவும் பரிவரான கிங்கரர் என்றறிந்து அவரைத் திருமடைப்பள்ளிக் கைங்கர்யத்திலே நியமித்து, ஸ்வாமி தமக்கும் மடத்திலேயே ப்ரஸாத ஸ்வீகாரம் கொண்டருளும்படி நியமித்து மீண்டெழுந்தருளினர். அன்று முதலாக ஆச்சானே ஸ்வாமி திருவுள்ளத்திற்குப் பாங்கான பரிசாரகராக இருத்து வந்தார். வேதாந்த வாசிரியர் "எதிவரஜர் மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே" என்ற பாசுரத்தினாலும் *இதி யதிராஜமஹாநஸ பரிமள பரிவாஹவாஸிதாம்* என்ற ச்லோகத்தினாலும் இவ்வரலாற்றை ஸூசிப்பித்திருப்பதும் காணத்தக்கது.

யஜ்ஞமூர்த்தியைத் திருத்தி அருளாளப்பெருமானெம்பெருமானாராக ஆட்கொள்ளுதல்

யஜ்ஞ மூர்த்தி யென்னுமொரு மாயாவாதிஸம்ந்யாஸி எம்பெருமானுடைய வைபவங்களைக்கேட்டு அவரோடே தர்க்கித்துவெற்றிபெறவேணுமென்று விரும்பிக் கோயிலிலே ஸ்வாமி மடத்திலே வந்து ஸேவித்து 'நான் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் நீர் விடை கூறவேணும்: தக்குப்திகரமாக விடைபெற்றேனாகில் உமக்கு சிஷ்யனாகக் கடவேன்' என்று சொல்ல, ஸ்வாமியும் இசைந்தருள, பதினேழு நாள் வரையில் வெற்றி தோல்வி யின்றியே விடைசெல்லா நிற்க, முடிவில் உத்தர மருளிச் செய்யவேண்டிய பொறுப்பு ஸ்வாமி பக்கலிலே வந்துநின்று விஷயம் தோன்றுமேயிருக்கையில் 'நானுக்கு ஆகிறது' என்று சொல்லி ஸபாவிஸர்ஜநமாயிற்று. பிறகு ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் வியாகுலப்பட்டு, தம் திருவாராதன

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மான பேரருளாளரைத் திருவடி விளக்கி அமுது செய்யப்பண்ணி 'ஆழ்வார் தொடங்கி ஆளவந்தாரளவாக இத்தனை காலம் ஒரு குறையுமின்றியே விளங்கிவந்த இந்த சரிசமம் இன்று அடியேனால் பங்கமடையக்கடவதோ? இப்படியும் ஒரு லீலை கொண்டாடத் திருவுள்ளமாயிற்றே?' என்று விண்ணப்பஞ்செய்து தாம் அமுது செய்யாமலே கண்வளர்ந்தருள, அன்றிரவு பேரருளாளர் கனவிலே யெழுந்தருளிக் காட்சி தந்து மாயாவாதியின் வாயடங்கும்படியான சில அர்த்த விசேஷங்களை ஸ்புரிக்கச்செய்து மறைய, ஸ்வாமியும் சிற்றஞ்சிறுகாலே யெழுந்து பரமஸந்துஷ்டராய் நித்யானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ப்ரஸந்நகம்பீரராய் விசாரகோஷ்டிக்கு எழுந்தருள, அவ்வளவிலேயே யஜ்ஞமூர்த்தி இன்று நமக்குத் தோல்வியே நிண்ணமென்று நிச்சயித்து அப்போதே யெழுந்து ஸ்வாமி திருவடிகளிலே ஸாஷ்டாங்க ப்ரணமம் பண்ணி நின்று 'அடியேனை அங்கீகரித்தருளவேணும்' என்று கைகூப்பிப் பிரார்த்திக்க, 'மேலே விஷய விசாரம் நடைபெறவேண்டியிருக்க இதுவென்?' என்று ஸ்வாமி கேட்க; அதற்கு யஜ்ஞ மூர்த்தி 'ஸ்வாமின் தேவரீருக்குப் பெரிய பெருமாள் ப்ரத்யக்ஷமானபின்பு தேவரீரென்றும் பெருமாளென்றும் வாசியுண்டோ? இனி அடியேன் தேவரீர் ஸந்நிதியில் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்ல ப்ராப்திபில்லை; இந்த ஆத்மா இதுவரையில் அனர்த்தப்பட்டதுபோதும்; இனியும் அனர்த்தப்படாதபடி நோக்கியருளவேணும்" என்று கனக்க ப்ரார்த்தித்து ஸ்வாமியின் இசைவும் பெற்று அப்போதே ஏகதண்டத்தை மூறித்தெறித்து ப்ராயச்சித்த பூர்வகமாய் சிகாயஜ்ஞோபவீதங்களையும் பஞ்சஸம்ஸ்காரங்களையும் பெற்று முக்கோல் பிடித்த முனியாகி சாஸ்த்ரப்படி ஆசார்யனுடைய நாமத்தையே வஹிக்க விரும்பி ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் பேரருளாளனுடைய ப்ரஸாதமடியாகவே இவர் ஆட்பட்டாரென்கிற உபகார ஸ்ம்ருதி உலகப்ரஸித்தமாம்படி அருளாளப் பெருமாளெம் பெருமானார் என்று திருநாமம் சாத்தியருளினர். உடனே அவரை யழைத்துக் கொண்டு போய்ப் பெரிய பெருமாளை ஸேவிக்கப்பண்ணிச் சிறப்புகளும் பெறுவித்து, அன்று முதலாகவே திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிரமும் ஓதுவித்து, மற்றும் தத்வசிக்ஷைகளும் செய்தருளினர்.

அக் காலத்திலே, அனந்தாழ்வான் எச்சான் தொண்டனூர்நம்பி மருதூர் நம்பி என்னுமிவர்கள் எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேணுமென்று மனோரதித்திருக்க, ஸ்வாமி அவர்களை அருளாளப் பெருமாளெம் பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினர். அப்போது அவர் அஞ்சி நடுங்கி அவ்வடியார்களை நோக்கி "குருவியின் கழுத்திலே பனங் காயைக் கட்டினாற் போலே ஸ்வாமி செய்தருளினராகிலும், நீங்கள் ஸ்வாமி திருவடிகளே சரண மென்றிருங்கள்" என்று நியமித்தருளினர்.

அனந்தாழ்வான் திருமலையில் வழுவிலாவடிமைக்கு நியமனம் பெறுதல்

எம்பெருமானார் பகவத் விஷய காலக்ஷேபம் நடத்தி யருளுகையில் *ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி யென்கிற திருவாய்மொழி நடவா நிற்க, கோஷ்டியில் திருமுன்பே யிருந்த சிஷ்யர்களை நோக்கி 'ஆழ்வார் *திருவேங்கடத் தெழில்கொள் சோதி யெந்தை தந்தை தந்தைக்கு ஒழிவில் கால மெல்லா மூடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்யவேண்டும் நாம்* என்று பாரித்த குறைதீரத் திருவேங்கடமுடையான் பரிஸரத்திலே யிருந்து நித்ய கைங்கரியம் பண்ண விருப்பமுடையார் ஆரேனு முளரோ?' என்று வினவியருள, *குளிரருவி வேங்கடமாகையாலே எல்லாரும் குளிர்க்கு அஞ்சி விடை கூறாதிருக்க, அனந்தாழ்வான் எழுந்து அடியேனுக்கு நியமித்தருளவேணும்' என்றார், அது கேட்டு உகந்த எம்பெருமானார் நீரொருவரே ஆண் பிள்ளை என்று போரவும் கொண்டாடித் தழுவியருளி விடை கொடுத்தருளினர். அது முதலாக அனந்தான் பிள்ளை என்று அவர்க்கு ப்ரஸித்தியாயிற்று. அன்றே

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அவர் திருமலைக்கு விடைகொண்டு திருவேங்கடமுடையானைத் திருவடி தொழுது திருநந்தவனஞ் செய்த அதற்கு இராமாநுசன் என்று திருநாமஞ் சாத்தி அனேக விதமான கைங்கரியங்களை அற்புதமாக நடத்திக் கொண்டிருக்கையில் அதை நேரில் கண்டு மகிழவேணு மென்கிற திருவுள்ளம் எம்பெருமானுக்குண்டாகி பகவத் விஷய காலக்ஷேபத்தை விரைவாக நடத்திச் சாத்தியருளினர்.

உடையவர் திருமலையாத்திரையும் திருமலைநம்பியிடம் ஸ்ரீராமாயணம் கேட்டலும்

பெருமாள்கோயில் திருமலை முதலான சில திருப்பதிகளை ஸேவித்துவரப் பெரிய பெருமாளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சிஷ்யவர்க்கங்களுடனே புறப் பட்ட எம்பெருமானுர் வழியடைவே திருப்பதிகளையெல்லாம் தொழுதுகொண்டு திருமலையடிவாரத்தே திருப்பதியிற் சேர்ந்து, திருமலையை மிதித்தேறத் திருவுள்ளம் பற்றாமல் கீழேயே யிருந்து விடுவதாகத் திருவுள்ளம்பற்றி யிருக்கையில் அனந்தாழ் வான் முதலானோர் இதையறிந்து வந்து 'இப்படியும் திருவுள்ளம் பற்றலாமோ? நாங்களும் இனித் திருமலையைவிட்டு இக்கேதான் படுகாடு கிடக்கவேண்டும் போலும்? என்ன; அதையே திருமலையப்பனுடைய நியமனமாகக்கொண்டு புறப்பட்டுத் திருமலை மேலெழுந்தருளிக் கோனேரியிலே நீராடி அப்பனைக் கண்களாரளவும் நின்று ஸேவித்து அனந்தாழ்வானுடைய திருப்பணிகளையும் கடாக்ஷித்து உள்ளம் பூரித்து * வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று அவரை மிக வுகந்து மூன்று நாள் அவ்விடத்தில் அமுது செய்யாமலே யெழுந்தருளியிருந்து விடைபெற்றுக்கொண்டு கீழேயிறங்கி மாதுலரான திருமலை நம்பி திருமாளிகையிலே ஒரு ஸம்வத்ஸரமிருந்து இதிஹாஸச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தின் விசேஷார்த்தங்களை அதிகரித்தார்.

உடையவர் எம்பாரைப் பெற்றுக்கொண்டு காஞ்சீபுரி வருதல்

உடையவர் ஸ்ரீ ராமாயண காலக்ஷேபம் முடித்துப் புறப்படுகையில் மாதுல ரான திருமலை நம்பி உவப்பின் மிகுதியினால் இவர்க்கு ஏதாவது கொடுக்க வேணு மென்கிற பரிப்புத்தோற்ற இருக்கையில் அதனை யறிந்த வுடையவர் 'ஸ்வாமிக்கு அடியேன் ஸமர்ப்பிக்க வேண்டியது போக, அடியேனுக்கு ஸ்வாமி கொடுப்ப தென்று ஒன்றுண்டோ? அப்படி ஒன்று கொடுக்கத் திருவுள்ளமாகில் நம் கோவிந்தப் பெருமானைத் தந்தருள வேணும்" என்று விண்ணப்பஞ் செய்ய; நம்பியும் அதற்கிசைந்து உடனே கோவிந்தப் பெருமானை [எம்பாரை] அழைத்து 'கோவிந்தா! இனி நம்முடையவரை அநுவர்த்தித் திருப்பாயாக' என்று சொல்லி உதக தாரா பூர்வமாகக் கொடுத்தருளினர். வெகு ஆனந்தத்துடன் உடையவர் அவரைக் கூட்டிக்கொண்டு திருக்கடிகை முதலான திவ்ய தேசங்களை ஸேவித்துக் கொண்டு கச்சிப் பேரருளாளன் திருவடிவாரத்தில் வந்து சேர்ந்தார்.

எம்பார் திரும்பவும் திருப்பதிக்குச் சென்று மீளுதல்

கோவிந்தப் பெருமாளுடன் கச்சியில் வாழ்ந்திருக்கையில், ஸ்வாசார்யரான நம்பியைப் பிரிந்த கிலேசத்தினால் உடம்பு வெளுத்து முகம் உருவியிருந்தார் கோவிந்தர். அதுகண்ட வுடையவர் அவருடைய கருத்தை யறிந்து 'கோவிந்தரே! திருப்பதிக்குச் சென்று நம்பியைச் சேவித்து வாரும்' என்று இரண்டு ஸ்ரீவைஷ்ண வர்களைக் கூட்டி யனுப்பிவிட்டுத் தாம் திருக்கச்சி நம்பியுடனே பேரருளாளனை ஸேவித்துக்கொண்டிருந்தார். திருப்பதிக்குச் சென்ற எம்பார் அங்குத் திருமலை நம்பி திருமாளிகை வாசலிலே தெண்டன் ஸமர்ப்பித்து நிற்க, அங்குள்ளார் அவரைக் கண்டு உள்ளே சென்று நம்பிக்கு அறிவிக்க, அவரும் திருவுள்ளங் கலங்கி 'பித்தனைப் போகச் சொல்லுங்கோள்' என்ன; இத்தனை தூரம் சிரமப்பட்டு வந்தவரை யழைத்து

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸேவையும் ஸ்ரீபாத தீர்த்தமும் தளிகை ப்ரஸாதமும் தந்தருள வேண்டாவோ?' என்று தேவிகள் சொல்லவும் 'விற்ற பசுவுக்குப் புல்லிடுவாருண்டோ? என்று சொல்லி விழுகராயேயிருந்து விட்டார் நம்பிகள். இப்படியாகவே கோவிந்தப்பெருமாள் அங்கு நசையற்று *மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்* என்று சொல்லித் திருவாசலிலே தெண்டனிட்டு அந்த ஸ்ரீவைஷ்ணவர்களிருவரோடுங் கூடவே பெருமாள் கோயிலில் உடையவரிடம் வந்துசேர நாளடைவில் எல்லாருமாய்த் தென்னரங்கம் சென்று சேர்ந்தனர். கோவிந்தப் பெருமாள் வைராக்யம் முற்றி ஸம்ந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து ஆசார்யருடைய நாமைக தேசமாக எம்பார் என்று திருநாமம் பெற்று உபய வேதாந்த க்ரந்த பரிச்ரமத்திலே தலை சிறந்து வாழா நின்றார்.

ஸ்வாமி ஸ்ரீபாஷ்ய மருளிச்செய்ய முயலுதல்

எம்பெருமானார் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் செய்தருளி ஆளவந்தார் திருவுள்ளக் குறையை நீக்கக்கருதி அதற்காக பகவத் போதாயந மஹர்ஷியின் வ்ருத்தி க்ரந்தத்தைக் கடாக்ஷிக்கத் திருவுள்ளமாய் அந்த ஸ்ரீகோசம் காச்மீர மண்டலத்தில் சாரதாபீடத்திலுள்ள தென்றுணர்ந்து ஆழ்வான் முதலானுரையும் கூட்டிக் கொண்டு யாத்திரை யடைவிலே அங்கேற எழுந்தருளித் தம்முடைய வைபவங்களைக் காட்டி வசீகரிக்கப்பட்ட ஸரஸ்வதீ பண்டாரத் தலைவரிடத்தில் நின்றும் அந்த போதாயந வ்ருத்திக்ரந்தத்தை வாங்கி அங்கேயே யிருந்து கடாக்ஷித்துக்கொண்டிருந்தார். மஹா மேதாவியான ஆழ்வானும் தாம் ஒரு பக்கத்தில் வீற்றிருந்து இரண்டாவது அத்யாயம் முதலாக மேலுள்ள பகுதியை யெல்லாம் கடாக்ஷித்து நெஞ்சில் தேக்கிக்கொண்டார். உடையவர் முதலத்யாயம் கடாக்ஷித்துத் தலைக்கட்டினவுடனே அங்குள்ள புறமதத்து வித்வான்களின் தூர்ப்போதனையினாலே மனம் மாறின ஸரஸ்வதீ பண்டாரத் தலைவர் அந்த ஸ்ரீகோசத்தை நிர்ப்பந்தித்து வாங்கி உள்ளே வைத்திட, குறையும் காணப் பெற்றிலோமே! என்று உடையவர் சிந்தித்திருக்க, அதுகண்ட ஆழ்வான் மேற்பகுதிகளைத் தாம் பார்த்துத் தரித்துக் கொண்டிருக்கிறபடியை விஜ்ஞாபித்து ஸ்வாமியைத் தேற்றினர். பிறகு பயண கதியிலே தென்னரங்கத்திருப்பதி சேர்ந்து ஆழ்வானை உசாத் துணையாகக் கொண்டு ஸ்ரீபாஷ்யமிட்டருளிக் தலைக்கட்டினர். இதற்கு ஸங்க்ரஹமாக வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம் என்னுமிரண்டு க்ரந்தங்களையுமருளிச் செய்தார்.

சோழராஜனுடைய உபத்ரவத்திற்கு அஞ்சி ஸ்வாமி மேல்நாட்டுக்கெழுந்தருளல்

ஆழ்வான் உடையவர்க்கு உசாத் துணையாயிருந்து தர்சந நிர்வாஹம் பண்ணியருளுகிற காலத்திலே, ராஜேந்த்ர சோழபுரத்தில் அரசாண்டு வந்த குலோத்துங்க சோழ ராஜன் துஷ்ட சைவனாகையாலே கள்ளப் பொய்ந் நூல்களை மெய்ந் நூலாகக் கொண்டு தானும் தன் புரோஹிதனுமாக நாட்டிலுள்ள வித்வான்களை யெல்லாம் நிரட்டி "சிவாத் பரதரம் நாஸ்தி" என்று எழுத்திடச் சொல்லி நிர்ப்பந்திக்க, சிலர் அவனுக்கு அஞ்சியும் சிலர் பொருட்டும் பூமிக்குமாசைப்பட்டும் அப்படியே யெழுத்திட்டார்கள். அப்போது அவ்வரசனிடத்துச் சிறிது மேன்மை பெற்றிருந்த நாலூரான் என்னுமொரு வைஷ்ணவன் அவ்வரசனை நோக்கி எங்களிராமாநுசன் எழுத்திட்டாலன்றே 'எழுத்திட்டதாவது; மற்றையோர் இட்டாலென்ன? இடாவிடிலென்ன?' என்றுகூற, அதுகேட்ட அரசனும் அப்போதே இராமாநுசனை யழைத்து வரும்படி ஆள்களை யனுப்ப, அவர்களும் உடையவர் மடத்தேறச் சென்றவளவிலே இந்தச் செய்தியை யுணர்ந்த ஆழ்வான் 'ஸ்வாமி ராஜஸபைக்கு எழுந்தருள்வராகில் அவர்க்கு அங்கு ஏதாவது அபாயம் விளையக்கூடும்; உலகுக்கெல்லாம் உயிரான அவரைக் காட்டிக்கொடுக்கத் தகாது: நாமே அவருடைய கோலம் பூண்டு ஸபைக்குச் செல்வோம்; கெடுதல் ஏதாவது நேர்ந்தாலும் நம்மோடே போகட்டும் என்று கருதி,

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அப்போது எம்பெருமானுர் கோட்டத்திற் கெழுந்தருளியிருப்பதறிந்து அவருடைய காஷாயத்தையும் த்ரிதண்டத்தையும் தரித்துக்கொண்டு அந்த ராஜ புருஷர்களு டனே போகப் புறப்படும்போது பெரிய நம்பியும் சில முதலிகளும் தாமுங் கூட வரு வதாகப் புறப்பட, அவர்களுடன் ஆழ்வான் ராஜ ஸபைக்கெழுந்தருளினர். பிறகு உடையவர் கோட்டஞ் செய்தெழுந்தருளி த்ரிதண்ட காஷாயாதிகளைத் தேடின வளவிலே 'கூரத்தாழ்வான் தரித்துக்கொண்டு ராஜ புருஷர்களுடனே யெழுந்தருளி னுர்' என்று முதலியாண்டான் விண்ணப்பஞ் செய்ய, ஆகில் அவருடைய வெள்ளை யைத் தாருங்கள் என்று ஆழ்வானுடைய திருப்பரிவட்டத்தை வாங்கித் தாம் சாத்திக் கொண்டு ஆழ்வானுக்கும் பெரிய நம்பிக்கும் என்ன கிங்கு நேருமோவென்று சிந் தித்துத் துவண்டிருக்க, இனி ஸ்வாமி இவ்விடத்திலெழுந்தருளியிருக்கை உசிதமன்று என்று அனைவரும் விஜ்ஞாபிக்க, உடையவரும் உடனே புறப்பட்டெழுந்தருளித் திருநாராயணபுரம் சேர்ந்தார்.

[எம்பெருமானுர் காலத்திலேயே யெழுந்தருளியிருந்த ப்ராமாணிக பண்டித சிகாமணியான கருடவாஹந பண்டிதர் செய்தருளின திவ்யஸூரி சரிதத்தில் பதி னெட்டாம் ஸர்க்கத்திலும், எம்பெருமானுர்க்கு அத்தாணிச் சேவகராயிருந்த வடுக நம்பி பணித்த யதிராஜ வைபவத்தின் தொண்ணூற்றைந்தாம் ச்லோகத்திலும் இக்கதை விளக்கமாக வுரைக்கப்பட்டிருத்தலால் இதில் யார்க்கும் விப்ரதிபத்தியுண் டாகக் காரணமில்லை. உடையவர்க்குந் தெரியாமலே ஆழ்வான் ஸ்வபுத்தியாலே த்ரிதண்ட காஷாயங்களைத் தரித்து ஸபைக்கெழுந்தருளினதாகவும், சோழராஜ னிடத்தில் நின்றும் ஆட்கள் வந்தவுடனே எம்பெருமானுர் ஆழ்வான் ஆண்டான் முதலானுர் பலரும் கூடிக்கலந்து யோசித்து உடையவர் வெள்ளை சாத்திக்கொண்டு வெளியேறிவிட வேண்டியதென்றும் ஆழ்வான் யதிராஜ வேஷம்பூண்டு ஸபைத் கெழுந்தருள வேண்டியதென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டு அப்படி நடந்ததாகவும்— இங்ஙனே இரண்டு வகையாக நூற்களிற் காணப்படுவதுண்டு. இவ்விரண்டு வகையும் ஸம்பாவிதமே யாகையால் இவற்றில் விப்ரதிபத்திக் கிடமில்லையென்க.]

ராஜ ஸபையில் நடந்த செய்திகளும் பின்னடந்த செய்திகளும்

ஆழ்வானும் பெரியநம்பியும் சோழராஜன் ஸதஸ்ஸிலே யெழுந்தருளின பிறகு அங்கு விசேஷமாக சாஸ்த்ர விசாரங்கள் நடைபெற்று 'சிவாத்பரதரம் நாஸ்தி' என்ற ராஜவாக்யத்தின்மீது இகழ்ந்துரைக்கப்பட, சோழன் கடுஞ்சினத்தனனுய் 'இவ்விருவருடைய கண்ணையும் கீண்டு விடுங்கள்' என்று சேவகர்கட்குக் கட்டளை யிட, ஆழ்வான் சோழனைக் குறித்து 'நீ மஹாபாதகியாகையால் உன்னைப் பார்த்த கண்கள் எனக்கு ஆகாது' என்று சொல்லித் தாமே தமது திருவுகிர்களாலே கீறிக் கண்ணை வாங்கியெறிய, பின்பு ராஜ ஸேவகர்கள் பெரியநம்பியைப் பிடித்துக் கொண்டுபோய்ச் சோழன் சொற்படி செய்து ராஜத்வாரத்தில் நின்றும் புறப்பட விட, ஆழ்வான் 'தர்சநத்துக்காக தர்சனம் கொடுக்கப் பெற்றேமே!' என்று மகிழ்ந்திருக்க, பெரியநம்பி வருத்தராகையாலே அவ் வேதனை பொறுக்கமாட்டாமல் அங்கேயொரு கொல்லத் தலைமாட்டிலே 'ஆழ்வான் மடியிலே திருமுடியும் தம் திருமகளான அத்துழாய் மடியிலே திருவடிகளுமாய் இளைத்துக் கண்வளர்ந்தருளி ஆளவந்தார் திருவடிகளை த்யானித்துக் கொண்டு அங்கே திருகாட்டுக் கெழுந் தருளினுர். பின்பு ஸ்ரீ பராந்தகபுரமென்னும் அக்ரஹாரத்தில் நின்றும் வந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் பெரியநம்பியை அங்கே ஸம்ஸ்கரித்துத் திருப்பள்ளிபடுத்தி ஆழ்வானை எழுந்தருள்வித்துக்கொண்டுபோய்த் தங்கள் ஊரிலே யிருத்தித் திருக்கண் வேதனை தீருமாறு சிலகாலம் உபசரித்துப் பிறகு திருவரங்கம் பெரிய கோயிலிலே கொண்டு சேர்த்தார்கள். தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வைத்த எம்பெருமானரைப் பிரிந்து அங்கே வாழஇல்லாமல் கோயில் வாஸத்தை விட்டிட்டுத் திருமாலிருஞ் சோலையில் வாஸத்தை விரும்பி பயணகதியாகப் புறப்பட்டெழுந்தருளினர். வழியிடையே எழுந்தருளும்போது தம்முடைய மனத் துயரங்கள் நினைவுக்கு வராதிருக்கும்படி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை நினைத்து நெஞ்சு கனிந்திருக்கக் கருதி ஸ்ரீ வைகுண்டஸ்தவம் அதிமானுஷ்தவம் என்ற அற்புதமான இரண்டு ஸ்தோத்ரங்களை யருளிச் செய்துகொண்டே திருமாலிருஞ்சோலைக் கெழுந்தருளி அங்கே பல வாண்டுகளெழுந்தருளியிருந்து ஸுந்தரபாஹுஸ்தவமும் அருளிச செய்தார். அவ்வளவிலே அந்த மஹாபாதகியான சோழன் கழுத்திலே புண்ணைப் புழுத்து மாண்டானென்ற செய்தி கேள்விப்பட்டு ஆழ்வான் அழகர்ஸன்னிதியிலே விடைபெற்றுமீண்டும்கோயிலேறவெழுந்தருளினர்.

எம்பெருமானர் மேல்நாட்டில் நின்று கோயிலுக்கெழுந்தருளி ஆழ்வானை உசாவுதல்

சோழனுடைய உபப்லவங்களுக்கு அஞ்சி மேல்நாட்டுக் கெழுந்தருளியிருந்த எம்பெருமானர், கோயிலில் நின்றும் அங்கு வந்த ஒரு ஸ்ரீ வைஷ்ணவராலே-சோழ ராஜஸதஸ்ஸில் ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் நேர்ந்த ஆபத்தைக் கேள்விப் பட்டுச் சாலவும் திருவுள்ளம் நொந்து ஆழ்வானிலும் உயிர்வாழ்ந்திருக்கப் பெற் றோமே' என்று திருவுள்ளம் தேறி, அப்போது தம்மிடத்தில் கைங்கரியம் செய்து கொண்டிருந்த மாரெனன்றில்லா மாருதிச் சிறியாண்டானை 'மிகவும் விரைவாகக் கோயிலுக்குச் சென்று ஆழ்வானையும் ஆராய்ந்து அங்குள்ள விசேஷங்களையும் அறிந்து வாரும்' என்று நியமித்தருள, அவரும் மிக விரைந்து கோயிலுக்கு வந்து சோழன் புழுத்து மாண்ட செய்தியுட்பட எல்லாவற்றையும்ஆழ்வான் ஸன்னிதியிலே அறிந்துகொண்டு மீண்டு திருநாராயணபுரம்போய் எம்பெருமானர் திருவடிகளிலே இவற்றை விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு அவர் பெருநெழ்ச்சி கொண்டு உடனே அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக் கெழுந்தருளி முதலிகளுடன் ஆழ்வான், திருமாளிகைக் கெழுந்தருள, ஆழ்வானும் எதிரே யெழுந்தருளி உடையவர் திருவடி வாரத்திலே வேரற்ற மரம்போலே விழுந்து ஸேவித்துத் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானை யெடுத்தணைத்துக் கொண்டு சோக வேகத்தாலே ஒரு வார்த்தையும் அருளிச் செய்யமாட்டாமல் உள்ளெலாமுருகிக் குரல்தழுத்து 'வரீர் ஆழ்வான்! இத்தர்சகத்துக்கு த்ருஷ்டிபூதரான உமக்கு இப்படி கண்போவதே! இது என்னுடைய தீவினையின் பயனன்றே?' என்றிப்படி பலவாறுக அருளிச்செய்து ஆழ்வானைத் தேற்றி, பண்டுபோலே திருவரங்கச் செல்வத்தை வளர்த்துக் கொண்டு வந்தார்.

தீதுமலையப்பனுக்குத் திருவாழி திருச்சங்கு அளித்தது.

பண்டொரு காலத்தில் திருவேங்கடமுடையான் தன் பக்கல் பரமபக்த சிகாமணியாயிருந்த தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ஒரு காரணார்த்தமாகத் தன் திருவாழி திருச்சங்குகளைத் தந்தருளி, இபபடி ஆச்ரித பக்ஷபாதத்தாலே தனது திவ்யாயுதங்களையும் தந்து உபகரிக்கும் ஔதார்யகுணம் உலகில் பரவுவதற்காகச் சிறிதுகாலம் ஸுதர்சநபாஞ்சஜந்ய சூன்யனாகவே இருந்திட்டான். அக்காலம் கலியின் கொடுமையால் வர்ணச்ரம தர்மங்கள் குலைந்து தேவாலயங்களும் சீர்கெட்டுப் பாஷண்டிகள் தலையெடுக்கும் காலமாயிருந்தது. திருமலையில் அர்ச்சகர்களாயிருந்த வைகாநஸர்கள் எம்பெருமானுக்கு முறைப்படி உபசாரங்கள் பண்ணமல் அச்ரத்தை காட்டியிருந்த காரணத்தினால் தேசாதிபதியான யாதவராஜனால் அடிக்கடி தண்டிக் கப்பட்டு அங்கு வாழஇல்லாமல் வெளிநாடு சென்றனர்; வ்ருத்தர்களாயிருந்த அர்ச்ச கர்கள் இவ்வனம் ஒவ்வொருவராக வெளியேற, ப்ரபலர்களான ஸ்ரீ வைஷ்ணவர்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

களும் இங்கு இலராக, விரல் நுழைக்க இடம் தேடிக்கொண்டிருந்த சைவர்கள் சிலர் இதுவே நல்ல சமயமென்று கொண்டு அந்த யாதவமன்னன் பக்கல்சென்று அவனுடைய ப்ரீதியைச் சிறிது சிறிதாக ஸம்பாதித்து ஒருநாள் அவனிடம் சொன்னார்கள். திருமலையில் ஸ்வாமிபுஷ்கரிணியின் தென்கரையில் திகழும் தேவன் முருகக் கடவுள்தான்; அவர்க்குக் குமாரசாமியென்றும் பெயர் வழங்குவதுண்டாகையால் அந்த நாமைக தேசத்தையிட்டு ஸ்வாமி புஷ்கரிணியென்று அத்தடாகம் வழங்கப் பெற்றது, ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் கூறவந்த வாமந புராணப் பகுதியில் இரண்டாவது அத்யாயத்தில் ஸுப்ரஹ்மண்யன் வேங்கடமலையில் ஒரு குளத்தின் கரையில் தவம் புரிந்து கொண்டிருந்தானென்று சொல்லப்பட்டிருத்தலாலும் அப் பெருமான் முருகக் கடவுளே. அவர்க்கு அஸாதாரண ஆயுதங்களான பாசமும் அங்குசமும் தவகிலக்கு உரியவை யல்லாமையால் தரிக்கப்படவில்லை. இன்னும் பல ஹேதுக்களாலும் அம்மலை சைவ க்ஷேத்ரமேயாம். இப்போதுதான் சிறிது காலமாகச் சில வைணவர்கள் கூடிப் புராணர்த்தங்களை மனம் போனபடி சொல்லி அப்பெருமான் விஷ்ணுவேயென்றுரைத்து ராஜாவை வசப்படுத்திக்கொண்டு சில வைஷ்ணவ விக்ரஹங்களையும் கோவிலில் ஸ்தாபித்து உத்ஸவங்களை நடத்தத் தொடங்கினர்கள். உண்மையில் இது சைவக்ஷேத்ரமாகையால் சைவ விதிப்படி இனி இக்கோவிற் காரியங்கள் நடைபெறுமாறு மஹாப்ரபு செங்கோல் செலுத்த வேணும்—என்றார்கள்.

இதைக்கேட்ட அவ்வரசன் இந்த சைவர்கள் சொல்லுவதெல்லாம் அநுபவ விருத்தமா யிருக்கின்றதே; ஆராயாமல்-நாம் எதையும் ஸாஹஸமாகச் செய்து விடக்கூடாது; தக்கபடி ஆராய்ச்சி செய்யவேணும் என்றெண்ணி யிருந்தான். அக்காலத்தில் அங்கு நிபுணர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாருமில்லாமையால் ஸாமான்யராயிருந்த சிலர் திருவரங்கம் பெரியகோயிலில் மிக்க சிஷ்ய ஸம்பத்துடனே எழுந்தருளியிருந்த எம்பெருமானார்க்கு இச்செய்தியை அறிவித்தனர். செய்தியை யறிந்த உடையவர் கடுகடையாகத் திருப்பதிக் கெழுந்தருளி ஸம்சயாக்ராந்தனா யிருந்த அரசனை நோக்கி, "சைவர்களால் உனது நெஞ்சில் உண்டாக்கப்பட்ட சங்காகளங்கத்தை நீக்கி உன்னைத் தெளிவிப்பதற்காகவே நெடுந் தூரத்தில் நின்றும் இங்கே வந்தோம்; உனக்குப் பரிபூர்ண திருப்தி உண்டாகும்படி யாம் தெளிவாகச் சொல்லவல்லோம்; கேளாய் கொற்றவனே!" என்று தொடங்கினவாறே அவ் வரசன், முன்பு கொக்கரித்த சைவர்களையும் வரவழைத்துப் பெரிய ஸபையாக்கி சைவ வைஷ்ணவர்களுக்கு வாதயுத்தம் நடக்குமாறு நியமித்துத் தான் தடஸ்தனா யிருக்க, வெகு காலம் வரை வாதப்போர் நடந்தநில் ஸசவர்களுடைய தர்வாதங்களை யெல்லாம் எம்பெருமானார் ப்ராமாணிகமாகக் கண்டித்து வெற்றிபெற்று விளங்கினர். [இந்த வாதப்ரதிவாதங்களின் விவரணம் திருமலையனந்தாழ்வான் பணித்த ஸ்ரீ வேங்கடாசல இதிஹாஸ மாலையில் அறுபத்தைந்து பக்கம் நிறையப் பெரிய வாக்யார்த்த ரூபணியில் குறிப்பிடப்பட்டுள்ளன; அங்கே கண்டு கொள்வது.) எம்பெருமானாருடைய அற்புதமான உபபாதனங்களைக் கேட்ட மன்னவன் கலக்கம் நீங்கி மிக்க தெளிவுபெற்று; திருவேங்கடமலை விஷ்ணுக்ஷேத்ரமே யென்றும் அங்குள்ள பெருமான் திருமாலே யென்றும் அறுதியிட்டு "இந்த ஸ்ரீராமானுஜர் ஸாமான்ய புருஷரல்லர்; அவதார புருஷரேயாவர்; இவர் மனம் வைத்தால் அதிமாநுஷ மான காரியங்களையும் செய்து ஸர்வஜனங்களுக்கும் நிண்ணிய நம்பிக்கை உண் டாகும்படி செய்யவும் வல்லர்; அங்ஙன் செய்ய இவரை வேண்டிக் கொள்வோம்" என்றெண்ணி, ஸ்வாமிந்! யோகீச்வரரே!! தேவரீர் நிரூபித்துக்காட்டிய சாஸ்த்ரார்த் தங்களைக் கேட்டுப் பரமாநந்தமடைந்தேன்; திருமாலே திருமலைக்கு இறைவர் என்று நன்கு தணிந்தேன்; ஸம்சயலேசமுமில்லாமல் சிக்கனத் தெளிவுபெற்றேன்;

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆயினும், மஹா புருஷராயும் அதிமாநுஷ சேஷ்டிதராயுமிராநின்ற தேவரீர், பண்டிதரோடு பாமரரோடு வாசியற எல்லாரும் தெளியுமாறு ஸுமாதாநோபாயம் ஏதாவது செய்தருளக் கூடுமேல் நன்று" என்று கைகூப்பி விண்ணப்பஞ் செய்ய, அதனைக் கேட்ட எம்பெருமானர் புராணப் பொருள்களைப் பலவாறாக எடுத்து உபந்யஸித்துக் காட்டினவளவிலும் இவ்வரசனுடைய மனம் பரிபூர்ண திருப்தியை அடையவில்லை போலும்; அதிமாநுஷமானதொரு கார்யம்செய்து காட்டவேணுமென்கிறான்; ஆயிடுக; இங்ஙனே செய்வோம்:—ப்ரஹ்மாண்ட புராணத்தில் பதிநேராவது அத்யாயத்தில் எம்பெருமான் தானே சேதநனாய் நிறந்து ப்ரதிஜ்ஞை செய்தருளியிருக்கிறபடியே கலியுகத்தில் விமான மண்டபாதிகளைப்போல் சங்கு சக்கரங்களையும் பக்தர்கள் செய்து ஸமர்ப்பித்தால் ஸ்வீகரித்தே தீருவனதலால், நாம் செய்து ஸமர்ப்பிக்கும் திவ்யாயுதங்களையும் எம்பெருமான் ஸ்வீகரிக்கக்கூடுமே; ப்ரார்த்தித்தாகிலும் ஸ்வீகரிக்கச் செய்திடுவோம்; இல்லையேல் மஹத்தான அனர்த்தம் நேரிடும் போலிருக்கிறதே! இவ்வரிய செயலினால்தான் அனைவரும் விச்வஸிக்கவேணும் என்று திருவுள்ளத்திற் சிந்தித்து, அப்படியே செய்திடுவதென்று அறுதியிட்டு, மன்னவனைநோக்கி, நான் எம்பெருமானுக்கு அஸாதாரண சிஹ்நங்களான திருவாழி திருச்சங்குகளைச் செய்வித்துக் கொணர்ந்து பகவத் ஸந்நிதியிலே வைத்திடுகிறேன்' இந்த சைவர்கள் தாமும் தங்கள் தெய்வத்துக்குரிய பாசம் அங்குசம் முதலிய ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து வைத்திடுக; எந்த ஆயுதங்களை எம்பெருமான் எடுத்து அணிந்து கொள்ளுகிறானே பார்ப்போம்" எனதருளிச் செய்தார்.

இதைக்கேட்ட அரசன் மகிழ்ச்சிகொண்டு 'இப்படியாகில் இது சிறந்த உபாயமே, பிறகு ஒருவர்க்கும் ஆக்ஷேபம் இருக்க ப்ரஸக்தியில்லையன்றே; நல்லது; அப்படியே இருவகுப்பினரும் செய்யக்கடவது' என்று சொல்ல; உபயவாதிகளும் தங்கள் தங்கள் தெய்வத்தின் அஸாதாரண ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து ஒருநாள் அவ்வரசனுடனே திருமலைக்கு வந்து இரவில் திருவேங்கடமுடையானுடைய ஸந்நிதி கர்ப்பகிருஹத்தினுள்ளே அவற்றை வைத்துவிட்டுக் கதவுகளைப் பூட்டி மன்னவன் கையால் அரக்கிலச்சினை செய்வித்துக் காலையளவும் கோவிலைச் சுற்றிக் காவலிருந்துகொண்டு தங்களுக்கே வெற்றி யுண்டாம்படி தங்கள் தங்கள் தெய்வத்தைச் சிந்தைசெய்து கொண்டிருந்தனர்.

எம்பெருமானர் தமது யோகமஹிமையினால் உள்ளேபுக்கு எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து "பரமபுருஷ! முன்பு நீ வாயோலைசெய்து கொடுத்த ப்ரதிஜ்ஞையின் படியே உனது அஸாதாரணசின்னங்களைப் பேணி அணிந்துகொண்டு அடியோங்களைக் காத்தருளவேணும்" என்று ப்ரார்த்தித்து அப்படியே திருவாழி திருச்சங்குகளை அணிந்து கொள்வித்து க்ருதக்ருத்யராயினர். பிறகு பொழுது விடிந்தவாறே யாதவ மன்னவன் நித்யாநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு உபயவாதிகளுடனும் ஸந்நிதிக்குச்சென்று திருக்காப்பு நீக்குவித்துப் பெருமாளை ஸேவிக்குமளவில் பாச அங்குசாதி ஆயுதங்களை அப்பால் தள்ளிவிட்டுத் திருவாழி திருச்சங்குகளை யணிந்துகொண்டு பரமபோக்யமாக ஸேவை ஸாதிக்கக்கண்டு மிகவும் ஆச்சர்யப்பட்டு எம்பெருமானர் பக்கல் அளவுகடந்த ப்ரபத்தியை வஹித்து அவரையே சரணமடைந்து க்ருதார்த்தனாகி, குத்ருஷ்டிவாதம் பண்ணிக் கொக்கரித்துக் கிடந்த சைவர்களையும் திருத்தீகரித்து ராஜ்யத்தில் நின்றும் துரத்திவிட்டு இனிது வாழ்ந்தான்.

எம்பெருமானரும் சிறப்புடனே சிஷ்ய வர்க்கங்களுடன் தென்னரங்கம் சென்று சேர்ந்து *வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணுடே* என்கிறபடியே நித்ய விபூதிச் செல்வத்தையும் இங்கிருந்தே ஆண்டுகொண்டு "தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த விதத்தாய்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இராமானுசன்" என்றபடியே அருளிச் செயல்களைப் பல வகைகளாலும் வளர்த்துக் கொண்டு வாழ்ந்தருளா நின்றார். எம்பெருமான் வைபவம் போலே எம்பெருமானார் வைபவமும் பேசியும் எழுதியும் தலைக்கட்ட வொண்ணாதது; அன்பர்கள் அநுதினமும் அநுஸந்திக்கப் பாங்காக இது சுருக்கமாக வரைந்தது. ஸ்வாமியருளிச் செய்த திவ்ய க்ரந்தங்கள் நவநிதிகள் போலவும் நவரத்னங்கள் போலவும் ஒன்பதாம்; ஸ்ரீ பாஷ்யம், வேதாந்த தீபம் வேதாந்த ஸாரம், வேதார்த்த ஸங்க்ரஹம், கீதா பாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்கத்யம், ஸ்ரீவைகுண்டத்யம், நித்யம்—என்பவை.

ஸ்வாமியின் பெருமைகளில் ஸாரமானவற்றை யெடுத்துரைத்துத் திருவரங்கத்தமுதனார் பணித்த இராமானுச நூற்றந்தாதி ப்ரபந்ந காயத்ரீ யென்று அன்று தொட்டே ப்ரஸித்தி பெற்றிருப்பதனால் அதை நாடோறும் அநுஸந்திப்பதே நமக்குற்ற பெருஞ் செல்வம். .... *

எம்பெருமானார் வைபவம் முற்றிற்று.

கூரத்தாழ்வான் வைபவம்

'எம்பெருமான் வைபவத்தைப் பேசித் தலைக்கட்டலாம், எம்பெருமானார் வைபவத்தைப் பேசித் தலைக்கட்ட முடியா' தென்பர் ஆண்டான் எம்பார் முதலானோர்; 'எம்பெருமானார் வைபவத்தைப் பேசித் தலைக்கட்டலாம்; ஆழ்வான் வைபவத்தைப் பேசித் தலைக்கட்ட முடியாது' என்பர் ஆசிரியர்களனைவரும். இவ்வாழ்வானோடு ஒப்பிடக் கூடியவர்களும் இவர்க்கு மேம்பட்டவர்களும் முன்னுமவதரித்ததில்லை, பின்னுமவதரிக்கப் போகிறதில்லை. எம்பெருமானது திருவாணையினால் இவ்வாழ்வான் தானே மீண்டும் இந்நிலத்திலே திருவவதரிக்கத் திருவுள்ளம் பற்றினாலும் முன்பு அவதரித்த தம் நிலைமையை அநுகரிக்க எவ்வகையினும் வல்லரல்லர் என்ன வேண்டியிராகின்றது.' புருஷ குணங்களெல்லாவற்றினுஞ் சிறந்த ஜீவகாருண்யம், ஆசார்ய பக்தி, பகவத் பக்தி, வைராக்யம், பாண்டித்யம், ஸத்கர்மாநுஷ்டானம் முதலிய எண்ணில் பல்குணங்கட்குப் பிறப்பிடமென்ன வமைந்த ஆழ்வானது திவ்ய சரிதத்தை அவரதம் அநுஸந்திப்பது ஸ்ரீவைஷ்ணவர்கட்கு அவச்ய கர்த்தவ்யங்களில் முக்யமானது. மாகடல் போன்ற அவரது திருக்கல்யாண குணங்களில் சிறு திவலைகளென்னலாம்படியான சில குணங்களைச் சுருங்கப் பேசுவோம்.

ஆழ்வான் திருவவதாரமும், திருநாமகரணமும்

பெருமாள்கோயிலென்னும் திருக்கச்சிமாநகரத்திற்கு வடமேற்றிசையின் கணுள்ள கூரமாகரில், கலி காலாயிரத்து நூற்றொன்பதாமாண்டாகிய ஸௌம்ய வருஷத்தில் தை மாதம் ஹஸ்த நக்ஷத்ரத்தில் இந்த மஹான் திருவவதரித்தார். இவர்க்குத் தமிழில் "திருமது மார்பன்" என்றும், ஸம்ஸ்க்ருதத்தில் "ஸ்ரீவத்ஸாங்க மிச்ரர்" என்றும் திருநாமம் வழங்கப்பெற்று வந்தது. இந்த எம்பெருமானுடைய திருநாமம். இத்திருநாமம் இவர்க்கு இடப்பட்டதற்குக் காரணம் யாதெனில்; இதற்குப் பெரியோர் கூறுவதாவது:—பரவாஸு தேவனை எம்பெருமான் இந்நிலவுலகத்திலுள்ள ஸம்ஸாரிகளையும் நித்யஸூரிகளைப்போலே நித்யகைங்கரியம் செய்பவர்களாக ஆக்கிக் கொள்ள விரும்பி இவர்களைத் திருத்திப் பணிகொள்வதற்காகவும் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனங்களுக்காகவும் இந்த லீலாவிபூதியில் நேரில்வந்து பிறந்து காரியஞ் செய்ய நினைத்துத் தனது அந்தரங்க கிங்கரனாய், "சென்றூற்குடையாயிருந்தாற் சிங்காசனமாம், நின்றூல் மரவடியாம் நீள்கடலுள்-என்றும், புணையாமணிவிளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம் திருமாற்கரவு" என்கிறபடியே ஒழிவில்கால மெல்லாம் பட்டாம் புல்குமணையாம் திருமாற்கரவு" ஏன்கிறபடியே ஒழிவில்கால மெல்லாம்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மூடனுய் மன்னி வழுவிலா வடிமை செய்பவனுன திருவனந்தாழ்வானைக் கூட்டிக் கொண்டுவந்து, தான் சக்ரவர்த்தி திருமகனுகவும் அவ்வாதிசேஷன் இளையபெருமாளாகவும் அவதரித்து நெடுநாள் வாழ்ந்து மண்ணின் பாரம் நீக்கித் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளின பிறகு, மீண்டுமொருகால் இவ்வாறு திருவவதரிக்கக் கருதிய எம்பெருமான் முன்போல ஆதிசேஷனைத் தூண்டியழைக்க, "ராமாவதாரத்தில் உமக்கு நான் தம்பியாகப் பிறந்து பட்ட பரிதாபம் போருமே" என்று ஆதிசேஷன் விநோதார்த்தமாகக் கூற, அதற்கு எம்பெருமான், "இந்த விசை நீ தனமயனுகவும் நான் தம்பியாகவும் பிறப்போம்" என்று மறுமொழிகூறி ஆதிசேஷனையு மழைத்துக் கொண்டு வந்து, தான் கண்ணபிரானுய்ப் பிறக்க, சேஷன் பலராமனுய்ப் பிறந்தான். அத்திருவவதாரத்திலே எம்பிரானது திருவுள்ளத்தில் தோன்றின தென்னவென்றால், "அஹோ! இதுவரை நாம் சேஷித்வத்தையே தலைக்கொண்டு இந்த அடிமைச் சுவடு அறியாமல் தானே பாழ்பட்டோம்; சேஷித்வ நிலைமையிற் காட்டிலும் சேஷவ்ருத்தியே பரமபோக்யமாயிரா நின்றது!; இப்படிப்பட்ட சேஷவ்ருத்தியை மேற்கொண்டே நாம் இன்னுஞ் சில பிறவி பிறக்கவேணும்" என்று குதூஹலம் கிளர்ந்து விட்டது. அதற்கிணங்க, மீண்டும் திருவனந்தாழ்வானை சேஷியாக அவதரிப்பித்துத் தான் சேஷபூதனுக அவதரித்தான். (அதாவது) சேஷன் ராமானுஜனுகத் திருவவதரிக்க, தான் கூரத்தாழ்வானுகத் திருவவதரித்தான். மீண்டும் ஆதிசேஷன் மணவாளமாமுனிகளாகத் திருவவதரிக்க, தான் 'ஸ்ரீகிரிநாதரன்னு' என்னும் திருநாமமுடைய ஸ்ரீவத்ஸகுல திலகராகத் திருவவதரித்தான்—என்கிற அவதார ரஹஸ்யமிதிலே, ஆழ்வான் ஸாக்ஷாத் திருமறுமார்பனுன எம்பெருமானது திருவவதாரமாகையாலும், அதுதோன்ற அவருடைய திருமார்பில் ஒரு மறு இருந்ததாக ப்ரஸித்தமாகையாலும் ஸ்ரீவத்ஸகிஷ்ந ரென்னும் எம்பெருமானது திருநாமத்தைப் பெற்றார். 'ஸ்ரீவத்ஸாங்கர்' என்பதும் இதற்குப் பரியாய நாமமேயாம்.

ஆழ்வான் என்ற திருநாமம்

இவர்க்கு ஆழ்வான் என்ற திருநாமம் நிகழ்ந்தமைக்கு அடி என்? என்று ஆராய்ந்தால், ஒரு இதிஹாஸம் பெரியோர் சொல்லிப் போருவதுண்டு;—இவர் பகவத் விஷயத்திலே மிக்க உருக்கமுடையவரா யிருந்தமையாலே எம்பெருமானர் இவர் பக்கலிலே ஒருநு திருவாய்மொழிப்பொருள் கேட்க விரும்பினர்; இவர் தாம் சேஷத்வத்தின் எல்லையிலே நிற்பவராகையாலே, ஜகதாசார்யரான எம்பெருமானர்க்குத் தாம் ஆசிரியர் போன்று எங்ஙனே பொருளுரைக்க இசைந்திடுவர்?; இசையமாட்டா தொழியவே, முதலியாண்டான் முதலானர்க்கு இவர் திருவாய்மொழிப் பொருள் சொல்லக்கடவதாகவும், அப்படியே அவர்கள் கேட்டு வந்து எம்பெருமானர் ஸந்நிதியிலே விண்ணப்பஞ் செய்யக்கடவதாகவும்ஒரு நியதி ஏற்பட்டு, முதலிகளனைவரும் இவர் பக்கலிலே கோஷ்டியாகவிருந்து "உயர்வற வுயர்நல முடையவன்" என்று திருவாய்மொழி தொடங்கினவாறே மதியெல்லா முள்கலங்கி மயங்கித் தரைப்பட்டாரிவர்; பரமபதவாதிகள் "பரப்ரஹ்மத்திற்குக் குணமென்பதே கிடையாது; அது நிர்க்குணம்" என்று பிதற்றுகிறார்களே, அவர்களுடைய மிடற்றைப் பிடித்தாற்போலே ஆழ்வார் முதலடியிலே "உயர்வற வுயர்நல முடையவன்" என்றபடி என்னே! என்னுயத்து இவர் மோஹித்து வீழ்ந்தது. இங்ஙனே இவர் மோஹித்தவாறே முதலிகளெல்லாரும் கடுகவெழுந்து எம்பெருமானரிடம் ஓடிச்சென்று 'காணவாரீர்! காணவாரீர்!!' என்றழைக்க, அவரும் ஓடிவந்து, "அன்று 'எத்திறமுரலினுமெடுத்திருந்தேங்கிய வெளிவே!' என்று ஆறுமாஸம் மோஹித்துக் கிடந்த ஆழ்வாரை ஸேவிக்கப் பெறுத குரைதீர இன்று கண்ணுரக் காணப் பெற்றேமே!" என்று உள்ளெலாமுருகிக் குரல் தழுத்துப் பேசித் தெண்டனிட்டு நெடும்போது பார்த்திருந்தும் உணரக் காணுமையாலே அருகே எழுந்தருளி "ஆழ்வான்! ஆழ்வான்!! ஆழ்வான்!!!" என்று

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கூவித் திருமுதுகைத் தட்டியுணர்த்த, தொடங்கும் போதே உயர்வறவுயர்கல முடையவனென்பதே!" என்று சொல்லிக்கொண்டே துணுக்கென்றெழுந்தார்;—உருக்கத்திலே ஆழ்வாரைப் போன்றமையாலே எம்பெருமானர் 'ஆழ்வான்!' என்று ஏகவசனமாகச் சொல்லித் தட்டியுணர்த்தினரென்பது பற்றி அன்று முதலாக இவர்க்கு ஆழ்வானென்று திருநாமம் வழங்கலாயிற்று.

ஆழ்வானுடைய விஷய வைராக்யம்

இவருடைய திருவவதார ஸ்தலமாகிய கூரமானது ஆதியிலே கூரமாநகரென்று ப்ரஸித்திபெற்றதொரு ராஜ்யமாக இருந்தது. அதில் இவர் தாமே அரசாட்சி செய்து கொண்டிருந்தார். இருக்கையில், ஒருகாலிரவில் நகரசோதனை செய்துகொண்டு போமளவில் நடுநிசிக்குமேல் ஒரு திருமாளிகையில் வார்த்தை யொலிகள் கேட்க, ஆழ்வான் ரஹஸ்யமாக வீற்றிருந்து அப்பேச்சுகளைக் குறிக்கொண்டு கேளாநிற்க, அத்திருமாளிகைத் தலைவர்க்கு ஒரு மகளிருப்பதாகவும், அவளுக்கு விவாஹமானால் உடனே கணவன் இறந்தொழிவனென்று ஜாதகத்தி லிருப்பதாகவும் இதனை அனைவருமறிந்து இவளை ஒருவரும் மணம் புரியாமையாலே, 'வயது சென்றவிவளை இனி நாம் வீட்டில் வைத்துக்கொண்டிருந்தால் லோகாபவாதம் விளையுமாகையாலே இவளை உயிர் மாய்ப்பதே உரிய உபாய' மென்று சொல்லிக்கொண்டிருந்த வார்த்தைகளைக் கேட்டு ஆழ்வான் மறுநாள் அவர்களை ராஜஸபையில் வரவழைத்து 'நேற்றிரவு உங்கள் வீட்டில் வார்த்தையாடின விஷயங்களைச் சொல்ல வேணும்' என்ன, அவர்களும் ஒன்றையும் மறைத்திடாது உள்ளபடியே சொல்ல, ஆழ்வான் அது கேட்டு "பிரஜைகளுடைய வருத்தத்தைத் தீர்ப்பது அரசர்க்குக் கடமையாகையால், உங்கள் பெண்ணை நான் மணந்துகொண்டு உங்கள் வருத்தத்தைத் தீர்க்குமாறு அறுதி யிட்டிருக்கிறேன்; அப்படி செய்யலாமோ? என்ன; அவர்கள் 'ஆ! இப்படியுண்டா? அப்பெண்ணைத் தேவரீர் மணம் புரிந்தால் அவளுடைய ஜாதகத்தின்படி தேவரீர்க்கு உயிர்மாய நேர்ந்திடுமே; பிறகு இங்காடு அராஜகமாயொழியுமே; நாங்களும் புகலற்றுத் தடுமாறுவோமே' என்று வருத்தங்காட்டி விளம்ப, அது கேட்டு ஆழ்வான் "அப்படியன்று, அவளிடத்தில் நாம் சிற்றின்பத்தை விரும்பினாலன்றே நமக்கு அப்படிப்பட்ட தீங்கு விளைவது; நமக்கு அதில் சிறிதும் விருப்பமில்லை; விவாஹத்திற்கு இரண்டு பலன்களுண்டு; அவையாவன—தர்மாநுஷ்டானமும், ஸந்தானமும். "தர்ம ப்ரஜார்த்தம் க்ருஹமேதே" என்று சொல்லி விவாஹம் செய்துகொள்வது வழக்கம்; நாம் தர்மாநுஷ்டானத்திற்காக மாத்திரம் மணந்துகொள்வோமேயன்றி ப்ரஜோத்பத்திக்காக மணந்து கொள்வோமல்லோம்; ஆகவே இருவரும் சுகமே வாழ்வோம், தாரைவார்த்துக் கொடுங்கள்" என்று சொல்லி அம்மகளை மணம்புரிந்துகொள்ள, அவளும் சிற்றின்பத்தில் நெஞ்சு சிறிதும் செல்லாதவளாய் ஞானபக்தி விரக்திகள் நாள்தோறும் வளரப்பெற்று ஆண்டாள் என்னுந் திருநாமத்தை அன்வர்த்தமாக்கிக்கொண்டு எழுந்தருளியிருந்தாள். ஆழ்வான் வைபவத்திற்காட்டிலும் அவரது தேவியாரான ஆண்டாளின் வைபவம் அளவற்றிருக்கும். சாஸ்த்ரார்த்தங்களில் தமக்கு எதாவது ஸந்தேஹம் தோன்றினால் தேவியாரைக் கேட்டுத் தணிந்துக்கொள்வது வழக்கமென்று பெரியோர் பகர்வர்.

ஆழ்வானுடைய நிஷ்டா விசேஷம்

ஆழ்வான் எம்பெருமானர் திருவடிகளில் ஆச்ரயிப்பதற்கு முன் சிறந்த செல்வம் மல்கிக் கூரமாகரிலேயே எழுந்தருளியிருக்குங்காலத்திலே, பெருமாள் கோயிலெம்பெருமான்களுக்கு எவ்வளவு விபவமாக மஹோத்ஸவங்கள் நடந்தபோதிலும் தாம் அவ்விடத்துக் கெழுந்தருளாமல் ஸ்வதேசந்தன்னிலே விசேஷமாக

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அதிதிகளை உபசரித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார். இருக்கையில் பேரருளாளனுடைய வைகாசித் திருநாளை ஸேவிப்பதற்காக வடநாட்டில் நெடுந் தூரத்தில் நின்றும் வந்த இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் கூரத்திலே ஆழ்வான் திருமாளிகையிலே தங்கியாராதனம் புஜித்துவிட்டுப் பேரருளாளன் ஸந்நிதிக்குப் புறப்பட்டுச் சென்றனர். கருடோத்ஸவத்தன்றும் ஆழ்வான் பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளாதிருக்கக் கண்ட அந்த தேசாந்தரி ஸ்ரீவைஷ்ணவர்கள் "ஆயிரம் பதினாயிரம் பொற்காசுகள் செலவழித்துக் காதம்பலவும் திரிந்தழன்று வந்து பல்லாயிரம் பேர்கள் ஸேவித்துப் போருகிற இந்த மஹோத்ஸவத்தை ஆழ்வான் ஸேவியாமல் தம் மாளிகையையே கர்த்துக்கொண்டிருக்கிறாரே!" என்றிப்படி இழிவாகச் சில எண்ணங்கள் எண்ணிக் கொண்டு பெருமாள் ஸந்நிதிக்கு வந்தவளவிலே, அவ்விடத்தில் இவர்களுக்குப் பேரருளாளன் ஸேவை ஸாதியாதொழிய, இஃது என்ன தெளர்ப்பாக்யம்! என்று இவர்கள் மூர்ச்சை யடைந்தனர்; பின்பு பேரருளாளன் அர்ச்சக முகத்தாலே "ஆழ்வான் திருவடிகளில் நீங்கள் மஹாபராதங்களாகையால் மீண்டு அவர் திருவடிகளிற் சென்று ஸேவித்து அவரைப் பொறுப்பித்துக் கொண்டாலன்றி உங்கள் கண்ணுக்கு நான் இலக்காகமாட்டேன்" என்றருளிச் செய்ய, உடனே அவர்கள் தெளிந்து ஆழ்வான் திருவடிகளிற் சென்று வேரற்ற மரம்போலே விழுந்து, முதலில் தாங்கள் எண்ணினபடியையும் பிறகு நடந்தபடியையும் விஜ்ஞாபித்துப் பலமுகமாகத் தோத்திரம் பண்ணிப் பிரார்த்திக்க, ஆழ்வான் புன் முறுவல் செய்தருளி 'மறுபடியும் நீங்கள் பெருமாள் கோயிலுக்குச் செல்லுங்கள். பெருமாள் குளிரக் கடாக்ஷிப்பர்; மீண்டு நீங்கள் இவ்விடம் வருங்கால் சிறிய காஞ்சீபுரத் தெருவில் நின்றும் ஒருபிடி மண்ணையும் பெரிய காஞ்சீபுரத் தெருவில் நின்றும் ஒருபிடி மண்ணையும் கொண்டு வாருங்கள்' என்று நியமித்தனுப்ப, அவர்களும் போய்ப் பேரருளாளனை ஸேவித்துவிட்டு இரண்டுபிடி மண் கொண்டு வர, ஆழ்வான் தங்கத்தட்டில் ஒருபிடி மண்ணையும் வெள்ளித்தட்டில் மற்றொருபிடி மண்ணையும் வாங்கிக்கொண்ட வளவிலே, அவை ஸாளக்ராம சிலைகளும் ஸ்படிக லிங்கங்களுமாய்த் தோற்ற, அந்த வடநாடர் இவ்வதிசயத்தைக் கண்டு 'இஃது என்ன ஆச்சரியம்!' என வியந்தனர் என்பர் பெரியோர்.

ஆழ்வான் செல்வங்களைத் துறந்து இராமானுசனடியினை சேர்தல்

கூரமாநகரில் இவருடைய திருமாளிகை தேவேந்திரபவனம் குபேரபவனம் முதலியவற்றையும் அதிசயித்துச் செல்வம் மிக விஞ்சியிருந்தது. திருமாளிகை வாசற்கதவுகளிற் கிண்கிணிகளின் ஓசை யோஜனை தூரத்துக்கு அப்பால் ஒலிக்குமென்றால், இவரது ஐச்வரியத்தின் வீறு எத்தகைய தென்னலாம்!; அச் சிறந்த செல்வத்தினால் பல ஏழைகளையும் ஸாதுக்களையும் மற்றும் பலரையும் பலவகையாகப் போஷித்துக்கொண்டு மஹா தர்மிஷ்டரா யெழுந்தருளியிருந்தார். நாள்தோறும் பெருமாள் கோயிலில் *ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்வல பாரிஜாதமான பேரருளாளனது ஸந்நிதியில் இராத் திருவாராதனம் முற்றும் முடிந்து தீர்வைஸாதமும் அமுது செய்து பெரிய திருவாசற் கதவுகள் மூடப்பட்டபிறகே இவருடைய திருமாளிகை வாசற்கதவு மூடப்படுவது வழக்கம். ஒருநாள் பேரருளாளன் ஸந்நிதியில் ஒரு மஹோத்ஸவ நிமித்தத்தினால் இராத் திருவாராதனம் முடிவுபெறத் தாமதித்ததனால் நியதமான காலத்தில் திருவாசற்கதவு சாத்தப்படாமலிருக்கச் செய்தேயும் இவரது திருமாளிகைக் காவலர் அதனை யறியாதாராய் நித்திய வழக்கப்படி நியதமான காலத்தில் திருமாளிகை வாசற்கதவுகளைச் சாத்தினர். அவற்றிற் கிண்கிணிகளின் ஓசை ஒரு யோஜனை தூரத்துக்கு அப்பால் ஒலிக்குமென்று முன்னமே கூறப்பட்டதே; அவ்வோசை பேரருளாளனது திருச்செவிகட்கு இலக்காயிற்று. அதனைத் திருச்செவி சாத்திய பேரருளாளன், தனக்கு அந்தரங்கமாகத் திருவாலவட்டம் வீசிக்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொண்டு தன்னெடு ஒருநீராகக் கலந்து, தான் அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து சோதிவாய் திறந்து வார்த்தைகள் அருளிச்செய்யும்படி பரமபாக்கியம் பெற்றிருந்த திருக்கச்சி நம்பியை நோக்கி, 'நம்பீ! இதுவென்? நம்முடைய இராத் திருவாராதனம் முடிவுபெறுதற்கு முன்னமே நமது கோயிற்கதவு சாத்தப்படுவதேன்?' என விணவியருள. 'இவ்வோசை இங்குற்றதன்று; தெடுந்தூரத்தினின்றுங் கேட்கப்படுகின்றது; கூரத்தாழ்வானுடைய திருமாளிகைச் செல்வத்தின் சிறப்பாம் இது' என்று திருக்கச்சி நம்பி விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்ட தேவபிரான் புன்முறுவல் செய்து 'ஆழ்வானது ஐச்வரியமோ நம்மை இங்ஙனே மயக்கிற்று!' என வுரைத்தருளி வேறு விஷயங்களைப் பிரஸ்தாவிக்கலாயினன். இங்ஙனமாகக் கச்சிநம்பிக்கும் கமலை கேழ்வனுக்கும் நடந்த ஸம்வாதத்தைப் பின்பு கூரத்தாழ்வான் கேட்டருளிப் பரம விரக்தராகித் தமது ஸகலமான ஐச்வர்யங்களையும் ஸத்பாத்திரங்களில் விநியோகித்துவிட்டு, தமக்கு தேஹயாத்ரா சேஷமாகச் சிறிது சேமித்து வைத்துவிட்டு, இனி ஒரு ஸல்லாசிரியரை அடிபணிந்து உய்வு பெறவேணுமென்று முயன்றவளவிலே— "விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகாசார்யரான உடையவர் தென்னத்தியூர் கழலிணைக்கீழ் ஸம்ச்ரயித்து இராமாநுச முனியாயினர்" என்று கேட்டுப் பெரு மகிழ்ச்சியோடே பெருமாள்கோயிலுக் கெழுந்தருளி அவ்வெம்பெருமானர் திருவடிகளில் ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரம் முதலியவற்றைப் பிரஸாதிக்குமாறு பிரார்த்தித்துப் பெற்று அவர் திருவடிகளின் கீழே நிழலும் அடிதாறும் போலே ஒருகாலும் பிரியாமல் அத்தாணிச் சேவகராய் ஸாமான்ய சாஸ்த்ரங்களையும் அத்யாத்ம சாஸ்த்ர ஸம்ப்ரதாயங்களையும் ஒதி ஒதுவித்துக்கொண்டு இதுவே போதுபோக்காக எழுந்தருளியிருந்தார். பிறகு எம்பெருமானரோடு கூடவே திருவரங்கம் பெரியகோயில் சென்று சேர்ந்தார்.

பொன்வட்டில்தனையெறிந்த புகழுடைமை

இப்படி தேவுமற்றறியாதே எம்பெருமானர் திருவடிகளிலே பரம பக்தராயிராநின்ற ஆழ்வான், தம்முடைய ஜன்ம பூமியிலே தமக்கு தேஹயாத்ரா சேஷமாக முன்பு சில பொருள்கள் சேமித்து வைத்ததும் ஸ்வரூபவிருத்தமாகையாலே அவை நிச்சேஷமாகப் பரித்யஜிக்கத் தக்கவை யென்று திருவுள்ளம்பற்றி ஆசார்யன் ஸந்நிதியிலே விடைபெற்றுக் கூரமாகரக்கு எழுந்தருளி அப்பொருள்களைப் பரம பாகவதர்கட்கு விநியோகித்துவிட்டுத் தமது தேவியாரான ஆண்டாளையுங் கூட்டிக் கொண்டு புறப்பட்டுப் பெருமாள் கோயிலிலே பேரருளாளனை மங்களாசாஸநம் செய்தருளி நம்பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளாநிற்கச்செய்தே ஸ்ரீமதராந்தக ஸமீபத்தில் காட்டிடையே எழுந்தருளும்போது தேவியார் "பயமாயிருக்கிறதே" என்று சொல்ல; ஆழ்வான், "மடியில் கனமிருந்தாலன்றே வழியில் பயமுண்டாவது: அப்படி உன்னிடத்தில் ஏதாகிலுமுண்டோ?" என்று கேட்டருள, ஸ்வர்ணபாத்திரத்தில் அமுது செய்துகொண்டிருந்த தேவரீர்க்கு இலையில் அமுது செய்வது வருத்தமாயிருக்குமே யென்றெண்ணி ஒரு பொன்வட்டிலை மாத்திரம் முன்பு மிகுத்தினேன், அது மடியில் இராநின்றது" என்று திருச்செவியிலே ஏகாந்தமாக விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வானும் "பொன்வட்டில் தனையெறிந்த புகழுடையோன் வாழியே" என்னும்படி அப்பொன் வட்டிலைத் தேவியார்கையில் நின்றும் வாங்கிக் காட்டில் தூற்றிலே எறிந்துவிட்டு, உடையவர்க்கு அபயப்ரதாநம் பண்ணின ஸ்ரீமதராந்தகத்திலே யெழுந்தருளி ஏரிகாத்த பெருமானைத் திருவடி தொழுது அங்கே திருமகிழடியிலே யெழுந்தருளி 'த்வயம் விஞ்ஞந்த இடம்' என்று அவ்விடத்தை ஸேவித்து மனமகிழ்ந்து, மற்றை நாள் தொடங்கிப் பயணகதியிலே வழியிலுள்ள திருப்பதிகளை ஸேவித்துக்கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலெழுந்தருளி முன்பு போல உடையவர் ஸ்ரீ பாதத்தில் அத்தாணிச் சேவகராய் எழுந்தருளி யிருந்தார்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருவரங்கத்தமுதனாரைத் திருத்திப் பணிகொள்ளுதல்

அக்காலத்திலே, கோயில் கொத்தியுள்ளவர்கட்குத் தலைவராயிருந்த திருவரங்கத்தமுதனாரென்பவர் ஒரு நாள் உடையவர் திருமுன்பே வந்து ஸேவித்து, 'பாவங்கள் கூடுபூரித்துக் கிடக்கிற அடியேனைத் திருத்தி ஸ்வாமிக்கு சேஷமாக்கும்படி ஒரு ஸாத்விகர்க்கு நியமித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் ஆழ்வானை அழைத்தருளி அமுதனாரைக் காட்டி, 'இவர் நம்முடைய வாழ்முதலான நம்பெருமாள் ஸ்ரீகார்யத்தக்குப் பரிவராயிருப்பவர்; இவரது தாழ்வுகளைப் பாராமல் இவரை அநுவர்த்தித்து அநுகூலராக்கி நம்பக்கலிலே கொண்டுவந்து சேரும்' என்று நியமித்தருள, ஆழ்வானும் ஆறுமாதம் அவரை அநுவர்த்தித்துப் பரிபக்வராக்கி உடையவர் திருவடிகளிலே கொண்டுவந்து காட்டிக்கொடுக்க, உடையவரும் அவ்வமுதனாரை ஆழ்வான் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினர். "மொழியைக் கடக்கும் பெரும் புகழான் வஞ்சமுக் குறும்பாங்குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண்கூடியபின்" என்றாரிறே அமுதனார் தாமும்.

ஆழ்வான் அமுதனார் க்ருஹத்தில் ஏகாஹமமுது செய்தல்.

அமுதனார் ஆழ்வான் திருவடிகளில் அத்தரங்கராய்க் காலக்ஷேபம் செய்து வருகிற காலிலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடியடைய, தசாஹம் கடந்த பின்பு "ஏகாஹத்துக்கு நிமந்த்ரண ஸ்வாமியாக ஒருவரை நியமித்தருளவேணும்" என்று உடையவர் ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்ய; உடையவரும் ஆழ்வானை நோக்கி 'நீர் போம்' என்ன; ஆழ்வானும் சிறிதும் முகம் கன்றாமல் அப்படியே எழுந்தருள, அமுதனாரும் 'ஆசாரியர் இங்ஙனே எழுந்தருளப் பெறுவதே!' என்று தாழ்ந்து தரைப்பட்டு ஸேவித்து ஏகாஹச்ராத்தத்திலே அமுது செய்தருளப் பண்ணுவித்து, ஏற்கெனவே தாமும் தமதுமெல்லாம் அத்தலையிலதாகவே அறுதியிட்டிருக்குமவராகையாலே அபரிமிதமான பொருளை ஸமர்ப்பித்து 'இவற்றைத் திருவுள்ளம்பற்றி யருளவேணும்' என்று பிரார்த்திக்க, ஆழ்வானும் அவருடைய பிரார்த்தனைக்காக அவற்றை அங்கீகரித்துக் கனகவர்ஷமாகத் தெருவிலே வர்ஷித்தக்கொண்டு எல்லாவற்றையும் இறைத்து விட்டுத் திருக்காவேரியிலே நீராடித் திருமண்காப்பு சாத்திக்கொண்டு உடையவர் ஸ்ரீபாதத்திலே சென்று ஸேவித்து நிற்க, உடையவரும் ஆழ்வானை நோக்கி 'அங்குக் கிடைத்த அர்த்தம் எங்கே?' என்று கேட்க, ஆழ்வானும் 'அவை அநர்த்தமாகையாலே அப்போதே கைகழிந்து போயின' என்று நடந்த செய்தியை விஜ்ஞாபிக்க 'இதொரு விலக்ஷணவ்யக்தி இருந்தபடி என்!" என்று திருவுள்ளம் உகந்தருளினர். நம்பெருமாள் ஸந்நிதித் திறவுகோல் அமுதனாருடைய ஆதீனத்திலிருந்தபடியால் அதை உடையவர் உபாயமாகக் கைப்பற்ற விரும்பி ஆழ்வானை யழைத்து "நீர்போய் ஏகாஹத்தில் புஜித்து முடிவில் ஸந்நிதித் திறவுகோலைப் பெற்றருளன்றி 'ஸகலம் ஸம்பூர்ணம்' சொல்லவேண்டா" என்று நியமித்தனுப்ப, ஆழ்வானும் அப்படியே திறவுகோலைப்பெற்று வந்தார்; பின்பு "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்" என்று கடல்சூழ்ந்த மண்ணுலக முற்றும் போற்றும்படி எம்பெருமானார் நம்பெருமாள் ஸந்நிதிக் கைங்கரியங்களைப் பரிஷ்கரித்தருளினர் என்று ப்ரஸித்தம்.

[ஆழ்வான் வ்ருத்தி க்ரந்தத்தைக் கடாக்ஷித்துத் தரித்துக் கொள்ளுதல், ஸ்ரீபாஷ்யமருளிச் செய்ய உசாத்துணையாயிருத்தல் முதலியவை எம்பெருமானார் வைபவத்தில் விளக்கப்பட்டன. அவற்றை அங்கே கண்டு கொள்வது.]

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆழ்வான் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் ஸந்தேஹம் தெளிந்து வருதல்

பிறகு எம்பெருமானர் கோஷ்டியிலே உபய வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் நடவாகிற்க, "ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களும் சேஷத்வமும் நிரூபகமாகச் சொல்லப்படா நின்றது; இவற்றினுள் அந்தரங்க நிரூபகம் எது?" என்று திருவோலக்கத்திலே ப்ரஸ்தாவம் நிகழ, எம்பெருமானர் ஸர்வஜ்ஞராய் எழுந்தருளியிருக்கச் செய்தேயும் இதனை ஆசார்யமுகேந வெளியிடவேணுமென்று திருவுள்ளம் பற்றி ஆழ்வானை நோக்கி 'வாரீர் ஆழ்வான்! திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளி நம்பியை ஸேவித்து இதனை அறிந்துவாரும்' என்று நியமிக்க, ஆழ்வானும் நம்பி ஸந்நிதிக் கெழுந்தருளித் தண்டன் ஸமர்ப்பித்துச் செய்தியை விண்ணப்பஞ்செய்து ஆறு மாஸம் ஸேவித்திருந்தும் அவர் இரங்கக்காணுமையாலே, 'எம்பெருமானர் ஸந்நிதியிலே போய் ஸேவித்து வருகிறேன்' என்று சொல்லிப் புறப்படப்புக, நம்பி அவரை அழைத்து "மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார் அடியேனுள்ளானுடலுள்ளா னென்றருளிச் செய்தபடி கண்டாயே" என்று மொழிந்தருள, ஆழ்வானும் 'நந்யோஸ்மி' என்றெழுந்தருளினர்.

இதன் கருத்து யாதெனில்;—திருக்கோட்டியூர் நம்பி எடுத்துக் காட்டிய அடியேனுள்ளா னென்ற பாசுரம் திருவாய்மொழியில் 8-8 2ல் உள்ளது "கண்கள் சிவந்து" என்கிற பாட்டும் 'அடியேனுள்ளான்' என்கிற இப்பாட்டும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்குமவை. இவற்றுள் 'அடியேனுள்ளா' னென்ற பாட்டில் முதல் விசேஷணத்தினால் 'எம்பெருமான் ஜீவாத்மாவை அநுப்ரவேசித் திருக்குமவன்' என்றருளிச்செய்யக் கருதிய ஆழ்வார் 'ஆத்மாவிலுள்ளான்' என்று சொல்லியிருக்கவேண்டும். ஜீவாத்மா அஹமர்த்த மாகையாலே 'என்னுள்ளான்' என்றருளது சொல்லியிருக்க வேண்டும்; இப்படி சொல்லாமல் அடியேனுள்ளானென்று அடிமையையிட்டு ஆத்மாவை நிரூபித்தமை தோற்ற அருளிச் செய்கையாலே, ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களிற் காட்டிலும் சேஷத்வமே ப்ரதாந நிரூபகமென்ற தாயிற்று. [இதன் விவரணத்தை அடியேனுடைய வேறு நூல்களிற் காண்க.]

ஆழ்வான் பௌராணிகைகங்கரியம் பெறுதல்

ஒருநாள் நடுப்பகலில் உச்சிவெய்யிலிலே எம்பெருமானர் தாமொருவராகத் திருவரங்கத்தமுதனார்க்ருஹத்துக்கெழுந்தருள, அமுதனரும் 'இதுவென் இப்போது!' என்று விஸ்மயத்துடனே ஸேவித்துக் கேட்க, உடையவரும் "உம்முடைய பௌரோஹித்யக் காணியை நமக்குத் தரவேணும்" என்ன, அமுதனர் மஹாப்ரஸாதமென்று உகந்து ஹிரண்யோதகதாரா பூர்வகமாக ஆழ்வானை உத்தேசித்து ஸமர்ப்பித்தார். அன்று தொடங்கி ஆழ்வானைப் பௌரோஹித்யத்துக்குக் கட்டளை யிட்டு நித்யம் நம்பெருமாள் ஸந்நிதியிலே புராணம் விண்ணப்பம் செய்யும்படியாக நியமித்தருளினர். இக்கைங்கரியம் இவரது திருக்குமாரரான பட்டர் பரம்பரையாக இன்றளவும் ஸந்ததியார்க்கு ப்ராப்தமாயிரா நின்றது. [பட்டருடைய தனியனில் "ஸ்ரீரங்கேச புரோஹித:" என்றது காண்க திருமஞ்சனக் கட்டியம் ஸேவிப்பது மிடுக்கம்.]

ஓர் ஊமை பேற்ற பாக்கியத்தைக்கண்டு ஆழ்வான் வருந்தினது

உடையவர் ஒருநாள் ஓர் ஊமையை யழைத்து மடத்துக்குள்ளே நிறுத்தி திருவாசற்கதவுகளை யடைத்து ஸம்ஜ்ஞையாலே தமது திருவடிகளைக் காட்டிக் கொடுக்க, அந்த ஊமையும் பாக்யவசத்தாலே 'இத் திருவடிகளே நமக்குத் தஞ்சம்' என்றறிந்து அத்திருவடிகளைத் தனது தலைமேலணிந்து கிடக்க, ஆழ்வான் இதைக் கதவின் புரையாலே கண்டு 'ஐயோ! ஆழ்வானைப் பிறந்து சாஸ்த்ரங்களைக் கற்றுக்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கேட்டேனே! ஊமையாகப் பிறவாதொழிந்தேனே!' என்று மூடிமேல் மோதிக் கொண்டு கதறினரென்று ப்ரஸித்தம்.

ஆழ்வானுடைய ஜீவகாருண்யம்

ஆழ்வான் ஒருநாள் ஒரிடத்தே வழிபோகாநிற்க, ஒரு ஸர்ப்பத்தால் பிடிக்கப் பட்ட தவளை கூக்குரலிடக்கேட்டு 'இது ஆரிடுக்கூப்பிடுகிறதோ தான்!' என்று மோஹித்து விழுந்தருளினர். மற்றொருநாள் கார்யார்த்தமாக ஒரு தோட்டத்துக்கு எழுந்தருள, அங்கே அப்போதுதான் ஒருவன் ஒரு வாழைக்குருத்தை அறுத்துக் கொண்டுபோக, அதில் நின்றும் பால்பெருகா நிற்கக்கண்டு மூர்ச்சித்து விழுந்தார். பின்னுமொருநாள் திருக்காவேரியிலே தண்ணீர்க்குடத்தை இடுப்பிலே எடுத்து வைப்பாரில்லாமல் வருந்திநின்ற ஒரு பெண்ணுக்குத் தண்ணீர்க்குட மெடுத்து வைத்து வழிநடத்தியருளினர். இவைபோல்வன மற்றும்பல இதிஹாஸங்களும் ஆழ்வானுடைய ஜீவகாருண்ய ப்ரகாசகமானவை ப்ரஸித்தம்.

ஆழ்வானுடைய ஆத்மகுண பரிபூர்த்தி

அக்காலத்திலே அரசாண்டுவந்த சோழராஜன் வைஷ்ணவத்ரோஹியாகையாலே ஆங்காங்குள்ள விஷ்ணு ப்ரதிமைகளை யெடுத்துக் கடலிலெறிந்துவிடவேணுமென்று முயன்றபோது அவனுக்கு இஷ்டரானவர்கள் "மந்த்ரபூர்வகமாகப் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட விஷ்ணு பிம்பங்களை அழிவச்செய்தால் உனக்குப் பெருத்த தீங்கு விளையும்" என்று சொல்ல, அதுகேட்ட சோழன் 'அந்தப் ப்ரதிமைகளில் தெய்வ சக்தியை உத்வாஸநம்பண்ணி அழியச் செய்வோம்' என்று நிச்சயித்து ஒரு பார்ப்பா னுக்குப் பணங்கள் கொடுத்து 'நீ அத்ருச்யாஞ்ஜந மிட்டுக்கொண்டு உத்வாஸநம் பண்ணு' என்று ஆஜ்ஞாபிக்க, அவனும் திவ்ய தேசங்களிலே சென்று அப்படியே அத்ருச்யாஞ்ஜந மிட்டுக்கொண்டு உத்வாஸநம் பண்ணி பகவத் விக்ரஹங்களைக் கடலிலே எடுத்தெறிகிற செய்தியை எம்பெருமானார் திருச்செவிசாத்தி 'நாம் நெடு நாளாக இத்திருவரங்கம் பெரிய கோயிலை விடாதே நோக்கிக்கொண்டு போருகிறோம்; இவ்விடத்துக்கும் அழிவு வரும்படி ஆஸுரவர்க்கம் மேலிடா நின்றது; இனிமேல் செய்யவேண்டுவதென்?' என்று வியாகுலப்பட்டுப் பெரிய நம்பியோடே சிந்தித் திருக்க, 'நான் பெருமாளுடைய திருவெல்லையிலே ஒரு ப்ரதக்ஷிணம் வரும்படியாக உம்முடைய சிஷ்யர்களில் ஒருவரை என்பின்னே அனுப்பவேணும்; என்பின்னே வாரா நின்றால் 'ஒருவன்பின்னே போகிறோம்' என்று தன்னெஞ்சில் படாதே மிழல்போலே என்னைப் பின் செல்பவனாக இருக்கவேணும்; அப்படிப்பட்ட ஒரு சிஷ்யனைப் பார்த்தனுப்பும்' என்று பெரியநம்பி திருவாய் மலர்ந்தருள, இப்படிப் பட்ட ஆத்மகுண பரிபூர்ணரான சிஷ்யர் ஆழ்வானொருவரே என்பது உடையவர்க்கு நன்கு தெரிந்திருந்தும் இதனைப் பெரியநம்பி திருவாக்கினால் வெளியிடவேணுமென் றெண்ணிக்கொண்டு நம்பியை நோக்கி 'இப்படிப்பட்ட சிஷ்யர் இவ்விடத்தில் இருப் பதாகத் தெரியவில்லையே!' என்று சொல்லி நிற்க, 'நம் கூரத்தாழ்வானை அனுப்ப லாகாதோ?' என்று நம்பி நியமித்தருள, அருகிலிருந்த ஆழ்வான் இதைக்கேட்டு "நம்பிகள் நம்ஸ்வரூபத்தினுண்மையை இங்ஙனே யறிந்து பல சிஷ்யர்களின் முன்னே இப்படி அருளிச்செய்யும் படியான பாக்கியம் பெற்றோமே!" என்று பெரு மகிழ்ச்சி யடைந்து, நம்பிகளின் திருவுள்ளப்படியே ப்ரதக்ஷிணத்திற்குப் பின் சென்றார். [இந்த இதிஹாஸம் திருவாய்மொழி ஏழாம் பத்தில் பத்தாந்திருவாய் மொழியில் ஐந்தாம் பாட்டில் "பலரடியார் முன்பருவீய" என்றவிடத்து ஈடுமுப்பத் தாறுபிரத்திலும் அரும்பதவுரையிலும் காணத்தக்கது.] இப்படிப்பட்ட ஆத்மகுண பரிபூர்த்தி ஆழ்வானொருவர்க்கே அஸாதாரணமென்பது நிர்விவாதம்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆழ்வானுக்குத் திருக்குமாரர்கள் திருவவதரித்தல் பற்றி மேலே பட்டர் வைபவத்தில் காண்க. வீரசைவனை சோழராஜனுடைய ஸபைக்கு யதிராஜ வேஷத்துடன் எழுந்தருளினது முதலான செய்திகளைக் கீழே எம்பெருமானார் வைபவத்திலே பரக்கக் காண்க.

ஆழ்வான் திருமாலிருஞ்சோலை யாத்திரை புறப்படுதல்

சோழராஜனது ஸபையில் சேர்ந்த கிலேசத்தை ஒருவாறு பரிஹரித்துக் கொண்டு நம்பெருமாள் ஸந்நிதிக்கு விடைகொண்ட ஆழ்வான் பெரிய ஸ்ரீபலிபீடத் தருகே தெண்டன் ஸமர்ப்பித்துத் தம்முடைய அளவற்ற ஆர்த்தியை ஆவிஷ்கரித்து, 'பெரிய நம்பியை அங்கீகரித்தாப் போலே அடியேனையும் அங்கீகரித்தருளலாகாதா?' என்று திருவுள்ளம் கொந்து விண்ணப்பஞ்செய்து பின்பு உள்ளேபுகுந்து ஸேவிப்ப தாக எழுந்தருள, 'ராமானுஜ ஸம்பந்தமுடையாரொருவரும் உள்ளேபுகுந்து ஸேவிக்க வொண்ணாது' என்று சோழன் கட்டளையிட்டு வைத்தபடி அவனது சேவ கர்கள் ஸந்நிதி வாசலிலே நின்று ஆழ்வானை உள்ளே புகவொட்டாமல் தகைய, அங்குள்ளாரில் சிலர் 'இந்த ஐயங்கார் மற்றவர்களைப் போலல்லர்; இவர் ஆத்ம குணங்கள் கிரம்பியவர்; இவரைப் புகுரவிடுங்கள்' என்று சொல்ல; இவற்றைக் கேட்ட ஆழ்வான் திடுக்கிட்டு நடுங்கி நாலடி பின்வாங்கி "ஐயோ! எல்லார்க்குமுண் டான ஆத்மகுணம் ஆசார்ய ஸம்பந்தத்துக்கு ஹேதுவாயிருந்தது; அடியேனுக் குண்டான ஆத்மகுணம் ஆசார்ய ஸம்பந்தத்தை அறுத்துக் கொள்ளுகைக்கு ஹேது வாய் விட்டதோ" என வெறுத்துக்கொண்டு புறப்பட்டு "என் பேற்றுக்கு எம்பெரு மானார் திருவடி ஸம்பந்தமே அமையும்; அந்த ஸம்பந்தத்தை யொழித்துப் பெருமாளை ஸேவிக்கவேண்டுவதில்லை" என்று உறுதிகொண்டு அன்றே கோயிலில் வாஸத்தை விட்டிட்டுத் திருமாலிருஞ்சோலையில் வாஸத்தை விரும்பிப் பயணகதியாகப் புறப்பட் டெழுந்தருளினார்.

மூன்று ஸ்தவங்கள் அருளிச்செய்தது

வழிநடையே எழுந்தருளும்போது தம்முடைய மனத்துயரங்கள் நினைவுக்கு வராதிருக்கும்படி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை நினைந்து நெஞ்சு கனிந்திருக்கக் கருதி ஸ்ரீவைகுண்டஸ்தவம் அதிமானுஷஸ்தவம் என்ற அற்புதமான இரண்டு ஸ்தோத்ரங்களை அருளிச்செய்துகொண்டே திருமாலிருஞ்சோலைக் கெழுந் தருளினார். இவற்றுள், ஸ்ரீவைகுண்டஸ்தவம் நூறு சுலோகங்கள் கொண்டது. ஆழ்வானருளிச்செய்த பஞ்சஸ்தவங்களில் இந்த ஸ்தவமே முதலதாம். இத்தால் பரவாஸுதேவனுடைய ஸ்வரூபகுண விபூதிகளை விசதமாக அநுஸந்தித்து அநுப விக்க இங்கனே விபவாவதாரங்களையும் பேசி அநுபவிக்கத் திருவுள்ளம்பற்றி இரண்டாவதாக அதிமானுஷஸ்தவமருளிச் செய்தார். இதில் நரஸிம்ஹாதி அவதாரங்கள் சிலவற்றைச் சுருக்கமாகவும் ஸ்ரீராம க்ருஷ்ணாவதாரங்களைப் பெருக்கமாகவும் பேசி அநுபவித்தார். இதுவரையிலும் உலகத்தில் வெளிவந்துள்ள ஸம்ஸ்க்ருதவாங்மயங் களில் இவ்வதிமானுஷஸ்தவத்திற்கீடான சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்குமமைந்த வேறொரு வாங்மயம் கண்டதில்லை யென்று வித்வத் ரஸிக விவேகிகள் ஒருமிடறாக விளம்புவர்.

அழகர் ஸந்நிதியிலே தம் குறையை விண்ணப்பஞ்செய்தல்

இங்கனே பரம போக்யமான இரண்டு ஸ்தவங்களை அருளிச்செய்து, அகங் காரம் திருமாலிருஞ்சோலையை அடைந்து அவ்விடத்திலே சுந்தரத் தோளுடையானை ஆழ்வார் அநுபவித்தாப்போலே தாமும் அநுபவித்து அவ்வெம்பெருமான் விஷய

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மாக அமுதக்கடலென்னலாம்படியாய் நூற்றுமூப்பத்திரண்டு ச்லோகங்கள் கொண்ட தான ஸுந்தரபாஹுஸ்தவ மருளிச்செய்து, அதன்முடிவிலே—

"விஜ்ஞாபநாம் வநகிரீச்வர! ஸத்யரூபாம் அங்கீகுருஷ்வ கருணார்ணவ மாமகீநாம்;
ஸ்ரீரங்கதாமநியதாபுரமேகதோஹம் ராமாநுஜார்ய வசந: பரிவர்த்திஷீய. என்றும்,

காருண்யா ம்ருதவாரிதே வ்ருஷபதே ஹேஸைத்ய ஸங்கல்பந!
ஸ்ரீமந்ஸுந்தர! யோக்யதா விரஹிதாந் உத்ஸார்ய ஸத்வத்ஸல;
க்ஷாம்யந் ஸாது ஜநை: க்ருதாம்ஸ்து கிலாதேவாபசாராந் க்ஷணாத்
தத்போக்யா மகிசம் குருஷ்வ பகவந் ஸ்ரீ ரங்க தாமச்ரியம். என்றும்

திருவரங்கமாநகர் ஆஸுரப் பூண்டுகளொழிந்து நிஷ்கண்டகமாக வேணு மென்றும் எம்பெருமானுர் திருவடிகளின் கிழலிலே தாம் வாழப்பெற வேணுமென் றும் ஆர்த்தராய்ப் பிரார்த்தித்துக்கொண்டு சிலகாலம் அங்கே எழுந்தருளியிருந்தார். அவ்வளவிலே, அந்த மஹாபாதகியான சோழன் கழுத்திலே புண்ணிப் புழுத்து மாண்டானென்ற செய்தி கேள்விப்பட்டு ஆழ்வான் அழகர் ஸந்நிதியிலே விடை பெற்று மீண்டும் கோயிலேற எழுந்தருளினர்.

மேனாட்டில் நின்றும் எம்பெருமானுர் கோயிலுக்கெழுந்தருளி ஆழ்வானை உசாவுதல்

சோழனுடைய உபப்லவங்களுக்கு அஞ்சித் திருநாராயண புரத்திலெழுந் தருளியிருந்த எம்பெருமானுர், கோயிலில் நின்றும் அங்குவந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவ ராலே—சோழராஜ ஸதஸ்ஸில் ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் நேர்ந்த ஆபத் தைக் கேள்விப்பட்டுச் சாலவும் திருவுள்ளம் நொந்து, 'ஆழ்வானுகிலும் உயிர்வாழ்ந் திருக்கப் பெற்றோமே!' என்று திருவுள்ளம்தேறி, அப்போது தம்மிடத்தில் கைங்கரி யம் செய்துகொண்டிருந்த மாரெருன்றில்லா மாருதிச் சிறியாண்டானை 'மிகவும் விரை வாகக் கோயிலுக்குச் சென்று ஆழ்வானையும் ஆராய்ந்து அங்குள்ள விசேஷங்களை யும் அறிந்துவாரும்' என்று நியமித்தருள, அவரும் மிகவிரைந்து கோயிலுக்கு வந்து சோழன் புழுத்துமாண்ட வ்ருத்தாந்தமுட்பட எல்லாவற்றையும் ஆழ்வான் ஸந்நி தியிலே அறிந்துகொண்டு மீண்டு திருநாராயணபுரம் போய் எம்பெருமானுர் திருவடி களிலே இவற்றை விண்ணப்பஞ் செய்ய, அதுகேட்டு அவர் பெருமகிழ்ச்சிகொண்டு உடனே அங்கு நின்றும் புறப்பட்டு மிக விரைந்து கோயிலுக் கெழுந்தருளி முதலி களும் தாமுமாக ஆழ்வான் திருமாளிகையேற எழுந்தருள, ஆழ்வானும் எதிரே யெழுந்தருளி உடையவர் திருவடிவாரத்திலே வேரற்ற மரம்போலே விழுந்து ஸேவித்துத் திருவடிகளைச் சிக்கனப் பிடித்துக்கொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானை வாரியெடுத்தணைத்துக் கொண்டு சோகவேகத்தாலே ஒரு வார்த்தையும் அருளிச்செய்ய மாட்டாமல் உள்ளெலாமுருகிக் குரல்தழுத்து விம்மல் பொருமலாய், "வாரீர் ஆழ்வான்! இத்தர்சனத்துக்கு த்ருஷ்டி பூதரான உமக்கு இப்படி கண்போ வதே! இது என்னுடைய துஷ்கர்ம பலமன்றே?" என்றிப்படி பலவாறுக அருளிச் செய்து ஆழ்வானைத் தேற்றியருளி அவரையுங்கூட அழைத்துக்கொண்டு மடமே யெழுந்தருளினர்.

ஆழ்வான் வரதராஜஸ்தவ மருளிச்செய்தல்

மற்றைநாள் உடையவர், ஆழ்வான் திருமாலிருஞ்சோலை யாத்திரையிலே அருளிச்செய்த மூன்று ஸ்தவங்களையும் கேட்டருளி மிகவும் திருவுள்ளமுவந்து ஆழ்வானை நோக்கி 'உம்முடைய இவ்வருளிச் செயல்களாலேயன்றே நம்முடைய

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருவரங்கச் செல்வம் களையற்று நாமும் இங்கு வாழ்ந்திருக்கப் பெற்றோம்; இனி, பெருமாள் கோயிலில் பேரருளாளப் பெருமாள் வேண்டிற்றெல்லாந்தரும் கோதில் வள்ளலாக விளங்குகின்றார்; நீர் அவர் விஷயமாக 'அடியேனுக்குக் கண் தந்தருள வேணும்'. என்று ஒரு ஸ்தோத்ரம் விண்ணப்பஞ் செய்யும் என்றருளிச்செய்ய; ஆழ்வானும் அடியேனுக்கு இக்கண் வேண்டா' என்ன; எம்பெருமானரும் 'அப்படியன்று; பேரருளாளன் விஷயமாக ஒரு ஸ்தோத்ரம் சொல்லியேயாகவேணும்' என்று பலகாலும் வற்புறுத்தியருளிச்செய்ய, ஆழ்வானும் ஆசார்ய நியமனத்தைச் சிரமேற்கொண்டு வரதராஜஸ்தவ மருளிச்செய்யத் தொடங்கி "நீலமேகநீபம் அஞ்ஜந புஞ்ஜச்யாமகுந்தளம் அநந்தசயம் த்வாம்—அப்ஜபாணிபதம் அம்புஜநேத்ரம் நேந்ராந்குரு கரீச ஸதா மே" (23) என்கிற ச்லோகத்தளவு மருளிச்செய்து "எப்போதும் உன்னை ஸேவித்துக் களிப்பதற்குறுப்பான அப்ராக்ருத திவ்ய தேஹம் அடியேனுக்குத் தந்தருளவேணும்" என்று விஜ்ஞாபிக்க, அன்றிரவே ஆழ்வானுக்குப் பேரருளாளர் கனவிலே காட்சிதந்து 'நீர் வேண்டினபடியே தந்தோம்' என்றருளிச்செய்ய, ஆழ்வானும் உடனே மகிழ்ந்து எழுந்து நித்ய கர்மானுஷ்டானங்களை முறை வேற்றி, தொடங்கின வரதராஜஸ்தவத்தையும் பூர்த்தியாகத் தலைக்கட்டி உடையவர் ஸந்நிதியிலே முழுதும் விண்ணப்பஞ்செய்து காட்டி வருகையில் மேற்குறித்த "நீலமேகநீபம்" என்கிற ச்லோகத்தை வாசிக்கக் கேட்டருளும்போது, 'வாரீர் ஆழ்வான்!' இந்த ச்லோகத்தைக் கேட்டும் பேரருளாளன் உமக்குக் கண் தந்தருளாதிருக்கமாட்டான்; கண்ணைக்காட்டும் பார்ப்போம்' என்றருளிச்செய்ய, ஆழ்வானும் அப்ராக்ருத திவ்யதேஹம் அருளினதாகக் கண்ட ஸ்வப்ந ஸமாசாரத்தை விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் "அப்படியன்று; நேரில் பெருமாள்கோயிலுக்குப் போய்ப் பேரருளாளனை ஸேவித்துப் பிரார்த்தித்து வருவோம் வாரும்" என்று சொல்லி ஆழ்வானை யழைத்துக்கொண்டு கச்சிக்குப் புறப்பட்டார்.

ஆழ்வானுடைய அற்புதமான ஆத்மகுணம் கச்சியில் வெளிப்படுதல்

ஆழ்வானும் எம்பெருமானரும் பயணகதியிலே கச்சித் திருப்பதி சேர்ந்து திருவத்திமாமலைக் கெழுந்தருளினபின், உடையவர் நியமனப்படியே ஆழ்வான் வரதராஜஸ்தவத்தைப் பேரருளாளர் திருமுன்பே விண்ணப்பஞ்செய்து முடிக்கிற போது உடையவர் ப்ரதக்ஷிணமெழுந்தருளிப் பராக்காயிருக்க, பேரருளாளர் ஸ்தவம் திருச்செவிசாத்தி ப்ரஸந்நராய் 'உம்முடைய அபேக்ஷிதத்தை வேண்டிக்கொள்ளும்' என்ன; ஆழ்வான் உடையவர் திருவுள்ளப்படி கண் வேண்டிக்கொள்ளாமல் "நான் பெறும்பேறு நாலூரானும் பெறவேணும்" என்று வேண்டிக்கொண்டார். (இவனே வேண்டிக்கொள்ள வேண்டிய ப்ரஸக்தி யாதெனில்;) சோழராஜனை அடுத்திருந்த காலூரானுடைய முயற்சியே ஆழ்வான் திருக்கண்களை யிழப்பதற்கும், பெரிய நம்பி திருமாடலங்களிப்பதற்கும், எம்பெருமானர் நாடுதுறந்து எழுந்தருள்வதற்கும் காரணமென்பது கீழ்விவரித்த வரலாற்றினால் விளங்குமே; ஆகவே அப்படி அஸஹ்யாபசாரிகளில் தலைவனான அந்த நாலூரானுக்குக் கொடிய நரகம் தவறுதென்று நிச்சயித்த ஆழ்வான் 'வைஷ்ணவ குலத்திலே பிறந்தானொருவன் இவனே படுகுழியில் விழலாகாது' என்று இரக்கமுற்று 'நம்மாலல்லது அவன் உய்வுபெற வழியில்லை' என்றறுதியிட்டு, பரமத்ரோஹியான அவனுக்கும் கதி வேண்டினர். த்ரோஹிகள் திறத்திலும் அன்புடைமையென்னும் இச்சிறந்த திருக்குணம் ஆழ்வானொருவர்க்கே அஸாதாரணமென்பது விவாதமற்ற விஷயம்.

உடையவரும் ஆழ்வானும் திருவரங்கம் மீளுதல்.

பேரருளாளன் திருமுன்பே "நான் பெறும்பேறு நாலூரானும் பெறவேணும்" என்று ஆழ்வான் பிரார்த்தித்ததைப் பேரருளாளன் அங்கீகரித்தருளி

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

'அப்படியே பெறக்கடவன்' என்று சோதிவாய் திறந்து பணித்தவளவிலே இதை எம்பெருமானர் கேட்டுப் பதறியோடி வந்து திருவுள்ளம் கொந்து பேரருளாளனை நோக்கி 'ஸர்வஜ்ஞரான தேவரீர் இப்போது என் கினவைத் தலைக்கட்டியருளவில்லையே' என்றும், ஆழ்வானை நோக்கி 'நீர் ஸ்வதந்த்ரராய் என் கினவைத் தலைக்கட்டாதே உபயோகமற்றதொன்றை வேண்டிக் கொண்டீரே' என்றும் இருவரையும் வெறுத்துரைத்து 'இனி என்செய்வது!' என்று திகைத்து நிற்க; எம்பெருமானர் இவ்வளவே மனக்குறைபட்டுப் பரிதபிக்கும்படியை உணர்ந்த பேரருளாளன் 'நம் ராமாநுசா! ஆழ்வான் நம்மையும் உம்மையும் காணுமிடத்துக் கட்கண்ணாலே காணக் கடவன்' என்று வரமளித்தருள, ஆழ்வானும் பெருமானைத் தமது கட்கண்ணாலே கண்டு ஸேவித்து, சாத்தியிருந்த திருவாபரணங்களையும் திருப்பரியட்டங்களையும் திவ்ய மங்கள விக்ரஹ ஸந்நிவேசங்களையும் இவையிவையென்று குறித்துக் காட்டி, உடையவர்திருமேனியையும் ஸேவித்துக்காட்ட, எம்பெருமானர் ஒருவாறு திருவுள்ளமுவந்து ஆழ்வானுடன் மீண்டு கோயிலேற எழுந்தருளினர்.

திருவரங்கத்திலுள்ளார் ஆழ்வானது திருக்குணத்தை நோக்கி வியத்தல்.

ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் ஆழ்வானருகே வந்து "நாயநான் தேவரீரளவன்றிக்கே நம் தர்சகத்துக்கே மஹாபராதியாயிருக்க, அவனை 'க்ஷமி—ந் க்ஷமாமி' என்னும் படியான கொடிய தண்டனைகட்கு ஆளாக்கவேண்டுவது அவசியமாயிருக்க, அப்பாவிக்கு மூட்பட மோக்ஷமளிக்கவேணுமென்று பேரருளாளப் பெருமாள் ஸந்நிதியில் வேண்டிக்கொண்டதாமே, இஃது என்ன அநியாயம்!" என்று முறைப்பட, "அற்றே!, அப்படிப்பட்ட பாவிகளுக்கன்றே இரங்கவேண்டுவது; மீனுக்குத் தண்ணீர் வார்த்துப் பயனென்?" என்று ஆழ்வான் பணிக்க, அது கேட்டவர்கள் இவருடைய பூததயாகுணத்துக்கு மிகவும் வியந்தனர். எம்பெருமானரிடத்திலும் அவகாசம் பெறுத சற்குணங்கள் ஆழ்வானிடத்தே அழகாக அமைந்திருந்தனவென்று ப்ரஸித்தமாயிற்று.

ஆழ்வான் பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்குப் பணித்த வார்த்தை.

ஆழ்வானுடைய சிஷ்யர்கள் பலரிலே 'பிள்ளைப்பிள்ளையாழ்வான்' என்பாரொருவரிருந்தார்; அவர் சற்குலசற்செல்வம் முதலியவற்றாலே மேன்மைபெற்றிருந்தாலும் சிறிது அஹங்காரங்கொண்டு பாகவதர்கள் திறத்திலே விஷயமின்றிக்கே அபசாரப்பட்டுக்கொண்டே யிருக்கிறபடியை ஆழ்வான்கண்டு 'இவர்க்கு இந்த பாகவதாபசார தோஷம் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தித் தானே மேலாகி விநாசபர்யந்தமாக்கிவிடும்; அதற்கு வேலியிட்டு வைக்கவேணும்' என்று திருவுள்ளம்பற்றி ஒரு புண்ய தினத்திலே சேரடின பின்பு இவரைப் பார்த்து, 'பிள்ளைப் பிள்ளாய்! புண்யகாலமென்று எல்லாரும் பூமிதாநம், ஸ்வர்ணதாநம், அந்நதாநம், வஸ்த்ரதாநம் என்றாற்போலே தாநங்கள் பண்ணுகிறக்காண்கிறீரன்றே; இக்காலத்திலே நீரும் நமக்கொரு தாநம் பண்ணமாட்டீரோ?' என்று கேட்க; 'அடியேன் எத்தை தாநம் பண்ணுவது? எல்லாம் ஏற்கெனவே ஸ்வாமியினுடையதேயன்றே' என்று அவர் சொல்ல; 'அவ்வளவு போராது; மனமொழிமெய்களென்கிற முக்கரணங்களாலும் பாகவதாபசாரப்படாமல் இருக்கக் கடவேன்' என்று நம் கையிலே தாரைவார்த்து தத்தம் பண்ணித் தரவேணும்' என்று ஆழ்வானருளிச் செய்ய; அப்படியே அவரும் உதகம் பண்ணிக் கொடுத்த பின்பு ஒருநாள் பூர்வவாஸனையாலே ஒரு பாகவதர் திறத்திலே மாநஸிகமாக அபசாரப்பட நேர்ந்துவிடவே, 'நாம் இனி முடிந்தோம்' என்று பயப்பட்டு அன்று ஆழ்வான் ஸந்நிதிக்கு விடை கொள்ளமாட்டாமல் தம் திருமாளிகையிலேயே

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மறைந்து வருந்திக் கிடக்க, இவர் வழக்கப்படி வருகிற காலத்தில் வரக்காணமை யாலே ஆழ்வான் இவருடைய திருமாளிகையிலேயே யெழுந்தருளி விசாரிக்கும்போது தாம் நெஞ்சிலுல் பாகவதாபசாரப் பட்டமையைக் கண்ணுங்கண்ணீருமாய் விண்ணப்பஞ் செய்து "மனமொழிமெய்களிலொன்றிலும் அபசாரம் விளையாதபடி இப்பொல்லாவழுக்குடம்புடனே யிருப்பது அரிதாயிருக்கின்றது, என்செய்யக் கடவேன்?" என்று திருவடிகளைக் கட்டிக்கொண்டு கிடந்து கிலேசப்பட, இத்தனை அநுதாபம் இவர்க்கு உண்டாயிற்றே!' என்று ஆழ்வான் உகந்தருளி, "பிள்ளைப் பிள்ளாய்! நெஞ்சிலுல் நினைத்ததற்கு அநுதாபமுண்டாகவே எம்பெருமான் பொறுத் தருள்வன்; ப்ரத்யக்ஷத்தில் ராஜதண்டம் மேருமென்கிற அச்சத்தினுல் சரீரமூலமாக ஒருவரையும் நலிய மாட்டீர்; ஆனபின்பு, மானஸிகமும் காயிகமுமாகிற அபசாரங்களி ரண்டையும் உமக்குக் கழித்துத் தம்தோம்; இனி, வாக்கை மாத்திரம் நன்றாகக் குறிக் கொண்டு ஸாவதாநராய் வர்த்திக்கக் கடவீர்" என்றருளிச் செய்தார்.

ஆழ்வான், பட்டருக்கு ஆசார்யருமானது

எம்பெருமானின்னருளாலே ஆழ்வானுக்கு இரண்டு திருக்குமாரர்களை தரிக்க அத்திருக்குமாரர்களின் அவதாரத்தைக் கேள்விப்பட்ட ஸ்ரீபாஷ்யகாரர் பெருமகிழ்ச்சிகொண்டு பதிநேராளிலே சிஷ்யவர்க்கத்துடன் ஆழ்வான் திருமாளி கைக்கு எழுந்தருளித் தமது பிரதான சிஷ்யர்களில் ஒருவரான எம்பாரை நோக்கி 'குழந்தைகளை எடுத்துக்கொண்டு வாரும்' என்ன; அவர் அவ்வனமே ப்ரபந்நகுலக் கொழுந்தான அக்குழந்தைகளை எடுத்து வரும்போது த்ருஷ்டி தோஷாதிகள் தாம் காதபடி ரக்ஷையாக த்வய மென்னும் மந்த்ர ரத்நத்தை அநுஸந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானுக்குக் காட்டினார்; அவர் மிக்க களிப் புடனே ஆநந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களாற் குளிரக் கடாக்ஷிக்கும் போது அத்தெய்விக சிசுக்களின் தேஜோவிசேஷத்தைக்கண்டு வியப்புக்கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே! இவ்வனம் ஆகுமாறு என் செய்தீர்?' என்று வினவ, எம்பார், 'குழந்தைகட்குக் காப்பாக த்வயாநு ஸந் தாநம் செய்துகொண்டு வந்தேன்' என்று சொல்ல, உடையவர் அப்படி எம்பார் காப் பிட்டதற்கு உகந்து அவரைப்பார்த்து இக்குழந்தைகள் உய்யும் வகையை நாடிச் செய் தற்கு நீர் மூற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக்கடவீர்' என்று நியமித் தருளினரென்றும், அப்படியே அத்திருக்குமாரர்கட்கு எம்பாரே ஆசார்ய க்ருத்யங் கள் செய்தருளினரென்றும், இது பற்றியே, எம்பெருமானார் எம்பார் பட்டர், நஞ்சீயர் என்றிப்படி ஆசார்யபரம்பரை வருகிறதென்றும் ப்ரஸித்தமாயிருக்கும். இவ்வனை யிருக்கச் செய்தேயும் ஆழ்வானுக்கும் ஆசார்ய பரம்பரையிலே அநுப்ரவேசம் உண் டாயிற்று. எங்ஙனேயெனில்; ஆழ்வான் திருக்குமாரர்கட்குத் திருவாய்மொழிப் பொருள் கற்பித்து வரும்போது, "எண் பெருக்கற்கலத் தொண்பொருளீரில, வண்புகழ் நாரணன் தின்கழல் சேரே" என்கிற பாசுரத்தளவிலே வந்தவாறே அது திருமந்த்रार்த்தத்தை விவரிக்கிற பாசுரமாகையாலும், மந்த்ரார்த்தம் ஆசார்ய பீடத்திலேயே கேட்டறியவேண்டியதாதலாலும் அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசார்யர் பக்கலிலே கேட்டுக்கொள்ளுங்கள்' என்று சொல்ல; அதனை விரைவில் அறிந்து கொள்ளவேணுமென்னும் அவாவினுல் உடனே அவர்கள் எழுந்து தம் ஆசாரியரான எம்பார் எழுந்தருளியிருக்குமிடத்தைக் குறித்துப் போகப்புக்கவளவில் ஆழ்வான் "மின்னின் நிலையில் மன்னுயிராக்கைகள்" என்கிறபடியே யாக்கை நிலையாமையைத் திருவுள்ளத்திற் கொண்டு அவர்களை யழைத்து 'இன்னபோது இன்னாரிருப்பார் இன்னர் போவாரென்று தெரியாது; ஆதலால் இருந்து கேளுங்கள்' என்று, திருமந்த்ரத்தைச் சொல்லி இப்பாட்டின் பொருளையும் விவரித்து 'இப்பாசுரத்தைத் திருமந்த்ரத்தின் அர்த்தமாக நினைத்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருங்கள்' என்று பணித்தருளினமையால் திருக்குமாரர்க்கு ஆழ்வானும் ஒரு ஆசார்யராக அமைத்தருளினர். பட்டர் ஸஹஸ்ரகாம பாஷ்யமருளிச் செய்யும்போது ஆசார்யவந்தனம் செய்கிற முதல் ச்லோகத்திலே "வந்தே கோவிந்த தாதௌ—எம்பாரையும் திருத்தகப்பனரையும் தொழுகின்றேன்" என்றருளிச் செய்தது உபய ஸம்பந்தமும் தமக்கு உண்டானது பற்றியேயாம்.

"சிறுமாமனிசர்" என்னுமருளிச்செயலுக்கு ஆழ்வான் பொருள் விவரித்தது

பட்டர் சிறு பிராயத்திலே ஒரு நாள் ஆழ்வான் திருவாய்மொழி அநுஸந்திக்கும்போது "உறுமோ பாவியேனுக்கு" (8-10-3) என்ற பாசுரத்தில் "சிறுமாமனிசராய் என்னை யாண்டாரிக்கே திரியவே" என்றதைப் பட்டர் கேட்டு அதில் சிறுமாமனிசர் என்றதைக் குறித்து ஆக்ஷேபங்கொண்டு 'ஒன்றுக்கொன்று எதிர்த்தட்டான சிறுமை பெருமை என்கிற குணங்களிரண்டும் ஒரு பொருளினிடத்து ஒன்று சேர்ந்திருக்குமோ? ஆழ்வார் "சிறுமாமனிசர்" என்று இரண்டையும் ஒருவரிடத்தே சேர அருளிச்செய்தது பொருந்துவது எங்ஙனே? என்று திருத்தந்தையாரை வினவினர். அதற்கு ஆழ்வான் ஆலோசித்து, 'பிள்ளாய்! நன்கு வினவினாய்; உனக்கு உபயமமாகாமையால் இப்போது வேதசாஸ்திரங்களைக் கொண்டு விடை சொல்லலாகாது; ஆகிலும் ப்ரத்யக்ஷத்திற் காட்டுகிறோம் காண்' என்று சொல்லிச் சில பெரியோர்களைக் காட்டி 'திருமேனி சிறுத்து ஞானம் பெருத்திருக்கிற சிறியாச்சான் அருளாளப் பெருமாளெம்பெருமானார் போல்வாரைச் சிறுமாமனிசர் என்னத் தட்டில்லையே; முதலியாண்டான், எம்பார் முதலிய பெரியோர்கள் உலகத்தாரோடொக்க அந்யபரராகிகள் கொள்வதோடு எம்பெருமான் பக்கல் ஈடுபடுவதிற் பரமபதத்து நித்ய ஸூரிகளைப்போலுதலால், இப்படிப்பட்டவர்கள் சிறுமாமனிசர் என்னத் தக்கவரன்றே? இங்ஙனமே வடிவுசிறுத்து மஹிமை பெருத்தவர்களும், மனிதரென்று பார்க்கும்போது சிறுமை தோன்றினும், பகவத்பக்தி ஞானம் அனுட்டானம் முதலிய சற்குணங்களை நோக்குமளவில், நித்ய முக்தர்களினும் மேன்மை பெற்று விளங்குகிறவர்களுமான மஹாபுருஷர்களையே ஆழ்வார் சிறுமாமனிசரென்று குறித்தருளினர்'—என்றருளிச்செய்ய, அதுகேட்டுப் பட்டர் 'தகும் தகும்' என்று இசைவு கொண்டனர்.

ஆழ்வானுடைய குடும்பகாரியத்தை எம்பெருமானே நிர்வஹித்தது.

திருக்குமாரர்களான பட்டரும் சோமப்பிள்ளையும் ஸாங்கோ பாங்கமாக வேத வேதாங்கவேதாந்தங்களைப் பயின்று ஸகல வித்யாபாரங்கதர்களாகி விவாஹத்துக்கு உரிய பருவத்தை யடைந்தவளவிலே, திருத்தாயாரான ஆண்டாள் ஆழ்வானைப் பார்த்து 'இவர்கட்கு விவாஹம் செய்விக்க வேண்டாவோ?' என்று விண்ணப்பம் செய்தாள். அதுகேட்ட ஆழ்வான் அஹங்காரமமகாரங்கள் சிறிதுமில்லாத ஆசார்ய பரதந்த்ரராதலால், உடையவர் திருமுன்பே சென்று 'இவர்களுக்கு மணஞ் செய்விக்க வேண்டுமாமே' என்று விஜ்ஞாபிக்க, உடையவரும் தமது ஆசார்யராகிய பெரியநம்பியின் உறவினர்களைக் குறிப்பிட்டு அவர்களிடத்து இவர்களுக்குப் பெண் கொண்டால் உசிதமாயிருக்குமென்று தெரிவிக்க, அக்கருத்தை மேற்கொண்டு ஆழ்வான் அவர்களிடத்திலே சென்று பெண் கேட்க, அவர்கள் கொடுப்பதற்கு முதலிற் சொல்லிப் பின்பு நாதமுனி ஸம்பந்தமென்று இசையாதிருந்தார்கள். இப்படி சிலநாள் கழித்தவளவிலே, பிள்ளைகளின் விவாஹத்தைக் குறித்து ஆண்டாள் ஆழ்வானை மீண்டும் தூண்ட, அவர் 'ஈச்வர குடும்பத்துக்கு என்னை இருந்து கரையச் சொல்லுகிறாயோ? நாளைக்கு நான் பெருமாள் ஸந்நிதியிலே போனவாறே பிள்ளை களை வரச்சொட்டு' என்று சொல்லி, மற்றை நாள் பெருமானைத் திருவடிதொழப்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

போனபோது பிள்ளைகளும் வந்து நிற்க, பெருமாள் அருள்பாடிட்டு "ஆழ்வான்! ஒன்று சொல்லுவாய்போலே யிருக்காயே, சொல்லிக்காண்" என்று நியமிக்க, "இப் புத்திரர்க்கு மணம்புரிவிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களே!" என்று ஆழ்வான் விண்ணப்பம் செய்தனர். பெருமாள் அதனை ஏற்றுக்கொண்டு 'அதற்கு உமக் கென்ன கவலை? நாமே தகுதியாகச் செய்விக்கிறோம்' என்று திருவுள்ளமாயருளி பெண்கொடுக்கும்படி பெரியநம்பி யுறவினர்க்கு ஸ்வப்நம் காட்டியருளினர். அங்ஙனம் பெருமாள் தாமே கனவில் எழுந்தருளி ஆழ்வான் குமாரர்களுக்குக் கன்னிகை களைக் கொடுக்கும்படி கட்டளையிட்டதைக் குறித்து அவர்கள் மிக வியந்து அப்படியே இசைந்து மற்றைநாள் தாங்களாகவே ஆழ்வான் பக்கல் வலிய வந்து பெண்கொடுக் கிறோமென்று சொல்லித் தங்கள் குமாரிகளைப் பட்டர்க்கும் சீராமப்பிள்ளைக்கும் கன்னிகாதானஞ் செய்து வெகு சிறப்பாக விவாஹம் நடத்தினர். இதனால் ஆழ்வா னுடைய குடும்பகாரியமும் எம்பெருமான் தலையிலே யிடந்தென்பது விளங்கும்.

அருளிச்செயல்களில் ஆழ்வானுடைய நிர்வாஹம்.

நம் ஆசார்யர்களெல்லாரும் ஸகல சாஸ்த்ரங்களிலும் வல்லவர்களா யிருக்கச் செய்தேயும் ஆழ்வார்களுடைய ஈரச் சொற்களையே கொண்டு போதுபோக்குவர்கள். ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அருளிச்செயல்களிலே நயிப்பித்து அநுபவிப்பர்கள்; இப்படிப்பட்ட அநுபவம் ஆழ்வானுக்கு அதிகமாயிருக்கும். திவ்ய ப்ரபந்தங்களிற் பல பாசுரங்களிலே ஆழ்வானுடைய நிர்வாஹமென்று அருமையாகக் கொண்டா டப்படும் நிர்வாஹங்களுண்டு. விரிப்பிற் பெருகுமாதலால் ஒரே விஷயம் காட்டுவோ மிங்கு. திருவாய்மொழியில் ஆழ்வார் நாயகிபாவனையுடன் பேசுகிற திருப்பதிகங் களில் "மாசறு சோதி" (5-3.) என்பது மொன்று. அத்திருவாய்மொழியை ஆழ்வான் ஒருகால் ராஜேந்த்ரசோழ னென்னுமிடத்திலே அற்புதமாக உபந்யஸிக்க நேர்ந்த போது, அதில் ஏழாம்பாசுரத்தை உபந்யஸிக்குங்காலத்து "தலையில் வணங்கவுமாங் கொலோ தையலார் முன்பே" என்ற ஈற்றடியின் பொருளை விவரிக்கு மளவில் 'ஆமருவி நிரைமேய்த்தான் நம்பியார்' என்னும் பெயரையுடையராய் நூறுபிராயம் போந் திருப்பாரொரு பெரியவர் நடுங்க நடுங்க எழுந்திருந்து நின்று "ஸ்வாமின்! நாயகி பாசுரமாகச் செல்லுகிற இத்திருவாய்மொழியில் 'தலையில் வணங்கவு மாங்கொலோ' என்னக்கூடுமோ? தலைவி தலைவனைத் தலையால் வணங்குவதென்பதுண்டோ?" என்று கேட்க, "பிராட்டி திருவடியிடத்தில் ஸந்தேசம் சொல்லியனுப்பும்போது, "கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவே யம் மநஸ்விநீ—தம் மமார்த்தே ஸுகம் ப்ரூச்ச தீரஸாசாபிவாதய" என்று சொன்ன ஸ்ரீராமாயண ச்லோகத்தை யெடுத்து மிகவு மழகாக உபந்யஸித்து—"மமார்த்தே...சிரஸாச அபிவாதய" [எனக்காக அவரைத் தலையால் வணங்கு] என்று பிராட்டிசொன்னது கண்டீரே" என்றருளிச்செய்ய, அப் பெரியவர் பெருமகிழ்ச்சி கொண்டார். காலாயிர திவ்ய ப்ரபந்த வியாக்யானங் களிலே இங்ஙனே பல விஷயங்கள் காண்க.

ஆழ்வான் திருநாட்டுக்கு நியமநம் பெறுதல்

லோகோஜ்ஜீவநங்களான ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்துகொண்டு ஜ்ஞா நாநுஷ்டாநங்களாலே ஒப்புயர்வற்று விளங்கிவரும் ஆழ்வான் ஒருநாள் *சூழ்விசும் பணிமுகில் திருவாய் மொழியில் "மூடியுடை வானவர் முறை முறை எதிர்கொள்ள" என்கிற பாசுரத்தில் 'பரமபதத்திலே முற்பட்டிருக்குமவர்கள் பிற்பட்டு எழுந்தருளு மவர்களை எதிர்கொண்டு உபசரிப்பர்கள்' என்று அருளிச்செய்திருப்பதை யநுஸந் தித்து 'நாம் பரமபதம் போக உடையவர்க்குப் பிற்பட்டோமாகில் அவ்விடத்திலே உடையவர் நம்மை எதிர்கொண்டு உபசரிக்கவேண்டும்படி நமக்கு மஹாபசாரம்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விஞ்ஞாபனமாதலால் பரமபதத்துக்கு நாம் முற்படவேணும்' என்று துணிவுகொண்டு எம்பெருமானார் பக்கலிலே விண்ணப்பஞ் செய்யாமல் நம்பெருமாள்முன்பே போய் நிற்க, பெருமாளும் ஆழ்வானை நோக்கி 'ஏன் காணும் ஆழ்வான்! ஒன்று சொல்லிக் கொள்ள வந்தாற்போலே நிராகின்றீர்' என்ன; ஆழ்வானும் ஒரு ச்லோகத்தை விண்ணப்பஞ் செய்து மிக உருக்கமாக உபந்யஸிக்க, பெருமாள் திருவுள்ளமுவந்து 'உமக்கு வேண்டிற்றெல்லாம் தருகிறோம், வேண்டிக்கொள்ளும்' என்ன; ஆழ்வானும் 'அடியேனுக்குப் பண்டே எல்லாந் தந்தருளிற்றே' என்ன; பெருமாளும் 'அப்படியன்று, இப்போதும் வேண்டிக்கொள்ளும்; நம்பெண்டுகளானை, நம் இராமானுசனானை; தருகிறோம்' என்று நிர்ப்பந்திக்க, ஆழ்வானும் இந்த அழுக்குடம்பை விடுவித்து நித்யவிபூதியில் நித்யானுபவத்தைத் தந்தருளவேணும்' என்று பிரார்த்திக்க, பெருமாளும் அதுகேட்டு 'அந்தோ! ஆழ்வானைப் பிரியவேண்டிற்றே!' என்று மிகவும் வருந்தி 'இந்த வரமொழிய வேறு வரம் வேண்டிக்கொள்ளும்' என்ன; "ராமோ த்விர் நாபிபாஷதே" என்றதைப் பொய்யாக்கலாமோ? வேண்டினதைத் தருகிறேனென்றருளிச் செய்து வைத்து மீண்டு இங்ஙனே மறுக்கலாமோ? அடியேன் வேண்டினதையே தந்தருளவேணும்" என்று ஆழ்வான் பிரார்த்திக்க, பெருமான் 'இனிச் செய்யலாவதில்லை' என்று துணிந்து "உமக்கும் உம்முடைய திருநாமஞ் சொல்லுமவர்கட்கும் உம்முடைய ஸம்பந்தம் பெற்றவர்கட்கும் மேல்வீடு தந்தோம்" என்று திருவாய்மலர்ந்தருளி, திருப்பரியட்டமும் தளிகைப்ரஸாதமும் பூந்தண்மாலைத் தண்டுழாயும் திருக்கைச் சிறப்பும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார்.

இச்செய்தியைக் கேட்டருளின எம்பெருமானார் 'உலகுக்கு ஒருயிரான ஆழ்வானை இழந்து நாம் எங்ஙனே உயிர்வாழ்ந்திருப்பது?' என்று மிகவும் திருவுள்ளம் நொந்து ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரையுங் கூட்டிக்கொண்டு ஆழ்வானிருந்த விடத்தேறச் சென்று 'என் செய்தீர்! என் செய்தீர்!! இப்படியும் எம்மைப் படுகொலையடிக்கலாமோ?' என்று கேட்க; ஆழ்வானும் பரமபதத்துக்குத் தாம் முற்பட வேண்டிய காரணத்தை விண்ணப்பம் செய்ய, உடையவர் அதுகேட்டு "ந சாஸ்த்ரம் நைவ ச க்ரமः என்று அடைவுகெட்டிருக்கும் நித்யவிபூதியிலே நீர் அடைவு தேடுவதே!; இப்படியும் ஒரு சேஷத்வகாஷ்டை யுண்டாவதே!" என்று மிகவும் வியாகுலராய்க் கண்ணுங்கண்ணீருமாய் ஆழ்வானையணைத்துக்கொண்டு விம்மல் பொருமலாய்த் திருவுள்ளமுடை குலைப்பட்டு, "ஐயோ ஆழ்வான்! உயிர்நிலையான உம்மை இழந்து எங்ஙனே தரிப்பேன்? என்னையும் உடன்கொண்டு போகத் திருவுள்ளம் பற்றினீரில்லையே!, நம்மைவிட்டகன்றுபோக உமக்கு ருசிப்பதே!, பரமபதநாதனும் அங்குள்ளாரும் என்ன நோன்பு நோற்றார்கொலோ!, இங்கு உறங்குகிற பெருமாளும் நாங்களும் என்ன பாபம் பண்ணினோமோ; "இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும், அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!" என்ற பாசுரத்தையும் மறந்திட்டீரே! ஐயோ என்செய்தீர்!, இனி உம் திருவுள்ளம் கலங்கும்படி பல சொல்லிப் பயனென்? உம்முடைய பேற்றுக்கு நாம் விலக்கடியாகலாமோ? சுகமாக நித்யவிபூதியேற எழுந்தருளீர்" என்று சொல்லி செவியிலே த்வயத்தை அருளிச்செய்ய; அருகிருந்த முதலிகளெல்லாரும் 'இப்போதாக இது வென்?' என்று கேட்க; "நீங்கள் அறியீர்களோ? ராஜகுமாரனுக்குக் கற்பூர நிகரில்லாவிடில் நாக்கு வறளுமாபோலே இவர்க்கு த்வயமில்லாத போது நெஞ்சு வறளும்" என்றருளிச் செய்து ஆழ்வானுடைய திருமுதுகைத் தடவி அஞ்ஜலித்து விடைகொடுத்தருளினார்.

ஆழ்வான் திருநாட்டுகெழுந்தருளல்

உடையவருடைய நியமனமும் பெற்ற ஆழ்வான் உடையவர் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்துகிடக்க, உடையவரும் இரண்டு திருக்கைகளாலும்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வாரியெடுக்க, எழுந்திருந்து உடையவர் திருவடித் தாமரைகளைத் தம் திருக்கண்களி லும் திருமார்பிலும் ஒற்றிக்கொண்டு ஸ்ரீபாததீர்த்தமும் கொண்டு கைகூப்பி 'இனி மடமே எழுந்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்து வடவாற்றங்கரையளவாக உடையவர் பின்னே செல்ல, 'ஆழ்வான்! இனி நில்லும்' என்ன; தெண்டன் ஸமர்ப்பித்து மீண்டு ஆழ்வார் திருமாளிகைக்கு அருகிலிட்ட திருக்காவணத்தின் நடுவே எழுந்தருளியிருந்து (தேவியாரான) ஆண்டாளைப் பார்த்து 'என்ன நினைத் திருக்கிறாய்?' என்ன; ஆண்டாளும் 'தேவரீர் திருவுள்ளத்தைப் பின் செல்லுகை யொழிய அடியேனுக்கு வேறொரு நினைவுண்டோ?' என்று திருவடிகளிலே தெண்ட னிட்டு அஞ்ஜலித்து நிற்க ஆழ்வானும் பட்டரையும் சீராமப்பிள்ளையையும் அழைத் தருளி 'பெருமாளும் நாச்சியாரும் எழுந்தருளியிருக்க உங்களுக்கு ஒரு குறையுமில்லை; நம்பெருமாள் பெற்று வளர்த்தாரென்று இறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே சரண மென்றிருங்கள்; ஆண்டாள்முகம் கன்றுமல் நடவுங்கள்; பாகவத விஷயங் களிலே சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் அபசாரப்படாதே அவர்களை அநுவர்த்தித்துக்கொண்டு போருங்கள்' என்றருளிச்செய்து தம் திருவடிகளிலே விழுந்து கிடந்த பட்டரையும் சீராமப்பிள்ளையையுமெடுத்துத் திருக்கையாலே கண்ண நீரைத் துடைத்து 'நீங்கள் ப்ராக்ருத ஸம்பந்தத்தை நினைத்து வருந்தினீர்களாகில் உடையவர் திருவடி ஸம்பந்தத்தை தூஷித்தீர்களாவீர்; ஆத்ம ஸம்பந்தத்தை நினைத்து வருந்தினீர்களாகில் நம்முடைய ஒழிக்க வொழியாத உறவை அறிந்திலீர் களாவீர்' என்று அவர்களைத் தேற்றி, கோயிலுக்கு மேலே பிள்ளைப் பிள்ளையாழ் வான் மடியிலே திருமுடியையும் ஆண்டாள் மடியிலே திருவடிகளையும் வைத்துக் கொண்டு ஆழ்வார் ஆளவந்தாருடையவர் திருவடிகளைச் சிந்தனை செய்துகொண்டு அன்றே திருநாட்டுக்கெழுந்தருளினார். பிறகு எம்பெருமானார் எழுந்தருளி "ஒருமகள் தன்னை யுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங் கண்மால் தான் கொண்டு போனான்" என்கிற பாசுரத்தைச் சொல்லி பிரங்கி, பட்டரைக்கொண்டு சரம கைங்கரியங்களைப் பெருக்க நடத்தி யருளினார். இங்ஙனே ஆழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளினாராகிலும், மொழியைக்கடக்கும் பெரும்புகழாகிற திரு மேனியோடும் அர்ச்சாவதாரத் திருமேனியோடும் இவ்விபூதியெங்கும் நிறைந்து விளங்குகின்றாராகையால் அன்றிழந்த நாமும் கண்கள் தூஞ்சாதே கண்ணாரக்கண்டு களிக்கும் பாக்கியமுடையோம். எத்தனை சொல்லிலும் தலைக்கட்ட முடியாதே எவ்வளவு அநுபவிக்கிலும் 'அப்பொழுதைக் கப்பொழு தென்னாவமுதமே' என்னுமாபோலே தெகுட்டாத அமுதமாயிரா நின்றது இத்திவ்ய சரிதை. ... *

கூரத்தாழ்வான் வைபவம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

பட்டர் வைபவச் சுருக்கம்.

நமது ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானுடைய பதவியிலே அபிஷிக்தராய் அவனும் விஞ்சிய ஞான வைபவத்தையுடையரான பட்டர் என்னும் ஆசிரிய ருடைய வைபவக் கடலில் சில சிறு திவலைகளை ஈண்டு அனுபவிக்க விழைகின்றோம்.

இவ்வாசிரியர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர் என்றும் ஸ்ரீரங்கநாத னுடைய திருக்குமாரர் என்றும் வழங்கப்படுவர். ஆழ்வான் க்ருஹஸ்தாச்ரமத்தி லெழுந்தருளியிருக்கச் செய்தேயும் "விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்" என்று ஸ்ரீவசந பூஷணத்திலருளிச் செய்த கணக்கிலே விரக்தாக்ரேஸராக எழுந்தருளி யிருந்தனர். இவர் தமது செல்வத்தை முற்றும் துறந்து எம்பெருமானார் திருவடிகளில்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆச்ரயித்தது முதல் நாடோறும் உபதாந காலத்திலே ஸ்ரீரங்கத்தில் சில திருமாளிகை களில் உஞ்சவ்ருத்தி செய்து, அது கொண்டு குடும்ப காரியத்தை நிர்வஹித்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் கிடைக்கிற உணவுப் பொருள்களில் மறுநாளைக்கென்று சிறிதும் சேஷப் படுத்தி வைத்துக் கொள்ளாமல் அன்றன்றைக்கே தேஹ யாத்திரை நடத்தியருளுகையில் ஒரு நாள் விடாப் பெருமழை பொழிந்ததனால் வெளியே போய் உபாதாநம் செய்து வரக்கூடாமல் போக, அதனால் அன்றைக்கு வெறும் தீர்த்தத் தையே உட்கொண்டு அருளிச்செயலநுஸந்தாநமே தாரகமாகக்கொண்டு வேறு உண வின்றியே யிருந்திட, அன்றிரவு பெரிய பெருமாள் அமுதுசெய்தருளுகிறபோது உண்டான திருச்சின்ன வொலி கேட்ட வளவில் இவரது தேவியாரான ஆண்டாள் பெருமாளைக் குறித்து, 'உம்முடைய அடியவர் பட்டினி யிருக்க நீர் குலாவிக் குலாவி அமுது செய்தருளுகிறீரோ?' என்று நினைப்பிட்ட வளவிலே ஸர்வஜ்ஞனை ஸ்ரீரங்கநாதன் அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்ளம்பற்றி, உடனே தேவஸ் தாந கார்ய நிர்வாஹகரான உத்தம நம்பிக்கு அர்ச்சக முகேந கட்டளையிட்டு அப்பொழுது தாம் அமுது செய்த அக்காரவடி சில ஸகல பரிஜந பரிவாரங்களுடன் அவரைக் கொண்டு ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பியருள, ஆழ்வானும் இதனை யறிந்து பதறி யெழுந்து எதிர்கொண்டு மஹாப்ரஸாதமென்று அதில் தமக்கும் தமது தேவிக்குமாக இரண்டு திரளைகளை யெடுத்துக் கொண்டு உத்தம நம்பியை அனுப்பி விட்டு பக்தவத்ஸலனை பகவானுடைய வரம்புகடந்த கருணைத் திறத்தை வியந்து அந்த அடிசிலில் ஒரு பகுதியைத் தாம் அமுதுசெய்து மற்றதைத் தேவியாருக்குக் கொடுத்தருள, முன்பு தசரத சக்ரவர்த்திக்குப் புத்ர காமேஷ்டியிற் கிடைத்த பாயஸத்தின் கூறுகளே ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் திருவவதாரத் துக்குக் காரணமானதுபோல இப்பொழுது இவர்க்கும் இத்திரளைகளிரண்டுமே இரண்டு திருக்குமாரர்கள் திருவவதரிப்பதற்கு ஹேதுவாயின. முறையே இவர்களின் நாமம் ஸ்ரீ பராசரபட்டர், ஸ்ரீ வேதவ்யாஸபட்டர் என்பனவாம்.

ஸ்ரீபராசரபட்டர் என்று திருநாமமாயினும் நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் லெங்கும் பட்டர் என்றே இவ்வாசிரியர் வழங்கப்படுவர். பட்டர் என்னும் வடசொல் வேதசாஸ்த்ரங்களை நன்கு கற்றுணர்ந்த வித்வானையும் ஸ்தோத்ரஞ் செய்யும் தொழி லுடையவனையும் சொல்லும்; ["பட்டாரகः"] என்னும் சொல்லும் இத்திறத்ததே, 'விளையும் பயிர் முளையிலே' என்னுமாபோலே சிசுவாயிருந்த தன்மையிலேயே இவருடைய திறமையை நன்குணர்ந்த எம்பெருமானார் இவர்க்குப் பொருத்தமாக பட்டர் என்று திருநாமஞ் சாத்தினதும், அத்திருநாமத்திற்கு மிகப்பொருத்தமாகவே இவரும் ஸர்வஜ்ஞராய் விளங்கிப் புகழ் பெற்றதும் எம்பெருமானுடைய ஸத்ய ஸங்கல்பத்வத்தை ஸத்யமாக்கின போலும்.

இங்ஙனம் நாம கரணம் செய்தருள்வதற்காக உடையவர் எம்பாருடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருளிக் குழந்தைகளை எடுத்துக் கொண்டு வாரும் என்று எம்பாருக்கு நியமிக்க அவர் அங்ஙனமே ப்ரபந்நகுலக் கொழுந்தான அக் குழந்தைகளை எடுத்துக் கொண்டு வரும்போது த்ருஷ்டி தோஷாதிகள் தங்காதபடி ரக்ஷையாக த்வயமென்னும் மந்த்ரரத்நத்தை அநுஸந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானுக்குக் காட்டினர்; அவர் மிக்க களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களாற் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத் தெய்வ சிசுக்களின் தேஜோ விசேஷத்தைக் கண்டு வியப்புக்கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே! இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்?' என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்குக் காப்பாக த்வயாநுஸந்தாநம் செய்துகொண்டு வந்தேன்' என்ன; உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரைப்பார்த்து "இக்குழந்தைகள் உய்யும் வகையை நாடிச் செய்தற்கு நீர் முற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்" என்று நியமித்தரு

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ளிலுரென்றும், அப்படியே அத்திருக் குமாரர்கட்கு எம்பாரே ஆசார்ய க்ருத்யங்கள் செய்தருளிலுரென்றும், இது பற்றியே எம்பெருமானர் எம்பார் பட்டர் நஞ்சீயர் என்றிப்படி ஆசார்ய பரம்பரை வருகிறதென்றும் ப்ரஸித்தமாயிருக்கும். இங்ஙனே யிருக்கச் செய்தேயும் ஆழ்வானும் பட்டர்க்கு ஆசார்யராயினர். அது எங்ஙனே யெனில்; ஆழ்வான் திருக்குமாரர்கட்குத் திருவாய்மொழிப் பொருள் கற்பித்து வரும்போது "எண்பெருக்கந் நலத் தொண்பொருளீறில, வண்புகழ் நாராணன் றிண்கழல் சேரே" என்கிற பாசுரத்தளவிலே வந்தவாறே, அது திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கிற பாசுரமாகையினாலும், மந்த்ரார்த்தம் ஆசார்யரிடத்திலேயே கேட்டறிய வேண்டியதாதலாலும் அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசார்யர் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்ல, எழுந்து தம் ஆசாரியரான எம்பார் எழுந்தருளியிருக்குமிடத்தைக் குறித்துப் போகப் புக்க வளவில் ஆழ்வான் "மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்" என்கிறபடியே யாக்கை நிலையாமையைத் திருவுள்ளம்பற்றி அவர்களை யழைத்து 'இன்னபோது இன்னிருப்பார் இன்னர் போவாரென்று தெரியாது, ஆதலால் இருந்து கேளுங்கள்' என்று, திருமந்திரத்தைச் சொல்லி அப்பாசுரத்தின் பொருளையும் விவரித்து 'இப் பாசுரத்தைத் திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்' என்று பணித்தருளினமையால் திருக்குமாரர்க்கு ஆழ்வானும் ஒரு ஆசார்யராக அமைந்தருளினர் என்று ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர் கூறுவர். பட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யம் அருளிச் செய்யும்போது ஆசார்ய வந்தனம் செய்கிற முதல் ச்லோகத்தில் "வந்தே கோவிந்த தாதௌ—எம்பாரையும் திருத்தகப்பனாரையும் தொழுகின்றேன்" என்றருளிச் செய்தது உபய ஸம்பந்தமும் தமக்கு உண்டானது பற்றியேயாம். ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலும் இரண்டு ஆசிரியருக்கும் இரண்டு ச்லோகங்களைத் தனியாக இட்டருளினர்.

பட்டரை இளங்குழந்தைப் பருவத்திலேயே ஸ்ரீரங்கநாதன் தனது புத்ரனாக அங்கீகரித்துத் தன்னுடைய ஸந்நிதியிலே திருமணத் தூணினருகே தொட்டிலிட்டு வித்து ஸ்ரீரங்கநாச்சியாரும் தானுமாகச் சீராட்டி வளர்க்க, அங்ஙனம் வளர்கிற அக்குழந்தை தவழ்ந்து சென்று, பெருமாள் அமுது செய்வதற்குத் திருமுன்பே கொணர்ந்து ஸமர்ப்பிக்கப் படுகிற அடிசிலைக் கைகளால் அள்ளியள்ளித் தூவ, பெருமாள் அதுகண்டு உகந்தருளி, "அமிழ்தினும் ஆற்றவினிதே தம்மக்கள், சிறு கையளாவிய கூழ்" (குறள்) என்றபடி இந்த இன்னடிசில மிகவும் ப்ரியமாக அங்கீகரித்தருள்வராம். இப்படி ரங்கநாதன் தம்மை அபிமானித்துப் புத்ரஸ்வீகாரம் செய்தருளப்பெற்ற பாக்கிய மூடைமையால் பட்டர் ஸ்ரீ ரங்கநாதர்புத்ரர் என்றும் வழங்கப்பட்டு வந்தார். "வாணிட்ட கீர்த்தி வளர் கூரத்தாழ்வான் மகிழவந்த, தேனிட்டதார் நம்பெருமாள் குமாரர்.....பட்டர்" என்று இவரது சிஷ்யரான பிள்ளைப்பெருமாளையங்கார் (திருவரங்கக் கலம்பகக் காப்புச் செய்யுட்களுள் ஒன்றில்) கூறினர். பட்டர் தாமும் ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்தில் பதினேழாம் ச்லோகத்தில் "ஸ்ரீ ரங்கராஜ கமலாபதலாலிதத்வம்" என்ற பதத்தினால் இதனை ஸ்பஷ்டமாக்கி யருளினதும் உணர்க.

இப்பேராசிரியர் ஸகலசாஸ்த்ரங்களிலும் அபாரமான பாண்டித்யம் பெற்றவர் என்பது இவர் அருளிச்செய்த க்ரந்தங்களுள் ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஒன்று கொண்டே உணரத் தக்கதாகும். இவர் கவித்திறமையில் ஒத்தாரும் மிக்காருமில்லாதவர் என்பது இவர் அருளிய ஸ்ரீ ரங்கராஜஸ்தவ ஸ்ரீ குணரத்ன கோசாதிகளால் நன்கு விளங்கும்.

அருளிச் செயல்களில் அற்புதமான விசேஷார்த்தங்களை அருளிச்செய்வதற்கு இவ்வாசிரியரே அதிதர ஸாதாரணமான வல்லமை பெற்றவர் என்பது திவ்ய ப்ரபந்த வியாக்யானங்களில் பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் அடிக்கடி

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அருளிச்செய்யு மாற்றால் தெரிகின்றது. வியாக்கியானங்களில், 'என்று பட்டர் அருளிச் செய்வர்' என வருமிடங்களிலெல்லாம் ஒரு விலக்ஷணமான ரஸாநுபவம் கல்கெஞ்சினர்க்கும் உண்டாவது வழக்கம். இவரது நிர்வாஹங்களில் ஒன்றை எண்டெடுத்துக் காட்டுவோம் :—

திருநெடுந்தாண்டகத்தில் 'அறுகால சிறுவண்டே தொழுதேனுன்னை' என்ற பாசுரத்தில் வண்டுக்கு ஸ்வாபாவிகமான ஆறு கால்களுள்ளமையை எதற்காகச் சொல்லிற்று? என்று விமர்சிக்கப் புகுந்த சிலர், இரண்டு காலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக் குறுப்பாக ஆறு கால்கள் இருக்கப் பெற்ற பாக்கியம் என்னே! என்று வியந்து கூறுவதாக நிர்வஹித்தார்களாம். இந்த நிர்வாஹத்தில் ஸ்வாரஸ்யமில்லை; வண்டு செல்லுதற்கு ஸாதனம் சிறகே யன்றிக் கால்கள் அல்லவே; ஆதலால் 'அறுகால' என்னும் அடைமொழிக்கு அங்ஙனே கருத்துரைத்தல் பொருந்தாதென்று, பட்டர் அருளிச்செய்வதாவது—தொழுதேனுன்னை என்று மேலே யிருக்கையாலே என் தலையிலே வைப்பதற்கு ஆறுகால்கள் உண்டாகப் பெற்றதே! என்று வியந்து சொல்லுகிறபடி என்பதாம். இதனை விவரிப்போம். தாது சென்று மீண்டு வந்தால் வண்டின் கால்களைத் தலை நிறைய வைத்துக் கொண்டு கூத்தாடக் குதூஹலித்திருப்பதனால் அதற்குச் சேர இங்ஙனே கருத்துரைத்தபடி. ஸ்வாபதேசத்தில் வண்டாகச் சொல்லுவது ஆசார்யர்களை. ஆசாரியனும் ஆசாரியனுடைய தேவியாரும் அவருடைய திருக்குமாரருமாக மூவரும் உகந்தேச்சர் என்பது ஆபஸ்தம்ப ஸூத்ரஸித்தம். மூவர்க்கும் சேர்ந்து ஆறு திருவடிகளாதலால் அது தோன்றவே அறுகால சிறுவண்டே! என்றது—என்பது பட்டர் திருவுள்ளம். "கொங்கார் பூந்துழாய் முடி என்குடைக் கூத்தற்கென் தூதாய், நுங்கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நுமரோடே" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் ஸ்வாபதேசார்த்தத்திற்கு மிகவுமிணங்கியதாமிது. இங்ஙனே பல பல காண்க.

த்ரிபுவன வீரதேவராயன் என்ற அரசன் பட்டர் வைபவத்தைக் கண்டும் கேட்டும் அவரிடத்து மதிப்புக் கொண்டு ஒருநாள் 'பட்டரே! நீர் நமது அரண்மனைக்கு ஒருவிசை வந்து போம்' என்று சொல்ல, அதற்கு பட்டர் சிறிதும் இணங்காமல் "நம்பெருமாள் அஞ்சலென்ற கைமறித்தாலும் அவர் வாசலொழிய வேறெரு போக்கிட முண்டோ எனக்கு?" என்று சொல்லி மறுத்து விட்டனர் என்பது ப்ரஸித்தம். தன்னைச் சரண மடைந்தவர்கட்கு ஆவன வெல்லாஞ் செய்து அவர்களைப் பாதுகாத்தலையே விரதமாகக் கொண்டு அவர்களுக்கு அபயமளிப்பவனான பரம புருஷனுக்கு அடிமைப்பட்ட நாம் சில சிற்றரசரின் வாசலிலே கிடந்து தவளக் கடவோமல்லோம் என்கிற திண்ணிய அத்யவஸாயத்தை வெளியிட்டவாறு.

இன்னமும் பட்டருடைய வைபவங்கள் அபரிமிதமாகவுண்டு; வல்லார்வாய்க் கேட்டு உணர்க. அடுத்த நஞ்சீயர் வைபவத்திலும் இவரது வைபவமே மிக விளங்கும். *

பட்டர் திருவடிகளே சரணம்.

நஞ்சீயர் வைபவம்

இப்பெரியார் அத்வைத ஸம்ப்ரதாயத்தில் அவதரித்திருந்தவர். மாதவாசார்யர் என்பது இவருடைய திருநாமமாக இருந்தது; வேதாந்தி என்பது இவர்க்குச் சிறப்புத் திருநாமம், ஷட்தர்சனங்களுக்கும் ஷடாஸனமிட்டு நிகரற்ற வித்வானாக மேல் நாட்டில் எழுந்தருளியிருந்தவர் இவர். மதாந்தரஸ்தர்களான வித்துவான்கள் பலரையும் திருத்திப் பணிகொண்டருளின எம்பெருமானார் இவரையும் திருத்திப் பணி

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொள்ள விரும்பியிருந்தார். ஆனால் அவருடைய வாழ்நாளில் இந்த மனோரதம் நிறை வேறுதொழியவே தமது சரம ஸமயத்தில் ஆழ்வான் திருக்குமாரரான பட்டரை விசேஷேண கடாக்ஷித்தருளி தர்சந ஸ்தாபகராக நியமித்தருளின காலத்து 'மேல் நாட்டிலுள்ள வேதாந்தியைத் திருத்திப்பணிகொண்டு வாழ்விக்கக் கடவீர்" என்று நியமனம் தந்தருளலாயிற்று. பட்டரும் அதனை நிறைவேற்றுதற்கு உரிய ஸமயத்தை எதிர் பார்த்திருந்தார்.

இங்ஙிலமையில் மேல் நாட்டில் நின்றும் ஒரு அந்தணர் யாத்திரை யடைவிலே நம்பெருமாள் ஸந்நிதிக்கு விடைகொண்டு பட்டரையும் திருவடி தொழுதார். அப்போது வேதாந்தியின் பிரபாவங்களை வார்த்தை யடைவிலே அவர் எடுத்துரைத் தார். "மேல்நாட்டில் வேதாந்தி யென்று ஒரு பெரிய வித்வான் இருக்கிறார்; அவருடைய வித்யையும் கோஷ்டியும் போலே உமக்கு மிருக்கக் கண்டு களிக்கின் றேன்" என்று பட்டரை நோக்கிக் கூறினர். அவர் திரும்பி ஸ்வதேசத்திற்குச் சென்று வேதாந்தியை நோக்கி "ஸ்வாமின்! ஸ்ரீரங்கத்தில் பட்டரென்று ஒருவர் எழுந்தருளியிருக்கிறார்; அவர் அத்விதிய வித்வான்; அவருடைய சிஷ்ய கோஷ்டி களின் பெருமையும் வாசாமகோசரம்" என்று சொல்ல, வேதாந்தியும், 'அவர் நமக்கு ஒத்த வித்வானே? அவர்க்கு என்ன சாஸ்த்ரம் வரும்?" என்று கேட்க; அதற்கு அவ்வந்தணர் "பட்டர் உம்மிலும் சிறந்த வித்வானே யாவர்; தர்க்க வியாகரண மீமாம்ஸைகள் முதலிய ஸகல சாஸ்திரங்களும் அவர்க்கு வாசோ விதேயங்கள்" என்று கூறினர். வேதாந்தியும் அது கேட்டு "இவ்விபூதியிலே நமக்கு ஒருவரும் எதிரில்லை; ஷட்தர்சனத்திற்கும் ஷடாஸமிட்டு அதன்மேலே உயரவிருந்தோம்; பட்டரென்பவர் நம்மிலும் அதிகர் என்று இவர் சொல்லுகிறாரே!" என்று அன்று தொடங்கித் திடுக்கிட்டிருந்தார்.

அவ்வந்தணர் மீண்டும் ஒருகால் அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக்கு வந்து பட்டரைத் திருவடித் தொழுது "தேவரீருடைய வைபவங்களை யெல்லாம் வேதாந்திக்குச் சொன்னேன்; தர்க்க வியாகரண மீமாம்ஸைகள் முதலிய ஸகல சாஸ்த்ரங்களும் தேவரீருக்கு வாசோ விதேயங்களென்று சொன்னேன்; அவரும் அதுகேட்டு விஸ்மயப்பட்டிருக்கிறார்" என்று விண்ணப்பஞ் செய்ய, அதற்கு பட்டர் 'திருநெடுந்தாண்டக சாஸ்திரம் நமக்குத் தெரியும் என்று வேதாந்திகளிடம் சொல்லிற்றிலீரே!" என்றருளிச் செய்ய, அந்தணரும் அப்படியே சொல்லுகிறே னென்று சொல்லிச் சென்று வேதாந்தியிடம் "பட்டர்க்குத் திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம் அஸாதாரணம்" என்று கூற, அது கேட்ட வேதாந்தி அந்த சாஸ்த்ரம் இன்னதென்று அறியப் பெறாதவராகையாலே அது என்னே? வென்று வியப்புக் கொண்டிருந்தார்.

இங்ஙனே சில நாள் சென்றபின், எம்பெருமானுடைய நியமனப்படி வேதாந்தியைத் திருத்திப் பணி கொள்ளத் திருவுள்ளம்பற்றிய பட்டர் நம்பெருமாள் ஸந்நிதியிலே நியமனம் பெற்றுப் புறப்பட்டு மேல்நாட்டிலெழுந்தருளிக் காவேரிக் கரையில் சிறுப்புத்தூரண்டையில் நின்றருள, அப்போது அங்கு எழுந்தருளியிருந்த திருமலை அனந்தாழ்வான், பட்டர் எழுந்தருளின செய்தியறிந்து சடக்கென வந்து ஸேவித்து 'ஐயோ! ஸுகுமாரரான நீர் காடும் மலையும் கடந்து இத்தனை தூரம் எழுந்தருளலாமோ?" என்ன, பட்டரும், அனந்தாழ்வான் திருவடியிலே விழுந்து ஸேவித்து "மேல்நாட்டிலே போய் வேதாந்தியைத் திருத்தி நம் தர்சனப்ரவர்த்தகரா கும்படி பண்ணென்று நம் உடையவர் நியமித்தருளினரே; அப்படியே நம்பெருமா ளும் விடை ஸாதித்து நியமித்தருளினர்" என்று சொல்ல; அனந்தாழ்வானும் 'எங்கள் குடிக்கரசே! வாரும்' என்று பட்டரை மிகவுமுகந்து அழைத்துக் கொண்டி

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

போய்த் திருநாராயண புரத்திலே மஹா வைபவமாக மங்களாசாஸனம் செய்வித்து வேதாந்திகள் விஜயஞ் செய்திருக்கிற ஊர்க்கும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றார்.

சிஷ்யர்கள் பலர் பிருதாவளிகள் கூறத் திருப்பல்லக்கிலே பட்டர் எழுந்தருளா நிற்கக் கண்ட அங்குள்ள அந்தணர் சிலர் பட்டரை நோக்கி "நீர் ஆர்? எங்கேற எழுந்தருளுகிறீர்?" என்று கேட்க; அதற்கு பட்டர் "நாம் ராமானுச னடிகள்; வேதாந்திகளுடனே தர்க்கிக்கப்போகிறோம்" என்று கூற அதுகேட்ட அவர்கள் "தேவரீர் இப்படி ஸம்ப்ரமத்துடனே எழுந்தருளினால் வேதாந்திகளைக் காண்பதும் அருமைப்படும்; அவருடைய சிஷ்யப்ரசிஷ்யர்கள் தலைவாசலிலே நிரம்ப, வந்த வித்வான்களுடனே நாலாறுமாதம் தர்க்கித்து அவர்களை உள்ளே புகுர வொட்டாதே புறம்பே தள்ளிவிடுகிறார்கள்; அங்ஙனமாகாமே அவரை நேரிற் கண்டு தர்க்கிக்க ஒருபாய முரைக்கிறோம் கேளும்;

"வேதாந்திகள் மிக்க செல்வச் சிறப்புடையவராதலால் தினப்படியாக ப்ராஹ்மண ஸந்தர்ப்பணை வெகு விசேஷமாக நடத்தி வருகிறார். புஜிக்க வருகிற ப்ராமணர்களுடனே கலந்து தேவரீரும் போஜந சாலையிற் சென்று சேர்தல் நன்று; அங்கு வேதாந்திகள் அவசியம் நிரீக்ஷிக்க வருவர், அப்போது காணலாம்; ஆகையாலே பரிஜந பரிபார்ஹங்களை யெல்லாம் இங்கே நிறுத்தித் தனியே யெழுந்தருளத் தக்கது" என்று ஸதுபாயம் சொல்லிப் போனார்கள்.

பட்டரும், அவ்விதமாகவே போஜந சாலையில் சென்று சேர்ந்து, பங்க்தியில் எழுந்தருளியிராமல் வேதாந்திகள் பக்கத்திலேயே நிற்க, அவரும் 'பிள்ளாய்! இங்கு ஏன் நிற்கிறீர்?' என்ன, 'பிக்ஷைக்காக' என்று பட்டர் சொல்ல, 'எல்லோரும் புஜிக்கிறவிடத்திலேபோய் உட்காரும்' என்று வேதாந்திகள் சொல்ல "நான் அன்ன பிக்ஷைக்கு வந்தேனல்லேன்" என்று பட்டர் சொல்ல, அது கேட்ட வேதாந்திகள் இவர் வித்வானு மிருக்கக்கூடும் என்றெண்ணி "கா பிக்ஷா?" என்று கேட்க, பட்டரும், 'தர்க்க பிக்ஷா" என்ன, வேதாந்திகள் இதைக்கேட்டுத் திடுக்கிட்டு "முன்னே நாம் கேள்விப்பட்டிருந்த பட்டரல்லது வேறொருவர் நம் முன்னே வந்து கூசாமல் நின்று இங்ஙனே சொல்லப் பெறார்; இவர் அந்த பட்டரேயாயிருக்கக் கூடும்" என்று நிச்சயித்து "நம்மைத் தர்க்க பிக்ஷை கேட்டீர்; நீர் பட்டரோ?" என்ன; அவரும் "ஆம்" என்ன; அவ்வளவிலே வேதாந்திகள், இவருடைய வித்யா வைபவம் காண்போமென்று குதூஹலித்துத் தர்க்கிக்கத் தொடங்கினார். ஒருவர்க் கொருவர் மத்தவாரணம் பிணங்குமாபோலே தர்க்கிக்க, இங்ஙனே ஒன்பதுநாள் சென்ற பின்பு பத்தாநாளில் பட்டர் அத்வைதத்தை ஸஹஸ்ரமுகமாகக் கண்டித்து விசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபித்துத் திருவெந்தாண்டகத்தின் விழுமிய பொருள் களையும் அழகாக உபந்யஸித்தருள, வேதாந்திகள் விஸ்மய ஸந்தோஷ விவசராய் எழுந்திருந்து அஞ்சலி ஹஸ்தராய் நின்று "உம்மை மநுஷ்யமாத்ரமே யென்றிருந்தேன். உம்மோடு நம்பெருமாளோடு வாசியில்லை; உறங்கும் பெருமாள் அவர். உலாவும் பெருமாள் நீர்" என்று பலவாறு துதித்துத் திருவடிகளிலே விழுந்து தொழுது 'அடியேனை அங்கீகரித்தருள வேணும்' என்று விஞ்ஞாபிக்க, பட்டரும் தாமெழுந்தருளின காரியம் மிக விரைவாகப் பலித்தமைக்குத் திருவுள்ளமுவந்து வேதாந்திகளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் ப்ரஸாதித்தருளி மஹாபாகவதோத்தமராக்கி விசேஷ கடாக்ஷஞ் செய்தருளி வேதாந்திகளே! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர்; நாம் உமக்குப் பரக்கச் சொல்லலாவ தொன்றுமில்லை: வேதாந்தார்த்தங்களிலே தெளிவு பெற்ற நீர் இனி மாயாவாத ரீதியை ஸவாஸனமாக த்யஜித்து அருளிச் செயல்களை ஓதி, நம் எம்பெருமானார் தர்சநத்தை நிர்வஹித்துப் போரீர்' என்று நியமித்து, அவ்வளவிலே நம்பெருமாள் ஸந்நிதியில் திருவத்யயநோத்ஸவம் அணித்தான படியை

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்மரித்தருளி விரைந்து கோயிலேற வெழுந்தருளப் புறப்பட்டு மார்கழி மாதம் அமாவாஸ்யையன்று திருவரங்கம் வந்து சேர்ந்து அன்றுமாலை நம்பெருமாள் திரு முன்பே விடை கொண்டு நிற்க; பெருமாளும் 'பட்டரே! நீர் புறப்பட்டுப் போன காரியம் என்னாயிற்று?' என்று கேட்டருள, பட்டரும் 'வேதாந்திகள் தேவரீருடைய திருவடிகட்கு அடியவராயினர்' என்று விஜ்ஞாபிக்க, 'அவரைத் திருத்திப் பணி கொண்டபடி எங்ஙனே?' என்று பெருமாள் கேட்க, பட்டர் உடனே 'இங்ஙனே காணும்' என்று சொல்லித் திருநெடுந்தாண்டகத்தைத் திருவோலக்கத்திலே உபந்ய ஸித்தார். இந்த இதிஹாஸத்தை அடியொற்றியே நாளைக்கும் நம்பெருமாள் ஸந்நிதியில் திருவத்யயநோத்ஸவத் தொடக்கத்திற்கு முன்னுள் திருநெடுந்தாண்டகத் திரு நாளென்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றதென்று பெரியார் கூறுவர். பிறகு பட்டர் இதனை அரையர் வம்சஸ்தர்களுக்கு அளித்திட்டார்.

இது இங்ஙனமிருக்க, வேதாந்திகள் ஸ்வதேசத்திலே திருமாலடியார்களைப் பூஜித்து வரும் நாளில், ஸம்ஸாரத்தில் விரக்தி யெய்தி உத்தமாச்ரமத்தை ஸ்வீகரித்து, இனி பட்டர் திருவடி வாரத்திலேயே நிழலும் அடிதாறுமாக நித்யவாஸஞ் செய்ய வேணுமென்று அறுதியிட்டுக் கோயிலை நோக்கி யெழுந்தருளா நிற்கையில், சிறுப் புத்தூரிலே அனந்தாழ்வானைக் கண்டு ஸேவித்து நிற்க, அவரும் வாரீர் வேதாந்தி களே! ஸுகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுது செய்து பட்டர் திருவடிகளே சரணமென்றிருந்தால் உம்மைப் பரமபதத்தினின்றும் தள்ளி விடுவாருண்டோ? இனி என்? திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்டராவீர்' என்று ஆசீர்வதித்துப் போக விட்டார். வேதாந்திகளும் பயணகதியிலே போய்க் கோயிலேற எழுந்தருளி பட்டர் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து கிடக்க, பட்டரும் மிகவு முகந்தருளி 'நம்முடைய சீயர் வந்தார்' என்று வாரியெடுத்துக் கட்டிக்கொண்டருளி ஒரு க்ஷணமும் பிரியாமல் தம்முடைய ஸந்நிதியிலேயே வைத்துக்கொண்டு ஸகலார்த்தங் களையும் ப்ரஸாதித்தருள, ஜீயரும் பட்டரை யன்றித் தேவுமற்றறியேன் என்றிருந் தார். [பட்டர் 'நம்முடைய சீயர்' என்று சொல்லி அணைத்துக்கொண்ட அன்று தொடங்கி வேதாந்திகளுக்கு நஞ்சீயர் என்று திருநாமம் வழங்கலாயிற்று.] உபதேச ரத்தினமாலையில் "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை யென்பர், அவரவர் தமேற்றத்தால்-அன்புடையோர், சாத்து திருநாமங்கள் தாமென்று நன்னெஞ்சே, ஏத்தனனைச் சொல்லி நீயின்று" என்ற பாசுரம் இங்கு அநுஸந்திக்க வுரியது.

நஞ்சீயருடைய ஆசார்ய ப்ரேமம் பரம விலக்ஷணமானது. ஒரு கைசிக த்வாதசி யன்று பட்டர் ப்ரம்மரதத்திலெழுந்தருளித் திருவீதி யலங்கரிக்கப் புறப்பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங்கப்புக "உத்தமாச்ரமியாய் த்ரிதண்ட தாரியான வுமக்கு இக்காரியம் தகாது" என்று பட்டர் முதலானார் மறுத்துக் கூற, அப்போது நஞ்சீயர் 'எனக்கு நீ துணையாகி என்னை ரக்ஷிக்கவேணுமென்னும் பொருளுடையதான "ஸகா மா கோபாய" என்கிற மந்திரத்தைச் சொல்லி ஸ்வீகரிக்கப்பட்ட இந்த முக்கோல் தானே இன்று எனக்கு விரோதியாகிறதோ? இக்கோல் எனக்குத் துணையல்லவோ? ஸ்வரூப ரக்ஷணத்திற்கு இக்கோல் இடையூறுயின் இது எனக்கு வேண்டா' என்று சொல்லி த்ரிதண்டத்தை விட்டெறியப் போனாராம். அப்போது அவருடைய பக்தி விசேஷத்தைக்கண்டு அனைவரும் வியந்தனர்.

பட்டர் திருவணையாட எழுந்தருளுகிறபோது, பகலெல்லாம் வழிக்கந்தருளின ஆயாஸத்தாலே ஒரு தூற்றடியிலே நஞ்சீயர் மடியிலே திருமுடியை வைத்துக் கண் வளர்ந்தருள, ஒரிரவெல்லாம் தூடைமாறுதல் அசைத்தல் செய்யாதே நஞ்சீயர் இருந்தார் என்பதும் இவருடைய ஆசார்ய ப்ரேமத்தின் கனத்தை விளக்கும்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நஞ்சீயர் நெடுநாள் வரையில் அருளிச் செயல்களின் வாஸனையும் அறியாத வராயிருந்துவைத்தும், பட்டரை ஆச்ரயிக்கப் பெற்றபின்பு ஆசார்ய கடாக்ஷ விசேஷத்தினால் சிறிது காலத்திலேயே திவ்யப்ரபந்தங்க ளெல்லாவற்றையும் ஒதித் தரித்து, அவற்றில் விசேஷார்த்தங்கள் நிர்வஹிப்பதில் நல்ல விரகராய் விளங்கினர்.

சிறிய திருமடலில் "அவட்கு மூக்தோஹ வெங்கரகம் சேராவகையே சில குனித்தான்" என்ற விதற்கு ஸாமாந்யமாகப் பலரும் பொருள் சொல்லக்கூடியவிதம் என்னெனில்; கரஹ நரகத்திற்குப் போக வொட்டாமல் வீர ஸ்வர்க்கத்திற்குப் போகச்செய்தார் பெருமாள் என்றும்; இதற்கு இவ்வனல்ல பொருள். வலீத்த வில்லுங் கையுமாய் நின்ற பெருமாளைக் கண்ட சான் 'நாம் மேலேபோய் வேறெரு நரக யாதனை அநுபவிக்க வேண்டா; எல்லா நரக வேதனையும் நமக்கு இங்கே அநுபவித்தா யிற்று' என்று குடல் மறுகும்படி போர்க்களத்திலே அவனைப் படாத பாடும் படுத்தி னன் என்று பட்டர் அருளிச் செய்யும் பொருள். நஞ்சீயர் பட்டரை ஆச்ரயிப்பதற்கு முன்னே ஸ்வதேசத்தில் வாழுங்காலத்து பட்டருடைய சிஷ்யரொருவர் நஞ்சீயரைச் சந்தித்து வார்த்தை யாடும்போது 'எங்களுடைய திவ்யப் ப்ரபந்தத்தில் "அவட்கு மூக்தோஹ வெங்கரகஞ் சேராவகையே சில குனித்தான்" என்றிருக்கிறது; வேதாந்திகளே! இதற்கு நீங்கள் என்ன பொருள் சொல்லுவீர்கள்?" என்று கேட்க அவர் ஸாமாந்யமாக நெஞ்சிற்பட்ட பொருளைச் சொல்லிவிட்டு, 'உங்களுடைய பட்டர் எங்ஙனே சொல்லுவர்?' என்று கேட்க மேலே விவரித்த பொருளை அவர் கூற, இப் பொருள் கூறவல்லபட்டரை நாம் ஆச்ரயிக்கவேணுமென்று அவருக்குக் காதல் கிளர்ந் திருந்ததாகப் பெரியோர் கூறுவர். நஞ்சீயர் வைபவம் நாம் சொல்லுந்தரமன்று.

நஞ்சீயர் வைபவம் முற்றிற்று.

நம்பிள்ளை வைபவச் சுருக்கம்.

ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்ய பரம்பரையில் ஸ்ரீமத்காத முனிகள் தலைமை பெற்றவர். அவருடைய திருவடிகள் உய்பக்கொண்டார். அவருடைய திருவடிகள் மணக்கால் நம்பி. அவராலே திருத்திப் பணிகொள்ளப்பட்டவர் ஆளவந்தார். அவருடைய திருவடிகளில் ஆச்ரயித்திருந்த பல ஆசிரியர்களில் தலைவர் பெரியநம்பி. அவரை ஆச்ரயித்தவர் எம்பெருமானரென்கிற ஸ்ரீராமானுஜர். அவருடைய சிஷ்யர் களில் *ராமானுஜபதச் சாயா* என்று ப்ரஸித்தரான எம்பார் தலைமை பெற்றவர். அவருடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரரான ஸ்ரீபராசரபட்டர். அவர் எம்பெருமானாரைப் போலவும் அவர்க்கு மேற்படவும் பிரபாவம் மிக்கு விளங்கினர். அவராலே திருத்திப் பணி கொள்ளப்பட்டவர் நஞ்சீயரென்று ப்ரஸித்தரான மேல் நாட்டு வேதாந்திகள். பட்டர் காலத்திலிருந்தே திவ்ய ப்ரபந்தார்த்த ப்ரவசனங்களுக்கு மிக்க சிறப்பு விளைந்தது. நம்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை ஆகிய ஆசிரியர்கள் மூவரும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய ஸர்வஸ்வமான திவ்யப் பிரபந்தங்களுக்குப் புத்துயி ரளித்தவர்கள். பிள்ளை லோகாசாரியரும் அப்படியே. இவர்களது பிரபாவம் கடலின் மிகப்பெரிதாயினும் இங்குச் சுருங்க வரையப்படுகின்றது.

நஞ்சீயருடைய திருவடிகளிலே ஆச்ரயித்தவர்களில் தலைவர் நம்பிள்ளை. இவர்க்கு இயற்கையான திருநாமம் 'நம்பூர் வரதராஜார்யர்' என்பது. ஸ்வாசார்ய ரான நஞ்சீயர் உகந்து சாத்தின திருநாமம் நம்பிள்ளை யென்பது. அந்தத் திருநாமம் சாத்துகைக்கு அடியென்னென்னில்; நஞ்சீயர் பட்டருடைய நியமனப்படி திருவாய் மொழியின் திவ்யார்த்தங்களின் ப்ரவசனஞ் செய்வதையே போது போக்காகக்கொண்டி

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வாழ்ந்து வந்தார் திருவரங்கம் பெரிய கோயிலில். அவருடைய காலக்ஷேப கோஷ்டியில் அங்வயித்திருந்தவர்களில் நம்பூர் வரதராஜார்யரும் ஒருவராயிருந்து வந்தார். இவர் கீறுபூத்த தெருப்புப்போல இருந்துவந்தபடியாலே இவருடைய ஞானவைபவம் முதலிய பெருமைகளை விசேஷித்து யாரும் அறியாதிருந்தனர்.

இப்படியிருக்கையில், நஞ்சீயர் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய ஆறாயிரப்படியிற் காட்டிலும் சிறிது விரிவாக வொரு வியாக்கியானமிடும்படி பட்டருடைய நியமனம் பெற்றிருந்ததனால் ஒன்பதினாயிரப்படி யென்றொரு வியாக்கியானம் இட்டருளியிருந்தார். அதைச் செவ்வையாகப் பட்டோலை கொள்ள வல்லாரிடம் கொடுத்து எழுதுவிக்க வேணுமென்று கருதி இதற்குத் தகுந்தவர்கள் யாரேனுமுளரோவென்று அந்தரங்கர்களை விசாரிக்கையில் 'நம்பூர் வரதராஜாசார்ய ரென்றொருவர் ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டிக்குத் தவறாது வருகின்றாரே; அவர் நல்ல விரகர்; எழுத்திலும் வல்லவர்; அவரைக்கொண்டு இப்பணியை நிறை வேற்றிக் கொள்ளலாம்' என்று கூறினார்கள். பிறகு அவரை அருகேவரவழைத்து ஆராய்ந்து பார்க்கையில் அவருடைய யோக்யதை ஒப்புயர்வற்றதென்று தெரிய வந்தது; அதனால் உள்ளம் பூரித்து அவர்பால் விசேஷ கடாக்ஷம் செய்தருளித் தம்முடைய ஒன்பதினாயிரப்படியை வரியடைவே அவர்க்கு ப்ரவசனமும் செய்து



ஸ்ரீகாஞ்சீ. தேவப்பெருமாள் ஸன்னிதி வீதி நம்பிள்ளை ஸன்னிதியில் ஸேவை ஸாதிக்கும்

நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளைகள்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அதை யெழுதித் தரும்படி ஸ்ரீகோசத்தை அவரிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டவர் தம்மூருக்குச் சென்று எழுதிக்கொண்டு வருவதாகச் சொல்லிப்போகையில் திருக்காவேரியில் நீஞ்சிச் செல்ல நேர்ந்தது; அப்போது திரு முடியில் கட்டிக் கொண்ட அந்த ஸ்ரீகோசம் நெகிழ்ந்து விழுந்து வெள்ளத்திற் போய்விடவே இப்படி அபசாரமாய்த் தலைக்கட்டிற்றேயென்று வருந்த நேர்ந்தது. ஆனாலும் இவர் தாம் அந்த வ்யாக்யானத்தை ஸ்வாசார்யர் திருவடிகளிலே வரியடைவே கற்றிருந்த படியாலும் அவருடைய கருணை கடாக்ஷத்தை விசேஷித்துப் பெற்றிருந்த படியாலும் அவருடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே பட்டோலை கொள்ளத் தொடங்கி விரைவில் எழுதி முடித்து ஸ்ரீகோசத்தை நஞ்சீயர் திருவடிகளிலே கொண்டு வைத்தார். 'நாம் கொடுத்த ஏடு எங்கே?' என்று அவர் கேட்கையில், நடந்தது நடந்தபடியே விண்ணப்பஞ் செய்ய வேண்டியதாயிற்று. பிறகு நஞ்சீயர் ஸ்ரீகோசத்தை அவிழ்த்துக் கடாக்ஷிக்கையில், தாமருளிச்செய்த ஸ்ரீஸூக்திகள் விடாமலும் தம்மிடம் அவர் கேட்டிருந்த சில அர்த்த விசேஷங்களும் பொருத்தமாக அமைத்தும் விரிவு மில்லாமல் இருந்த அழகுக்கு மிகவுகந்து 'வாரீர் நம்முடைய பிள்ளையே!' என்று எடுத்தணைத்துக் கொண்டார். அது முதலாக நம்பிள்ளை யென்றே இவர் வழங்கப் பெற்று வந்தார். திருக்கலிகன்றிதாஸர் என்பதும் இவர்க்கு நஞ்சீயர்-சாத்தின திருநாமம்.

இவருடைய ஞான வைபவத்தைப் பற்றி நாம் விரிவாக எழுத வேண்டுமோ? பெரிய திருமொழி வ்யாக்யானத்தில் *ஒதுவாய்மையு முவனியப் பிறப்பு முனக்கு முன்தந்த அந்தணனெருவன் * என்ற விடத்து "மூற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்துப் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக் குடலாக ந்யாய மீமாம்ஸைகளுமதிகரித்து, போதுபோக்கும் அருளிச் செயலிலே யாம் நம்பிள்ளையைப் போலே" என்று பெரிய வாச்சான் பிள்ளை யருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தி யொன்றே இவருடைய ஞானப்பெருமையை விளக்கக் கூடியது. திவ்யப்ரபந்தங்களுக்கும் இதிஹாஸ புராணங்களுக்கும் ஆழ்ந்து இன்சுவையே வடிவெடுத்த அர்த்தங்களை யருளிச் செய்வதில் இவர்க்கு ஒத்தாரும் மிக்காருமில்லை.

லோகாசார்யரென்கிற திருநாமமும் இவர்க்கு உண்டு. அது நிகழ்ந்த வரலாறு கேண்மின்; இவர் கோயிலில் வாழ்ந்த காலத்தில் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் இவர் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸகலார்த்தங்களும் கேட்டு வந்தார்கள். 'நம்பெருமாள் கோஷ்டியோ நம்பிள்ளை கோஷ்டியோ' என்னும்படி மிகப்பெரிய சிஷ்ய கோஷ்டி ஸம்பத்துடன் வாழ்ந்து வந்தார். அப்போது, முதலியாண்டான் திருப்பேரனான கந்தாடைத் தோழப்பரும் அங்கு வாழ்ந்து வந்தார் அவரும் வித்வானாயிருக்கச் செய்தேயும் அவரிடத்தில் ஒருவரும் ஆச்ரயிக்காதிருக்கவே அவர்க்குப் பொறாமை யுண்டாகி ஒரு நாள் நம்பிள்ளையைப் பெருமாள் கோஷ்டியிலே திரஸ்காரமான வார்த்தைகளைச் சொல்லிப் பரிபவித்து விட்டுத் திருமாளிகைக் கெழுந்தருளினார். அவருடைய தேவிகள் இந்த அஸத்யாபசாரத்தை யறிந்து கண்ணுங் கண்ணீருமாக வந்து 'அந்தோ! இப்படியும் பரமாசார்யர் திருவடிகளிலே அபசாரப்படுவீரோ? உமக்கு உய்யும் விரகுண்டோ? என் செய்தீர்! என் செய்தீர்! ஐயோ' என்று பலவுஞ்சொல்லி அநுதாபத்தை யுண்டாக்க, தோழப்பரும் அநுதபித்து நம்பிள்ளை திருவடிகளிலே சென்று க்ஷமை வேண்ட வேணுமென்று பாரித்திருந்தார். அதற்குள்ளே நம்பிள்ளை தாமே தோழப்பர் திருமாளிகை யேறவந்து வேரற்ற மரம்போலே விழுந்து தெண்டனிட்டு, தேவரீருடைய திருவுள்ளம் கன்றும்படி வர்த்தித்த அடியேனுக்கு தேவரீருடைய க்ஷமையல்லது புகலில்லை யென்று பலவுமருளிச் செய்து தாம் க்ஷாமணம் பண்ணிக் கொண்டார். அப்போது தோழப்பர் அந்த மஹா குணத்திற்கு விஸ்மயித்து "ஸ்வாமின்! தேவரீரை இத்தனை நாளும் சிறிது பேர்களுக்கு ஆசார்யராக எண்ணியிருந்தேன்; இப்போது லோகத்துக் கெல்லாம் ஆசார்யர் தேவரீர் என்று

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திண்ணமாகக் கொண்டேன்" என்றார். அது முதலாக நம்பிள்ளைக்கு லோகாசார்ய ரென்று திருநாமம் வழங்கி வந்தது; "தண்ணுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம் முகப்பால் என்னவுலகாரியனெவென்றுரைக்க, பின்னை யுலகாரியனெனும் பேர் நம்பிள்ளைக் கோங்கி, விலகாமல் நின்றதென்றும் மேல்" என்ற உபதேச ரத்தின மாலைப் பாசுரம் இங்கே அநுஸந்திக்கத் தகும்.

நம்பிள்ளை திருவடிகளில் பலர் ஆச்ரயித்திருந்தாலும் பின்பழகிய பெருமாள் ஜீயர்க்கு இருந்த ஆசார்ய பக்தி ஒப்பற்றதென்று தெரிகிறது; உபதேச ரத்தின மாலையில் "பின் பழகராம் பெருமாள் சீயர் பெருந்தவத்தில் அன்பதுவுமற்று மிக்க வாசையினுல் நம்பிள்ளைக்கான வடிமைகள் செய் அந்நிலையை நன்னெஞ்சே! ஊனமற வெப்பொழுது மோர்" என்று விசேஷித்து அருளிச் செய்கையாலே.

இப்பேராசிரியரின் திருவடிகளில் பணிந்து அல்லும் பகலும் ஸகலார்த்தங் களையுங் கேட்டுத் தரித்த வடக்குத் திருவீதிப் பிள்ளையும் பெரிவாச்சான் பிள்ளையும் உலகுக்குச் செய்திருக்கு முபகாரம் கைம்மாறற்றது.

பட்டருடைய ஸந்ததியில் தோன்றி மஹா வித்வானுயிருந்த நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டரும் கந்தாடைத் தோழப்பர் போலவே நம்பிள்ளையிடத்தில் பொருமை கொண்டிருந்தவர். அவர் ஒரு நாள் ராஜ ஸபைக்குச் சென்றிருந்தார். அந்த ராஜா மஹா விவேகியுமாய், தன்னிடம் வருகிற பண்டிதர்களை யெல்லாம் ஸ்ரீ ராமாயணாதி க்ரந்தங்களில் கேள்வி கேட்பவனுமாயிருந்தபடியால் இந்த பட்டரையும் ஸ்ரீ ராமா யணத்தில் ஒரு கேள்வி கேட்டான். அதாவது; ஸ்ரீ ராமபிரான் நாராயணத்வ ப்ரயுக்தமான பரத்வத்தை மறைத்துக் கொண்டு அஜ்ஞனைப் போலவும் அசக்தனைப் போலவும் அவதரித்திருக்கையில் "மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாநுத்த மாந்" என்று ஜடாயுவுக்கு முக்தி யளித்தது எங்ஙனே பொருந்தும்?-என்று. இக் கேள்விக்கு த்ருப்திகரமான விடையளிக்க பட்டருக்கு ஸ்புரியாமையாலே ஆலோ சிக்க வேண்டியதாயிற்று. அப்போது ராஜாவும் அங்யபரனுயிருக்க, இவருடைய பாக்ய வசத்தாலே அங்கு ஒரு ஸ்வாமி தென்பட்டார். அவர் நம்பிள்ளை திருவடிகளில் அர்த்த விசேஷங்கள் கேட்டவர்; இந்த பட்டர் அவரை அருகே வரவழைத்துச் செவியோடு செவிமடுத்து 'இவ்வரசன் கேட்ட கேள்விக்கு நம்பிள்ளை எப்படி நிர்வஹிப்பது?' என்று கேட்டார். அவர் "ஸத்யேந லோகாந் ஜயதி" என்கிற ச்லோகத்தைக் கொண்டு நிர்வஹிப்பர் என்று சொல்ல, அதை இவர் தமது மனதில் நன்றாக வாங்கிக் கொண்டு பிறகு ராஜாவிடம் உபன்யஸித்தார். அரசனும் பிறகு உகந்து விசேஷ ஸத்காரங்கள் செய்தான். அந்த ஸத்காரங்களை ப்ராமாணிகரான விவர் தம் க்ருஹத்திற்குக் கொண்டுபோக விரும்பாமல் நம்பிள்ளை திருவடிகளிலே கொண்டு ஸமர்ப்பித்து தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளில் சிந்திப்போன வொரு சொல்லுக்குப் பெற்ற ஸத்காரமிது; இனி அடியேனை அங்கீகரித்தருளி வாழ்விக்க வேணுமென்று வேரற்ற மரம்போல விழுந்து ப்ரார்த்திக்க, அவரையும் சேர்த்துக் கொண்டு உய்வித்தார். நம்பிள்ளையின் பகவத் விஷயோபன்யாஸங்களை அவரும் ஏடுபடுத்தி ஸபாத லக்ஷம் க்ரந்தமாக்கி யிருந்தார். அதிகாரி தெளர்லப்யத்தைக் கணிசித்து அதை நம்பிள்ளை ப்ரசாரத்திற்கு நியமித்தருளவில்லை.

நம்பிள்ளையின் வைபவம் அர்த்த விசேஷங்களைப் பொறுத்ததேயாதலால் அவ்வர்த்த விசேஷங்கள் திவ்யப்ரபந்த வியாக்யானங்களிலும் வார்த்தாமாலை முதலிய வற்றிலும் பாக்யசாலிகளால் உய்த்து உணரத்தக்கன.

இப்பேராசிரியருடைய தனியன்; "வேதாந்த வேத்யாம்ருத வாரிராசேः வேதார்த்த ஸாராம்ருத பூரமக்ர்யம், ஆதாய வர்ஷந்தமஹம் ப்ரபத்யே காருண்ய பூர்ணம் கலிவைரி தாஸம்." .... *

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வடக்குத் திருவீதிப் பிள்ளை வைபவச் சுருக்கம்.

ஆனி மாதத்தில் பெரியாழ்வாருடைய திருவவதார நன்னாளாகிய ஸ்வாதி நக்ஷத்திரத்தில் இப்பேராசிரியர் திருவவதரித்தருளினர். ஸ்ரீவசன பூஷணம் முமுக்ஷுப்படி முதலிய அஷ்டாதச ரஹஸ்யங்களை யருளிச் செய்த பிள்ளை லோகாசாரியர்க்கும், ஆசார்ய ஹ்ருதயமருளிச் செய்த அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்க்கும் திருத்தந்தையார் இவர். இவருடைய நிஜநாமதேயம் ஸ்ரீக்ருஷ்ண மஹாகுரு வென்பதாம். இத்தத் திருநாமமே பெரியவாச்சான் பிள்ளை யென்கிற மற்றேராசிரியர்க்கும் இருந்ததனால் நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்திருந்த விவர்களுக்கு வாசி தெரிவதற்காகவே இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை யென வழங்கப்பட்டு வந்தார். திருவரங்கம் பெரிய கோயிலில் வடக்குத் திருவீதியில் இவர் வாழ்ந்து வந்ததுவே இத்திருநாமத்திற்குக் காரணம். "ஸ்ரீக்ருஷ்ண பாத பாதாப்ஜே நமாமி சிரஸா ஸதா, யத்ப்ரஸாத ப்ரபாவேண ஸர்வஸித்திரபூன்மம" என்பது இவருடைய தனியன்.

இப்பேராசிரியருடைய திவ்விய சரித்திரங்களைப் பற்றி முன்னோர்கள் விசேஷமாக எழுதி வைக்கவில்லை யாதலால் இவருடைய ஞானப் பெருமைகளை இங்கு விசேஷமாக அநுபவிப்போம். பகவத் விஷயமென வழங்கப்படுகிற [திருவாய்மொழி வியாக்கியானமான] ஈடு முப்பத்தாறுபிரப்படியை இவ்வாசிரியரே பட்டோலை கொண்டவர். உபதேச ரத்தின மாலையில் * தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறி தன்னை, வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை, இந்த நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது, ஈடு முப்பத்தாறுபிரம் * என்றருளிய பாசுரத்தின்படி, நம்பிள்ளையின் பகவத் விஷயோபந்யாஸங்களைக் கேட்டுத் திருவுள்ளத்தில் தரித்துக் கொண்டிருந்து அற்புதமாகப் பட்டோலை கொண்ட பெருமை இவ்வாசிரியர்க்கு அஸாதாரணமானது. சிலர் கூறுவதாவது. நம்பிள்ளை சோதிவாய் நிறந்து அருளிய பங்க்திகள் எப்படியோ அப்படியே அப்பங்க்திகளே ஈட்டில் அமைக்கப் பட்டனவென்று. இதில் ஔசித்யம் சிறிதுமில்லை. வாசிகவ்யவஹார நடை வேறு; க்ராந்திக சைலி வேறு. கங்காப்ரவாஹம்போல் நம்பிள்ளையருளிச் செய்தவையாய், கரை கட்டாக் காவேரி யென்னும்படியாயமைந்த ஸ்ரீ ஸூக்திகள் அப்படியே ஏடு படுத்தப்பட முடியாதவை. மஹோபந்யாஸங்களில் குறிப்பெடுத்துக் கொள்ளும் முறையில் அமைந்தது ஈடு. ஈட்டின் பங்க்தி ஸங்கிவேசமானது, வேறு எந்த க்ரந்தத்திலும் கண்டறியாததும் காணமுடியாததுமான அத்விதீய விலக்ஷண ஸந்தர்ப்பம். ஸம்ஸ்க்ருத வித்வான்களும் தமிழ் வித்வான்களும் தனித் தனியே உள் குழையத்தக்க உயர்ந்த ரசநாவிசேஷம். "ககாரம் ககநாகாரம் ஸகாரஸ்ஸாகரோபம:" என்கிறப் போலே "ஈட்டுக்குவமை ஈடே" என்ன வேண்டு மத்தனை. மணிப்ரவாள நடையில் மற்றும் பலவாசிரியர்களு மெழுதி யுள்ளார்களெனினும், இவருடைய ரசநாவைசரி தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுது மொத்து விளங்குமழகு அநுபவ ரஸிகர்களுக்கே அறிய வெளிது. அர்த்தம் தெரியாமற் போனலும் பங்க்தி ஸங்கிவேசத்தை ஸேவித்த மாத்ரத்திலே இரும்பு போல் வலிய நெஞ்சும் இறைபிறை யுருகும். பெரிய புலவர்கள் பத்தெட்டு வரிகளில் எழுத வேண்டிய பொருள்களை ஒரு வரியில் வெகு கம்பீரமாக அடக்கி யெழுதுந்திறன் இவ்வாசிரியர்க்கே அமைந்தது.

மணவாள மாமுனிகள் இவ்வாசிரியர்க்கு வள்ளல் என்று விசேஷணமிட்டருளினர். [உதாரர் என்றபடி.] ஔதார்யம் படைத்தவர்கள் உலகில் பலர் புகழ் பெற்றிருந்தாலும் இவரொருவருடைய ஔதார்யமே உண்மையில் கொண்டாடத் தக்கதும் ஒப்புயர்வற்றதுமாம். ஏற்கெனவே திருக்குருகைப் பிரான் பிள்ளானருளிச் செய்த ஆறுபிரப்படி வியாக்கியானமும், நஞ்சீயரருளிச் செய்த ஒன்பதினாயிரப்படி வியாக்கி

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யானமும் இருந்தாலும் அவை மிகவும் ஸங்க்ஷிப்தங்களாகையாலே, அநுபவ ரஸிகர்களுக்குப் பரிபூர்ண திருப்தியை விளைக்கப் போதாதவை. * நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிடப் பெரியவாச்சான் பிள்ளை யருளிச் செய்த இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம் அவை போலே ஸங்க்ஷிப்த மன்றிக்கே சிறிது விரிவாகவே யிருந்தாலும், ஈடு மூப்பத்தாறுயிரப்படி திருவவதரித்த பின்பு அதுவும் ஸங்க்ஷிப்தமே யென்னும்படியாயிற்று. அனேக ஸ்தலங்களில் இருபத்து நாலாயிரப்படி பங்க்திகளும் ஈட்டுப் பங்க்திகளும் ஒற்றுமைப் பட்டிருக்கையாலே முன்னமவதரித்ததான அந்த வியாக்கியானத்தைத் தூணைகொண்டே ஈடு எழுதியருளப் பட்டதெனத் தெரிகின்றது. ஆயினும், ஸ்ரீஸூக்தி காம்பீர்யமும் அர்த்த பௌஷ்கல்யமும் ஈட்டுக்கு அதிகர ஸாதாரணமாயிருப்பது பற்றியே இதுவே எங்கும் காலக்ஷேப க்ரந்தமாகக் கொள்ளப்பட்டுக் குலாவப் பெறுகின்றது. ஸ்ரீராமாயணம் முதலிய இதிஹாஸ புராணங்களிலிருந்து மேற்கோளாக ஆங்காங்குப் பல பல ச்லோகங்களை யெடுத்து இனிமையே வடிவெடுத்ததாக வியாக்கியானஞ் செய்தருளுமழகு ஈட்டுக்குச் சிறந்த அணிகலன்.

திருவிருத்தத்திற்கும் இவ்வளவே ஈடு வியாக்கியானம் அமைந்துளது. அஷ்டச்லோகி பெரியபடி வியாக்கியானத்திலே "வடக்குத் திருவீதிப் பிள்ளை அஷ்டாக்ஷர தீபிகையிலே அருளிச் செய்தருளினார்" என்று காண்கையாலே அஷ்டாக்ஷர தீபிகை யென்கிற க்ரந்தமும் இவ்வாசிரியரது க்ருதி யென்று தெரியவருகின்றது. (அது லுப்தம்). இப்பேராசிரியருடைய பெருமைகளில் ஒன்றே நாம் உள் குழைந்து போற்றத்தக்கது; அது யாதெனின்; உலகுக்கெல்லாமுபகாரமான பிள்ளை லோகாசார்யரையும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரையும் பெற்றுக் கொடுத்தருளியதே.

பெரியவாச்சான் பிள்ளை வைபவச் சுருக்கம்.

ஆவணி மாதத்து ரோஹிணி நக்ஷத்திரத்தில் பூர்வசிகை ஸந்தியில் திருவவதரித்தவர் பெரியவாச்சான்பிள்ளை. இவ்வாசிரியருடைய சரித்திர வரலாறுகளைப் பற்றியும் விசேஷமாக அறியப் பெறுகின்றிலோம். இவர் தம்மால் உலகுக்கு விளைந்த மஹோபகாரம் அபரிமிதமாதலால் அதைப்பற்றியே சிறிது பேசியுகப்போம். ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கெல்லாம் மிகச் சிறந்த வியாக்கியானமும், ஸ்ரீராமாயணத்தில் பல பல ச்லோகங்களுக்கு இன்சுவையே வடிவெடுத்த வியாக்கியானமும் ஸ்தோத்ர ரத்நாதி வியாக்கியானங்களும் இவரருளிச் செய்தவை. இவருடைய அப்ரதிமமான பாண்டித்யத்தையும் அப்ரமேயமான மேதாப்ரதிபாவிலாஸத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன. வடக்குத் திருவீதிப் பிள்ளையுமிவரும் நம் பிள்ளை திருவடிகளில் ஸப்ரஹ்மசாரிகளாக வாழ்ந்து ஸகலார்த்தங்களையும் ஸம்சய விபர்யயமறக் கற்றவர்கள். நம்பிள்ளை ஸகல சாஸ்த்ரங்களையும் வரியடைவே அதிகரித்து அந்தப் பாண்டித்யம் முழுவதையும் அருளிச் செயற் பொருளுபன்யாஸங்களிலே உபயோகப் படுத்தி வந்தாரென்பது ப்ரஸித்தம். அவ்வண்ணமாகவே இவ்வாசிரியரும் ஸகல சாஸ்த்ரஜ்ஞராகித் தமது ஞான விளக்கத்தை வியாக்கியானங்களருளிச் செய்வதில் வெகு அழகாகச் செலுத்தி இவ்வுலகுக்கு மஹோபகாரகர்களில் தலைமை ஸ்தானம் பெற்றருளினர்.

மந்த்ரஸ்தர்களில் பட்டபாஸ்கரரும் வித்யாரண்யரும் வேத பாஷ்யங்களை விபுலமாகவெழுதிப் புகழ்பெற்றவர்களே, ஆனாலும் அந்த பாஷ்யங்களைவை

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானங்களின் முன்னிலையில் பகல் விளக்கும் மின்மினியுமாயிருக்கும். அந்த வேத பாஷ்யங்கள் சுமை சுமையாக விருந்தாலும் இன்னது சொல்லிற்றென்று ஒருவர்க்கு மறியப் போகாது. மூலத்தில் ரஸமிருந்தாலன்றே பாஷ்யத்தில் ரஸங்காண முடியும். காடு பரந்த கர்ம காண்டங்கள் கர்ம நிஷ்ணதர்களுக்கும் உபயோகமற்றவையாயுள்ளன. பகவத்குண ப்ரசம்ஸை யென்பது ஓரிடத்திலும் அணுமாத்திரமும் காணமுடியாதது. பகவத் குண ரஸிகர்களுக்கு அவை கொண்டு பயனென்றுமில்லையே. அப்படியன்றிக்கே த்ராவிட வேத பாஷ்யகாரரான பெரிய வாச்சான் பிள்ளையின் ஸ்ரீ ஸூக்தி ஒவ்வொன்றும் பகவத்குண நுபவத்தாலல்லாத போது போக்கவறியாத முமுக்ஷுக்களுக்கு ரஸாயநமாயிருக்கும். பகவத் விஷயத்தில் சேராமல் பாஹ்ய விஷயங்களைப் பற்றிப் பேசிலுங்கூட பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம் மிகமிக அநிசயிக்கத்தக்கதாயிருக்கும். ஒன்றே இங்கெடுத்துக் காட்டுவோம்.

பெரிய திருமொழியில் திருநறையூர் விஷயமான பாசுரங்களுள் (6—7—1) *மென் மலர் மேல் களியாவண்டு கள்ளுண்ணக் காமர் தென்றல் அலர் தூற்ற, களிர் வாய் முல்லை முறுவலிக்கும் நறையூர்* என்பது ஒரு பாசுரம். இது ஸாதாரணமாகச் சோலைகளில் நடக்குஞ் செய்கியைச் சொல்லுவது. வண்டுகள் மதுபானம் பண்ணுவதும் தென்றற்காற்று தூற்றுவதும் முல்லை வாய்திறப்பதுமான ஸம்பவம் சொல்லியிருக்கிற விது ஸ்வபாவோக்தி. ஆனாலும் இங்குச் சொற் சேர்க்கையமைந்த அழகை நோக்கிப் பெரியவாச்சான் பிள்ளை தமது வியாக்கியானத்தில் அருளிச் செய்திருப்பதாவது. ["மென் மலர் மேலித்யாதி.] கண்ட விடமெங்கும் பரப்புமாறப் பூத்துக் கிடக்குமிறே; அதிலே மதுபானார்த்தமாகக் கிட்டின வண்டுகள் அத்தைக் கிட்டப் பெற்ற ஹர்ஷத்தாலே களித்து நிஷித்த ஸேவை பண்ணுவாரைப்போலே மதுபானத்தைப் பண்ணிற்றின. அத்தைக் கண்ட தென்றல் நாட்டிலே பழியைத் தூற்றிற்று; அத்தைக் கண்ட முல்லை, புகுந்த ப்ரமாதத்தை யநுஸந்தித்து 'அதுதான் அப்படி செய்கிறது, இதுதான் இப்படி செய்யக்கடவதோ' வென்று வாய்விட்டுச் சிரிக்க மாட்டாமை ஸ்மிதம் பண்ணிற்று" என்று-இதனை நாமே விவரிப்போம்; வண்டு கள்ளுண்டதாகவும் தென்றல் அலர் தூற்றினதாகவும் முல்லை முறுவலித்ததாகவும் மூலத்திலுள்ளது. 'அலர் தூற்றுதல்' என்னுஞ் சொல்லுக்குப் புஷ்பங்களைத் தூற்றுதலென்கிற பொருளேயல்லாமல் பழி தூற்றுதலென்கிற பொருளுமுண்டாதலால் அதைக்கொண்டு ரஸோக்தியாக இங்கு வியாக்கியானம் செய்தருளுகிறபடி. வண்டு என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவனைச் சொன்னபடியாய், அவன் ஏதோ விதிவசத்தால் கள்ளுண்ண நேர்ந்துவிட்டதாம்; அதைக்கண்ட வொருவன், கள்ளுண்டான் கள்ளுண்டானென்று நாட்டிலே பழி தூற்றப் புறப்பட்டானும், இவ்விரண்டையுங் கண்டவொரு சுத்த ஸாத்விகன் 'ஏதோ விதிவசத்தால் ஒருவன் ஒருகால் மதுபானம் பண்ண நேர்ந்துவிட்டால் அதைப்பற்றி இப்படியும் ஒருவன் பழி தூற்றவேணுமோ? இவ்விருள் தருமாஞாலத்தில் இது ஸஹஜந்தானே யென்று வாளாவிருக்கலாகாதோ வென்று வாய்விட்டுச் சிரிக்கமாட்டாமல் 'இவையென்ன வுலகியற்கை' என்று புன்சிரிப்புச் செய்கிறானும். எப்படிப்பட்ட அதிகாரிக்கும் ஒரு நிஷித்த காரியஞ் செய்ய நேர்ந்து விடுவது ஸஹஜமென்றும், அதைப்பற்றி யொருவன் பழி தூற்ற நேருவதும் ஸஹஜமென்றும், 'இதுவொரு ப்ரமாதமா? இதைப் பழி தூற்றவேணுமா?' என்று சில மஹான்கள் நினைப்பதுமுண்டென்றும் லௌகிக ஸங்கிவேச முணர்த்தியதாக வியாக்கியானங்கண்டது விலக்ஷண மேதா விலாஸம். இது ஓர் எடுத்துக் காட்டாக ஈண்டமைக்கப்பட்டது. அத்யாத்ம சாஸ்த்ரார்த்தங்கள் அபரிமிதமாகக் காண்பதோடு இத்தகைய லௌகிக வாக்விலாஸங்களும் விபுலமாகக் காணப்படும் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானங்களில்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திவ்வியப் பிரபந்தங்களுக்கு வியாக்கியான மிட்டருளுந் திருப்பணியில் மற்றுஞ் சில ஆசாரியர்களும் கைவைத்ததுண்டு. ஆனால் பூர்த்தியாக நாலாயிரத் திற்கும் வியாக்கியான மிட்டருளினவரென்னும் பெருமை இவ்வாசிரிய ரொருவர்க்கே அஸாதாரணமாக அமைந்ததாகும். இவ்விஷயம் உபதேச ரத்தின மாலையில் "பிள்ளான் நஞ்சீயர் பெரிய வாச்சான்பிள்ளை தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை மணவாள யோகி திருவாய்மொழியைக் காத்த, குணவாளரென்று கெஞ்சே கூறு". "நஞ்சீயர் சேய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு, எஞ்சாமை யாவைக்கு மில்லையே, நஞ்சீரால் வைய குருவின் தம்பி மன்னுமணவாளமுனி, செய்யுமவை தாமுஞ்சில". "பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்குந் தெரிய, வியாக்கியைகள் செய்வால், அரிய அருளிச்செயல் பொருளை ஆரியர்கட்கிப்போது, அருளிச் செயலாய்த்தறிந்து" என்ற பாசுரங்களினாலு மூணரத்தக்கது. பெரியாழ்வார் திருமொழியில் நானூறு பாசுரங்களுக்கு மாத்திரம் இவ்வாசிரியர் தம் வியாக்கியானம் லுப்தமாயிருந்ததென்றும், மணவாள மாமுனிகள் பலருடைய பிரார்த்தனைக்கிணங்கி அக்குறையைத் தாம் நீக்கியருளினரென்றும் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர் பகர்வர்.

கடல் ரத்நாகாரமென்று பெயர் பெற்றிருத்தல்போல இவ்வாசிரியரது வியாக்கியானக் கடல் எண்ணிறந்த விசேஷார்த்த ரத்நநிதியாகப் புகழ்பெற்றுள்ள தாதலால் அதனை யநுபவிப்பதே இவ்வாசார்யருடைய பெருமை யநுபவமாகும்.

அர்த்தாத் இங்கொரு முக்கியமான விஷயம் விளக்க வேண்டியதாகிறது. நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் பெரியவாச்சான் பிள்ளையென்றும் ஆச்சான் பிள்ளை யென்றும் வ்யபதேச பேதம் காண்பதுண்டு. பெரியவாச்சான் பிள்ளையின் ஸம காலத்தவர்கள் சிலர் இவரை ஆச்சான்பிள்ளை யென்றும் வழங்கி யிருந்தாலும் பிற் பட்டவர்களான மணவாள மாமுனிகள் போல்வார் இவரை ஆச்சான்பிள்ளை யென்ற சொல்லால் ஓரிடத்திலும் வழங்கின தில்லை. மணவாள மாமுனிகள் தமது ரஹஸ்ய வ்யாக்யாநாதிகளில் ஆச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தியாகப் பலவிடங்களிலும் எடுத்துக் காட்டியுள்ளவை பெரியவாச்சான் பிள்ளை யுடையனவே யென்று நாமும் மயங்கியிருந்து பன்னிரு திங்களனுபவம் முதலான சில நூல்களிலே ஆச்சான்பிள்ளை யருளிச்செயலான பரந்த ரஹஸ்யாதிகளையும் பெரிய வாச்சான் பிள்ளை யருளிச் செயலாக வெழுதி யிருந்தோம்; பிறகு நிகழ்ந்த விபுலமான ஆராய்ச்சிகளினால் தேறின தெளிவுகளை ஆச்சான் பிள்ளை யஷ்டாத்யாயி முதலான விமர்ச க்ரந்த முகேந உலகுக்கு விளக்கியிருக்கிறோம். அவற்றில் நிரூபித்த பலபலஹேதுக்களில் இரண்டு மூன்றை மாத்திரம் இங்கெடுத்துக் காட்டி நிற்போம். பரந்த ரஹஸ்யம் முதலிய ரஹஸ்ய க்ரந்தங்களையும் பெரியவாச்சான் பிள்ளையே விரிவாக அருளிச் செய்திருந்தால், உபதேசரத்ன மாலையில் திவ்யப் பிரபந்த வியாக்கியான விஷயத் தில் பெரியவாச்சான் பிள்ளைக்கு மஹத்தான கௌரவத்தைக் காட்டிவிட்டு ரஹஸ் யார்த்த ப்ரகாசன விஷயத்தில் பிள்ளை லோகாசாரியர்க்கு மஹத்தான பெருமையை விளக்கியிருப்பது விரஸமாகும். ரஹஸ்யார்த்தங்களையும் பெரியவாச்சான் பிள்ளையே ப்ரபஞ்சனம் செய்தருளினரென்று ஒரு பாசுரமாவது அவசியம் அருளிச்செய்திருக்க வேண்டும். மாமுனிகள் இதை உபேக்ஷிக்க ப்ரஸக்தியே கிடையாது. ரஹஸ்யார்த் தத்திற்காகப் பெரியவாச்சான் பிள்ளையைப்பற்றி ஒரு பாசுரங்கூட அருளாமை யாலும் அதுபற்றிப் பிள்ளை லோகாசாரியர்க்கே ஏழு பாசுரங்கள் அருளிச்செய்திருக் கையாலும் அவ்வுலகாசிரியர்க்குப் பிற்பட்டவரே பரந்த ரஹஸ்யாதி க்ரந்த கர்த்தா வென்பது தெளிவாகும். நம்பிள்ளை திருவடிகளில் நேராகக் கேட்டவரும் பலவிதங் களிற் பெருமை பெற்றவருமான பெரியவாச்சான் பிள்ளையே பரந்த ரஹஸ்யாதிகளை யருளிச்செய்திருந்தால் அவருடைய க்ரந்தங்களை விட்டுப் பிள்ளை லோகாசாரிய ருடைய முமுக்ஷுப்படி முதலான க்ரந்தங்களையே எங்கும் யாவரும் கால க்ஷேப

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

க்ரந்தமாகக் கொள்ள ப்ரஸக்தியே யிராது. ஆச்சான்பிள்ளையின் ஸந்ததியாரென்று சொல்லிக் கொள்பவர்களுங்கூட இற்றைக்கும் நாளைக்கும் பரந்த ரஹஸ்யாதிகளின் பெயரையும் கேட்டறியாதவர்களாகவன்றே உண்மையுள்ளது. அன்றியும் பரந்த ரஹஸ்யத்தில் வேதாந்த தேசிகனுடைய சில வாதங்களுக்கு மறுப்பு உரைக்கப்பட்டு யிருக்கிறது. பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திகளை மேற்கோள் காட்டும் வேதாந்த தேசிகன் பெரிய வாச்சான் பிள்ளைக்குப் பிற்பட்டவரென்பது நிர்விவாதம். அவருடைய உக்திகளுக்கு விடை கூறுகின்ற பரந்த ரஹஸ்யகாரர் பெரிய வாச்சான் பிள்ளையாயிருக்கத் தகுதியில்லை. ஆகவே, வேறோராசிரியருடைய க்ரந்தங்களைப் பெரியவாச்சான் பிள்ளையின் க்ரந்தங்களாகக கொள்வது அநுசிதமென்று பெரியார்களின் துணிபு.

பெரிய வாச்சான் பிள்ளையின் கம்பீரமான ஸ்ரீஸூக்திகள் அழுதிலுமாற்ற வினியவை. இவ்வாசிரியர் அவதரியாதிருந்தால் ஸ்ரீவைஷ்ணவ வுலகுக்குப் பேரின்ப வனுபவம் மிகவும் குன்றியேயிருக்கும். இவரது திருவடிகளே நமக்குத் தஞ்சம். .... *

பிள்ளை லோகாசார்யர் வைபவச் சுருக்கம்

வடக்குத் திருவீதிப்பிள்ளைக்குத் திருக்குமாரர்கள் இருவர். மூத்தவர் பிள்ளை லோகாசார்யர்; இளையவர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். இவ்விருவரும் மநுஷ்டிகப்ரஹ்மசாரிகள். ஐப்பசியில் திருவோணத்தன்று அவதரித்த பரமகாருணிகரான பிள்ளைலோகாசார்யருடைய பெருமையைச் சிறிது பேசி மகிழ்வோம். இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானப் பெருமைகள் ஒருபுறமிருக்க, பரமகருணையின் திறத்தை என்னென்று பகர்வது?

ஆசாரியர்கள் பொதுவாக இருவகைப்படுவர்கள். அநுவ்ருத்தி ப்ரஸங்நாசார்யரென்றும் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரென்றும். சிஷ்யர்கள் பலகால் தூண்டுவேண்ட அதனாலே அநுக்ரஹிப்பவர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களாவர்கள். சிஷ்ய ப்ரார்த்தனையைச் சிறிதும் எதிர்பாராமல் தம்முடைய இயற்கை யின்னருளால் தாமாகக் கனிந்து பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல்நன்றாகத் திருத்திப் பணிகொள்வதையே விரதமாகக் கொண்டு தம் பேராக அநுக்ரஹித்தருள்பவர்கள் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராவர்கள். இப்பட்டத்தை முதன்மையாகப் பெற்றவர் எம் பெருமானார். ஆயினும் அவர் ஸம்ப்ரதாயரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு க்ரந்தமும் அருளிச்செய்திலர். ப்ரஹ்மஸூத்ரங்களின் அர்த்தங்களை விவரிக்க மூன்று நூல்களை யருளிச்செய்தவர் ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு சிறுநூலாவது அருளிச்செய்திருக்கலாம். இன்னுமொரு திருக்கோலம் பூண்டு [அதாவது, மணவாள மாமுனிகளாக அவதரித்து] அப்போது அருளிச் செய்யவேணுமென்று திருவுள்ளம் பற்றியிருந்தமையாலே ஸ்ரீராமாநுஜரான அந்த அவதாரம் தன்னிலே ரஹஸ்யார்த்தங்களை ஏடுபடுத்தாமே சென்றனர். ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலிய திவ்யக்ரந்தங்களில் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களும் ஆங்காங்குச் சேமிக்கப்பட்டே யிருந்தாலும் அவற்றைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டித்தாராத குறை குறையே. அக்குறைதீரவே ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான பிள்ளை லோகாசாரியர் திருவவதரித்து, இவர்தாமே முதன்முதலாக ஸ்ரீவைஷ்ணமண்டலிக்கு மஹோபகாரஞ் செய்தருளினர்.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

லோகாசார்ய ரென்கிற திருநாமம் முதலில் நம்பிள்ளைக்கு வழங்கிவந்தது. ஸ்வாசார்யர் திருநாமத்தையே புதல்வர்க்கு இடவேணுமென்று விருப்பங்கொண்ட இவரது திருத்தகப்பனார் நம்பிள்ளையின் திருநாமத்தையே இவர்க்குச் சாத்தினர். வாசி தெரிவதற்காகப் பிள்ளை லோகாசார்யரென்று வழங்குதல் நிகழ்ந்தது. உபதேசரத்தினமாலையில்—*பின்னை வடக்குத் திருவீதிப்பிள்ளை, அன்பாலன்ன திருநாமத்தை யாதரித்து, மன்னுபுகழ் மைந்தருக்குச் சாத்துகையால் வந்து பரந்த தெங்கும், இந்தத் திருநாமமிங்கு* என்றுள்ள பாசுரத்தினால் இஃதறியத்தக்கது. உண்மையில் லோகாசார்யரென்னுந் திருநாமம் இவர்க்கே தகும்.

இவ்விருள் தருமாஞாலத்தின் அகவிருளை அறவே யொழிக்கவல்ல திவ்ய ஸ்ரீஸூக்திகளைத் தேனும் பாலும் நெய்யும் கன்னலுமமுதுமாக அளித்தருளினவர் இம்மஹாசார்யர். இவருடைய ஸர்வஜ்ஞத்வமும் பரம காருணிகத்வமும் பரம ப்ராமாணிகத்வமும் ஒவ்வொன்றும் நெஞ்சால் நினைப்பரிதே. ஒரு அர்த்தத்திலும் ஆக்ரஹமின்றிக்கே ஆசார்யபரம்பராப்ராப்தமான அர்த்தங்களையே அற்புதமாக அமைத்திருக்குமழகு இவருடைய திவ்யக்ரந்தங்களுக்கே அஸாதாரணச் செல்வமாயிருக்கும்.

இவரருளிச் செய்த நூல்கள் அஷ்டாதசரஹஸ்யமென்று ஸுப்ரஸித்தமாயிருக்கும். அவற்றுள் ஸ்ரீவசநபூஷணம் தத்வத்ரயம் முமுக்ஷுப்படி என்னும் மூன்று க்ரந்தங்கள் ஸூத்ரஸரணியில் திருவவதரித்தவை. இவற்றிலுள்ளும் ஸ்ரீவசனபூஷணத்தின் பெருமை அப்ரமேயமென்று மணவாளமாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் ஏழு பாசுரங்களினால் மிக மிகக் கொண்டாடியருளுகிறார். *ஸர்வஜ்ஞ லோககுரு நிர்மிதமார்யபோக்யம் வந்தே ஸதா வசநபூஷண திவ்யசாஸ்த்ரம்* என்று இந்த திவ்யக்ரந்தத்தை ஒரு திவ்யசாஸ்த்ரமென்றே வழங்குவர் பெரியார். இதற்கு மணவாள மாமுனிகளருளிச்செய்த வியாக்கியானத்தின் அவதாரிகையிலுள்ள சில ஸ்ரீஸூக்திகளை இங்கெடுத்துக் காட்ட வேண்டியது அவச்யமாகிறது,—"ஸம்ஸாரி சேதநரிழவு ஸஹிக்கமாட்டாத பரமக்ருபையாலே ததுஜ்ஜீவநார்த்தமாகத் தாமும் பலப்ரபந்தங்களருளிச்செய்த பிள்ளை லோகாசார்யர், ஆசார்ய பரம்பராப்ராப்தங்களான அர்த்தங்களில், அவர்கள் தாங்கள் கௌரவாதிசயத்தாலே ரஹஸ்யமாக உபதேசித்துப் போந்தவையாய், அருமைபெருமைகளைப் பற்ற இதுக்கு முன்பு தாமும் ப்ரகாசிப்பியாமல் அடக்கிக்கொண்டு போந்தவையான அர்த்த விசேஷங்களெல்லாவற்றையும் பின்புள்ளாருமிழக்க வொண்ணுதென்கிற தம்முடைய க்ருபாதிசயத்துக்கு மேலே பெருமாளும் ஸ்வப்நத்திலே திருவுள்ளமாயருளுகையாலே ஸ்ரீவசநபூஷணமாகிய இப்பிரபந்த முகேந வெளியிட்டருளுகிறார். முன்பே பேரருளாளப் பெருமாள் தம்முடைய நிர்ஹேதுகக்ருபையாலே மணல்பாக்கத்திலே யிருப்பாரொரு நம்பியாரை விசேஷகடாக்ஷம் பண்ணியருளி தஞ்சமாயிருப்பன சில அர்த்த விசேஷங்களைத் தாமே அவர்க்கு ஸ்வப்ந முகேந அருளிச்செய்து 'நீர் போய் இரண்டாற்றுக்கு நடுவே வர்த்தியும்; இன்னமுமக்கு இவ்வர்த்தங்களை யெல்லாம் விசதமாக நாம் அங்கே சொல்லுகிறோம்' என்று திருவுள்ளமாயருளுகையாலே அவரிங்கே வந்து (பெரிய) பெருமாளை ஸேவித்துக்கொண்டு, தமக்கு முன்பு அங்கருளிச்செய்த அர்த்தங்களையும் அசலறியாதபடி அநுஸந்தித்துக்கொண்டு ஏகாந்தமானதொரு கோயிலிலே வர்த்தியா நிற்கச் செய்தே, தம்முடைய ஸ்ரீபாதத்துக்கு அந்தரங்கரான முதலிகளும் தாமுமாக பிள்ளை ஒருநாள் அந்தக் கோயிலிலே யாத்ருச்சிகமாக வெழுந்தருளி, அவ்விடம் ஏகாந்தமாயிருக்கையாலே ரஹஸ்யார்த்தங்களை அவர்களுக்கருளிச் செய்து கொண்டு எழுந்தருளியிரா நிற்க, அவை தமக்குப் பேரருளாளப் பெருமாளருளிச் செய்த அர்த்த விசேஷங்களாயிருக்கையாலே அவர் போர வித்தராய் உள்ளில்

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukotė Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நின்றும் புறப்பட்டு வந்து பிள்ளை ஸ்ரீ பாதத்திலே விழுந்து 'அவரோ நீர்?' என்ன, 'ஆவதேது?' என்று பிள்ளை கேட்டருள, பேரருளாளப் பெருமாள் தமக்கு அவ்வர்த் தங்களை ப்ரஸாதித்தருளின படியையும் இத்தேசத்திலே போக விட்டருளின படியையும் இன்னும் உமக்கங்கே விசதமாகச் சொல்லுகிறே மென்றருளிச் செய்தபடியையும் விண்ணப்பஞ் செய்ய, கேட்டு மிகவும் ஹ்ருஷ்டராய் அவரையும் அபிமானித்தருள, அவரும் அந்தத்தைக்கு அந்தரங்கராய் வர்த்திக்கிற காலிலே, பெருமாள் அவர்க்கு ஸ்வப்நத்திலே 'இவ்வர்த்தங்கள் மறைந்து போகாதபடி இவற்றையொருப்ரபந்தஸ்தமாக்கச் சொன்னேமென்று நீர் பிள்ளைக்குச் சொல்லும்' என்று திருவுள்ளமாக, அவர் 'இப்படி பெருமாள் திருவுள்ளமாயருளினர்' என்று விண்ணப்பஞ் செய்ய, 'ஆனால் அப்படி செய்வோம்' என்று திருவுள்ளம் பற்றி அனந்தரம் இப்ப்ரபந்த மிட்டருளினரென்று ப்ரஸித்தமிறே." என்பவை மணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸூக்திகள்.

மணவாள மாமுனிகள் ஆழ்வார் திருநகரியிலிருந்து திருவரங்கம் பெரிய கோயிலுக் கெழுந்தருளின போது அங்கே பிள்ளை லோகாசார்ய ரெழுந்தருளியிருந்த விடத்திற்கு கித்திய மெழுந்தருளி "ரஹஸ்யம் விளைந்த மண்" என்று அவ்விடத்தே போர ப்ரதிபத்தி பண்ணி உகந்திருப்பர் எனறு ப்ரஸித்தம். ... ... *

பிள்ளை லோகாசார்யர் வைபவ ஸங்க்ரஹம் முற்றிற்று.

—ஸமீபகாலத்தில் ஸ்ரீராமாநுஜன் மூலமாக வெளிவந்த நூல்கள்—

1. மணவாள மாமுனிகள் வைபவம்.
2. பரமார்த்த பூஷணம் (இதில்)
   (1) தேவராஜஸ்வாமி தேவஸ்தானமும் தாதாசார்ய குடும்பமும்.
   (2) ஷை ஆங்கில வியாஸம்.
   (3) விசதவாக்சிகாமணி வாக்வைசத்யம்
   (4) பதினாறு தன்மொழிகள்.
   (5) பச்சைப் பசும்பொய்யை பற்றிப் பதினாறு.
3. ஸ்ரீ காஞ்சீபுரியும் விஷ்ணுவாலயங்களும்.
4. ஷோடசாயுத ஸ்தோத்ரவுரை.
5. தயாசதகவுரை (அபூர்ணம்.)
6. வரவரமுனி சதகவுரை (அபூர்ணம்.)
7. சரணாகதி தீபிகை வியாக்கியானம்.
8. ஸ்ரீ ராமாநுஜ சரித்ர தத்வம்.
9. க்ரோதி வத்ஸர மார்கழி நிகழ்ச்சி.
10. எழுபத்துநான்கு நல்வார்த்தைகள்.
11. ஸ்ரீ வைஷ்ணவ ஸமாராதனம்.
12. ஷை ஆங்கில மொழி பெயர்ப்பு.
13. பாதுகா ஸஹஸ்ர விமர்சம்.
14. ஷை ஆங்கில மொழி பெயர்ப்பு.
15. எழுபத்துநான்கு விருந்துகள்.
16. பராங்குச முனியும் பரகால கவியும்.
17. ஆழ்வார் பெண்மையின் தத்துவம்.
18. பூர்வாசார்ய ப்ரபாவம்.
19. ஆசார்ய சம்ப்வபிநந்தனம்.
20. ஷை ஆங்கில மொழி பெயர்ப்பு,
21. வேதாந்தாசார்ய வைபவம்(ஸம்ஸ்க்ருதம்).

ஸம்ஸ்க்ருத ஹிந்தீ ஆந்திர நூல்களைப்பற்றித் தனியே காண்க.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

Rgd. No. 2975 ஸ்ரீராமாநுஜன்

ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாய நூல்கள் கிடைக்குமிடங்கள்:—

(1) க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

(2) M. A. KRISHNAMMAL, Advocate,
20, South Mada Street, Triplicane, Madras-5.

(3) G. ரங்கைய நாயுடு,
26, குருவப்ப செட்டி தெரு, சிந்தாத்ரிபேட்டை, மதராஸ்—2
(இவர் சென்னையில் பிரசாரம் செய்ய நியமிக்கப்பட்டவர்.)

(4) A. RAMANUJACHARI, B. A.,
A 230 E. Type, Pandara Road, New Delhi.-11.

If un-delivered please return to:

P. B. ANNANGARACHARYA,
L. KANCHEEPURAM.

296. Sri Vangeepuram Raghavacharya,
Melkote, (Mysore)

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Satgrantha Prakasana Sabha.

Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press,
Sannidhi Street, L. Kancheepuram.

CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.